# பாரத சக்தி மகா காவியம்

## மூன்றாவது

## சாதன காண்டம்

### காப்பு

*சீலத்தால், அறிவால், அன்புத் திறத்தினால், பணியா லுன்னை*
*ஞாலத்தார் உணர்ந்து போற்றி நற்கதி யடைய வேண்டி,*
*காலத்தால்அழியாச் செஞ்சொற்கவிதையா யென்னுட் பேசாய்!*
*பாலொத்த மேனி கொண்ட பாரத சக்தி தாயே !*

*மேதகு சுத்த னிந்த மேதினிக் கின்ப மெய்தத்*
*தீதறு நல்லோர் கையிற் சித்தியை விடுத்துச் சென்று,*
*வேதங்கள் ஆய்ந்து நீண்ட விரதங்கள் புரிந்த ஞான*
*சாதன காண்டஞ் சொல்லச் சதாசிவ சக்தி காப்பே !*

### 1. கருணைப் படலம்

*உலக ளாவிய உளத்தினன், கருணையே உருவோன்,*
*பலகொ டுந்துயர் விளைத்திடும் பகைசினப் போர்கள்,*
*விலகி மாந்தர்கள் வேறுபா டற்றொரு குலமாய்*
*இலகு நல்வழி யருள்கென இறைவனைத் துதித்தான் !*

*மன்னு மாநிலக் கோயிலின் மன்னவா போற்றி !*
*என்னு யிர்க்குயி ராகிடும் என்னவா போற்றி !*
*தன்னின் ஒப்புயர் வற்ற தயாபரா போற்றி !*
*உன்னையே சரண் புகுந்தனன் ஒருவனே போற்றி !*

*அன்ற சோகனுங் கலிங்கத்தின் அமர்க்கள முடித்துக்*
*கொன்ற கத்தியின் கொடுமையை முனிந்தது போலே,*
*இன்ற மர்க்களம் வெறுத்தனன், இரக்கமேற் கொண்டேன்....*
*மன்று ளாடிடும் அப்பனே, ஆனந்த மருந்தே !*

*சுத்த னேபரஞ் சோதியே துரியமா முடிமேல்,*
*வைத்த பேரின்ப மருந்தென வளர்ந்திடும் சிவமே !*
*ஒத்து யிர்க்குலத் தொகுதியை யாக்கையென் றுடையாய் !*
*சத்தி யாலுல காண்டிடுஞ் சாட்சியே போற்றி !*
*கள்ளு மாயப்பொ றாமையுங் காமமுஞ் சூதும்,*
*துள்ளு மாணவ வெறிகளும் ஆசையுந் தூண்டும்,*
*சள்ளை யாகிய சங்கடப் போர்களைச் சகியேன் !*
*உள்ள வாறுயிர் உனையறிந் துய்யுமா றுளதோ ?*

*பன்ம யந்தனில் ஒருமய மாம்பசு பதியே,*
*சின்ம யானந்த வெள்ளமே, சிதம்பர ஒளியே,*
*உன்ம யம்பெறும் உயிர்க்குலம் உன்னருட் சுடராந்*
*தன்மை யோங்கிடத் தயைபுரி, சத்திய வடிவே !*

*மண மலர்களுந் தென்றலு மலைநதி வளமும்*
*உணவி யற்கையி னுதவிடுங் கனிமரக் காடும்,*
*குணநி றைந்தநற் குரவருங் குலவிடுங் கோயில்*
*பிணம லைகளும் இரத்தமும் பெருகிட லாமோ ?*

பண்மு ழங்கிடும் பாரிலே பரிதபித் துயிர்கள்,
கண்க லங்கியுன் கருணைக்கே கதறுவ காணாய் !
எண்க லங்கிடும் வினைகளை இருந்தவா றியற்றும்,
விண்க திர்மணி யேமன வேதனை தீராய் !

சீல மோங்கிய முனிவரர் சிறந்தநன் னாடு,
ஞால மோங்கிய ஞானத்தை நவின்றநன் னாடு,
கால மோங்கிய நயமெலாங் கண்டபொன் னாடு,
சால மோங்கிய சழக்கரால் அழிதலுந் தகவோ !

வீட்டி னின்பமும் விழுமிய பொருளுடன் அறமும்,
காட்டி மன்பதை கதிபெற நடத்திடு நாட்டில்,
வாட்டி யாருயிர் வதைத்திடுங் கலியனுக் ககந்தை
ஊட்டிப் போர்விளைத் துருமிடும் வெறியினை ஒடுக்காய் !

இரும்பு நெஞ்சினர் இழைத்திடும் இருள்வினை யொழிந்தே,
அரும்பும் அன்பருள் அறிவுடன் ஆன்மநே யத்திற்
கரும்பு டன்ரசம் போலவே கலந்துடன் வாழ,
விரும்பு நல்வரம் வேண்டினேன் ; ஆண்டவா சரணம் !

கடவுள் ஒன்றென உயிர்க்குலங் கருதிட வேண்டும்.
உடலெ லாமதன் கோயிலென் றுணர்ந்திட வேண்டும்.
இடம கல்உல கதன்மயம் என்றிட வேண்டும்.
கடமை காத்திட வேண்டுமுன் கருணையி னாலே !
அன்னை யன்புடன், ஆணவச் செருக்கிலா மதியும்,
உன்னை யுட்புறங் கலந்துயிர் வாழ்ந்திடும் உறவும்,
மன்னு யிர்களைத் தன்னுயி ரெனமதி மாண்பும்,
என்னு யிர்க்குட லாகிய உயிர்களுக் கீவாய் !

எம்ம தத்திற்குஞ் சம்மத மாகிடும் இறைவா,
அம்மை யப்பநின் ஒப்பிலாக் கருணையின் அமுதால்,
இம்மை யம்மையின் இன்பமும் எட்டுசித் திகளும்,
செம்மை யாகிய செயல்களும் செழித்திட வேண்டும்.

இறப்பின் அச்சமும், இருவினை யச்சமும், உலகிற்
பிறப்பின் அச்சமும், பிணிகளின் அச்சமும், விலகி,
மறப்பி லாதுனை மனதுற மேவியன் பினிலே,
சிறப்புடன் செழித் திடுகவிச் செகத்தின ரெல்லாம் !

தீர மாகிய உள்ளமும், தெளிந்தநன் மதியும்,
வீர மாகிய செயல்களும், விழுமிய நினைவும்,
சார மாகிய செஞ்சொலுஞ் சத்திய வாழ்வும்,
பாரி லோங்கிடப் பரிந்தருள் பரம்பரம் பொருளே !

சொல்லுஞ் செய்கையும் ஒன்றெனத் துலங்கிட வேண்டும்.
கொல்லுந் தீமையுங் கொலையுண வருந்தலும் ஒழிந்தே,
நல்லு ழைப்பினால் வந்ததை நாட்டொடு நயந்தே,
இல்லையே யெனும் வறுமையற் றிருந்திட வேண்டும் !

வையக த்திலுன் வானர சாட்சியே வருக !
ஐய வுன்னரு ளாணையிங் காளுக நாளும்.
துய்ய யோகமும் போகமுந் துலங்கியாண் பெண்ணும்,
தெய்வ ஜீவன சங்கமாய்த் திகழுக நன்றே !

தேங்கி டாதநன் முயற்சியிற் சிறந்துமுன் னேறி,
ஓங்கு கல்வியுஞ் செல்வமும் ஒருமையுங் கொண்டே
நீங்கி டாதவுன் னருள்பெற நிலவிட வேண்டும்,
ஏங்கு மென்குறை தீர்க்கநீ இரங்கிட வேண்டும் !

பாரி லேபல பகுப்புறு பகைசின மின்றி,
ஓரி றைவனும் ஒருகுல உணர்ச்சியும், அன்பும்,
ஓர ரசுடன் ஒருசம யோகமும் ஓங்கி,
நேர்மை யாகிய சமநெறி நிலவிட வேண்டும் !
முது நலங்களும் புலவர்கள் முறைவகுத் தளிக்கும்
புது நலங்களும், பயனுறப் போற்றியன் புடனே
பொது நலஞ்செயும் புண்ணியம் பொலிவுற வேண்டும்,
அது விதுவென வேதங்கள் அறிந்திடும் அறிவே !

ஆணின் ஆண்மையும் பெண்ணினப் பெண்மையும் அழகும்,
பூணும் பொன்னும்போற் பொருந்திடும் இல்லறம் பொலிக !
வீண ணிகளும் இடம்பமும் வேறுபா டுகளும்
காணிலா நல வாழ்க்கையைக் கண்டிட வேண்டும் !

கிலி கொண் டோடிய கேடுசூழ் மோகியின் அடிமை,
கலி திரும்பவும் கரந்திடர் செய்திடா தொழிக.
வலிய தானவர் வஞ்சனை யொழிகசுத் தான்மப்
பொலிவும் பூரண யோகமும் போகமும் வளர்க !

நினைத்த யாவையு நிறைவுறத் துறவறம் பூண்டு,
தனித்த வாழ்வினைத் தவமெனச் செய்திட வேண்டும்,
இனித்த கௌரியும் இயம்பிய படிவர வேண்டும்.
அனைத்தும் இன்பமாம் அருட்பணி நலஞ்செழித் திடவே !

பொன்ன ரியணை புளித்தது; பொதுநல வுரிமை
தன்னை நல்கியான் பூரண சாந்தத்தை நாடி,
என்னைக் கண்டுபின் இகபர சுகநெறி காண
உன்னி னேன்வழி ஒளியுடன் உதவிடு பரமா !

**சாந்தன் தோன்றல்**

"வழி துலங்கும் வருகவுடன் அருள்
ஒளி துலங்கும் உன் உள்ளிருந்தே" யெனத்
தெளிவுரை சொலித் திவ்விய சாந்தனும்,
களி துலங்கிடக் கண்ணெதிர் நின்றனன் !

**சுத்தன்**

"மின்னொ ளியென மேவிய மாதவர்
மன்ன வாவணக்கம்" என மன்னவன்,
முன்னி கழ்ந்தன முற்றுறச் சொல்லுமுன்,
மன்னு மாமுனி வாய்மலர்ந் தோதினான் ;

**சாந்தன்**

போரைக் கண்டனன் புல்லரை வீழ்த்திய
சீரைக் கண்டனன், சீர்த்தியைக் கண்டனன்,
பாரைக் காத்திடும் பாரத சக்தியின்
வேரைக் கண்டனன்; வெற்றியுங் கண்டனன் !
பத்தினி கௌரியின் பலியைக் கண்டனன்,
உத்தமி யாவியங் கொளிப்பி ழம்பதாய்,
சத்திபெற் றெழுந்தது தான வத்திலே—
உத்தம நின்பணிக் குதவி யாகவே !
இகலினை யொடுக்கினை; இனியுன் ஆட்சியைத்
தகவுடை யமைச்சரே தாங்கத் தந்துடன்,

*பகலென உலகிருள் பரிந்து மாற்றிடும்,*
*சிகரநற் சோதியாய்ச் செழிக்க வுன்னுவாய் !*
*அறமிலி கலியனின் ஆண வத்திமிர்,*
*மறவலி யரக்கரை மற்றுங் கொண்டுறும்;*
*திறமுள மந்திரி செய்தற் கானதை*
*மறுவறச் செய்திட வல்ல தீரனே !*
*இங்கினி யிருந்திடின், இடர் முளைப்பதாம்,*
*அங்கொரு பணியுனை யழைக்கும்; ஆதலால்*
*எங்கெங்கு திருவருள் இட்டுச் செல்லுமோ*
*அங்கங்குன் சாதனம் அமையச் செய்குவாய்....*
*சென்றிடச் சென்றிடத் தெய்வச் சோதியே*
*உன்றுணை யாகிடும் உண்மை காணுவாய்;*
*என்றுநீ இமயத்திற் கேக வேண்டுமோ*
*அன்றுநான் அக்கணம் அழைத்துச் செல்லுவேன்!*
*சுற்றிலும் உலவிடுந் தூய சித்தர்கள்*
*பற்றுத லுடனுனைப் பலம தங்களின்*
*ஒற்றுமை நாட்டிடும் உண்மை யன்பினை*
*முற்றிலும் விளக்கி "நீ முன்செல்" என்பரே!*
*செல்கமுன் செல்கமுன்; செயமும் பின்வரும்;*
*வெல்கநீ உன்னையே— போரை வென்றவா!*
*பல்சம யங்களைப் பார்த்துப் பூரணம்*
*நல்கிடும் ஒளிபெற நாடென் பீடமே !*

**சுத்தன்**

*இத்ததி நிகழ்ந்ததும் இனி நிகழ்வதும்,*
*பத்தினி சென்றதும், பதறி யென்மனம்,*
*உத்தமத் துறவினை உன்னி நின்றதும்,*
*சத்திய சாந்தவுன் சக்தி யாலன்றோ!*
*பற்றலர் பணிவதும், பார்பு கழ்வதும்,*
*வெற்றிகள் வருவதும் வீரர் சேர்வதும்,*
*முற்றிலுந் துறந்தநன் முனிவ நின்செயல்—*
*நற்றவ மினிச்செய நாடிச் செல்கிறேன் !*
*மனமிகு மந்திரி மன்ன வைதனில்*
*ஜனசமு தாயத்தின் சக்தி யாளவே,*
*நனியொரு பொதுச்சபை நாட்டி என்கடன்*
*இனிதினி முடித்திடற் கேகு வேனையா!*

**சாந்தன்**

*மன்பொறுப் பவ்வகை மக்கட் கீந்ததும்,*
*உன்பொறுப் பாற்றுக உலக முய்யவே;*
*என்பொறுப் பாற்றிடும் இனிய காலத்தில்*
*அன்புடன் வருவனென் றையன் சென்றனன் !*
*ஆவெனச் சுத்தனும் அதிச யத்துடன்*
*மேவிய சாந்தனை விழுந்து கும்பிட்டே,*
*தாவினன் சாற்றிய தரும மாற்றவே,*
*கூவினன் அமைச்சரைக் கூட்டங் கூட்டினான்.*

## 2. சாசனப் படலம்

*மாசறு குடிகளு, மந்தி ர்களும்,*
*தேசத்தை நடத்திடத் திறமை யாக வோர்*
*சாசனம் பொதுஜன சபையிற் சாற்றினான்—*
*காசினிக் கருந்தவக் கடமை கொண்டவன்.*

*அன்னையு முனிவரும் அமைச்சர் சிங்கமும்,*
*மன்னுயிர்த் தலைவரு மற்று ளார்களும்,*

*என்னையிஃ தென்னவென் றிரங்கி நொந்திட,*
*மன்னவை திகைத்திட மன்னன் பேசினான்:—*

**சாசனம்**

*உலகக் கோயிலில் உயிர்க்குல மாக*
*உலவும் பரமனை ஓமெனப் பணிவாம் !*
*அப்பரம் பொருளின் அன்புச் சேய்காள்,*
*இப்பெரு நாட்டை என்முன் னோர்கள்,*
*விதித்த படியே வேந்தெனப் புரந்தோம்!*
*கலகஞ் செய்த கலியையும் வீழ்த்தி*
*வெற்றிக் கொடியை வியனுற நாட்டினோம் !*
*இன்றிடர் தவிர்த்தோம் என்னினும், அன்பீர்,*
*இனிவரும் உலகின் இயல்பே மாறும்.*
*அமைதி யின்றி அவனி யெல்லாம்,*
*அரசியற் சுழலில் அவதிப் படுமே!*
*அரக்கர் கொடுங்கோல் அல்லற் படுத்தும்—*
*உலகம் ஓயாக் கலகக் காடாம் !*
*புரட்சி யெரிமலை பொங்கிப் பொங்கி*
*முடியர சாட்சியைக் குடியர சாக்கும்!*
*தமக்கே யுலகெனுந் தன்னல வேந்தர்,*
*செருக்கெலாம் சுதந்தர நெருப்பிடைப் பஞ்சாம்!*
*உலக மெல்லாம் உலகோர் பொதுவெனும்*
*ஜனநா யகமே இனியுல காளும்.*
*சாதி சமய சாத்திர கோத்திர*
*வேற்றுமை யெல்லாம் போற்றுவா ரின்றித்*
*தாமே தேய்ந்து, சமயோ கச்சுடர்*
*பொதுநல வாழ்விற் பொலியக் காண்போம்!*
*அக்கா லத்தின் அகமுகங் கண்டே*
*இப்புதுச் சாசனம் இயம்புவேன் கேளீர்:*
*முடியர சாட்சி முடிந்தது, நண்பீர்!*
*குடியர சாட்சிக் கொடியை உயர்த்தினேன்!*
*வாழ்க, வாழ்க மானிட வுரிமை!*
*அச்சமும் அநீதியும் அடிமையும் ஒழிக!*
*தலை நிமிர்கவே சமத்துவ தருமம்!*
*ஒருவனே இறைவன் ஒன்றே குலமெனும்*
*சுத்தான்ம நேயஞ் சுடர்விட் டொளிர்க!*
*ஒருகுல மான உயிர்க்குல மெல்லாம்,*
*பொதுஜன சபையிற் பொருந்துக நன்றே!*
*அறிவுங் கல்வியும், அறமும், அருளும்,*
*பாருக் கெல்லாம் பயனுறு தொழிலும்,*
*அன்பும் போற்றி மன்பதை வாழ்கவே!*
*பெயர்வடி வாக்கும் பேதச் சமயக்*
*கட்டுக ளின்றிக் கடமையைக் காத்து,*
*மனச்சாட் சியினை மதித்து நடந்து,*
*பெரியார் நல்லுரை பெரிதும் பேணிக்*
*கால நிலையைக் கருதிமுன் னேறிச்*
*சனசமு தாயம் தாங்குக உலகை!*
*சிற்றூர், தொட்டுத் தேசம் வரையில்,*
*ஒற்றுமை யாக உரிமை யுடனே*
*தேர்ந்தநல் லோரே தேசச் சபையாய்,*
*அறிவுடை யமைச்சரை ஆராய்ந் தெடுத்துப்*
*பொதுஜன நன்மை பொலிவுறப் புரிகவே!*
*அதிகா ரத்திமிர் அடியுட னொழிக!*
*மன்னுயி ரெல்லாந் தன்னுயி ரென்ற*
*உணர்ச்சி மாந்தரின் உளத்தில் ஊன்றுக.*

*தீயதை நீக்கித் திருவுறு நலத்தை*
*ஆக்கலே அரசின் அருங்கட னாமே!*
*கல்வி யளித்தலே கடமையின் கண்ணாம்!*
*நற்குடி யரசு நாளுஞ் செழிக்கச்*
*சமுதா யத்தார் தரும்வரிப் பணத்தில்,*
*பாதி கல்வியிற் பயன்படல் விதியே!*
*இளந்திருச் செல்வரே இனிவரும் உலகாம்.*
*என்பதை எண்ணி இருபா லார்க்கும்,*
*பிரம சரிய குருகுலக் கல்வி,*
*எல்லா வூரிலும் ஈதல் கடனே !*
*கல்வி யுடனே நல்ல தொழிலும்,*
*அவரவ ரியல்பிற் கமைவுறப் பயில்க!*
*அறிவுந் தொழிலும் ஆண்மையும் அன்பும்*
*திருவும் தேசத் திறமையும் வளர்க்கும்*
*கல்வியே கல்விச் செல்வம தாமே !*
*காலம் போற்றுங் கலைகளை யெல்லாம்,*
*தொழில்களை யெல்லாம் எழில்பெறப் பயில்க :*
*பாட்டுங் கவியும் பரதமும் அரங்கும்,*
*சிற்பமும் போற்றுக திருவுற நாடே !*
*பொல்லதை யழித்து நல்லதைக் காக்கப்*
*புவியோ ரெல்லாம் போர்க்கலை பயில்கவே.*
*ஆணும் பெண்ணும் அறிவினி லொன்றே !*
*பெண்மை பூரணம் பெறத்தகு கல்வியை*
*இல்லம் விளங்க நல்குதல் கடனே.*
*பிரம சரியம் பிழையறக் காத்து*
*கற்பன கற்றபின், காதலாற் கூடி*
*நல்லறச் செல்வர் இல்லறம் புரிகவே.*
*உடலின் உறுதியும் உள்ளொற் றுமையும்,*
*கல்விச் சிறப்பும் கசடறக் கணித்தே*
*இருபா லாரும் இணைந்திட வேண்டும்.*
*இல்லற மின்றி இல்லையிவ் வுலகே,*
*மனையின் விரிவே மன்னுயி ருலகாம்.*
*சீரிய பெண்ணும், தீரனாம் ஆணும்*
*செறிந்த நாடே சிறந்தநா டாமே.*
*நறுமண வுரிமையும், மறுமண வுரிமையும்—*
*பொதுநலம் புரியும் புண்ணிய வுரிமையும்*
*கல்வி யுரிமையும், கலைவளர் உரிமையும்,*
*குலம்வளர் பெண்டிர் நலம்பெற வேண்டுமே.*
*ஊணுடை இல்லம், ஓர்பசு, காளை,*
*தேவைக் கேற்ற திருக்க ளுடனே,*
*கவலை யற்றுக் காதலர் வாழ*
*தக்க தொழிலைத் தந்திட வேண்டும்.*
*அருளும் பொருளும் அறிவுந் தொழிலும்*
*வளரும் வாழ்க்கை மங்கல மாமே.*
*நாட்டுப் பொருளை நற்றொழி லாக்கி,*
*உழைப்பும் பிழைப்பும் உதவிட வேண்டும்.*
*மடமை யாலும், வறுமை யாலும்,*
*வாடும் ஒருவரும் கூடா தினிமேல்.*
*செல்வம் வளர்க செல்வத் தொழிலால்.*
*பூட்டி யுறங்கும் பொருள்கொடி தாமே.*
*உயிர்க்கும் பொருட்கும் ஒட்டம் வேண்டும்.*
*பலர்பசித் திருக்கப் பதுக்கும் செல்வமே*
*திருட்டுங் கலகமுந் தீமையுந் தூண்டும்.*
*நாட்டுத் தேவை நாட்டிலே விளையச்*
*செல்வத் திரளைச் செலவிட லாமே.*

ஒவ்வொரு கையும் உழைத்திட வேண்டியே
புதுப்புதுத் தொழில்கள் பொங்கிட வேண்டும்.
தோன்றும் உலகந் தொழிலுல காமே!
பொதுநல மின்றிப் புரிதொழி லில்லை.
அன்னியப் பொருளுக் கடிமைப் படாமல்,
தன்னள விற்குத் தானுழைத் தடைகவே ;
துய்த்த மிச்சந் துறைமுகஞ் சேர்கவே!

வளர்தொழி லாலே வாணிகம் பெருக்கித்
தரையுங் கடலும் வரையறு செல்வம்
தந்திட வணிகர் முந்திட வேண்டுமே.

கொலை களவின்றிக் குடிசூ தின்றிக்
காமத் தால்வருந் தீமைக ளின்றி,
மனமொழி மெய்யில் மாசறு தூய்மை
காத்திட நல்வழி கண்டிடு வீரே,
அறவோர் கூட்டம் ஆங்காங் கேகிச்
சுத்தசன் மார்க்கந் துலங்கிடச் செய்கவே.
ஒழுக்கமே நாட்டின் உயிரென லாமே.
ஊர்ப்பொது நலத்தை ஒளியுறக் காக்கத்
தொண்டர் படையைத் தொகுப்பது கடனே.

நாட்டன் புடனே கூட்டுற விலக
ஒற்றுமை யாக ஓங்குக மக்கள்.
மனவொற் றுமையே இனவொற் றுமையாம்.
மனத்துள் மறைந்த வாய்மைச் சுடரைத்
தினமும் தூண்ட தியானமே வேண்டும்.
ஊர்தொறுங் கூட்டமாய் ஓர்குல உணர்வுடன்
இருபா லாரும் இதயத் திறைவனைக்
காலை மாலை, கண்மனங் குவிந்து,
தியானித் திடவே தேசந் தழைக்குமே.
"ஓம்பர மாத்மனே உயிருக்குயி ரான
ஒருவனே இந்த உலகினுக் கெல்லாம்
அன்பும் அருளும் இன்பமும் அறிவும்,
வாய்மை யொளியுந் தூய்மையு மருளாய்.
புண்ணிய நாட்டில் விண்ணர சோங்குக.
அருளும் பொருளும் அழகும் கலையும்
தீரமும் வீரமுஞ் செல்வமுஞ் செழித்து,
நீடு வாழ்க நின்னுயிர் மக்கள்.
பகைசினம் பொறாமை பாழ்பட் டொழிகவே.
வெல்லுந் திறமை வீறுபெற் றொளிர்கவே . .
மானிடம் அமர வாழ்வுபெற் றுயர்கவே . .
எல்லாம் வல்ல இறைவனே நாளும்
எங்களுக் கோங்குக மங்களா னந்தமே !
சுத்தஓம் சக்திஓம் சுத்த சக்திஓம்......"
இவ்வகை நாளும் இறைவனை வழுத்தினால்,
எல்லா ருக்கும் நல்லதே விளையும் . .
இக்கா லத்திற் கேற்றதைச் சொன்னேன்.
பிற்கா லத்திற் பெரும்பணி யுண்டு.
ஆண்பெண் வாழ்க்கை அத்யாத்ம வாழ்வாய்
அகிலவாழ் வெல்லாம் ஆத்தும நேயமாய்,
உலகெலாம் தேவர் இலகிடுங் கோயிலாய்ப்
போரில் லாத புதிய சாந்தம்
துலங்கும் புதுயுகந் தோன்றிட வேண்டும் . .
அருட்பெரி யாரும் அரியயோ கிகளும்
காட்டிய வழியைக் கருத்துடன் பற்றி

அனுபவங் கண்டு மனுகுல முய்யும்
பொதுநெறி காணப் பொறுமையுந் தவமும்
பூண்டேன் ; இந்தப் புண்ணிய பூமி
ஈன்ற நல்லீர், இன்றுடன் அரசை
உமது கையில் உரிமையோ டளித்தேன்.
மகுடமும் கோலும் மகாஜனத் திற்கே.
பணிவுட னளித்துத் துணிவுடன் இன்றே
துறவணிந் தேகித் தூயநன் மருந்துடன்
வருவேன் என்னை வாழ்த்திடு வீரே !
புண்ணியத் துறவினைப் போற்றிடு வீரே ! ”
இணையன மொழிந்தே புனிதனும் ஆங்கே,
கோலுடன் முடியுங் குடிகளுக் கீந்தே,
அரியணை தனையும் அக்கணந் துறந்தே,
மோனப் புன்னகை முகிழ்ந்திட நின்றான்......
வியந்தனர் பயந்தனர் விரிசன சபையார்,
“ஆண்டருள் அரசநீ அரியணை யிருந்தே
பிரிவினை தன்னை ஒருகணந் தாங்கோம்.........”
என்றன பலகுரல் மன்றெதி ரொலிக்கவே.
சுத்தன் கருணையைத் துதித்தனர் சிலபேர்,
முத்தனென் றுரைத்தனர் முற்றறி நல்லோர்,
பித்தனென் றேசினர் பின்னே சிலபேர் !
முக்குண வியற்கை மிக்கவும் பலவே !

அமைச்சரு முனிவரும் அமைதியின் ஆய்ந்தே,
இனிவருங் கால வியல்பையுங் கண்டே,
தூயனின் ஆருயிர் நேயமும் பார்த்தே,
நடப்பது நலமென நவின்றனர் ஆங்கே.
முடியர சுடனே குடியர சானதைப்
போற்றினர் சிலபேர் ; தூற்றினர் சிலபேர் !
இசைவசை இரண்டிலும் அசைவறு மனத்தான்,
உறுதியை மெச்சினர்— உலகறி சிலபேர்.
“சுத்தனார் வாழ்” கெனச் சுருதிகள் இசைக்க,
பொதுசனங் கடலெனப் போற்றிகள் முழங்க,
தாயுளந் துடித்திடத் தூயமெய்த் துறவி 200
போயினன் சுதந்தரப் புன்னகை வீச,
புத்தனும் வீரனும் போலவன் மனையைத்
துறந்திடுங் காட்சியை மறந்திடு வோமோ?

சூழுக வீர சக்தி ; துலங்குக பொது நலங்கள்,
ஆழுக மடமை தீமை அச்சமாங் கார நோய்கள்,
தோழமை பூண்டு நல்ல கல்வியுந் தொழிலு மோங்கி,
வாழுக மாந்தர் தெய்வ வானருள் பொழிக மாதோ ! 207

## 3. துறவுப் படலம்

துதிபெறும் அரசை முற்றத் துறந்தறந் தாங்கும் வள்ளல்,
சுதந்தர மின்ன லென்னச் சொந்தமா ளிகைக்கு வந்தே,
நிதந்தன தென்ற தெல்லாம் நீத்துடன் பந்த மற்ற
பதந்தனை யடைய வேண்டிப் பரிவுடன் முனைந்து நின்றான்...
மணியுடன் முத்தும், பொன்னும், வெள்ளியும், வரிசை யான
அணிகளும் குதிரை யானை தேருடன் ஆடு மாடும்,
துணிகளும், தானி யத்தின், சுமைகளும் அள்ளி யள்ளிப்
பணிவுடன் அளித்தான் அந்தப் பட்டணம் வியந்து போற்ற !

குறைவறு செல்வப் பையும், குன்றென நிவந்த வீடும்
திறைதரும் அரசுஞ் சீருந் திகழ்மணி மகுட வாழ்வும்,

இறைவனென் றுலகம் போற்றும் இசைகளும் இனைய வெல்லாம்
துறவறம் பூண்ட ஞானி தூசிபோ லொதுக்கி னானே !

எனதியான் என்ப தெல்லாம் ஈந்தபின் ஞான தீரன்,
மனைமதி லகன்று செல்ல மனதைமுன் னேவும் போது,
தனதொரு மைந்தன் செய்கை தவறெனத் தடுத்த டக்க
முனைதிருத் தாயும் ஆங்கே முன்வந்து முறையிட் டாளே !

பொன்னரி யணையை நீத்தும் புகழ்அர சாட்சி நீத்தும்,
மின்னிடை யாரை நீத்தும், வேதவா தத்தை நீத்தும்,
தன்னலப்பற்றை நீத்தும், தவளமா ளிகையை நீத்தும்,
அன்னையின் பாசந்தன்னை நீத்தவர் அரிய ரம்மா !

## இந்திரை

வழிவழி யரசை யாள வந்தனை தவத்தால்; சித்தி
செழிதரப் புரந்தாய் ; நாடு சீர்பெறத் தருமங் காத்தாய் !
பழிசெயுங் கலியை வென்றாய்; எமதுளம் பரித விக்க
மொழியுடன் செயலும் போற்றி, முழுத்துற வேற்ற தேனோ?

அற்புத வீரதீர பராக்ரம மனைத்தி னுக்கும்
பொற்புறு வடிவாய் வந்த பூரண மனித ரேறே,
தற்புகழ் கொண்டு நாங்கள் சாற்றிய தெய்வச் சேயே,
கற்பகக் கனியே, இன்றெங் கவலையாய் முளைத்த தேனோ?

மரபினை விளக்க வந்த மைந்தனிப் படித்து றந்தால்,
அரசினை யாரே காப்பார்? அறத்தினைத் தாங்கு வார்யார்?
உரிமையை உதறிச் சென்றால், உலகுனை நகைத்தி டாதோ?
பரிவுகொண் டிருப்பாய் பெற்ற பாசத்தாற் பேசி னேனே !

மதியிலா இரவைப் போலும், வானிலாப் பயிரைப் போலும்,
பதியிலா மனையைப் போலும், பகலிலா நாளைப் போலும்,
கதியிலாப் பிள்ளை போலுங் கண்ணிலாத் திருவைப் போலும்,
விதியுனைப் பிரித்தால், அந்த வேதனை தாங்கு வேனோ?
போர்வினை புளித்த தாலோ? புண்ணிய வதியாய் வந்த
தாரத்தை யிழந்த தாலோ தலைவிதி மாற நின்றாய்?
தேர்ந்தொரு திருவைக் கூடிச் சீர்பெற வாழ லாமே !
வீரநின் விநோதச் செய்கை விளங்கிடற் கரிய தம்மா !

## சுத்தன்

அறிந்தனன் அன்னை யுள்ளம்; அறிந்தனன் உலகின் பாசம்;
அறிந்தனன் பிறவித் துன்பம்! அரியபட் டினத்தார் போலே,
அறிந்தனன் காதில் ஊசி யதுவுநம் முடன்வ ராமை...
அறிந்துயிர்த் தன்மை யெல்லாம் ஆசையைத் துறந்தே னம்மா!

புண்மிகு சாவுஞ் சோவும் பொய்யிருட் போரும் வாரி
யுண்புவி யாள மாட்டேன்; யோகத்தில் உண்மை கண்டு,
விண்புவி யின்பம் இங்கே விளங்கிடும் ஒளியைப் பெற்றே
மண்புவி தன்னைப் பொன்னாய் மாற்றிட வருவே னம்மா !

கற்பினிற் சிறந்த கௌரி காயத்தை யுதறிச் சென்றும்,
அற்புத சக்தி தேகம் அமைந்தெனக் கெய்து வாளே !
விற்புரு வங்கள் வீசும் வேல்விழிக் கடிமை யாகேன்;
கற்பக நாடு வாழுங் கருமமென் யோக மாமே;

## இந்திரை

ஆக்கமும் புகழுஞ் சீரும் அறநெறி யின்ப வாழ்வும்,
ஊக்கிடும் வலிமை நீயென் றுன்னினோம்? செல்வ, நீயே

மோக்கமென் றிருந்தோம் ! உன்னை மும்மையு நம்பி னாரை
ஏக்கமே கொள்ளச் செய்தாய், இரக்கமுன் னிடத்தி லுண்டோ?

பரிசனம் வருந்தச் சொந்த பந்துக்கள் வருந்த, நாட்டின்
பிரசைகள் வருந்த, உந்தை பிரிந்ததால் வருந்து நெஞ்சேன்,
அரசினைத் துறந்த கோலம் அனைத்தையும் வருத்த, நீயும்
புரிசெயல் கண்டெ னுள்ளம் புழுங்கினேன் புதல்வ ரேறே !

முதுபுகழ் அரச னாங்கே முரடரைத் திருத்தச் சென்றான்
பொது சனக் கையிற் செங்கோல் பொன்முடி யனைத்து மீந்தே,
புதுநல மைந்த னிங்கே பூமியை நீத்தான்; என்னின்
எதுநலங் கண்டேன் சித்தி யிறைவியாய்ப் பிறந்த யானே !

## சுத்தன்

எடுத்தெடுத் துரைத் திட்டாலும், எத்துணை வாதிட் டாலும்,
தடுத் தெனைநிறுத்தி னாலும், சத்திய யுகத்தைக் காண,
விடுத்ததை விரும்பிக் கொள்ளேன், விரதங்கொண் டுறுதி யாகி
அடுத்ததை அடைந்து தீர்வேன். அன்னைநீ யறிவா யின்னே !

## போக மாளிகை

இவ்வகை யியம்ப மைந்தன், இந்திரைமௌன மானாள்—
செவ்விள மாதர் சூழுந் திருவுறு போக வீட்டில்,
வெவ்விய காவல் வைத்து, விரதத்தைத் தடுப்போம் என்றே
ஒவ்விய வுளத்தராகி யுறவினர் சூழ்ச்சி செய்தார்.

புத்தொளி பரவுகின்ற போகமா ளிகையி லெங்கும்,
சித்தத்தைக் கொள்ளை கொள்ளும் சித்திரப் பாவை யர்தம்,
முத்தொளிர் முறுவ லின்பம், பூசிய முகத்தி னின்பம்,
பித்தளி விறலி யர்தம் பேய்மதப் பிலுக்கு மாமே !

தேன்மலர் குலங்குந் தங்கத் தீங்கனி குலுங்கும், வேக
மான்குயில் கிளியொ டன்ன மயிலினங் குலுங்குஞ் சோலை,
மீன்விழிக் குமரி மாரின் விருந்துடன் யாழும் பாட்டும்,
ஊனுடற் கூத்துங் காம வுரைகளுங் குலுங்கு மாங்கே.

கானகஞ் செல்லுங் காலை, கண்ணிபோட் டிழுக்கு மாதர்,
மேனிலை நாடு வாரை மெல்லிடை வளைவி னாலே,
ஞானசூ னியராய்ச் செய்து நகைத்திடு மாதர் வைகும்,
கானவெள் ளத்தி லாழுங் கனகமா ளிகையி தம்மா !

பழுதிலா ஞானி யான பண்பனைப் பெண்கள் கூடி
வழுவிலாக் கலைகள் காட்டி, மயக்கினார் ; மாய வித்தை
முழுவதுங் காட்டி னார்கள்; முகங்களை மினுக்கி னார்கள்,
அழுதனர் தொழுதார்; கொஞ்சி யணைந்திட நெருங்கி னாரே !

"புன்னகை புரியு மாயப் பொய்களா போமி" னென்றே
பொன்னணி மினுக்கை யெல்லாம் புறங்கண்ட புனிதச்செல்வன்
முன்னிலைப் பார்வை யின்றி முழுதுளங் குவிந்து மோனத்
தன்னிலை யிருந்தான்; அந்தத் தனிநிலை சலிப்ப துண்டோ?

"ஏதடீ பித்த" னென்றார். இரும்புநெஞ் சிவனுக் கென்றார்,
"மாதரை வெறுக்கும் பேடி மாதவப் புரட்ட" னென்றார்,
காதலை யெல்லாங் காட்டிக் கட்டையைக் கண்டோ மென்றார்,
வாதிடும் விறலி யர்தம் வம்பினுக் கெல்லை யுண்டோ?

ஐந்தினை யடக்கி யாங்கே தியானத்தில் ஆழ்ந்தி ருக்கும்,
மைந்தனைக் கண்டு கண்டும் வாய்மையைக் காணாத் தாயும்
நைந்துளம் சித்தி மானை நயந்தனள்; அவனு மாங்கே

*பைந்திரு மகனை நோக்கிப் பணிவுட னுரைத்தான் மாதோ* 100

**சித்திமான்**

*கலகமுந் துயருஞ் செய்யுங் கலியினும் வருவான்; இங்கே*
*அலகறும் அல்ல லாகும் என்பதை யறியார் யாரே.*
*உலகமுன் னருளை நோக்கி உயிர்ப்பதைக் காணாய்; நீயும்*
*விலகிக்கண் மூடி நின்றால், விடுதலை கிடைப்ப தாமோ?*

*ஊரெலாம் வாழ்த்து ரைக்க, உளமெலாம் போற்றி செய்யப்*
*பாரெலாம் புகழ் மணக்கப் பரிதியின் கொடியைக் காத்தாய்!*
*வீரனே, நீயும் எங்கள் விருப்பினைத் தடுத்துச் சென்றால்*
*போரினும் புரியும் பொல்லார் புகுந்திடல் எளிய தாமே.*

*அன்னையின் கண்ணீர் காணாய், அமைச்சரின் மயக்கங் காணாய்,*
*மன்னுயிர் வருத்தங் காணாய், வாய்மையைக் காண நின்றாய்,*
*மன்னநீ உபவ னத்தில் மாதவம் புரிந்தாற் போதும் :*
*உன்முகங் கண்டு கொண்டே உயர்கட னாற்று வோமே !*

**சுத்தன்**

*தாய்சொலப் பரிந்து பேசுந் தந்தைக்கு நிகரே யான*
*வாய்மைசொல் அமைச்சர்ஏறே, மனத்தினில்அனைத்தும்கற்றோய்*
*ஆய்ந்தென தறிவைத் தூண்டி ஆருல குய்ய வேண்டித்*
*தூயவர் கொண்ட தூய துறவையே துணிந்து கொண்டேன்.*

*சொன்னநற் சாசனத்தின் சொற்படி யரசைக் காமின்,*
*முன்னரே செய்து கொண்ட முடிவினை முயன்றி யானும்,*
*பின்னரே பயனைக் காணும் பெரியநற் பணியை நாடி*
*என்னையான் பயிற்று கின்றேன்.இனிவிடை கொண்டு செல்வேன்*

*புன்னகை பூத்த டங்கிப் புனிதனு மோனி யானான்;*
*அன்னையும் சித்தி மானும் அத்துடன் அகன்றார்; ஆங்கே*
*முன்னுல கத்தி னுக்கு முழுநிலா வெள்ளி பூச*
*மின்னுநல் இரவ மைதி மேவிய தெங்கு மம்மா !*

*காவலர் உறங்காக் கண்கள் கலங்கின விடியற் காலை;*
*ஆவலோ டலசிப் பார்த்தார்; ஐயனை யெங்குங் காணார்..*
*ஓவெனக் கதறினார்கள்; ஓம்சுத்த சக்தி யென்று*
*மேவிய ஓலை யன்றி வேறொன்றுங் காணிலாரே !*

*ஆசையை யடக்கி, மேற்கொண் டாகிடுங் கரும நோக்கிச்*
*சாசனப் படிக்கே அன்னை சரிவர நாட்டைக் காத்தாள்;*
*காசினி விவகா ரத்தைக் கடந்துநாம் சுத்த யோகி*
*ஈசனின் ஆணை யாலே ஏகுழி ஏகு வோமால் !* 132

## 4. காமபுரிப் படலம்

### முன் செல்லல்

*முன்செலென் றுள்ளந் தூண்ட, முழுநிலா நிசியில் ஐயன்,*
*பின்செலும் பார்வை யின்றிப் பெரியபோர் வீரன் போலே,*
*மின்செலும் வேகங் கொண்டு வீரமாப் புரவி யேறிப்*
*பொன்செய்த வாழ்வை நீத்துப் போயினன்;அவன்பின் போவோம்!*

*தாயினுங் கருணை மிக்கான், சகவுயிர் வருத்தந் தீரத்*
*தூயமெய்த் துறவ ணிந்து, துறவினர் கூட்டந் தேடி,*
*ஆய்வுறு மருந்தை நாடி அலைந்தலைந் தயர்ந்து, பின்னும்*
*போயினன் புனிதர் வாழும் புண்ணியத் தலங்கள் கண்டே!*

*நானெனுஞ் செருக்கை நீத்து, நவமணிச் செல்வ நீத்துத்*
*தானெனத் தன்னு ளாடுஞ் சத்தியப் பொருளை நம்பி,*
*வானமே கூரை யாக, மண்மிசை நடந்தா னுக்குக்*
*கானகப் புட்க ளெல்லாங் கனிகளை உதிர்த்த மாதோ !*

*இயல்புறும் பசி யெடுத்தால், இயல்பினிற் கிடைத்த துண்பான்!*
*அயர்வுறக் கண்சு ழற்றின், அவ்விடம் அயர்வான் சற்றே ;*
*புயலையு மதியான், வெய்யிற் பொரியினு மதியான், காடு*
*வயல் வரப் பென்றும் பாரான்; வாய்மையை நாடி னானே !*

*வேண்டுமென்றெதையுங் கேளான்; வேலைசெய் துண்ணக்கூசான்*
*மாண்டகு பெரியார் வாழுந் தலங்களை வணங்கிச் செல்வான்,*
*பூண்டநல் விரதம் போற்றிப் புண்ணியர் உறவைக் கொண்டே,*
*ஆண்டவன் செயலை நம்பி, அந்தணன் வழிந டந்தான் !*

*மையிருட் காட்டி னூடும் மலைநதி கணவா யூடும்,*
*வெய்யிலு மழையுந் தாங்கி, வீசிடும் வாடை யூடும்,*
*வையகம் புரந்த வேந்தன், மனிதமா மரபு முற்றும்*
*உய்ய நன்நெறியைத் தேடி ஒருவனாய்த் திரிந்தான் மாதோ!*

*நல்லவர் துறவி யென்று நயமுடன் உபச ரிப்பார்;*
*பொல்லவர் கேலி செய்து, போவெனத் துரத்து வார்கள்.*
*கல்லையும் வீசு வார்கள்; கல்லினுங் கடுமை யான*
*சொல்லையும் வீசு வார்கள்—சொல்லறச் செல்வான் அன்னோன்!*

*நலங்கொடு தீதை வென்று, நட்பினாற் பகையை வென்று,*
*கலக்கிடுங் கவலை தன்னைக் கடவுளன் பறிந்து வென்று,*
*விலங்கிய லாரை ஆன்ம வீறுடை மனத்தால் வென்று,*
*புலன்களை வென்ற தூயன் போயினன் காற்றைப் போலே !*
*மணப்பறை யடிக்கும் ஓர்பால்; வாழ்க்கையின் முடிவைக் கூறிப்*
*பிணப்பறை பேசு மோர்பால், பெரும்பகை தூண்டு கின்ற*
*சினப்பறை வீறு மோர்பால், சீர்கெடு காலத் தீமை*
*மனப்பறை துடிக்கக் கண்டு, மறுவிலான் வழிந டந்தான் !*

*மிகைகுறை யின்ப துன்பம் இசைவசை மேவி ரண்டு*
*பகைவினை யுலகி னூடும் பாய்வள நதியைப் போன்றே,*
*திகைதறு மேடுபள்ளந் திகைப்பறத் தாவித் தாவி*
*வகையுறு வாய்மை யாழி கண்டிட வளைந்து சென்றான்.*

**காமபுரி**

*எல்லையில் வானைத் தாண்டி இரவியும் இறங்கிச் செல்ல*
*முல்லைச்சங் கூத வண்டு, மோகன முறுவல் வீசி,*
*அல்லியை அமுதத் திங்கள் அணைத்திடு மாலை வேளை,*
*புல்லரே வாழுங் காம புரிமருங் கெய்தி னானே !*

*மனையெலாம் ஊட லாட்டம், மருங்கெலாம் கள்ளி னாற்றம்,*
*முனையெலாம் காமக் கூத்து, முகமெலாம் போலிச் சாயம்,*
*நினைவெலாம் சூது வாது, நெறியெலாஞ் சாரு வாகம்,*
*தனையெலாம் புகழு மிந்தத் தரங்கெட்ட ஊரி லம்மா !*

*வயதினை முகச்சா யத்தால் மறைத்திடும் போலி மின்னார்,*
*நயமுறப் பொய்ப்பல் லேந்தி நகைத்திடு நாண மில்லார்,*
*பயம்பயிர்ப் பேத மின்றி பச்சையாய்ப் பேசும் வம்பர்,*
*கயவரை யாட்சி செய்யுங் காமமா புரியிதம்மா !*

*கண்கண்ட பொருளே உண்மை, கனகமா ளிகையே வீடு,*
*பெண்ணுடன் ஆண்கள் கூடிப் பெறுவதே பெரும்பே ரின்பம்.*
*எண்ணறு பணமே செல்வம், இந்திரி யங்க ளீயும்*

மண்ணுடற் சுகமே இந்த மானிடப் பயனென் பாரே !

தன்னறி விழக்கு மட்டுந் தாமதக் கள்ளை யுண்டு,
பொன்னையும் பெய்து, மாயப் பொய்நகை வீசி யீர்க்கும்,
மின்னிடை யார்கை கோத்து, வெறியெழப் பாடி யாடி,
உன்னத மகிழ்ச்சி யிஃதென் றுளறுவார் கிளர்ச்சி கொண்டே!

வயதினை மினுக்கி னாலே வஞ்சமாய் மறைத்து, நீளக்
கயல்விழி வலைவி ரித்துக் கனிநகை மாயங் காட்டிப்
பயல்களை வசப்ப டுத்திப் பணம்பல முறிஞ்சும் பேய்கள்,
வியனுறக் கொழுத்த காம வெறியரின் ஊரி தம்மா !

### காமி - வாமி

இத்தகை ஊரிற் காமி வாமியென் றிரண்டு பேய்கள்,
வைத்ததே சட்டமென்று மாந்தரை ஆட்டி வைத்தார்...
சத்தியென் றெழுந்தாள் வாமி, சாருவா கத்தின் கொள்கை
மெத்தவு முடையாள் காமி வேறுபா டிதுவே யம்மா !

கொன்றவூ னருந்திக் கள்ளைக் குப்புறத் தள்ள மாந்தி
நன்றெனக் குறி வணங்கி நாணமு நாணி நிற்க,
மின்றவழ் மேனி யின்ப வெறியிலே வேட்கை கொண்டு
துன்றலே வாமி சீடர் துய்த்திடும் பூசை யம்மா !

சத்தியு மில்லை; எந்தச் சவண்டியு மில்லை; சாமி
பத்தியு மில்லை; நன்றாய்ப் பகற்கொள்ளை யடித்துச் சேர்த்து,
மெத்தைமேல் மெத்தை கட்டி, மிடாக்குடி குடித்து, மாந்தர்
சித்தமே குளிரச் சேர்ந்து திரிதலே காமி நோக்காம்....

வெருவுறு வேங்கை வாயில் விழுந்தவர் பிழைத்த லாகும்,
கருமலைப் பாம்பு சுற்றிக் கடித்தவர் உயிர்த்த லாகும்,
செருவுறு குண்டி னின்றும் சேமமாய்ச் செல்ல லாகும்,
மருவுமிவ் வரக்கி மார்கை மயங்கினார் மடிவ ரன்றே !

ஆலைவாய்க் கரும்பு போலும், அரசிற்புல் லுருவி போலும்,
வேலைவாய் முதலை போலும், வேங்கைவாய் ஆடு போலும்,
சேலையால் மினுக்கு மிந்தத் திமிர்கொண்ட பெண்கள் கையில்
மாலைவாய் அகப்பட் டார்கள் மறலிவா யகப்பட் டாரே !

வடித்தகள் ஊட்டி, மிக்க வாஞ்சைகள் பேசிப் பேசி,
நொடிக்கொரு குணத்தை மாற்றி, நூலிடை நெளித்து நீட்டி,
மடித்தலம் சுவர்க்க மென்ற மயக்கினைக் காட்டி, ஆசை
நடித்திடும் பெண்ணை நம்பி நட்டவர் கெட்டா ரன்றே !

உதைத்திடுங் காலை யள்ளி உச்சிமேல் வைத்துக் கொள்வார்,
பதைத்திடு மார்பு மார்பும் பதிந்திடப் புல்லு வார்கள்,
சதைத்திமி ருள்ள மட்டுஞ் சரசசல் லாபஞ் செய்து,
வதைத்திடுங் காம நோயால் வாழ்வினைப் பாழ்செய் வாரே !

பகலிர வின்றிக் காமப் பன்றிகள் போல வாழ்வார்,
அகமுகப் பிணியை நோக்கி, அல்லலுற் றேகும் ஐயன்—
முகமலர் நோக்கிக் காமி முன்விழி வலையை வீசி,
நகைமலர் காட்டி வாவென் றழைத்தனள் நாண மில்லாள்.
“பூரண மதி முகத்தாய், பொன்னிற மேனிச் செல்வா,
மாரனைப் பழித்த மாரா, மாதரைப் பாரா தேகுங்
காரண மென்ன?” வென்று கைதொடும் போது, தூய
வீரனும் “பேய்போ” வென்றுவிரைந்தொரு கோயில்புக்கான்!

*பேயினைத் தப்பி மற்றோர் பிரமராட் சசியி டத்திற்*
*போயகப் பட்டாற் போலே, புனிதனும் அந்தக் காளி*
*கோயிலிற் புகவும் வாமி புன்னகை யுடனே வந்து,*
*தாயெனைத் தழுவிக் கொள்ளாய் தனயவென் றருகு வந்தாள்!*

*தந்திரப் பெயரி னாலே, தரங்கெடு தீயர், சக்தி*
*மந்திரஞ் சொல்லி நீலி வைரவி என்று மாதை*
*வந்தனஞ் செய்து, பூவும் சந்தமும் வாரித் தூவி,*
*மொந்தென வீழ்ந்து மோகக் குழியிலே மூழ்கு வாரே !*

*பஞ்சம காரத் தாலே பராசக்தி பெறுவோ மென்னும்,*
*வஞ்சகக் காமக் கள்ளர் வழிபடுந் தலைவி வாமி,*
*அஞ்சலொன் றின்றி, நாணும் அரிவையர் தன்மை யின்றி,*
*மிஞ்சிய விரகத் தாலே விமலனைத் தழுவ வந்தாள் . . .*

*பித்துறு வாமி தன்னைப் பேயென வெறுத்துக் கீழே*
*பொத்தெனத் தள்ள வீரன், பொய்யரின் கும்பல் ஆங்கே....*
*"சத்தியை அவம தித்தாய், சா"வென ஆடு வெட்டுங்*
*கத்தியைச் சுழற்றி வந்தார் கடுஞ்சினப் புயலை வீசி.....*

*அறவலி கொண்ட வீரன், ஆயுதந் தன்னைப் பற்றி*
*மறவலி காட்டித் தீயர் மமதையைப் போக்கு மெல்லை....*
*திறமுள படைதி ரட்டித் திடீரெனக் காமி தோன்றி,*
*"அறிவிலி வாமி யேயென் அழகனைத் தீண்டேல்" என்றாள்.*

*செருக்குடன் பொறாமை யேறுந் தீயுடன், மீறுங் காம*
*நெருப்புடன், போட்டி போடு நினைவுடன், மதும யக்கத்*
*தருக்குடன், சாக சஞ்செய் தந்திர முடனோர் ஆண்முன்*
*அரக்கியர் இருவர் கூடின் அமர்க்களஞ் சிறிய தாமோ?*

**வாமி**

*சக்தியாம் என்னைச் சரண்புகுந் தன்பர்,*
*சாதனஞ் செய்து தாந்திர யோகம்,*
*பயிலுங் கோயிலிற் புயலெனப் புகுந்த*
*திருட்டு நாயே செல்லுடன் வெளியே !*

**காமி**

*சாமியாம் சக்தியாம், சாதனக் கோயிலாம்.....*
*கதவை யடைத்துக் கள்ளத் தனமாய்ப்*
*புழுதியில் விழுந்து புரளு மட்டும்,*
*போதை போட்டுப் புந்தி மயங்கி*
*உடன்பிறந் தாரையும் உளங்கொண் டணைவீர்.*
*இந்தப் போலி இழவுக ளின்றி,*
*வேசி தாசர் பேசிய படியே*
*பூத வுடலே பொருளென நம்பி,*
*உடலின் பத்தைக் கடனெனப் பேணி,*
*உள்ள மட்டும் கள்ளமில் லாது,*
*போகம் புசிக்கும் யோகம் எமதே.....*
*எம்முடன் சேரடீ வெம்மனப் பேயே.*

**வாமி**

*யாரடீ கள்ளீ எங்களைப் பழித்தாய்?*
*பாரினில் ஆண்பெண் பைரவக் குலமாய்ச்*
*சீருடன் வாழச் சிவனுமை தனக்குச்*
*செப்பிய தாந்திரம் ஒப்பறு யோகம்.*
*மீனும் புதிய ஊனும் உண்டு,*

காட்ட மான கள்ளையும் குடித்து,
தாயெனப் பெண்ணின் சக்கரந் தொழுது,
மந்திரஞ் சொல்லி மடியினி லேற்றுத்
தியானம் செய்ததும் தீயெனக் குண்டலி
முக்கோ ணத்திற் பக்கெனப் பற்றி,
ஆறுசக் கரத்தை வீறுடன் மீறி,
உச்சிக் கேறி ஒளிமய மாகும்.....
ஆணும் பெண்ணும் அமுத முண்பார்.
யாக்கை முழுவதும் இன்பஞ் சிலிர்க்கும்.
அத்தகை யின்பம் அளித்திட நானே
இன்றிவ் வழகனை இச்சா சக்தியால்,
அள்ளிக் கலப்பேன் ; அமரவாழ் வளிப்பேன்........

**காமி**

அவனைத் தொட்டால் அக்கணம் சாவாய்.
முன்னே கண்டு மோக முரைத்தேன்....
என்சுகப் பொருளை எப்படித் தொடுவாய் !
சாருவா கருடன் சண்டை யிட்டு
மாறு செய்து, மகார மைந்துடன்,
பைரவி வட்டம் பாங்குட னமைத்தே,
நாங்கள் செய்வதை நகலடிக் கின்றாய் !
"வாடா துரையே கூடா ஒழுக்கம்,
ஏனுனக் கிங்கே, நானுனக் கெல்லாம்
ஆவேன் ; இவ்வூர் அரசியான்" என்றே
தூயனைக் காமி தொடவே வாமி,

**வாமி**

நம்பா தேயிவ் வம்பியை ; யானே
நாத்திகர் திமிரை நலித்திடும் சக்தி ;
என்பை ரவனாய் இருப்பாய் ; உனக்கும்
சக்தி குண்டலி தணலைத் தருவேன்,
அமுதம் பொழிவேன், அமரவாழ் வளிப்பேன்
சாகா வுடலைத் தருவேன் என்று
கையைப் பற்றக் காமியும் பாய்ந்து,
வாமியைத் தள்ளி வலியப் புடைத்தாள்.......
காமியும் வாமியும் கட்குடி மயக்கால்,
கைகள் கலந்து கலகந் தொடங்கவே,
வாமப் படையும் காமப் படையும்,
"ஹா ஹா" வென்றே அமர்க்களஞ் செய்து,
கத்திக ளாலுங் கட்குடத் தாலும்
ஊனெலும் பாலும், மீன்மல ராலும்,
தட்டுக ளாலும், தடிகளி னாலும்,
சடசட வென்றே தாக்கிப் பலமாய்
அடித்துக் கொண்டன ; கடித்துக் கொண்டன;
நாத்திகக் கூட்டம் ஆத்திரத் துடனே,
சாஸ்தாகாளி, சண்டி, பைரவி
உருக்களை யாங்கே நொருக்கி யெறிந்து
மண்டைகள் உடையச் சண்டை செய்யவே
கள்ளும் காமமுந் துள்ளிய வெறிக்குச்
சொல்லே றாதெனச் சுத்தனும் அறிந்து,
விளக்கை யணைத்து, வீதியிற் குதித்துக்
கோயில் வாயிலைக் குணுக்கெனப் பூட்டி,
ஒதுக்கிடந் தேடி ஒண்டியாய்ப் படுத்தான்.....
பஞ்சமா பாதகப் பதர்களைத் திருத்தப்
பொய்யரை யடக்கி மெய்யறம் விளக்க,

*நாத்திக ருக்கு நல்லறி வேற்ற*
*வழியை நினைத்து மனமுறங் காமல்,*
*கண்ணயர்ந் தாங்கே காலையி லெழுந்தான்.......*
*காலைக் கடனைக் கருத்துற முடித்து,*
*சுத்த சக்திச் சுடரினை நினைத்தே*
*சஞ்சல மற்ற நெஞ்சுரங் கொண்டு,*
*திருவுடை நல்லார் ஒருவரைத் தேடித்*
*தெருத்தெரு வாகத் திரிந்தான் ; ஆங்கே*
*காரிர வெல்லாங் களியாட் டயர்ந்தே,*
*ஊரில் இன்னும் உறங்கினார் பலரே !*
*வகைவகை நோயால் வருந்தினார் பலரே !*
*வலிவெலாம் போக்கி மெலிந்தார் பலரே !*
*என்னசெய் வோமென் றேங்கினார் பலரே !*
*புத்தியைச் செருப்பாற் புடைத்தார் பலரே !*
*ஏன்செய் தோமென் றிரங்கினார் பலரே !*
*பித்துக் கொண்டு பிதற்றினார் பலரே.*
*வைத்திய னுக்கு வரும்படி மிகவே*
*செல்வ மிழந்து திகைத்தார் பலரே;*
*கடனுக் கொளிந்து நடந்தார் பலரே !*
*அவளை இவனும் இவளை அவனும்*
*கெடுத்தா ரெனவம் படித்தார் பலரே !*
*காட்சிக ளெல்லாங் கண்டுளம் பதைத்துக்*
*கோயிலின் முன்பெருங் கூட்டங் கண்டான்...*
*பூட்டையுடைத்துப் புகுந்துளே பார்க்க.......*
*பயங்கரக் காட்சி, மயங்குறக் கண்டான் !*
*வாமிப் படையுங் காமிப் படையும்,*
*குற்றுயி ராகக் குடியுறக் கத்தில்,*
*வீழ்ந்து கிடந்ததை ஆழ்ந்து நோக்கி,*
*வருந்தித் தாமே திருந்துவா ரென்றே*
*தூயன் மெய்வழி துலக்கினா னாங்கே.*

### சுத்தன் சன்மார்க்க முரைத்தல்

*இங்கே கூடி யிருக்கும் மானிட*
*நண்பீர், உமக்கு நல்லதே சொல்வேன்:*
*கேட்டு நடப்பீர் கேடுகள் விலகும்.*
*இதோ பாருங்கள் ; இரவு முழுதும்,*
*கூடிக் குடித்துக் கூக்குர லிட்டே*
*ஒருவரை யொருவர் வெருவுறப் புடைத்தே*
*புண்பல பட்டுக் கண்ணயர்ந் துள்ளீர்....*
*இதுவோ மானிடர் இயற்கை வாழ்வு !*
*நல்லறம் விலகிய பொல்லா மனிதர்,*
*மனமடங் காத தினவுறு காமிகள்,*
*வேத மறியா விநோதப் பிராணிகள்,*
*தாமுங் கெட்டு, நாமுங் கெடவே,*
*இந்த மாதிரித் தந்திரஞ் செய்தனர்.*
*கடவுள் பெயரால் கதைகள் கட்டி,*
*மனிதன் செய்யும் மயக்குக ளிவையே !*
*கொலையூண் கட்குடி விலைமகள் சேர்க்கை,*
*காமப் போட்டியாற் கைகலந் தடித்தல்,*
*ஆண்கள் பெண்ணுக் கடிமையாய் வாழல்,*
*இவற்றால் எய்தும் இன்னலைப் பாரீர்.*
*புத்தியைக் கெடுக்கும் போலிச் சுகத்தால்,*
*கண்ட பயனைக் கண்ணுறக் காணீர் !*
*சிந்தனை செய்மின் சிந்தனை செய்மின்,*
*பகுத்தறி வுள்ளோர் பாப வழியை,*

*விலக்கிப் புண்ணியந் துலங்கிட வாரீர் !*
*இச்சிற் றூரில், எங்கே பார்க்கினும்,*
*விருந்துச் சாலை, மருந்துச் சாலை,*
*கள்ளின் வாடை, காமச் சண்டை,*
*சூது பொறாமை, சொற்போர், மற்போர்,*
*பிணிதுய ரின்னல் பெருநோய் சூலம்,*
*அழிநோ யிவையே அரித்திடக் காண்கிறோம் !*
*பாப வழியாற் பணத்தைச் சேர்க்கிறீர்;*
*குடிகூத் திற்கே கொட்டித் தீர்க்கிறீர்...*
*பெண்சிற் றின்பமே பெரிதெனக் கொண்டீர்.....*
*இரவைப் பகலாய்ப் பகலை இரவாய்*
*ஆக்கிக் காமம் அள்ளிப் புசிப்பீர்.....*
*எல்லாம் முடிவிற் பொல்லாப் பிணியே !*
*பகுத்தறி வுள்ள பயன்கெழு மாந்தர்*
*ஞாலத் திறைவனை நம்பிட வேண்டும்,*
*இறைவன் என்பவன் எதற்கெனக் கேட்பீர்...*
*பூதம் நான்கே பொருந்தி யுடலாம்,*
*சுண்ணமு மஞ்சளுந் தோற்றுஞ் செம்மைபோல்,*
*பூதச் சேர்க்கை பொருந்துயி ரென்பீர்,*
*இறக்கும் உடலுடன் இறப்போ மென்பீர்;*
*இருவினைப் பயனை ஏற்கவு மாட்டீர்,*
*கண்ணாற் கண்டதே காட்சி யென்பீர்;*
*புலனுக் கின்பமே பொழுதெலாந் தேடுவீர்.*
*உடலுயிர் மனத்தினும் உயர்ந்தசுத் தான்ம*
*சுகத்தையும் அறியீர், இகத்தையும் அறியீர்....*
*பருவுடல் பெற்ற பயனையுங் காணீர்—*
*புலிநரி போலே புலாலை யுண்பீர் !*
*உருப்படும் வழியை உரைக்கிறேன் கேளீர்:*
*பொதுநலத் தொழிலே புரிந்துழைத் தீட்டி,*
*வந்ததைச் சமமாய் வகுத்துண் டுடுத்துக்*
*கொலையுண வின்றிக் கொடுமைக ளின்றி,*
*தம்போற் பிறரைத் தயவுடன் மதித்தே,*
*அன்பொடு நடந்தால் அஞ்சுதல் ஏனோ?*
*காய்கனி தானியங் கடலை பால்தயிர்—*
*இவையே மனிதருக் கேற்றநல் லுணவாம்.*
*பசிக்கன லறிந்து புசிப்பது முறையே*
*மானிட மரபு வளரவே காதலாம் ;*
*தாதுவே உயிராம், தாதுவே உடலாம்,*
*அதைவீ ணாக்கின் ஆயுளே குறையும்,*
*உடலும் பிணியால் உளையுங் கண்டீர்.*
*விலைமா தென்பதே இலையென் றாக்கி,*
*ஒருவன் ஒருத்தி யுடன்மனை யறத்தில்*
*ஒழுங்காய் வாழ ஊர்நல முறுமே,*
*அன்பீர், இன்றுடன் அழிவாழ் வொழிக !*
*இல்லற மாகிய நல்லற மோங்குக ...*
*தூய வாழ்வு துலங்குக ஊரில்....*
*காமவூர் மாறிச் சேமவூ ராமே !*

*    *    *    *

*சுத்தனிவ் வாறு சொல்லிய சொற்கள்,*
*பலபேர் நெஞ்சிற் பளிச்செனப் பட்டதும்,*
*இதுவே நலமெனப் பொதுஜன முணர்ந்து,*
*"நல்வழி காட்டி நடத்திட வந்த*
*குருவே உன்னைக் கும்பிடு கின்றோம்..."*
*என்றனர் அத்ததி எழுந்தனர் குடியர்...*

*சோம்பல் நெளித்துத் தூக்கங் கலைந்து,*
*கொட்டாவி விட்டுக் குறுகுறு வென்று,*
*வாமியைப் பார்த்துக் காமி மீண்டும்....*
*"என்கா தலனை எண்ணா தொழி" யெனச்*
*சண்டை தொடங்கச் சனங்கள் பற்றி*
*இரண்டு பேரையும் இருட்சிறை யிட்டுத்*
*தூயனா ருக்கே நேயரா னாரே !*
*புனிதனும் ஆங்கே பொதுநலப் படையால்,*
*ஊரைத் திருத்தினான், ஒழுக்கந் திருத்தினான்,*
*கட்கடை, காமக் கடைகளை யழித்தான்*
*மாதரை இல்லற வாழ்வில் அமைத்தான்.*
*உத்தம ரான புத்தர் சிலபேர்*
*தரும சேனனைத் தலைவனாய்க் கொண்டு*
*சுத்தனா ருக்குத் துணைநின் றுழைத்தார்;*
*அறநெறி பரவ முறைமுறை முயன்றார்.*
*தூயனும் அவர்தருந் துணையினால் ஊரில்,*
*சன்மார்க்க சங்கம் தழைத்திடச் செய்தான் ;*
*துன்மார்க் கத்தைத் தூருடன் பெயர்த்தான்.*
*ஊரார் நன்றியை உரிமையாய்ப் பெற்றுத்*
*தொண்டால் மகிழ்ந்த தூயன்வா ழியவே !*

## 5. மழைப் பொழிந்த படலம்

*அந்த வூரில் ஆறே மூாண்டுகள்*
*மழையே யின்றி மக்கள் வருந்தினர்.*
*மழை பொழிந்தால் மாதவச் சுத்தன்*
*மொழியை நம்பி மூல சக்தி*
*ஆலயந் திருத்தி அன்புசெய் வோமென*
*உறுதி கூறினார் ஊரார் எல்லாம்*
*பாபத்தாலும் சாபத்தாலும்*
*பசுநிலமெல்லாம் பாலைவனமாய்*
*பசிபிணி துயரால் பரிதவித் துயிர்கள்*
*வாடக் கண்டு வளம்பெற வூரே*
*கருணைப்பெருமான் கடவுளைக் கருதி*
*மழைப்பாட்டொன்று மழையெனப் பொழிந்தான்.*

### மழைப் பாட்டு

*தேனார் மழைபொழிவாய் தெய்வத் திருவருளே*
*ஊனார் உயிர்வாழ உழவுத் தொழிலோங்க*
*கோனார் குழல்கேட்டுக் கோக்கள் பால்சொரிய*
*வானார் கருமுகிலே ! வழுவா மழைபொழிவாய்.*

*விண்ணமுதே உலகுயிராய் விளையாடும் அமுதே*
*பெண்ணமுதமாய்ச் சேய்வளர்க்கும் பிரியமுள்ள பரிவே*
*கண்ணமுதே பண்ணமுதே கலையமுதே இன்பக்*
*கடலமுதே காரமுதே கைகுவித்தோம் உனக்கே*
*மண்ணமுத விளைவேற மாதவங்கள் செழிக்க*
*மழை பொழிவாய் மழை பொழிவாய்*
*நல்ல மழை பொழிவாய்.*

*பயிர்வேகப் புல்லின்றிப் பசுமெலிந்து வேகப்*
*பருகிடநீ ரின்றியிந்தப் பாழுநிலத்தினிலே*
*உயிர்வேக, மனம் வேக, உணர்புலனும் வேக*
*உடல்வெந்து புண்ணாகக் குடல்வெந்து குழைய*
*துயர்வேகுங் கண்ணீரும் துன்பத்தால் வேகத்*
*தொல்லைகளைத் தாங்கில்லோம் நல்ல மழை பொழிவாய்!*

செயலுக்கும் மின்சாரத் திறமைமிகக் குறையத்
தேயத்தே தொழில்வளமை தேய்வதுவும் ஆமோ
அயலரக்கர் போர்முறுக்கி அழிவுசெயும் இந்நாள்
அன்னமின்றி யிந்நாட்டார் இன்னலுற லாமோ?
தயவான தண்ணருளே தஞ்சமுனை யடைந்தோம்
தருண மழை பொழிந்திடுவாய் வருண பக வானே !

வேலையின்றிக் கூலியில்லை; விளைபொருளும் இல்லை;
விண்ணமுதம் இன்றியிங்கே மண்ணுயிர் வாழ்வில்லை;
காலையிலும் மாலையிலும் கனலேறிக் கொதிக்கும்
கடுமுகத்தைக் காட்டுவதேன் உடுமலிந்த வானே?
சோலைவளம் பெருகிடவே சோதியருட் கடலே
"சோ"வென்றே மழைபொழிவாய் சோர்வற நல்லுலகே !

பருவமழை தவறிமிகப் பாதகங்கள் பெருகிப்
பச்சைவள மின்றியிங்கே பஞ்சத்தால் வாடி
தருமநிலை தவறியிந்தக் கருமவுல குயிர்கள்
தட்டழிவ துன்கருணைச் சம்மதமோ சிவனே?
கருமுகிலாய் மின்னொளியாய்க் கடகடக்கும் இடியாய்க்
காரமுதம் பொழிந்திடுவாய் பாரமுதம் பெறவே !

நீராய் நெக்குருகி நெஞ்சம் கரைந்தோட
காரார் மழைவானே கைகூப்பித் தொழுதோம்
பாரார் திருக்கோயில் பசும்பொன் னகைசொக்க
வாராய் ! வளந்தாராய் ! வானத்தருண்மழையே !

அம்பொன் அம்பலத்தே அருளார் சக்தியுடன்
நம்பன் சிவபெருமான் நடஞ்செய் சிலம்பொலிபோல்
அன்பர் மனமகிழ அவனிப் பசிநீங்க
உம்பர் வானகமே ஓம் என்றருள் மழையே !
கல்விப் பயனோங்கக் கலைகள் மிகவோங்கச்
செல்வத் திருவோங்கத் தேசப் புகழோங்க
இல்லை யென்னாதே ஈகை மிகவோங்க
நல்காய் மழைவானே நல்ல வானமுதே !
சைவப் பயிர்செழிக்கத் தமிழார் கலைசெழிக்க
தெய்வத் திருக்கோயில் சீரார் விளக்கோங்க
துய்யர் தவமோங்கத் துலங்க நலங்களே
பெய்வாய் மழையமுதே பேரின் பம்வரவே

கார்மேகங்கள் கடகடவென்ன
இடியிடித்தாங்கே இருளைப் பிளந்து
மின்னிமின்னி விண்மழை பொழியக்
கண்ட வூரார் கனிவுறக் கூடிச்

சுத்த சக்திச் சுடர் பெருங்கோயில்
எழுப்பி யாங்கே எழில்பெறும் சக்தி
உருவைத் துலக்கித் திருவலங் கரித்து
மந்திரமாலை வகுத்த முறைப்படி

வழிபா டியற்றி மத்தளங் குழல்யாழ்
பிடில்சுர கெத்துடன் அடியார் தொடரத்
தூயன் இசைத்தான் சுத்த ஓம்சக்தி
நாதக்கிண்கிணி நர்த்தன மாடவே.....

நவராத் திரியில் தவயோ கத்தால்
வழிபடும் அன்பர் வரம்பெற நல்கும்
தேவி ஓம்சக்தித் தெய்வமே போற்றி

*ஐவர் சக்தியாய் ஐந்தொழில் புரியும்*

*கனலே போற்றி ! கமலியே போற்றி !*
*இரத்த வெறிகொள் எருமை அரக்கனைத்*
*தகர்த்த ஜயரண சண்டீ போற்றி*
*கவலை போக்கும் கருணையே போற்றி !*

*ஜயஜய சுத்த சக்தி சரண்பர மாத்ம ஜோதி !*
*பயந்தவிர்; பகைதீர்; ஆத்ம பலமருள்; பழுத்த வாக்கு*
*நயந்தருள்; யோகசித்தி நன்றருள் ஞாலவெற்றி*
*வியன்கலை நல்கு; நீயே நான்எனும் வீறு தாராய் !*

*அலைமனம் அடங்கிச் சீறும் ஆணவப் பேயடங்கி,*
*மலையென நிட்டைகூடி வானென வாழ்ந்து தெய்வக்*
*கலைநதி யெனவுலாவுங் களிப்பெமக் கீவாய்; உள்ளே*
*நிலைபெறும் அன்பருக்கு நின்னையே நல்கும் எந்தாய் !*
*படிகப்பொன் மேனி கண்டேன் பால்நிறங் கண்டேனுள்ளம்*
*படிகக்கண் ணாடியாகிப் பளிச்சென ஒளிரக் கண்டேன்*
*அடிமுடி காணாத் தூய அறிவினைக் கண்டேன்; இன்பந்*
*துடிநடங் கண்டேன்-சுத்த ஜோதியின் அருளைக் கண்டேன்!*

*ஓங்காரக் கண்ணாடிமுன் ஒளிமணி விளக்கிலங்க*
*நீங்காத நிட்டைகூடி நெஞ்சிலே நீயிலங்க*
*ஆங்கார மில்லாநானுன் அன்பிலே ஆழ்ந்திலங்க,*
*தூங்காத தூக்கந் தந்தாய் சுத்தஓம் சக்திதாயே !*

*பகைவரின் பலமொடுங்கப் பாழ்சின வசையடங்க*
*நகைப்பவர் வாயடங்க நானெனும் செருக்கடங்க*
*தகைமிகுங் கவிதைச்செல்வம் தழைத்திட வரமளித்தாய்*
*வகைவகைச் சந்தத்தாலுன் மகிமையைப் பாடவாராய் !*

*எனதுளத் துடிப்பு நீயே என்னுள்யான் எனது நீயே*
*உனதருட் கருணையின்றி யுயிரிலேன் உயிர்ப்பு மில்லேன்*
*மனதினைக் கடந்துஞான வானிலே நடனமாடும்*
*புனிதமே என்னுளத்தைப் புண்ணியக் கோயில் கொள்ளாய்!*

*ஆரறி வாருன் மாண்பை அற்புதச் சிற்ப ராம்பா !*
*பாரறி விளக்கே பந்த பாசத்தை யுருவி யோங்கும்*
*சீரறி யிரவியே நின் சித்தமே யாக வென்னும்*
*தாரக மொன்றே பற்றிச் சரண்புகும் என்னைக் காவாய் !*

*கலைதரு மறிவே ஞானக் கண்மணிக் கொளியே; மாய*
*வலைதரும் தீமை நாடா மனத்தெளி வருளி, அன்பு*
*நிலைதரும் அருளே, ஆன்ம நேயமே மூலாதார*
*வுலைதருங் கனலே என்னை உய்யக்கொண் டாளுவாயே !*

*தொன்றுநான் மறைக ளீந்தாய், துலங்குமா கமங்க ளீந்தாய்,*
*நன்றுயிர் வாழ நான்கும் வளம்பெற நல்கு கின்றாய்*
*வென்றுயர் கவிதை யீந்து வீரமும் வீறு மீந்தே*
*என்றுமென் இதய மன்றில் இருந்துல காளு வாயே !*

*வாழ்கநின் அன்பர் கூட்டம் வழிவழி நின்பேர் வாழ்க !*
*வாழ்கநின் யோக சித்தர் மரபுநீ டூழி யிங்கே...*
*வாழ்கநின் அறிவுச் செல்வம் வரந்தருந் திருக்கை வண்மை*
*சூழ்கஓம் சுத்த சக்திச் சுடர்நில வுலக மெல்லாம் !*

*காமபுரியைக் கனிவுறத் திருத்தி*
*வந்தபிக்ஷுக்கள் வழித்துணையாக*
*சுத்தன் ஆசிய ஜோதி துலங்கும்*
*புத்தபுரிக்குப் புறப்பட்டானே !*

## 6. புத்த ஜோதிப் படலம்

*தரும சேனர் தருந்தரு மச்சுதை*
*பருகு நீரும் பசிக்கமு தும்எனப்*
*பெருக வுண்டெம் பிரானும் அவருடன்,*
*பொருவில் புத்த புரியை யணுகினான் !*

*வெள்ளொ ளியை விசாக நிறைமதி,*
*அள்ளி வீசும் அழகிய நாளிதே.*
*உள்ள மெல்லாம் உயிர்க்கரு ளேநிறை*
*வள்ளல் ஞான வரோதய நாளிதே.*

*"இந்த நாளில் எமது திருநகர்*
*வந்த உத்தமர் வாழ்"கெனக் கூறியே,*
*அந்த வூரின் அறத்துறை யாளர்தம்*
*சிந்தை பொங்கித் திருமடத் தேற்றனர் !*

*ஊரில் உத்தமர் செய்யுப சாரத்தை*
*சீரி யர்கள் செழிப்புறக் கொண்டபின்*
*பூர ணம்பெறு புத்தரின் ஆலயம்,*
*ஆரி யர்கள் அனைவருங் கூடினார் !*

*பொருவில் புத்தரைப் பூசனை செய்தபின்,*
*இருகை கூப்பி இறைவன் சரிதையைத்*
*தரும சேனர் தயவுடன் சொல்கெனத்*
*திரும டத்தினர் செஞ்சொலின் வேண்டினார் !*

*"அன்னதே என் அவா" வெனச் சுத்தனும்,*
*தன்ன றத்திற் சிறந்த தருமனும்,*
*புன்ன கையுறப் புத்தரைச் சங்கத்தை,*
*முன்னர் வாழ்த்தி முகமலர்ந் தோதினான்:*

*வானுங் கேட்டது மாமதி கேட்டது,*
*நானி லமு நயமுறக் கேட்டது,*
*தேனின் இன்னிய செஞ்சொல் வரமுனி,*
*ஞான புத்தனை நாட்டிய காதையே !*

### புத்த ஜோதி

*ஆருயிர் உலகுக் கெல்லாம் அன்புடன் அருளு மேவிக்*
*காருயிர் வானம் போலக் கருணையே புரிந்த வள்ளால்,*
*பாருயர் இன்ப மேநின் பணிதரும் இன்ப மானாய்.*
*சீருயர் புத்த தேவா சேவடி பணிகின் றேனே !*

*இங்குல குயிர்க ளெல்லாம் இடர்பல வருந்தக் கண்டு,*
*பொங்கிடும் இரக்கத் தாலே போதியின் அடியில் நோற்று,*
*வெங்குலத் துயர மான விரியிருள் ஒழிய ஞானச்*
*செங்கதிர் வீசி வந்த தினகரன் சரிதை கேளீர் !*

*வெருக்கொளும் அரக்க மாயம் வேருடன் வீழ வேண்டி*
*உருக்கொடு வந்த சித்தி வேந்தனை யொத்த வேந்தன்,*
*கருக்கொளும் போதே ஞானக் கதிருடன் கலந்த தூயன்,*
*அருக்கனைப் போன்ற புத்த ஜோதியின் அருமை கேளீர் !*

*செழுந்திரு வழகன், வீரத் திருவுறு மார்பன், இன்பக்
கொழுந்தொளிர் செல்வன், இந்தக் குவலய உயிர்க ளெல்லாம்
அழுந்திருள் ஆசை வாய்ப்பட் டழுந்துயர்க் கிரங்கி யிங்கே
எழுந்தருள் புத்த ஜோதி யிறைவனைப் போற்று வோமே !*

*அத்தகைப் புத்த தேவன், ஆரியப் பரத நாட்டில்,
உத்தர கோச லத்தில், உரோகிணி மாலை சூடிச்
சித்திர வியற்கை சூழும் செழுநகர் கபில வத்து
புத்தொளி வீச வந்தான் பொலிரவி மரபு வாழ.*

*வாக்கிசை மகனைப் பெற்ற வரமிகு தந்தை யானோன்,
சாக்கியர்க் கரசன் சுத்தோ தனன்எனச் சரிதை சொல்லும் ;
பாக்கியம் பெற்ற தாயார் பத்தினி மாயா தேவி,
நோக்கினி லுயர்ந்த செல்வி, நுவலருங் கற்புத் தெய்வம்.*

*எல்லையிற் செல்வ மெல்லாம் எய்தினும் இந்த நல்லார்,
இல்லறஞ் செழிக்குஞ் செல்வன் இல்லதோர் குறையி னாலே,
மெல்லிய மழலை கேட்க விரும்பிநல் விரதங் காத்தார்.
அல்லலைத் தீர்க்க வந்தான் அருட்சுடர் அனைய மைந்தன்.*

*திசைதிசை யுயிரி னுள்ளஞ் சிலிர்த்திடப் புதுமீன் விண்ணின்
மிசையெழுந் தொளிரப் பூக்கள் விரியுலும் பினிவ னத்தில்,
பசிய அசோகில் அன்னை பச்சிலை பறிக்கும் போதே,
இசைபெறுந் துசித ஜோதி யிறைவனும் பிறந்தான் மாதோ !
களித்தனன் அரசன்; பிள்ளைக் கவலைதீர்ந் ததுவென் றன்னை
குளித்தனள் இன்ப வாரி; குடிகளும் உவகை கொண்டார்;
தளிர்த்தது சுத்த போதி தருமமென் றறிந்த மேலோர்
ஒளித்திரு மைந்தன் செவ்வி யுரைத்தனர் பொருத்த மாக !*

*தண்கட லெழுந் தங்கக் கதிரென
மண்க ளிக்கப் பிறந்த மதலையைக்
கண்கு ளிர்ந்திட கண்டெழு நாளினில்
விண்பு குந்தனள் மேதகு மாயையே !*

*தாயி லாத தளிரிளம் பிள்ளையை,
ஏய சிற்றன்னை எண்மடங் கன்புடன்
தூய சாக்கியர் தொன்மர போங்கிடத்
தேயம் வாழத் திருத்தி வளர்த்தனள்.*

*ஆற்றி னோரம் அடர்வனம் போலவும்,
நாற்று நட்டுயர் நன்னிலம் போலவும்,
போற்றி மைந்தன் புதுப்புதுப் பொன்னெழில்
ஏற்று நாளும் இனிது வளர்ந்தனன் !*

*ஏடு நல்கும் எழுத்துக் கலையெலாம்
ஓடும் ஓட்டத்தில் ஊதி யெறிந்தனன் !
பீடுயர்ந்த பெருந்திரு வுள்ளத்தே
தேடுங் கல்வி தெவிட்டறக் கற்றனன் !*

*உருவி லோங்கினன், உள்ளத்தி லோங்கினான்,
கருவி யாகிய கல்வியி லோங்கினான்,
திருவி லோங்கினன், செஞ்சொலில் ஓங்கினான்;
அருளில் ஓங்கும் அதிசயப் பிள்ளையே !*

*அன்பு மிக்கவன், அம்பிலு மிக்கவன்,
திண்பு மிக்கவன் செம்மையின் மிக்கவன்,*

என்பு ருக்கும் இரக்கத்தின் மிக்கவன்,
இன்ப மிக்க விளந்திருச் செம்மலே !

சீர்த்தி மிக்கசித் தார்த்த னென்னும் பெயர்
போர்த்த வீரன், புவியின் இயல்பெல்லாம்
பார்த்த வீரன், உயிர்கள் படுந்துயர்
தீர்த்த வீரன் கருணையின் செல்வனே !
வில்லும் வாளும் விளரியும் வேலுடன்
மல்லும் தேரும், மதகரி யானையும்,
கொல்லும் போரும், கொடியினைக் காத்தலும்,
வல்லவன், அருள் வள்ளலென் றோங்கினான் !

பந்த யத்திற் பறக்கும் பரிகரி,
நொந் திளைப்பதை நோக்கி நிறுத்துவான் !
விந்தை யாகிய வேட்டை விலங்குகள்,
வந்துமுந்தும், வடிகணை பாய்ச்சிடான்.

தத்தன் சுட்ட தளிரிளம் அன்னத்தை
அத்தன் ஆற்றி அருளின் விடுத்தனன்.
குத்திக் கொல்பவர்க் கன்று குலவிசை
வைத்துக் காப்பவர் வண்மைக் குரியதே !

### உலகியல் அறிதல்

பிற வுயிர்தன் பிரிய வுயிரெனும்
அறமும் அன்பும் அருளு மிகுந்தவன்,
புறவைக் காத்த சிபியினைப் போன்றவன்,
அறிவைக் கண்டுளம் அஞ்சினன் வேந்தனே !

பிள்ளையின் அருட் பித்தந் தணித்திடும்,
கொள்கை கொண்டு குளிரிளங் காலையில்,
கள்ளலர் பொழில் காட்டும் இயற்கையில்,
உள்ள மோங்கி யுலாவித் திரிந்தனன்.

பசு வனத்தினைப் பாகு கனியினை,
அசையும் ஆற்றினை, ஆன்ற மலையினை,
இசை பறவையை, இன்னியற் காட்சியை
வசையி லாத மகனுக்குக் காட்டினான் !

உலகம் இன்பம், உயிர்த்தலும் இன்பமே,
நலம் பொதிந்ததிஞ் ஞால வியற்கையே,
பலம் அறிவு படிப்பிசை அன்புடன்
இல கிளமையும் இன்பமென் றோதினான்.

### சித்தார்த்தன்

எண்ணிப் பார்த்தனன் ; இவ்வுல கெந்தையே
உண்ண ஒன்றினை யொன்று நிதங்கொலை
பண்ணும் பாபப் படுகள மானதே !
புண்ண லாது புலப்பட வில்லையே !

பிள்ளை மூத்துப் பிணியின் இறத்தலும்,
தள்ளொ ணாக்கிழ வன்சமு சாரத்தில்,
வெள்ளெ லும்பு வெதும்ப வுழைத்தலும்,
வெள்ளை யாக வுலகை விளக்குமே.

மணப்ப றையிங்கு மங்கலங் கொட்டிடும் ;
பிணப்ப றையங்கு பேயென் றலறிடும்;
பணப் பொலிவுடன் பாழும் வறுமையும்
இணைப் புறும்உல கெங்கும் துயரமே !

பாரி யல்பின் பலநிறக் காட்சி, கண்
ணீர் கலந்து நிலவும் திரைப்படம்;
போர் கலந்ததிப் பொய்யுடல் வாழ்க்கையே,
நேர்கண் கண்ட நிசமிது தந்தையே.

**சுத்தோதனன்**

புதன்செவ் வாயிடை போகுமிப் பூவினில்
இத மகிதம் இரண்டும் இயற்கையே.
புதிய தாகிப் பொருள்கள் வளர்ந்துபின்
முதிய தாகி உதிர்ந்து முளைக்குமே !

ஆடிக் காற்றில் அலைந்துதிர் தாவரம்,
வாடிப் பின்பு வசந்தப் புதுமையாம்.
ஓடும் ஆவி உடலை உதறினும்,
தேடி யின்னொரு தேகத் துயிர்க்குமே !

செல்வ னேயிந்தச் சிந்தனை யேனினி ?
நல்ல கல்வியு ஞானமு மெய்தினை ;
செல்வ முள்ளது; சீர்த்தியு முள்ளது;
வில்லும் உள்ளது மேதினி யாளுவாய் !

அரசும் ஆட்சியும் ஆண்மையும் வீரமும்,
முரசு விம்மு முரண்களும் வெற்றியும்,
பரிச னங்கள் பணிந்துநின் றேத்தலும்
சரி யுனக்குத் தளிரிளஞ் செல்வனே !

இளமைக் கேற்றநல் லிந்திர போகங்கள்,
அளவி லாமல் அனுபவித் திவ்வுடல்,
உளவ ரையில் உவப்புற வாழலே,
அழகு னக்கென் அரசிளஞ் செல்வனே !

**சித்தார்த்தன்**

வந்திருந்து செல்லுமுயிர் வாழ்வைக் கண்டேன்,
   வாழுமுயிர் வருந்துகின்ற வருத்தங் கண்டேன் !
இந்தவுல கியற்கையினை எதிரே கண்டேன்,
   இருவினையின் பயனெல்லாம் எளிதே கண்டேன் ;
விந்தைபெறும் அதிசயங்கள், விரைவா யெல்லாம்,
   விடிந்ததுவும் வெயில்மஞ்ச ளாகக் கண்டேன் !
எந்தையெனக் குரைத்ததெலாம் ஏமாற் றத்தின்
   இந்திரஜா லக்கனவென் றெதிர்சொல் வேனே !

வருந்துகின்ற வறியர்பலர் வாசலண்டை
   வயிறெக்கி வாடக்கண் டிரங்க மாட்டார்;
விருந்துண்பார் செல்வர்க்கே விருந்து வைப்பார்,
   விறலியரின் மடிமேலே வீழ்ந்து, காலை
மருந்துண்பார் ! மருந்துக்கே உடலெ டுத்தார்,
   மயானத்தை நோக்கியவர் வளைந்து செல்வார்;
பருந்துண்ணும் பருவுடலை நம்பேன் ஐயா,
   பாரினிலே பந்தமிலாச் சுகமொன் றுண்டோ ?

தந்தையிவ் வுரைகள் கேட்டுத் தன்குலச் செழிப்பி னுக்கே,
வந்தது மோச மென்றே, மனமிகத் தளர்ந்து, நீண்ட
சிந்தனை தேக்கி, யிந்தச் சிறுவனை வசப்ப டுத்த
இந்திர போகம் போன்ற மாளிகை யெடுத்தான் மாதோ !

பிஞ்சிலே பழுத்த ஞானம் பிதற்றிடு மகனை மாற்ற,
நஞ்சுறு நயன வேலு, நாட்டியக் கலையும் பாட்டும்,

*பஞ்சரக் கிளியைப் போன்ற பாகிள மொழியுங் கொண்ட*
*வஞ்சியர் தம்மை யந்த மாயமா ளிகையில் வைத்தான்.*

*இயலழ கென்னே, ஆற்றின் இசையழ கென்னே, ஆடும்*
*மயிலழ கென்னே, பாடும்  வகைவகைப் புட்க ளென்னே !*
*நயமுறு கனிக ளென்னே, நாண்மலர்த் தென்றலென்னே,*
*கயல்விழி மாத ரென்னே.... கண்கவர் காட்சி யென்னே !*

*நாளெலா மின்ப மூட்டி நவமணி யழகு சொட்டும் ;*
*நாளெலாம் ஆடல் பாடல் நவரசங் குலுங்க வோங்கும் ;*
*நாளெலாம் அறுசு வைகள் நாவுக்கு விருந்த ளிக்கும் ;*
*நாளெலாம் தெவிட்டாப் போக சுகங்களே நல்கும் வாழ்வே !*

*மெய்யழ காடல் பாடல், விருந்தெலாம் உலக மாயப்*
*பொய்யழ கூட்டும்போலி மயக்கெனப் புறமொ துக்கி,*
*மையலை வளர்க்கு மாதர் வலைப்படான்; ஞான தீரன்*
*வையகத் துயரை யெண்ணி மருந்தினைத் தேடி னானே !*

*ஈதெலாம் பயனிலாமல், இகத்துயர்க் கிரங்கு வானைக்*
*காதலாற் கட்டத் தந்தை கடிமணச் சூழ்ச்சி செய்தான் ;*
*மேதகு மிளைய மன்னன் பிறந்தநாள் விழா நடத்தி,*
*மாதரின் அழகை யெல்லாம் வாலிபன் காணச் செய்தான் !*

*நாட்டினில் அழகு மிக்க நல்லிளங் கன்னி மார்கள்*
*வாட்டடங் கண்கள் வீசி, மயில்கிளி, யன்னம் பொன்மான்*
*கூட்டமே போல வந்து, குமரன்சித் தார்த்த னாங்கே*
*நீட்டிய பரிசைப் பெற்று, நீளணி யாகச் சென்றார் !*

*"ஆண்மகன் இவனைப் பெண்மை அடியுடன் கவரவில்லை;*
*வீணிந்த முயற்சி" யென்றே விசனிக்குந் தந்தை பொங்க,*
*வாணகை யொளிர நீண்ட மான்விழி மனதைப் பேச,*
*நாணுடை மின்ன லென்ன யசோதரை நங்கை வந்தாள்.*

*குணத்திரு வழகிக் கையன் குளிர்நகை காட்டி, நல்ல*
*மணித்திரு மாலை சூட்டி, மன்னவன் மகிழப் பின்னே*
*அணித்தொரு பந்த யத்தில் அளவறு வீரங் காட்டி,*
*மணத்திரு மாலை சூட்டி மனையறம் புகுந்தான் மாதோ !*

*பொன்னொளிர் போகமான புதுமண வாழ்க்கை பொங்கி,*
*மின்கொடி பழுத்தாற் போல மிகமகிழ் மகவை நல்க,*
*"இன்னொருபந்தம்வந்தென்இன்பத்தைச்சூழ்ந்த"தென்றான் ;*
*மன்னுயி ரிடுக்க ணெல்லாம் வரிசையாய்க் கண்ட ஞானி !*

*விறலியர் ஆடல் பாடல் விருந்தளி யமளி இன்பம்,*
*நறவினும் இனிய தூய நன்மனை வாழ்வின் இன்பம்,*
*மறலிகொள் இன்ப மென்றே மனத்தினில் வெறுத்து, நாளுந்*
*துறவியின் இன்பமேமெய் யின்பெனத் துணிந்து நின்றான் !*

*துயிற்சுவை யென்னே, மாதர் தோட்சுவை யென்னே, சுற்றும்*
*செயற்சுவை யென்னே, உண்ணத் தீஞ்சுவை யமுதம் என்னே !*
*மயற்சுவை யனைத்தும், சாவின் வாய்ச்சுவை என்ன நீத்தான்*
*இயற்சுவை யுள்ளே கண்டார் இகச்சுவைக் கலைவ தாமோ?*

*வாடிய மலரைத் தூய வாரியிற் புயலை, நாளும்,*
*வீடிய இலையைக் கண்டே, விழியினின் றருவி பாய்ச்சி,*
*சேடியர் மனைவி மக்கள், திருவுடன் மின்னும் இன்பம்,*
*நாடக உலகச் சீர்போம் நமன்விடுந் திரைக்குள் என்றான் !*

## ஊர்க்காட்சி

*அன்ன நாளினில் அரசிளங் குமரனோர் பகலில்,*
*என்னைச் சூழுல கியல்பினைக் காணுவே னென்று,*
*முன்னரே தகு முறையினில் அணிபல செய்த,*
*நன்னகர் வலம் வந்தனன் நவமணித் தேரில் !*

*பிணி யிடும்பைமூப் பிறப்புடன் பிறதுயர் எவையும்,*
*அணிந்தெதிர் வரல் குற்றமென் றறைபறை முழங்க,*
*பணிந்த சேவகர் பாதையைப் பார்த்துமுன் னடத்த*
*மணியு மங்கல வனப்புமே மகிழ்வுறக் கண்டான் !*

*ஆர வாரங்கள் அணிமணி யமளிகள் எங்கும் !*
*பேரின் பம்உல கென்கிற பேச்சுக ளெங்கும் !*
*மூர லார்திரு மங்கையர் முழங்கிசை யுடனே*
*ஆரி யத்திருக் கூத்துகள் ஆடினார் முன்னே !*

*அட்ட மங்கலம் ஏந்திடும் பாவையர் அழகும்,*
*வட்ட மாய்வரு மாதரின் குதிப்புறு பாட்டும்,*
*சட்ட மாகிய சதிர்களும், சகத்துயர் மறைக்குந்*
*திட்ட மாகிய திருக்களும் சென்றன முன்னே !*

## கிழவன் வருதல்

*இசையெ மூப்பினர் இவ்வுல கின்பமே யென்று ;*
*நசை யெழுப்பிய நாடகக் காட்சியின் பின்னே*
*வசையும் உண்டென வாய்மையை விளக்கிட வேண்டி,*
*அசைந் தசைந்தொரு கிழவனார் வந்தன ராங்கே !*

*எங்கு வந்தனை? ஏகென வேகமாய் அவரை*
*வெங்க தத்துடன் சேவகர் வெருட்டிடக் கண்டே,*
*வங்கி வாடிய நரைதிரை வடிவினை நோக்கி,*
*அங்கு தேரினை நிறுத்தினான் அரசிளங் குமரன்.*

*கண்ணுற்றான்; வயது மூத்துக் காலனை வணங்கி ஆடி,*
*மண்ணுற்ற வாழ்வி யல்பை வழுத்திடுங் கிழவன் சோர்ந்து,*
*"விண்ணுற்ற புகழோய், நீயிவ் வேடமு நடிப்பாய்" என்ன,*
*எண்ணுற்றான் போலிப் பூவின் இருண்மருங் கறிந்தான் ஞானி.*

*மற்றொரு நாளிற் செற்ற பிணந்தனை வருந்திக் கண்டான்.*
*பிற்றொரு நாளில் ஏழை மக்களின் பிணியைக் கண்டான்.*
*உற்றொரு நாளில் ஆசை உலகுறு துயரங் கண்டு,*
*கற்றனன் கண்க ளாலே கருத்தினில் எழுதி னானே !*

*பூத்த பூக்கள் புழுதிமண் ணாவதும்,*
*மூத்தி ளமை முதுமையின் வாடலும்,*
*காத்த பொய்யுடல் காலனுக் காவதும்,*
*பார்த்துப் பார்த்துப் படித்தனன் ஞானியே.*

*அற்புதம் அற்புதம் எனும் யாவையும்*
*புற்புத மெனப் போவதைக் காண்கிறோம் !*
*பொற்பின் கூட்டிற் புகும்உயிர்க் கிள்ளையும்*
*நிற்ப தில்லை; நிலைப்பதிங் கில்லையே !*

*பிறப்பி றப்பெனும் பேரிருள் வாயிலாற்*
*சிறைப்பு குந்து வருந்திடுஞ் சென்மத்தை*
*மறப்பி னோங்கிய மாயைக் கிடமின்றித்*
*துறப்பக் கற்றவர் துன்பமில் லார்களே.*

அரவுஞ் சட்டையும், ஆடியும் பட்டமும்
சரமுந் தூணியும், சக்கையுஞ் சாறும்போல்
உருவு வாளும் உறையு மெனவினை
மருவு யாக்கையும் வாழ்க்கையு மாகுமே !

அலையும் ஆசையும், ஆணவத் துள்ளலும்,
கொலையும் போரும் கொடிய பொறாமையும்,
முலை மயக்கமும் மோக முயக்கமும்,
வலை விரித்து வதைத்திடும் வாழ்க்கையே !

பேத புத்தியி லேபிறந் தோங்கிய,
சாதி மாமதச் சண்டைகள் எத்தனை,
வீதிச் சண்டைகள் வீட்டினுட் சண்டைகள்,
வாதிச் சண்டைகள் வாழ்க்கையில் எத்தனை !

கல்வி மிக்கவர் கைநொடித் தேங்கலும்,
செல்வம் ஏழையைத் தின்று செழித்தலும்,
நல்ல வர்க்கு நலங்கெடு தீயவர்
அல்ல லாற்றலும் ஆகுமிப் பூமியே !

எங்கு நோக்கினும் இன்ன லிடர்களே !
எங்கும் வெய்ய ரிழைத்திடுந் தீமையே !
எங்கும் ஆசையின் இந்திரச் சாலமே !
இங்கிவ் வாழ்க்கையில் இன்பமுண் டாகுமோ ?
வருகிறேன் உலகே மயக்கங் கெடத்
தருகிறேன் எனைத் தாமத மின்றிநான் ;
உருகினேன் உனக்கே யென உத்தமன்
பெருவி சனம் பிடித்தழு தேங்குவான் !

புய லுழன்ற புணையினைப் போலவும்,
மய லுழன்ற மனத்தினைப் போலவும்,
துய ருழன்றவித் தொல்புவி யின்புறத்
துயிலினுந் "துறப்பேன்" எனச் சொல்லுவான் !

## காலக் கிழவன்

இனைய வள்ளல் இரவினில் ஓர்தினம்,
நினைவெ லாந்துற வாகி நெடிதுறத்
தனை மறந்து துயிலுந் தருணத்திற்
கனவில் வந்தனன் காலக் கிழவனே !

விழித் தெழுந்திரு; வீண்மயக் கின்பத்தைப்
பழித் தெழுந்திரு; பந்த விலங்கினை
அழித் தெழுந்திரு; ஆண்மைத் துறவறஞ்
செழித் தெழுந்திரு, செல்லத் தருணமே !

இளமை மங்கும், இருநிதி மங்கிடும்,
வளமை மங்கும், வலிவுந் தளர்ந்திடும்,
உளவை போகும், உரிமை உனக்குநீ,
இளகினாய், துற வேற்கத் தருணமே !

இறைவ னாயினும் ஏழைய னாயினும்,
பறைய னாயினும், பார்ப்பன னாயினும்,
பிறவி பெற்றவர் பேதுற் றிறப்பவர் ;
சிறை திறந்தது செல்லத் தருணமே !

அரிய ணைச்சுகம் ஆண்டிட வேண்டிடின்,
உரிய நல்லிசை யோங்கியிங் கேங்குவாய் !
பெரிய பேரின்பப் பேற்றினை வேண்டிடின்
தெரிவித் தேனிது செல்லத் தருணமே !

இங்கி ருந்திடின் இப்புவி யாண்டுபின்
மங்கி மாண்டுமண் ணாகி மறைகுவாய் !
அங்கு நீயரு ளாட்சியை நாட்டியே
தங்கு வாய்துற விற்குத் தருணமே !

வருண வேற்றுமை மூட வழக்கங்கள்,
மரண வாதனை மாறத் தவஞ்செய்தே
அருண ஜோதியைப் போலறி வோங்கிடத்
தருணம் என்று கிழவனும் சாற்றினான் !

## புத்தன் துறவு

முதியன் சென்றதும், மோகத் தளைகளைக்
கதுமெனக் கழற் றிப்புறம் வீசியே
சதிசெய் தங்க மனையினைத் தாண்டிட
மதியை யூன்றி மகானும் எழுந்தனன் !

## புத்தன்

விழித்தனன் எழுந்து வீரத் துறவெனும் விரதம் பூண்டேன்;
பழித்தனன் வீட்டை; யிந்தப் பாரெலாம் உறங்கும் வேளை
அழித்தனன் ஆசை யெல்லாம்; ஆருயிர் இரக்கம் பற்றி
இழுத்தெனை ஏகு மையே, இரும்பினைக் காந்தம் போலே !

அன்றிலைப் போலே என்னை அணைந்தசெவ் விளமென் பாவாய்
என்றளிர் அமுதச் சேயே, எந்தையே, பந்த வாழ்வே,
வன்றவக் கான மென்னை வாவெனக் கூவுதின்றே,
சென்றுநான் மீளு கின்றேன் செகமகிழ் மருந்து கொண்டே !

சோகுறும் உலக மாயை துகளெனத் தெளிந்து, பற்றின்
மோகுறு விலங்கை யின்னே முறித்தெறிந் துயிர்கட் கின்பம்
ஈகுறும் தாகங் கொண்டேன்; இனியநன் மருந்தை நாடிப்
போகுவேன் உறங்குங்கண்காள்புகலுமின்விடையென்றானே !

தங்கமா ளிகையோ? வெய்ய தணலின்மா ளிகையோ? இந்தச்
சங்கையில் களியாட் டத்தைச் சாவுபின் சிரிப்ப தாமே !
கொங்கையின் சுகமும், ஆடல் பாடலின் கூத்துங் கண்டேன் !
இங்கினிச் சாந்த மில்லை; இதைத்துறந் தேகு வேனால் !

சிறையெனச் சுற்றி வஞ்சச் சிரிப்பினால் எனைவ ளைத்த
உறவெலாம் உறங்கும் வேளை! உள்ளமுந் தனிமை நாடி,
மறவெனச் சொல்லும் வேளை மருந்தொன்றை நாடி, உண்மை
அறிவெனு மலையில் ஏறி அமைதியாய்ச் செல்வே னின்றே !

எனக்கென வாழ்ந்த தெல்லாம், எனதியான் என்ற தெல்லாம்,
இனத்துடன் கலந்த தெல்லாம், இகந்தரு போக மெல்லாம்,
மனத்துடன் விடுத்தேன் ; மோக மாயத்தைத் துறந்து தூய
வனத்தினில் வாய்மை கண்டு, பிறர்க்கென வாழு வேனே !

பொன்னெலாம் புவியின் மாசு பொருளெலாம் பொன்று மண்ணே;
பெண்ணெலாம் பிணியின் தூது; பிறப்பெலாம் இறப்பினேசன்;
மண்ணெலாம் அகந்தை; இந்த மாயையில் மோத லூற்றால்,
புண்ணலால் வேறொன் றில்லை, போகிறேன் அடவி யென்றான்!

விடுவிடு நெஞ்சே, யிந்த வீண்மயக் குகளை யெல்லாம்
படபட வென்ற றுத்துப் பாசத்தை வெறுத்தொ துக்கி,
அடியெடு; படுத்து றங்கும் ஆசைகொள் உலகை மீறி,
நடநட...வென்று முன்னே நடந்தனன் ஞான தீரன் !

## வனஞ்செல்லல்

தொட்டனன் அக்கணந் துரிசுறுங் கதவுகள்,
விட்டதுஞ் செல்வழி, விடுதலை விடுதலை !
சட்டெனக் குதிரைமேல் தாவினான் கானகம்.
எட்டினன் அக்கணம் எய்தினான் விடுதலை !

பேதைச் செல்வப் பிணிப்பை யுதறினேன்;
மாதர் ஆசை மயக்கை மறந்தனன்,
தாதைக் கென்னிலை சாற்றி யமைதிசெய்
வாது காவென வாங்கினன் வேகமாய் !

மணியணி மயிர்முடி யறுத்து வீசினான்.
அணிகளைந் தெறிந்தனன் அரசி ளம்பிரான்
துணிவுறத் துறந்தவித் தூய தீரனைப்
பணிவுற முனிவரர் பரிவி னேற்றனர்.

வையம் ஆளப் பிறந்த வரதனும்,
ஐய மேந்தி அரசக் கிருகத்தில்
மெய் யொடுக்கி விரதம் பயின்றனன்,
ஐயந் தீர்ந்திலன் ஆழந்தினுஞ் சிந்தித்தான்.

திட வுறுதி செறிந்த மனத்தினான்,
அடவி தன்னில், அடம்பெறு யோகங்கள்,
உடல் வருந்த உழைத்துப் பயின்றுமே,
அடைந்தி லான்அத னாலொரு லாபமும் !

இளந்தளிர் வேனி லுள்ளம் இசைத்திடுங் குயிலைக் கேட்பான்;
கிளர்ந்துயர்மலையைக்கேட்பான்கெழுங்கனிமரத்தைக்கேட்பான்
வளர்ந்திசைநதியைக்கேட்பான்; மனத்துற விகளைக்கேட்பான்!
தளர்ந்தமன் னுயிர்கட் கின்பந் தந்திடும் மருந்தைத் தானே !
பேரருள் விழியைக் கண்டு, பெரியரும் வணங்கு வார்கள்,
கூர்நகப் புலியும் சாந்தக் குணமுகம் பணிந்து நிற்கும்,
கோரிய தளிக்குந் தங்கள் குலதெய்வ மென்று மாந்தர்,
வாரிசக் கழல்கள் போற்ற மங்கல முரைப்பான் ஐயன் !

இறந்தவென் மகவை நீரே எழுப்பு மென் றிறைஞ்சும் பெண்ணை
"இறந்தவ ரில்லா வீட்டில் இரந்துவா கடு"கென் றானே ;
அறந்தவ றாத தூயன் அருளிய படியே தேடிப்
பிறந்தவர் இறப்பா ரென்றே பெண்மணி யறிந்து கொண்டாள்

## உயிர்க்கொலை தடுத்தல்

வீட்டின்பம் விழைந்த மன்னன், வேள்விக்குச் சென்ற மந்தை
ஆட்டிடை நொண்டி நொண்டி அயர்ந்ததோர் குட்டி தன்னை
வாட்டந்தீர்த் தருட்க ரத்தால் வாரித்தன் தோளில் மெல்லப்
போட்டுயிர்க் கொலை தடுக்கப் போயினன் கருணை யாலே !

ஆணவ வேட்கையை அருட்சுட ருக்கே
ஊணென வழங்குதல் உண்மை வேள்வியாம்;
பேணுயிர் பிரித்தவி பெய்துண் வேள்விகள்,
வீண்கொலை யல்லது வேறொன் றில்லையே !

*இத்தகைக் கொலைகளை யியற்றி யின்புறும்*
*பித்துடைப் பார்ப்பனர் பிம்பி சாரன்பேர்*
*வைத்திழை வேள்வியிற் பசுவைக் காத்திடக்*
*கத்தியைத் தடுத்தனன் கருணை வள்ளலே !*

*"அந்தணர் அவிசொரிந் தாற்றும் வேள்வியில்*
*வந்திடைத் தந்திடும் வம்பன் யாரடா?*
*சந்ததம் பிராமண சாபம் வந்திடும்,*
*பிந்து செல்" என்றனர் பிழைக்கும் வேதியர்.*

## புத்தர்

*ஆட்டை மந்திரஞ் சொல்லி யறுத்தே,*
*அனலில் வாட்டி அவியுண்டு மோட்ச*
*வீட்டைப் பார்ப்பவர் வேதியர் அல்லர்*
*வேதத்தை வெறும் மொந்தை யுருவாய்ப்*
*போட்டுக் கூவும் புலவரும் அல்லர் ;*
*பொய்யொ ழுக்கங்கள் பூண்டவர் அல்லர்,*
*தீட்டு தீட்டெனத் திட்டுவா ரல்லர்*
*திட்டி தோடங்கள் செப்புவா ரல்லர்.*

*இன்பமே யெண்ணி இன்ப மியற்றி,*
*இனிமையே சொல்லி யெவ்வு யிருக்கும்,*
*அன்பு பூண்டவர் அந்தணர் ஆவார்..*
*ஆத்ம தீரர்கள் அந்தண ராவார்.*
*என்பு ருகும் இரக்கத்தினாலே*
*எவ்வு யிருந் தமதென் றிசைத்தே*
*துன்பு நீக்கிடுந் தொண்டுகள் செய்யும்*
*தூய வந்தணரே தொழத் தக்கோர்.*

*பகுத் தறிவைப் பரிந்தருள் வேதம்,*
*பாரு யிர்களைத் தானெனப் பார்த்தோர்*
*தொகுத் தளித்த சுகவழி வேதம்,*
*தூய வாழ்வைத் துலக்கிடும் வேதம்,*
*மிகுத்த சாது விலங்கின் கழுத்தை*
*வெட்டச் சொல்வது வேதம தாமோ?*
*புகுத்து மாடுகள் பூவுயி ரன்றோ ?*
*புரியு மிக்கொலை பூசுரர்க் காமோ ?*

*குடிக்கப் பாலுங் குளிருக்குப் போர்வையும்,*
*கொடுக்கும் ஊமைக் குழந்தையைக் கொல்லவோ?*
*தடுக்கொ ணாச்சிறு பிள்ளையை வாளினால்*
*மடிக்குஞ் செய்கை மனிதரின் செய்கையோ ?*

*இன்னு யிரை இரக்கமொ டென்றுமே*
*தன்னுயி ரெனத் தாங்குத லின்றியே,*
*மன்னு யிரை மடித்துப் பிணத்தினைத்*
*தின்னச் சொல்வது செம்மறை யாகுமோ ?*

*பயிரி ருக்கப் பசித்துப் புசித்திட,*
*உயிர்களை அறுத் துண்ணுத லாகுமோ ?*
*செயிரி லாதஇச் சீவனைக் கொல்லுவோர்*
*மயிரி ழையும் படைத்திட வல்லரோ?*

*தினை விதைக்கத் தினைவிளை வேயென*
*வினை விதைக்க விளையும் இருவினை.*
*நினைவி லுங்கொலை தீது; நினைத்திடீர்...*
*அனைவ ருக்கும் அருளை யியற்றுவீர் !*

*எட்டியை எரு விட்டு வளர்க்கினும்,*
*கட்டி மாம்பழ மாகக் கனியுமோ ?*
*கட்டி யாட்டைக் கடுங்கொலை செய்திடின்,*
*வெட்டி னோர்க்கு விமானம் இறங்குமோ ?*
*கொன்று தின்று கொழுத்த கொடியரே*
*இன்று ஞாலம் இகற்கள மாக்கினர் !*
*கொன்று தின்பவர் கும்பி சுடலையே,*
*என்று மன்னவர்க் கில்லை யமைதியே !*

*அழிக போர்கள் ! அஹிம்ஸை விளங்குக !*
*பொழிக ! வேதப் பொருட்சுவை வாழ்விலே.*
*பழிகள், கோரப் பலிகள், உலகிலே*
*ஒழிக வேறொ டுயிர்க்கொலை யாங்குமே !*

**பிம்பிசாரன்**

*உண்மை யுண்மை உயிர்க்கொலை தீயதே,*
*வண்மை யால்எனைக் காத்திட வந்தனை !*
*அண்ண லேயுன தன்பு மொழிகளைத்*
*திண்ண மாகச் செயலினிற் காட்டுவேன்.*

*நிற்க வேள்வி ! நிணப்புகை இன்றுடன்*
*நிற்க ! நீளுயிர் தீங்கின்றி நீடுக !*
*கற்க நீவிர் கருணை புரியவே,*
*கற்று நிற்பது கல்விக் கழகன்றோ ?*

*இரக்க மென்னும் இரவி யெழுந்ததும்,*
*துறக்க மோகந் துணுக்கென விட்டதே*
*கரைக்கு நெஞ்சக் கருணைக்கண் ணீரினால்*
*எரிக்கும் வேள்வி யெலாங்கரி யானதே !*

*ஒழிக யாகம் ! உயிர்க்கொலை யின்றுடன்*
*அழிக ! மாடுகள் ஆடுகள் வாழுக !*
*செழிக நல்லறந் தீமை விலகுக !*
*பொழிக பாலெனப் பொங்கின நீள்பறை.*

*அறமென விளங்கு மையன் அரசெனக் கண்ட வேந்தன்,*
*துறவறம் விட்டென் அன்புத் தோன்றலென் றினிதி ருந்தே*
*நறுமணம் புரிந்திந் நாட்டை நன்முறை ஆள்க வென்றான் ;*
*முறுவலார் வாய் திறந்து முனிவனும் உரைத்த தென்னே !*

**புத்தன்**

*தேவருக் கரிய சீருந் திருவனார் பணியும், வேந்தர்*
*ஏவலும் பெற்றேன் முன்பே. இவை நவை யெனவே நீத்தே*
*பூவினி துய்ய யோகம் புரிகின்றேன். அறத்தி னாட்சி,*
*மேவிட, ஞான சித்தி வேண்டினேன் பிம்பி வேந்தே !*

*கடுந்தவம் ஆறாண் டாற்றிக் கண்டொரு பயனு மின்றி,*
*ஒடுங்கிய மேனி தாங்கி உரவெலாக் காடு சேர்ந்து,*
*தடம்பெறு வேதம் ஐவர் சாற்றிடக் கற்றும், இன்பம்*
*அடைந்திட லின்றி ஐயன் கயாவனம் அடைந்தான் மாதோ !*

**போதியடியில் தவம் புரிதல்**

*அணிமணி ஏழைக் கீந்தே அன்னவர் அணிந்த கந்தைத்*
*துணியணிந் துலகை நீத்த துறவறச் சிங்க மானோன்,*
*உணவையு மறந்து, பல்கு நதிக்கரை ஓங்குந் தூய*
*மணம்பெறு பெரிய போதி மரத்தடி தியானித் தானே !*

*கட்டிலா தெங்குஞ் செல்லுங் காற்றிசை கேட்பானாங்கே
ஒட்டிலா தொளிர்ந்து செல்லும், உதயசூ ரியனைக் காண்பான்;
மட்டிலாக் கனிக ளீயு மரங்களின் கருணை காண்பான்;
எட்டலாந் திசையிற் காணும் இயற்கையைச் சோதிப் பானே !*

*பகலிர வின்றித் தாகம், பசிதுயி லின்றி, வேண்டிற்
ககமுதிர் கனிக ளுண்டு, கனகமெய் யுலர்ந்து, போக
சுகமுறவாழ்ந்த கோமான் சுடுமுதுவேனிலாலே
முகமலர் வாடி யோர்நாள் மூர்ச்சையாய் விழுந்தா னம்மா!*

*பார்த்தநல் ஆய னாங்கே, பசப்பறு வாயிற் பாலை,
வார்த்தனன்; "சாமி" யென்று வணங்கினன்; மயக்கந்தன்னைத்
தீர்த்தனன்; அவனை நோக்கித் தீர்த்தனுங் கருணை பொங்கும்
வார்த்தைகள் பேசிப் பின்பு வன்றவ முயன்றா னம்மா !*

*பாரிருள் அடிமை யச்சப் பாசங்கள் விலகி, யெங்கும்
ஆருயிர் மக்கள் எல்லாம் அறிவறிந் தமைதி சேரும்
ஓருயர் வழியை நாடி, உள்ளத்தில் ஆழ்ந்து தேடி,
சீருயர் அன்புச் செல்வன் தியானத்தி லிருந்தா னாங்கே !*

*அவ்வுர வேலாக் காட்டின் அதிபனாம் நந்தி பெற்ற
செவ்விய கற்புச் செல்வி, சீரிய சுஜாதை யென்பாள்,
இவ்வருந் துறவி தெய்வம் என்றுதன் குழந்தை யோடும்,
பவ்விய வணக்கஞ் செய்து பாலுண வூட்டி னாளே !*

*ஊட்டமு துவந்து, வாழ்த்தி "உள்ளன்பு கொண்டதாயே,
காட்டகத் தெய்வ மல்லேன், கவலையற் றுலகம் வாழ
வேட்டர சுதறி வந்தேன்... வினைவிளை யுனது சொந்த
வீட்டினில் இன்ப முண்டோ? விளம்பிடு விரைந்" தென் றானே.
"அன்பணி மனையில், என்றன் ஆருயிர்க் கணவன் போற்ற,
என்பணி யினிது காப்பேன்; இயன்றநல் லறங்கள் செய்வேன்,
புன்மனப் பற்றே யின்றிப் புரிசெய லின்ப" மென்று
முன்பணிந் தவளுஞ் சென்றாள் முனிவரன் ஆசி பெற்றே !*

## மாரன் சோதனை

*மாது சொன்ன மணிமொழி தன்னையே,
தீது நீக்குந் திருமொழி யென்றவன்,
பேது றாது, பிறகுந்தன் புத்தியைச்
சோதித் தாங்கு தொடர்ந்து வசித்தனன் !*

*மோன வானகம் முத்து நகை செயக்
கானப் புட்கள் களித்திசை பாடிட
ஞான மங்கள நாளெனக் கானகம்
தேன் மலர்களைச் சிந்திச் சிலிர்த்ததே !*

*பாரின் மாயப் பசப்பின் வெறுமையைத்
தீரப் பார்த்த திறந்த துறவியை
காரி கைப்படை காட்டி மயக்கிட
மாரன் வந்து வலைகள் விரித்தனன் !*

*வெட்டு மின்னிடி வெம்புயல் என்னக்கை
கொட்டிக் கொங்கை குலுக்கி, மினுக்கியே,
கட்டி லாப்பெருங் காமப் பிசாசுகள்,
கிட்ட வந்தன கெஞ்சின கொஞ்சவே !*

ஆசை யூட்டின ஆடின பாடின,
வீசிப் பார்த்தன வேல்விழி யம்புகள்.
பாச மோகப் படுகுழி காட்டின ;
மோசம் போயின முத்தன் உறுதியால் !

மயக்க வந்து மயங்கியம் மாரனும்,
தயக்க மின்றித் தணிந்து மறைந்தனன்;
வியக்க வந்த வெறுமன மாயத்தை
நயப்ப தில்லை நடுநிலை ஞானியே !

சீதவெண் குடை விரித்த சித்திர வனத்தின் கீழே,
போதியே வீடு தாங்கப் புல்லதே இருக்கை தாங்கச்
சோதனை யற்ற சாந்தத் துறவொளி யுள்ளந் தாங்க,
மேதினிக் கன்பு மேவும் விமலனுந் தியானஞ் செய்தான் !
எண்ணினான், எண்ணி யெண்ணி யெண்ணங்க ளடங்கி யாங்கே,
கண்மனங் குவிந்து, சாந்தக் கனிரசங் கருத்தி லூற,
எண்ணிலாப் பிறப்ப றிந்தான், வினையுல கியல்ப றிந்தான்,
மண்ணுயிர் மாந்தர் உய்யும் மருந்தினை யறிந்தான் மாதோ !

கானகத் தனிமை வாழ்க ! கட்டறு சாந்தம் வாழ்க ,
மோனமெய் யுள்ளம் வாழ்க ! மோகமில் சிந்தை வாழ்க,
வானென விரிந்த தியான சாதன வாழ்க்கை வாழ்க,
ஞானமா ரமுதச் சோதி ஞாயிறு வாழ்க மாதோ !

திங்களோ டமைதி யாகித் தினகர னுதித்த போது,
மங்கள ஞானம் பெற்ற மகாதவ யோகி புத்தன்,
பொங்கிய கருணை வெள்ளம் புசித்துயிர் உலகம் அன்புச்
சங்கமாய் வாழத் தர்ம சாதனத் தொண்டு செய்தான் !

அரசமென் றரசை நீத்தோன், அரசுவீற் றிருந்து, ஞான
அரசனாய், அரசர் போற்றும் அரசருக் கரச னாகி,
நரசகோ தரர்க ளுய்ய நலிவறு தொண்டு செய்த
வரன், அறச் செல்வன் வாமன் மாசறு புத்தன் வாழ்க !

மாதவச் சீடர் சூழ, மகததே சத்தி லெங்கும்,
சாதிவேற் றுமைக ளின்றித் தருமசங் கங்கள் ஆக்கிப்
போதிசத் துவனும் தந்தை புரந்ததன் ஊருக் குற்றான்...
தாதையும் சினத்தைத் தீட்டித் தனயனைத் தாக்கினானே

பசிமிகும் ஒருவன் சோற்றைப் பட்சிகள் பறித்துண் டாற்போல்
இசைமிகு குல விளக்கை இழந்துளம் பதைத்த தந்தை,
வசையறு மகனை மாற்றி, மனைச்சிறை யடைக்க மீண்டும்,
விசைபெறு சூழ்ச்சி செய்து, வீணுற்றான் ; ஞானி வென்றான்.

கையிலே கலய மேந்திக் காவியை யணிந்து, நல்ல
மெய்யவர் சங்கஞ் சேர, மேவிய ஞான வேந்தை,
"ஐயநீ வாழ்க" வென்றே அனைவரும் போற்றி செய்ய,
மொய்சினங் கொண்ட தந்தை மோகத்தைக் காட்டி னானே !

**தந்தை**

சீருயர் கல்வி, சிறந்துயர் வீரம்,
பாருயர் ஆட்சி, பழுத்துயர் இன்பம்,
பேருயர் ஆன்ற பெரும்புக ழெல்லாம்,
சூரிய மைந்த துறப்பது நன்றோ ?
சிந்துரம் உந்திய சேவடி ஏனோ
வெந்துயர்க் கானகம் மேவிய தையா ?

*சுந்தரப் பூண்கள் சுடர்மணி மேனி*
*கந்தை யுடுத்திடக் காண்விதி யென்னே !*

### புத்தர்

*என்றருந் தந்தை இடர்க்கட லெய்த*
*வன்றவச் சோதி மகிழ்ந்துரை செய்வான்:*
*"இன்றுறு நாளை யிழந்திடு செல்வம்,*
*என்றனை விட்டதும் இன்பம டைந்தேன் !*

*சுற்றி மதிற்படு சோம்புடைச் செல்வம்,*
*பற்றின பற்றுகள் பட்டென விட்டேன் !*
*பெற்றனன் முற்றிய பேரறி வின்பம்,*
*பெற்றினி தோங்குக பெற்றவ நீயும்.*

*பீழை படும்புவிப் பேற்றை முனிந்தேன்;*
*ஏழை படுந்துயர் என்றுயர் என்றேன்!*
*வாழுயிர் யாவு மகிழ்வழி கண்டேன்;*
*ஊழி கடந்துன் குலப்பெய ரோங்க !*

*உன்னர சாள உதித்தனன் அல்லேன்;*
*என்னர சாள எழுந்தொளி கண்டேன்.*
*தன்னர சாட்சி தழைத்திடும் இன்பம்,*
*பொன்னர சாட்சியின் போகமு மீமோ ?*

*இருளிடர் வென்றறி வின்பொளி கண்டேன்,*
*மருளுறு மாந்தர் மயக்க மொழித்தேன்;*
*அருளர சின்பணி யாற்றிட வாராய்,*
*பொருளிது" வென்றனன் புண்ணிய மைந்தன்.*

*"மைந்தநீ பெற்ற பேறே மனிதவாழ் வடையும் பேறாம்.*
*ஐந்தையும் அடக்கி வென்றாய், அறிவனே சரண" மென்று*
*தந்தையும் பணிந்தான் ஆங்கே ; தனயனோ டடிப ணிந்தாள்*
*சுந்தர மனைவி தானும்; சோகமுந் தீர்ந்த தன்றே.*

*அகந்தையர் அடங்க, வேசை யாசையும் அடங்க, வேடர்*
*உகந்துயர் வதையை நீக்க, உத்தம ராகக் கள்வர்,*
*முகந்துபொன் கருமி ஈய, மூர்க்கருஞ் சாந்த ராக,*
*தகர்த்திடச் சாவின் அச்சம் தருமனுந் தொண்டு செய்தான் !*

*வீரமெய்த் துறவு பூண்டு வியனுறத் தவம் புரிந்து,*
*பூரண ஞானம் பூத்துப் புவிக்கெலாம் இனிதே செய்து,*
*பாருயிர் துயர நீங்கும் பணிநலங் காத்த புத்தன்,*
*கோரிய தெல்லாஞ் செய்து குசிநகர் இறுதி சேர்ந்தான்.*

*அன்னையின் அன்பு மிக்கான் அருட்சுட ராழி யானான்,*
*அன்னவன் உபதே சத்தை அசோகனே உலக மெங்கும்,*
*பன்னரு மாந்த ருய்யப் பரப்பினான்; கதிர்வி ரிந்தே*
*இன்னரும் இன்னும் இன்னும் இலகுக புத்த ஜோதி !*

*தரும சேனன் சரித்திரஞ் சாற்றிடப்*
*பருகிச் சுத்தனும் புத்தரும் அன்பினால்*
*உருகி யுள்ளும் உயிரும் சிலிர்த்திட*
*அருள ரசின் அடிபணிந் தேத்தினார்.*

*அத்தா எனை ஆண்டாய் இனி வேண்டேன் அரும் பிறவி,*
*பித்தா கிய சகமாயையைப் பின்விட்டுனை யடைந்தேன்.*
*சித்தா சீவன் முத்தா, ஜீன நாதா குரு தேவா !*
*புத்தா போதி சத்வா பரி சுத்தா சரண் இறைவா !*

## 7. புத்த தருமப் படலம்

*கருணையே வடிவ மான புத்தனின் கதைதன் காதை*
*உருவமே யென்று கண்டான் ஊர்பெயர் சொல்லாத் தூயன்;*
*பெருகிய சிரத்தை யோடும் பிடகநூல் அனைத்துங் கற்றுத்*
*தருமமா சங்கஞ் சேர்ந்து சாதனஞ் செய்தான் மாதோ !*

*"அறிவிலுஞ் சிறந்தீர், உண்மை அறத்திலுஞ் சிறந்தீர், ஐந்து*
*பொறிபுலன் அடக்கி வென்றீர் போதசத் குருவாய் நல்ல*
*நெறியினைத் துலக்கி, நீடு நேர்வழி நடத்து" மென்றே*
*அறிஞர்கள் வேண்டத் தூயன் அடங்கிய பணிவு கூர்ந்தான்.*

**சுத்தன்**

*குருவென்றுஞ் சீடரென்றுங் குருவுப தேச மென்றும்,*
*திருமட மென்றும் என்னைச் சேவிக்க வேண்டு மென்றும்,*
*ஒருசிறு பொழுதும் எண்ணேன்; உலகமென் பள்ளிக் கூடம்,*
*தருமசா தனமென் கல்வி; சாதனச் சீடன் யானே !*

*செம்மன மூன்றி நாளும் தியானமும் பணியும் பேணித்*
*தம்மபா தத்தைக் கற்றேன், ததாகதர் கருத்த றிந்து,*
*நிம்மதி யாகச் சீவ சகவியல் நிலையா ராய்ந்தேன்.*
*இம்மட்டும் உதவி செய்தீர்; இனிஅறத் தொண்டன் யானே !*

*பீடமும் வேண்டேன்; அந்த பீடத்திற் குரிய தான*
*வேடமும் வேண்டேன்; வேடம் விரும்பியே காட்டு கின்ற*
*ஆடம்ப ரத்தை வேண்டேன், அருளறி வாள ருக்குச்*
*சீடனா யிருத்த லேயென் சேமமென் றடங்கி நின்றான் !*

*சாட்சியாய்ச் சுற்றிலுந் தரும சங்கத்தின்*
*காட்சியைப் பற்றறக் காண்ப தல்லது,*
*மாட்சியான் எனதெனு மமதை யற்றுத்தன்*
*ஆட்சியை ஆண்டனன் அகமு கத்தனே !*

*தத்துவ வேற்றுமை, தரும வேற்றுமை,*
*ஒத்துழை யாதவர் நால்வர் உட்பகை*
*சத்தமிட் டுருமிடுஞ் சமயந் தூயவன்*
*புத்தரின் அமைதியைப் பொருந்தி நிற்பனே !*

*பிரிவினை செய்திடும் பேச்சைக் கேட்டிலான்,*
*ஒருவனைப் பற்றிமற் றொருவர்க் கோதிடான்,*
*இருவினை யுலகுடை யியல்பைக் கண்டவன்,*
*அருளுடன் அறவினை யடங்கி யாற்றுவான்.*

*மூச்சினைக் காத்திட, முயற்சி வென்றிடப்*
*பேச்சினைச் சுருக்கியே பெரிய மோனியாய்,*
*நாச்சின வஞ்சகருந் திருந்த நாடினான்*
*ஏச்சறத் தனக்குள்ளே யிருந்து வாழுவான்...*
*கற்றதைக் கருத்துறக் கருதி யின்னமும்,*
*கற்றிடக் கற்றிடக் காதல் கொள்ளுவான்.*
*வெற்றுரை வீண்பொழு தெதுவும் வேண்டிலான்;*
*முற்றறி முதல்வனை அடைய முன்னின்றான்.*
*சீலமுங் கருணையுஞ் செகத்திற் கோதிடும்*
*நால்வகைப் புத்தரும் நாத்த டித்தவர்*
*சால்பறத் தம்மையே தாக்கிச் சண்டையைக்*
*கோல்வரைக் கொண்டுபோய்க் கூச்ச லிட்டனர்.*
*சௌத்திராந் திகரும் வைபா ஷிகரும்,*
*மாத்திய மிகரும் யோக சாரரும்*

இயல்புறு பௌத்தம் எமதே யென்று
மார்பைப் புடைத்து வார்த்தை மீறிய
வாதக் கூச்சல் காதைத் துளைத்ததே !
"முன்னும் சூனியம் பின்னும் சூனியம்,
முதலும் முடிவும் முற்றிலும் சூனியம்,
காண்பதும் சூனியம் கருத்தும் சூனியம் !
ஏகச் சூனியம்" இயம்பினா ரொருவர்.
"காணுவ தெல்லாம் கணபங் குரமே,
எல்லாந் துன்பம் எவையுந் துன்பம்"
என்றே துன்பம் இயம்பினார் ஒருவர்.
"உள்ளது மில்லை இல்லது மில்லை
உள்ளது ஞானம் உருவரு வாகும்,
அந்தக் கந்தம் இந்தக் கந்தம்,
புறச்சமு தாயம் அகச்சமு தாயம்,
நிலந்தீ நீர்வளி நிறையணுச் சேர்க்கை,
புலனாம் பொருளெலாம் இலனாம் பொரு" ளென
மற்றொரு சாரர் வாதம் பேசினர்.
துன்பம் துக்கம் சூனியம் என்றே
ஓய்ச்ச லின்றிப் பேச்சு வலுத்தே
முடிவிற் சுத்தன் முன்னிலை வந்து,
நீரே கட்சி நியாயம் கூறும்....
என்று நால்வரும் நின்றனர் ஆங்கே....
புத்தர் உருவைச் சுத்தன் பார்த்து,
தியானம் செய்து, மோனம் மலர்ந்து,
புன்னகை பூத்து நன்மொழி சொன்னான் :—

**சுத்தன்**

அமைதியாய்க் கேட்பீர், அறிந்ததைச் சொல்வேன்.
புத்த பகவான் புண்ணிய புருஷர்.
வேதம் ஓதியோர் விஞ்ஞான மின்றிக்
கருமகாண் டத்தையே தருமமென் றெண்ணி,
வேதப் பொருளையும் வேள்வியாய் மாற்றி,
வேள்வியில் உயிர்க்கொலை விரும்பித் திரிந்தார்.
இந்நிலை மாறிச் செந்நெறி ஞானம்
இதுவெனக் காட்டிப் பொதுநெறி கோலவே
கருணைப் பெருமான் கனிவுடன் போந்தார்.
அவர்கா லத்தில் அறமே புகன்றார்.
பிரிவினை யெல்லாம் பின்னே வந்தவே.

**அசோகன்**

ஆதி புத்தரை அசோகன் அறிந்தான்.
கலிங்கப் போரிற் கடுங்கொலை புரிந்த
அசோகன் வாளை அப்பால் எறிந்து,
துறவுளத் துடனே அறவர சானான்.
உண்மையும், இரக்கமும், ஒற்றுமைத் திறனும்
எல்லா ருக்கும் நல்லது செயலும்,
தூயநல் லறமெனத் தூண்களிற் பதித்தான்.
துறவோர் கூட்டமும் அறவோர் கூட்டமும்
திசைதிசை சென்று சீல வாழ் வுடனே
புத்தர் கொள்கையை வித்திடச் செய்தான்.
அக்கா லத்திலே இக்கா லம்போல்
வேதனை செய்யும் வாதமொன் றில்லை.
போதியடியில் புத்த பெருமான்
ஞானம் பெற்றுத் தியானம் செய்ததை
ஐந்துசீ டர்க்கு வந்ததும் உரைத்தார்.

அதுவே சமயம் அதைக்கேட்டொழுகுமின்:—

## புத்த தருமோபதேசம்

"எல்லா வுயிர்க்கும் இன்பமோங் குகவே.
கொல்லா நெறியே குலவுக வுலகில்.
கலகம் ஒழிக, கருணை பொழிக !
ஞானம் ஓங்குக, ஞானிகள் ஓங்குக.
தானம் ஓங்குக தவக்கனல் ஓங்குக.
அறமோங் குகவே, அறவோர் ஓங்குக.
அறவோர் சங்கம் அருட்பொலி வெய்துக !
அனைவருள் ளத்திலும் அன்பே வளர்க !
தனைப்போ லெண்ணுக தான்பிற வுயிரை.
தூய்மை யுறுகவே சொல்மனஞ் செயலில்
வாய்மை யுறுகவே வாய்நடை நினைப்பில்.
கருணை பொங்குக தருணமா மழைபோல்.
இருவிகற் பொழிகவே இரவிமுன் பனிபோல்.
ஆசை பொறாமை ஆணவம் ஒழிக.
பாசம் விலகுக பந்தனை சிந்துக.
நேச மோங்கி நிலமெலாம் வாழ்க.
தேச மெல்லாம் சீலவாழ் வோங்குக.
இரும்பு விலங்கினும் இன்னலைச் செய்யும்
விருப்பு வெறுப்பாம் வேட்கை ஒழிகவே;
பற்றின் வருவதே படுதுய ராகும்.
பற்றற் றிருத்தலே முற்றிலும் இனிதாம் ;
பொறிகளின் வழியே புத்தியை விட்டு,
நெறிகெட் டலைவார் அறிவிழந் தயர்வார்.
காமக் காட்டிற் கட்டற் றலைவார்,
ஈமக் காட்டிற் கேகுவார் விரைந்தே.
பிறப்பவ ரெல்லாம் இறப்பவ ராவார்.
துன்பப் பிறவித் தொல்லை தீர,
ஆசைத் துறவே மாசறு வழியாம்.
ஆசைப் பிணிப்பே காசினி வாழ்க்கை.
காமம் வெகுளி கட்கள வின்றித்
தாமத வுணவுந் தளர்ச்சியு மின்றி,
நாமெனுஞ் செருக்கிலா நயந்த பணிவுடன்,
அமுதினும் இன்சொல் அடக்கமாய் வழங்கி
சமதம முடனே சாந்தம் பேணி,
அந்தக் கரணம் அடங்கலும் வென்றார்,
தொந்தமில் லாத சுகவழி காண்பார்.
இன்னுடல் வாழ்க்கை மின்னென மறையும்;
முன்வினைப் பயனே முடிவுறத் தொடரும்,
தானமும் சீலமும் தயையும் தியானமும்,
ஞானமும் போற்றுக நல்லற மிதுவே !

*        *        *        *

புத்தன் அன்புடன் புகன்றவை இவையே.
துறவே புத்தர் சொல்லும் பொன்மொழி
கபில வஸ்துவில் கப்பரை யேந்திய
புத்தரைக் காணப் போந்தவ ருள்ளே
யசோதரா தேவி யிலாததைக் குறிக்க,
மனைவியைக் கண்டால் மனவி காரமாம்
என்றனள் அவளும் ; வென்றார்க் கஃதிலை
என்றார் புத்தர்; நன்றென வந்து
காலை யணைந்து கண்ணீர் விட்டு

இன்னிள மைந்தன் இராகுல னிடத்தில்
தாய பாகம் தந்தையைக் கேளெனக்
கேட்டான் மைந்தன் "கேடறு செல்வம்
துறவே , அதனை மறவா தளித்தேன்"
என்றார் புத்தர்; நன்றென மகனும்
தாயுடன் துறவறந் தாங்கிய கணமே
சங்கஞ் சேர்ந்து சாதனம் பெற்றான்.
சாதி சமய பேதமே யின்றி,
அகில வுலகும் ஐக்கியப் பட்டு
வாழவே புத்தர் வழியைத் துலக்கினார்.
ஒரு பெருஞ்சபையில் ஒள்ளிய புத்தர்
காதைக் கொடுத்துக் காதலாய் நிற்கும்,
மக்கள் கேட்க வார்த்தைபே சாமல்
இரண்டு கனிகளை இனிதுறக் காட்டிப்
புன்னகை புரிந்தார். அன்னதன் பொருளை
வினவின வுடனே விளம்பிய திதுவே:
"பேச்சும் வாதமும் பெரும்பய னாமோ !
மானிட வாழ்க்கை மாசில் லாத
வாய்மையும் அன்பும் வளர்கனி யாகுக;
இல்லற மாயினுந் துறவற மென்னினும்,
அன்பும் அறமும் அழுக்கறு மெய்யும்
ஆருயிர்ப் பணியும் அருளுடன் போற்றுக.
புத்தர் உண்மைப் பத்தராய் வாழ்ந்தால்,
எத்தகைக் கலகமும் இராவே யுலகில்
புத்தர் வாழ்க, புத்த தருமமும்
புத்த சங்கமும் புனிதரால் வாழ்கவே !"

* * * *

இந்தநல் லுரையை ஏற்ற நால் வகையினர்,
சத்த மடங்கிச் சமரஸங் காத்துத்
தம்மபா தத்தைச் சரிவரப் பயின்று,
அன்பிற் பொருந்தி அருட்பணி புரிந்தார்.
மெய்வழி காட்டிய துய்யனைப் பணிந்தார்....
என்றுந் தம்முடன் இருக்கச் சொன்னார்...
ஆயினுந் தூயன் அல்லும் பகலும்,
புதுப்புது ஞானம் பொருந்திடத் துடித்தான்....
சீல வாழ்க்கையிற் சிறந்த புத்தரை
வணங்கினான். ஆயினும் மனத்திலே இன்னும்
ஐயப் பாடுகள் அநேகம் இருந்தன :—
"துன்பமே உலகா ? இன்பமும் உள்ளதே ?
துறவே நெறியா ? தொல்லுல கத்தில்
இல்லறங் காப்பார் அல்லலற் றின்புறும்
வழிதான் என்னே ? வல்வினைத் தளையை
உதறுவ தெப்படி ? உண்மை என்" னென
நீண்டு நினைத்த நின்மலன் மகிழ,
ஜினவரன் என்னும் ஜைன சாது,
தோன்றி யாங்கே தூயனை யறிந்து,
"வாரீர் என்னுடன் வாய்மை யறிவீர்."
என்றன் புடனே இட்டுச் சென்றார்.
நாமும் தொடர்ந்து நடந்ததை யறிவமே.

## 8. மகாவீரப் படலம்

### ஜினவரன்

தன்னுயி ரென்ன மற்றோர் உயிரினைத் தாங்கும் அன்பன்,
பொன்னையும் மண்பெண் போகப் பொருளையுந் துறந்த தூயன்
அன்னையின் அன்பு மிக்கான், அருகநல் லறத்தின் மிக்கான்,
இன்னியற் சொல்லான் ஞானி ஜினவரன் என்னும் பேரான் !

செல்வத்திற் பிறந்து, செல்வச் செருக்கினை ஒதுக்கித் தள்ளிக்
கல்வியிற் சிறந்து கல்விச் செருக்கொரு கடுகு மின்றி,
வல்வினை உதிர நோற்று, வணக்கமே யணிந்த சாது,
நல்லவ னென்று மேலோர் நவின்றிடுந் துறவி யன்னோன் !

உறவினர் பூட்ட நின்ற மணத்தளை யுதறித் தள்ளித்
துறவினை யணிந்து நோற்றுச் சுக்கிலத் தியானத் தாலே,
அறிவன நன்க றிந்தே அடக்கமும் பொறையும் பேணி,
அறவினை புரியும் ஆசான் ஆனந்த நண்பன் மாதோ !

உள்ளத்தில் ஊறு கின்ற உயர்ந்தநல் லெண்ண மெல்லாம்,
தெள்ளிய கேள்வி யெல்லாம், சீரிய முனிவ னுக்கு
வெள்ளையாய்ச் சுத்தன் சொல்லி, விடையெதிர் பார்க்கும் போது
விள்ளரும் பெருமை யாளன் வீரரின் கதையைச் சொன்னான்.

குருமகா வீரர் காதை குவலய மாந்தர் கேட்டால்,
உருகுவார் இரக்க மோங்கி உயிர்க்கிதஞ் செய்து வாழ்வார்.
தருமமென் பதனை நேரே சத்திய வடிவாய்க் காண்பார்,
அருகநீ கேளாய் என்று ஜினவரன் அருள லானான்:

### மஹாவீர சித்தி

மன்னு மாதவம் மாசறச் செய்தவன்,
இன்னு யிர்க்குலம் இன்புற வாழ்ந்தவன்,
என்னு ளத்தில் இலகும் ஒளியினான்,
அன்ன வீரன் அருகன் அருள்கவே !
ஆரேனும் ஆருயிர்கட் கிரங்கியருட் பணிபுரிந்தால்
அன்னோர் அன்புப்
பேரேயென் வாய்க்கினிது; பெருந்தவத்தாற் பெறற்கரிய
பேறு பெற்றே
சீராரும் அஹிம்ஸையறந் திகழுவித்த ஜினவரனைச்
சிந்தை செய்தால்,
வீராதி வீரமுடன் பற்றுதறி விடுபடவோர்
வீறுண் டாமே !
ஐவரை வணங்கி நாளும், ஐயணு விரதம் போற்றி,
வையகம் அன்பின் ஆளும், மன்னன்சித் தார்த்த னுக்கும்,
செய்யநல் அரசி யான திரிசலை தனக்கும் போந்த
துய்யநல் வீரன், வீரத் துறவினுக் கிணையும் உண்டோ ?

மன்னுயிர் வாழ்த்திட மகான்கள் வாழ்த்திடத்
தன்னுயிர், பொதுநலத் தருமங் காத்திடத்
துன்னிய தென்றுணர் தூய மன்னனும்
அன்னவன் அரசியும் அன்புச் செல்வரே !

இல்லறப் படிகளை யினிது காத்தனர்,
நல்லற விரதத்தை நாளும் போற்றினார்,
சொல்லருந் தூயவர் புகழைத் தூண்டிடத்
தொல்லற வடிவெனச் சுதனுந் தோன்றினான்.

நாதரின் குலமுடன் ஞாலம் வாழ்ந்திடத்

*தீதறு திரிசலை செய்த வத்தினால்,
கோதறும் அச்சுதங் குலவு நற்குணச்
சோதியும் சுடர்வடி வாகத் தோன்றினான்.*

*நாட்டுடைப் பாக்கியம், நமது பாக்கியம்,
வீட்டுடைப் பாக்கியம், வேந்தர் பாக்கியம்,
வாட்டமற் றறமினி வாழும் ; பேரொளி
காட்டிட வந்தனன் கருணை வள்ளலே.*

*இத்தகை மகிழ்வுட னேத்திப் பெற்றவர்,
வர்த்தமா னன்என வழங்கி நற்பெயர்,
உத்தமச் சேயினை உயிரைப் போலவே,
மெத்தவும் பேணினர் மேதை யோங்கவே.*

*அறிவுடன் பிறந்தவன் ஆன்ற கல்வியும்
முறைவுறப் பெற்றனன் முனிவர் போற்றிட ;
பிறவியின் பயனுறப் பிழைகள் போக்கிடும்,
அறநெறி கற்றுநின் றமைந்து வாழ்ந்தனன்.*

*அரவினை அடக்கிய ஆண்மைச் சேயினைக்
கரிமத மடக்கிய கனலுஞ் சிங்கத்தைப்
பிரியகா ருணிதரும் பெரிய ஞானியை
வரகுண வீரனென் றுலகு வாழ்த்துமே !
கண்டவர் வணங்கிடுங் கடவுட் சேயவன்
விண்டிடு மொழிகளே வேத வாக்கெனக்
கொண்டனர் நின்றனர் குணத்தி னோங்கியோர்
கண்டனர் ஆனந்தக் கனியி னின்பமே.*

*காட்சியுங் கல்வியுங் கனிந்த செஞ்சொலும்
மாட்சிமை யோங்கிய மதியு டன்மனச்
சாட்சிமெய் யிதுவெனச் சாற்று நன்னடை
ஆட்சியுங் கொண்டனன் அமர வீரனே !*

*வயதுற வயதுற வந்த ஞானத்தால்,
புயலுறும் ஆசையின் போலி யின்பத்தை,
மயலறு சிந்தையின் மகிழுஞ் சாந்தத்தைத்
துயரறக் கண்டனன் சுத்த வீரனே !*

*தடித்த காமத் தழலெழும் பேய்க்குலம்
பிடித்த மாந்தர் பெருந்துய ரெண்ணியே
துடித்து நெஞ்சந் துகளறு கண்ணிநீர்
வடித்து நொந்தனன் வாய்மை யறிந்தவன் !*

*துயர மேமிகத் தோன்றுமிப் பூமியில்,
மயலு ழன்று மறலியின் வாய்ப்படும்,
உயிரை யெண்ணி உயிர்த்துளம் விம்முவான்,
அயர்விலா நலம் ஆற்றிடும் ஆற்றலான்.*

*மாத ராசையும், மண்மணி யாசையும்,
காதி கர்மக் கசடெனப் பாவித்தான்,
கோதி லாக்குணக் குன்றனை யானிந்த
மேதி னிக்கோர் விடுதலை தேடினான் !*

*அறிவ றிந்துல காட்சி யறிந்திதன்
உறவுஞ் சுற்றமும் பற்றின் உருவெனப்
பிறவி மாயம் பிறகிட வீரனுந்
துறவ ணியத் துணிந்தடி வைத்தனன் !*

*பிள்ளை கொண்ட பெருந்துற வெண்ணியே,
உள்ள முட்கி யுடைந்தனர் பெற்றவர் ;*

விள்ள ரும்பினு மெல்லிய சேவடி
முள்வ னத்து முடுகுவ தோவென்றார்.

வேந்தர் போற்றிட வீரசி காமணி
ஏந்து சீர்த்தியும் இந்திர போகமும்,
வாய்ந்து காண வரங்கிடந் தாருளந்
தேய்ந்து சோர்ந்ததித் தீரனின் செய்கையால்.

### பெற்றோர்

"அற்புத மணியே எங்கள் அருந்தவப் பயனே நாட்டின்
கற்பகக் கனியே, கண்ணின் கருமணிக் கொளியே, எங்கள்
சொற்படி கேளாய். ஓங்கும் தொல்புவிச் செல்வம் ஆண்டே
இற்படிந் திருப்பாய் உன்னைப்பிரிந்திடின் இறப்போம்"என்றார்.

அழுதனர் கண்ணீர் பாய்ச்சி அணைத்தனர், குலத்தின் அன்புக்
கொழுந்தினைக்கொஞ்சிமுத்தங்கொடுத்தனர். "எங்கள் வாழ்வு
பழுதுறும் ஐயா வுன்றன் பசுமுகங் காணேல்" என்றார் ;
தழுவினர் தொழுதார் வீரன் சாந்தமா யின்னுஞ் சொல்வான்.

### வீரன்

குறுகிய சீரும் பேறுங் கொற்றமுஞ் சுற்ற வாழ்வும்,
வெறுவிய உலகின் இன்ப வேடமும் எனக்கு வீணாம் ;
இறுகிய வினையின் கட்டை, இழுத்திடும் பாசந் தன்னை,
உறுதிகொண் டுதறித் தள்ளி உயர்தவம் புரியச் செல்வேன் !

அறந்தவிர்ந் துலகில் வாழ்வார் ஆலைவாய்க் கரும்பு போன்றே
இறந்திடப் பிழியும் ஆசை இயந்திரந் தன்னிற் பட்டார்.
பிறந்ததன் பயனை மாந்தர் பெற்றிட மருந்து தேடித்
துறந்தனன் சுயநலத்தைத் தொல்புவி நலத்தை பூண்டேன் !

ஆதலால் அருந்த வத்திற் கமைந்ததென் அன்பின் உள்ளம்.
ஈதலால் உரைவே றில்லேன். எடுத்தகால் எடுத்த தேயாம்.
வாதினாற் பயனொன் றில்லை; வாழ்த்துடன் விடைய ளித்தால்,
நாதரின் மரபை என்றும் வாழ்த்துமே ஞால மெல்லாம்.

### பெற்றோர்

வானகம் விரும்பும் சீரும், வளங்களும் விட்டு, வெய்ய
கானகம் பிள்ளை செல்லக் காண்பரோ பெற்றோர் என்றும்?...
வேனிலுன் மேனி வாட்டப் பொறுப்பமோ! வீரச் செல்வா,
ஏனெமக் கவத ரித்தாய்.. எரிக்குமுன் பிரிவின் வெம்மை !

### வீரத்துறவு

பாசம்பின் இழுக்க முன்னே, பாய்ந்திடுஞ் சேயின் பேச்சு,
தேசுறும் அறிவைத் தூண்டத் தெளிவுறு மனமு முன்பின்
ஊசலே யாடப் பெற்றோர் உம் எனு முன்னே கால்கள்
வீசினான், விரைந்தான், ஞான வீரனோர் நொடியி லம்மா !
ஆடையா பரண மெல்லாம் அழுக்கென நீத்தான் ; பந்தப்
பீடைக ளனைத்தும் விட்டுப் பிரிந்தனன் அறிந்த தீரன்
கோடிசூ ரியனைப் போலக் குளிர்முக நகை குலுங்க,
நாடினான் கடுந்த வத்தை நானில உயிர்கள் வாழ !

வானகம் போல உள்ளே, அறிவொளி வளரு கின்ற
மோனியாய்க் காற்றைப் போல, முத்தனாய்க் கவலை யற்றுத்
தானெனு நினைவே யின்றித் தாகமும் பசியும் வென்ற
ஞானியாய் ஈரா றாண்டு நற்றவம் புரிந்தான் வீரன் !

ஆருயிர்க் கருணை யேதன் அகவடி வான நல்லோன்,
ஊரிலு மலைவ னத்தும் உலாவிடும் போது, மாந்தர்
பேரிடர் செய்தார், ஊமை, பித்தனென் றேசிக் கல்லால்
வாரினர் வைதார் எல்லா வம்பையும் பொறுத்துச் சென்றான்

வாதமும், அகந்தை நோயும், வஞ்சமும், கோளும், பொய்யும்,
பேதமும் பிடித்தார் இன்னல் பிள்ளையின் விளையாட் டென்றே
தீதறு தீரன் ஆங்கே சிரித்துடன் மறந்து சென்றான்,
போதமெய் ஞானா னந்தர் பொறுமையை யிழப்ப தாமோ?

## தவவுறுதி

உச்சினிக் காட்டிலோர் நிசியில் ஒண்டியாய்,
நச்சர வுலவிடு நடும யானத்தில்,
பச்சையூன் உண்டிடப் பசித்த பேயின்முன்
அச்சமற் றமர்ந்தனன் அருளின் வீரனே !

அலகைகள் வெறித்தெழுந் தங்கு மிங்குமாய்,
உலவிடும், பிணங்களை உண்டு நாய்நரி
நிலையறக் குலைத்திடு நிசியை யெண்ணினே
தலைசுழன் றிடும் ; அதைச் சார்த லொண்ணுமோ?

மதிவலி படைத்தவன், மனதை வென்றவன்,
அதிமுத்தம் என்னுமவ் வலகைக் காட்டிலே,
சதிசெயும் புயலினிற் சத்த மின்றியே
பதிந்தனன் கலந்தனன் பதும யோகத்தே.

தடதட வென்றது தாவு மின்னிடி,
மடமட வென்றது வான மாரியும்,
படபட வென்றன பாழும் பேய்க்குலம்,
திடமுட னமர்ந்தனன் தியானக் குன்றனான் !
பட்டெனப் பாழிருட் படல மாறவே
வெட்டுமின் போல்விழி வீசுந் தையலார்,
பொட்டெனச் சூழ்ந்தனர் புலமை காட்டினர்
கொட்டினர் கைகளைக் கொங்கை துள்ளவே !

வாழ்வினை எம்முடன் வாழ்த லின்றிநீ
பாழ்செய லேதெனப் பரிவு தோற்றினார்.
ஆழ்தவ யோகியை அணுக மாட்டிலார் !
வாழ்கவென் றிறுதியில் வணங்கிச் சென்றனர் !

படையெடுத் துலகெலாம் பயமு றுத்தினும்,
கடற்புயல் மோதினுங் கனல் சினக்கினும்,
மடந்தையர் ஏளன வசைகள் கூறினும்,
திடமுள தியானத்தைச் சிதைத்த லாகுமோ?

பார்வையுள் ளாக்கிய பதும யோகியைக்
கார்புயல் வானமுங் கரிய பேய்களும்,
மார்புடை மங்கையர் மாயம் யாவையும்,
நேர்படத் தாக்கியு நிலைபெ யர்ந்திலான் !

அடரிருட் காட்டிற் கஞ்சாய், ஆணவப் பேய்கட் கஞ்சாய்,
படமணி பாம்பிற் கஞ்சாய், பாய்சினப் புலிக்கு மஞ்சாய்,
விடவலை வீசுங் காம வேசையர் விழிக்கும் அஞ்சாய்,
அடிதொழு திடுவேன் உன்னை அதிமகா வீர போற்றி !

பொறையிலே பூமி போன்றாய், புண்ணிய விண்ணே போன்றாய்
துறவிலே காற்றைப் போன்றாய், சுதந்தரச் சுடரே போன்றாய்,
பிறவுயிர்க் குயிரே போன்றாய், பெருமைசால் கருணை பூண்டாய்
அறிவினுக் காழி போன்றாய் அதிமகா வீரர் ஏறே !

உச்சிமேற் கரங்கள் கூப்பித் தாணுவென் றுரைக்குந் தேவன்,
அச்சத்தால் வணங்கி இவ்வா றதிசயத் துதிகள் செய்தே,
"துச்சமாய் உன்னை நானும் சோதித்துத் தோற்றேன்" என்று
கொச்சையாஞ் செயல் வருந்திக் கும்பிடு போட்டுச் சென்றான்...

இன்னல்கள் செய்தா னுக்கும் இன்னலே நினையாத் தூயன்,
புன்னகை யாசி காட்டிப் பொறுமையாய்ப் போகு மெல்லை,
மன்னன்சே டகன் புதல்வி, மகானிடம் அன்பு மிக்க,
கன்னிசந் தனைவருந்தும் கௌசாம்பி வீதி வந்தான்....
காமுகன் அள்ளிச் சென்று, காட்டில்விட் டகன்ற பெண்ணைச்
சேமகௌ சாம்பிச் செட்டி செயலுற வளர்த்தான். அன்னோன்
தாமத மனைவி அன்புத் தளிரின்மேற் பொறாமை கொண்டு
தீமைகள் செய்து, வைது, சிறையிலும் அடைத்தாள் அம்மா !

"வெஞ்சிறைப் பட்டேன் பூவில் விடுதலை யிழந்தேன் ; ஆறக்
கஞ்சியே குடித்தேன், பீற்றக் கந்தையேயணிந்தேன். பொல்லார்
வஞ்சமும் வசையும் தந்த வாதனை பொறுத்தேன்; என்னின்
அஞ்சிலேன்; உன்னை நெஞ்சில் அகன்றிலேன் வீர தேவா !

வருகுவாய் ஒருநாள்; பட்ட வல்வினைப் பயனைத் தீர்ப்பாய்.
பருகுவாய் எனது கூழைப் பவப்பிணி தீர்ப்பாய்; ஆசி
தருகுவாய்; அடிமை யாக்குந் தளைகளை முறிப்பாய்" என்றே
உருகிய புனித வல்லி உள்ளமே பலித்த தம்மா !

அன்புசெய் நல்லாள் வீட்டின் அருகிலே வந்தான் ஐயன்.
புண்படு பெண்ணின் வாழ்க்கை புதுமையுற் றதனைக் கண்டான்.
இன்பினால் இதயந் துள்ளச் சந்தனை ஏற்றுப் போற்றித்
தன்பர மானந் தத்தைத் தான்பணிந் தோதி னாளே !

கனத்த மாயை காயினும் கவலை யென்னை வாட்டினும்,
சினப்பகை விலங்கிடச் சிறையிருள் வருத்தினும்,
மனப்பகை யிலாதுனை வழூத்தி இன்ப மேவினேன்
உனக்குடல்; உனக்குயிர்; உனக்கெனுள்ள மாகவே !

வருத்தினார் வருந்தினார்; வருந்தினார் மகிழ்ந்தனர்
வருத்தமே பொறுத்தவர் வசையிலாது வாழ்ந்தனர்;
பெருத்தவல் வினையறப் பிறங்குகின்ற ஜோதியாம்
ஒருத்தனை நினைத்ததும் உளத்திலின்ப மூறுமே !

இவ்வகை அன்பி னாலே அன்பருக் கினிது செய்தே,
ஒவ்வொரு தலமுஞ் சுற்றிச் சிரும்பிகை உபவ னத்தில்,
துவ்விய சுக்லத்யானம் தொடர்ந்து, சா லடியில் ஊன்றி,
திவ்விய சாந்த மெய்திச் சினேந்திர னானான் வீரன் !

மனதினை யடக்கி வென்று மாண்குணப் படிகள் ஏறி,
வினையினை யுதிர்த்த தூய கேவல விளக்காய் ஞானி,
அனைவரும் வணங்கி முத்தி யடைந்திடும் அருக னாகித்
தனிநலத் தவமுடித்துப் பொதுநலத் தவமே செய்தான் !
மன்னுயி ரெல்லாம் அஹிம்ஸையன் பறத்தை
மருவிநல் லமைதியில் வாழத்

*தன்னுடை யன்பர் தருமசா தனத்தாற்*
*சாதுக்க ளாய்க்கடைத் தேற,*
*மன்னவர் முதலாய் மாடுகள் மட்டும்,*
*வட்டமாய் அமர்ந்துரை கேட்க,*
*முன்னவன் சமவ சரணமொன் றமைத்தான்*
*முத்தரை வைத்ததன் முன்னே !*

*மன்னவர் தூய மாதவர் புலவர்*
*மாசிலா மாதர்கள் வணங்கப்*
*பொன்னரி யணையிற் பொருந்திய ஜோதி,*
*பூமலி அசோகின்கீ ழிருந்தே,*
*இன்னலில்லாத ஒழுக்கமே அறமென்*
*றியம்பிடக் கேட்டவரெல்லாம்,*
*உன்னதமான அறிவினையடைந்தார் ;*
*உயர்தவயோகியின் அருளால்.*

**மஹாவீரன் உபதேசம்**

*ஆருயிர் உலகிற் கெல்லாம் அருளுடன் அன்பு செய்ம்மின்,*
*ஓருயி ருக்குந் தீங்கை உன்னிடா அஹிம்ஸை ஒன்றே*
*சீருயர் தருமம்; அஃதே செருக்கள மின்றி யிந்தப்*
*பாருயர் தருமம்; இன்பப் பயனுறுந் தரும மாமே !*

*பொய்கொலை களவு காமம் கட்குடி பொறாமை யான*
*வெய்யதீ வழியை விட்டு, விலகினார் தூய ராவார்,*
*மெய்யருள் அமைதி நேர்மை மேதகு பிரமசர்யம்*
*உய்வழி யிதனைப் போற்றி ஒற்றுமை யாக வாழ்வீர்....*

*உத்தமர் சமவ சரணத்தில் ஒன்றி*
*ஓங்கருட் கொடிபிடித் தருகன்,*
*சித்திபெற் றிசைக்கும் தேன்மொழி பருகித்*
*தெள்ளறி வாற்றலிற் செழிக்க,*
*தத்துவார்த் தத்தைத் தகுமுறை புகட்டிச்*
*சாதுசங் கத்தினை நிறுவி,*
*முத்தர்கள் போற்ற முக்குடை வேந்தன்*
*முடிவிற்பா வாபுரி யடைந்தான்.*

*திசைசிலம்பத் துதித்தன்பர் திருக்கூட்டந்*
*திரைகடல்போற் செறிய வாங்கே*
*இசைசிலம்பு மணிமொழிகள் ஆறுதினம்*
*இருந்தபடி யியம்பித் தீர்த்து,*
*நசையுலகின் வசைமாற நல்வழியை*
*நாட்டியதும், வினையை மாய்த்து,*
*விசைபெறத்தன் னொளியாகி விண்ணோக்கி*
*வெண்சுடராய் விரைந்தான் வீரன் !*

*விழியுறங் கியநல் லன்பர் விழித்ததும் விழியை நம்பார் !*
*வழிதுலக் கியநல் ஆசான் மறைந்தவா றறியார் அந்தோ !*
*இழிதுயில் அதனை ஏசி, என்செய்வோம் என்று, தீர்த்தன்*
*மொழியறம் பரப்ப நின்று, முத்தனைத் துதிசெய் தாரே :*

*அருகா சரணம் அமலா சரணம்,*
*முருகார் திருவே முதல்வா சரணம்,*
*பெருமா தவனே பெரியோய் சரணம்,*
*உருகும் அடியார்க் கொளியே சரணம்.*

*அமைதிக் கடலே அறிவே, நிறைவே,*
*சமதைச் சுடரே, தருமக் கதிரே,*

*விமலா சரணம் விசயா சரணம்,*
*சமவச் சரணத் தரசே சரணம் !*

*அருளொளி வேந்தின் சீர்த்தி அடிகளிவ் வாறு சொல்லி*
*அருகனின் சரணம் பாடும் பொழுதினில் அன்பர் கூட்டம்,*
*வருகவென் றெதிர்ந்து, தாமும் வாழ்த்துகள் பாடிச் சைனத்*
*திருநகர் மந்தி ரத்திற் சேர்ந்தனர், சேவை செய்தார்......*

*சுத்தனும் அன்பு நாதன் எனும்பெயர் துலங்க, ஆங்கே*
*தத்துவார்த் தங்கள் கற்றுச் சமணரிற் சமண னாக*
*நித்தியம் தியான பூஜை நியமமாய்ச் செய்த நாளில்,*
*அத்திரு வூரிற் காணும் அமர்க்களந் தன்னைச் சொல்வோம்.*

## 9. ஜைன தருமப் படலம்

*பெருகும் அறிவுத் தாகத்தாற் பிரியமாக நூலறிவு*
*தருகும் ஜைன வரனிடமே தத்து வார்த்தம் முதலான*
*அருக சமய சாத்திரங்கள் அனைத்து மறிந்து, மதி சிறந்து,*
*தரும சாத னத்தினிலுந் தலைசி றந்தான் சாதகனே !*

*அன்பு நாத முனிவரனும் அருகபக்தர் அனைவ ருக்கும்,*
*இன்ப மாகும் படிநடந்தான் ; இனியமனமுஞ் சொல்லுமுளான்,*
*என்பு முருகுங் கருணையுடன் எல்லாவுயிருந் தன்னுயிர்போல்,*
*பண்பு மிக்க கவனமுடன் பார்த்து நடந்தான் பரிவாளன்.*

*ஞானங் கேட்கச் செவிதிறப்பான் ஞானம்பேச வாய்தி றப்பான்*
*மோன மாகப் பரஞான முத்திக் குரிய முயற்சியிலே,*
*தியானங் கூடி ஆழ்ந்திடுவான், சித்தவுறுதி காத்திடுவான்,*
*தானென் றுரைக்கக் கூசிடுவான் சாது சங்கம் விரும்பிடுவான்.*

*அருகரே வணக்கம் ! சித்தரே வணக்கம் !*
*ஆசிரி யப்பெரி யீரே,*
*திருமிகும் உபாத்தி யாயரே வணக்கம் !*
*செய்யசா துக்களே வணக்கம் !*
*மருவும்ஓங் கார மந்திரம் அளிக்கும்,*
*மாதவச் சித்தர்காள் வணக்கம் ;*
*பருகியும் மறிவைப் பரசுக முத்தி*
*பழுத்திடப் பரிந்தருள் புரிவீர்.*

*என்றே பஞ்ச நமஸ்காரம் இதயங்குளிரச் செபித் திடுவான் ;*
*நின்றுமிருந்துங்கிடந்துமேநிமலனருளை நினைத்திடுவான்*
*ஒன்றே வேளை பகலுண்பான், இரவில் ஒடுங்கித் தியானிப்பான்;*
*வென்றேபுலனையடக்கியவன், விமலன் என்றார் அருகரெல்லாம்.*

*“நீரே தக்க குரு” வென்று நெஞ்சில் அன்பு கொண்டன்பர்,*
*நேரே வணங்கும் போதறிஞன் நின்று கூப்பி “யானடியேன்!*
*பாரே குருவென் றழைத்தாலும் பாராட் டாமற் பணிசெய்யும்*
*சீரே நோக்கங் கொண்டு நலம் செயலே எனது செய” லென்பான்!*

*ஏதுங் கைம்மா றில்லாமல் இடிவான் அமுதம் ஈவதுபோல்,*
*தீதை விலக்கி நலம்புகன்ற தீர்த்தங்கரரே போலநிதம்,*
*போத மறிந்து போதித்துப் புதிய வாழ்வை வாழ்ந்து, மனப்*
*பேதமின்றித்தொண்டாற்றும்பிரியமான தொண்டனென்பான் !*

*பணிவாற்சொன்ன பனிமொழியைப்பார்த்தபின்னும் அன்பானார்*
*துணிவாய் முத்தன் சுத்தனென உள்ளே துதித்து, நல்லுரைகள்*
*தணிவாய்க் கேட்டுத் தெளிவார்கள், ஸப்த பங்கி சியாத்வாதம்,*
*கணியா நின்ற உண்மை தனைக் கனிவா யிவனுங் காட்டுவனே!*

*சாந்தமும் அஹிம்ஸையுஞ் சாற்று முக்குடை*
*வேந்தனின் ஊரிலே வேறு மாசிலை....*
*மாந்தரின் முச்சிறு மாறு பாட்டினாற்*
*போந்தன வாயடிப் போர்கள் சுற்றுமே !*

*திகம்பர ஸ்வேதாம் பரர்கள் என்றும்*
*டூண்டிக ளென்றும் மீண்டுந் தோன்றி,*
*எமதே மதமெனத் தமது நடைகளைப்*
*புகழ்ந்து கொண்டு புயலெனக் கிளம்பி,*
*வாயும் கையும் வரிசையாய்க் கலந்து,*
*சமண புரியின் அமைதியைக் கெடுத்தார்.*
*வெள்ளுடை தரிக்க வேண்டும் என்பார்,*
*ஆடை யெதுவும் கூடா தென்பார்,*
*மயிரைப் பறித்தலே மனத்துற வென்பார்,*
*பெருக்கி நடத்தலே பெருமைய தென்பார்.*
*சமரி கொள்ளலே சால்பெனச் சொல்வார்.*
*உருவைத் தொழுதலே உயர்வெனச் சொல்வார்,*
*நிர்வாண வுருவே நிசமெனக் கொள்வார்.*
*நாம்உரு வணக்கம் நம்பேம் என்பார்,*
*வாயைக் கட்டலே மதமெனச் சொல்வார்,*
*பெண்கள் மோட்சம் பெறாரெனச் சொல்வார்,*
*பெறுவார் ; மல்லி பெண்ணெனச் சொல்வார்,*
*அற்பவேற் றுமைகள் அகங்கரித் தெழுந்து,*
*நீநா னென்று நெட்டிப் பொருது*
*கூச்சலிட் டலுத்துப் பேச்சற ஒதுக்கி,*
*சாதனம் செய்யும் அன்புச் சாமியை*
*"அடங்கி யிருக்கும் அன்பு நாதரே*
*உமது முடிவையே ஒப்புவோம்" என்றார்.*
*பணிவுடன் அன்பு பழுத்தநல் லறிஞன்*
*புன்னகை பூத்துப் பொருளை விளக்கினான் :—*

### ஜைன தத்துவம்

*அருகக் கடவுளின் அறநெறி பயின்றவர்,*
*சண்டை விரும்பார், சாந்தமே காப்பார்.*
*எல்லா ருக்கும் நல்லதே நினைப்பார்.*
*அத்தகை அருக சித்தாந் தத்தின்*
*உண்மை வடிவை உணர்த்துவேன் கேளீர்:*
*உலக மெல்லாம் உயிர்க்கொலைக் களமாய்,*
*இரத்தஞ் சிந்தி இழிவுறும் போது,*
*போரும் போட்டியும் பொறாமையுங் கூடி,*
*நரசீ வனத்தை நரக மாக்கின,*
*தவங்கள் குறைந்தன ; அவங்கள் பெருகின,*
*கண்ணில் லாத காமப் பேய்கள்,*
*மண்ணுயிர் வாழ்வைப் புண்ணுறச் செய்தன.*
*இந்நிலை தவிர்க்கவே எழுந்தார் வீரர்,*
*ஆன்றசெல் வத்தை அழுக்கென நீத்துத்*
*துறந்த போது தூய பகவன்,*
*பெற்றோர்க் குரைத்த பெருமொழி கேளீர்:*
*"தவத்தால் என்வினைத் தளையை உதிர்ப்பேன்,*
*கேவல ஞானக் கிளர்ச்சியாற் பேசி,*
*அன்பு வழியை அமைதியாய் விளக்கி,*
*வையகம் ஒன்றென வாழச் செய்வேன்".....*
*வீரர் இதையே வீறுடன் புரிந்தார்.*
*அவர்கா லத்தில் அருகர் ஓர்குலம்.*
*சந்திர குப்தன் சமணத் துறவியாய்,*

வெளிக்குள மலைமேல் விரத மிருந்து
முத்தி பெற்றான்; அத்துடன் முனிவரை
நாடெலா மனுப்பி நல்லறம் பரவத்
தொண்டுகள் செய்தான் வண்டமி ழகத்தில்.
அவன்கா லத்திலும் உவந்தொரு சங்கமாய்ச்
சமணர் வாழ்ந்ததைச் சரித்திரம் கூறுமே.
பிரிவினை வந்தது பிற்கா லத்திலே.
பிரிவினை யின்றி ஒருகுல மாக
அனைவரும் உயிர்போல் அறவழி காத்தே,
உண்மை நேயராய் ஒன்றிநாம் வாழ,
அருகர் நாட்டிய தருமங் கேளீர்:—
இடபர் முதல்மகா வீரர் இறுதியாய்ச்
சுத்த முத்தி சித்தி பெற்ற
தீர்த்தங் கரர்கள் செப்பிய மொழியின்
சார மெல்லாம் சத்திய வொழுக்கமே,
அவ்வொழுக் கத்திற் கடிப்படை அஹிம்ஸை.
அஹிம்ஸைக் கடிப்படை ஆருயிர் அறிவாம் ;
அறிவிற் கடிப்படை அருளுடைக் காட்சி.
காட்சிக் கடிப்படை கசடறு வாழ்க்கை.
அவரவர் தம்மை அறிந்து நடந்தால்,
பன்மதச் சண்டைப் படுகொலை யில்லை.
உள்ளப் பொருளைத் தெள்ளத் தெளிந்தால்,
உள்ளொற் றுமையால் உலகொற் றுமையாம்.
உள்ளின் பத்தால் உயிரும் இன்புறும்.
துன்பப் பற்றினைத் துறப்பதே இன்பம்.
வினையால் வருவதே வீண்பற் றாகும்.
பற்றற் றின்பம் முற்றுறப் பெரியோர்,
படிப்படி யாகப் பாதை யமைத்தார்.
வாய்மை, பொறுமை, தூய்மை, நேர்மை,
அடக்கம், பணிவுடன், அருந்தவம், தியாகம்,
பிரம சரியம், பிழையறு நன்மை,
இவையே சாதகர்க் கின்னிய பதினறம்.
அஹிம்சை சத்தியம், அபரிக் கிரகம்,
கள்ளாமை, விந்தைக் காத்திடல் ஐந்தும்
அனைவரும் பேணும் அணுவிர தங்களாம்.
உயிர்க்கொலை தவிர்த்தல், ஊன்மது விலக்கல்
இரவுண் ணாமை... இறுத்தநீர் குடித்தல்,
பக்ஷோப வாசம், பாபந் தவிர்த்தல்,
தரிசனம் விரதம், தன்னம் பிக்கை,
அருகர், சித்தர், ஆசார் குருமார்,
சாதுக் களையே சாந்தமாய் வணங்கல்,
இவையே சிராவகர் இன்புறும் படிகளாம்.
கல்வியும் இவற்றுடன் கற்றிட வேண்டும்.
சீவன், புற்கலம், செய்யறம் அதருமம்,
காலம் வானெனக் கருதும் அறுபொருள்,
மண், நீர், தீ கால், வனஸ்பதி திரஸ
ஜீவரின் இயல்பைத் தெரிந்திட வேண்டும்.
அஜீவன் ஜீவன், ஆச்ரயம், பந்தம்,
சம்வரை மோக்ஷம் நிர்ஜரை யுடனே
நலந்தீ தாகிய நவபதந் தெளிந்தே
ஐந்து காயமும், ஐந்து கதியும்
ஐந்து விரதமும் ஐந்து சமிதியும்
முறைப்படி போற்றி மோட்சக் கதிபெற
மதிசுதி யவதி, மனப்பரி யாயம்,
கிளர்ந்து முடிவிற் கேவல ஞானம்

முதிர்ந்து, வினைகள் உதிர்ந்த சித்தனாய்
விளங்கத் தவங்கள் விரும்பிச் செய்கவே !
காதி அகாதி கருமங் கழன்று
ஆணவ மோகமும், அவாவும் விடுத்து,
விருப்பு வெறுப்புற விடுதலை பெற்று,
மனமொழி மெய்யில் மாசறு தூயராய்,
புலனை அடக்கிப் புந்தியை நிறுத்தி,
சுத்த யோகமாம் சுக்கிலத் தியானம்,
தீவிர மாகத் தினந்தினம் பயின்று,
சுத்தான் மாவைச் சூக்குமப் பார்வையால்,
கண்டு கலந்து கசடற விளங்கும்
அருக னாகி, அருட்பணி புரிந்து
சித்த னாதலே செயின முத்தியாம்.
இத்தகைச் சாதனம் இயற்றியெல் லாரும்,
வினைத்தளை நீங்கி விடுதலை பெறுமின்...
அறிவுங் காட்சியும் அன்பும் ஒழுக்கமும்
பேணியே நீவிர் மாணுற வாழுமின்....
அருகர் வாழ்க அறவழி வாழ்கவே !
இவ்வுப தேசம் செவ்விதின் உணர்ந்தே,
பிணக்கறச் செயினர் இணக்கமாய் வாழ்ந்தே
அன்பு நாதனை அன்பு செய் தாரே !
சமண சமயம் சரிவரக் கற்றபின்,
உள்ள பொருளை உண்மையாய் அறியவும்,
உலகின் முதல்வனை இலகக் காணவும்,
முத்தியை வாழ்வில் முயன்று பார்க்கவும்,
வேறொரு வழியை விரும்பித் தேடினான்.
இந்தச் சமயம் ஏசுதாஸ் என்னும்,
உண்மைக் கிறிஸ்துவர் உபதே சகராய்
வந்தார். அவரது வாக்கும் அன்பும்,
மாசிலாப் பணியுந் தேசுலாம் அறிவும்,
சுத்தனைக் கவரத் தூய தாசரும்
பக்குவம் பார்த்து மிக்க விரும்பி
வருகெனக் கிறிஸ்து புரிக்கழைத் தேகினார்.
அங்கே நிகழ்ந்ததை நன்கறி வோமே !

## 10. கிறிஸ்து ஜோதிப் படலம்

கல்வியிற் சிறந்தவன், கற்ற ஞானத்தைச்
சொல்பவன், சொற்படி துணிந்து தொண்டுசெய்
நல்வழி நிற்பவன், ஞான மார்க்கத்திற்
செல்பவன் கிறித்துவச் செம்மல் ஏசுதாஸ்.

பைபிளை முழுமனப் பாடஞ் செய்தவன்.
செய்கையிற் சிறந்தவன், சிலுவை நேயனே.
தெய்வத்தின் பெருமையைச் செப்பும் வாயினான்,
பொய்வித்தை வெறுத்திடும் புலவன் அன்னவன்.

தனத்தினைத் தொடுதலைத் தவிர்த்துத் தன்னறி
மனத்தினைத் தொடுகின்ற வாய்மை பேசித்தன்,
இனத்தினில் இசைந்தவர் இணையச் சேர்ப்பவன்,
அனைத்துயிர் உலகிற்கும் அன்பு மேவினான்.

அன்னவன் மந்திரம் அமைத்து வாழ்ந்திடும்,
நன்னகர் ஒழுங்கினை, நல்ல தூய்மையை
வன்னமார் மனைகளை, மாந்தர் அன்பினைப்

*பொன்னணி திருவினைப் புனிதன் கண்டனன்....*

*ஆண்பெணும் பலகலை அறிந்து தேர்ந்தவர் ;*
*வீண்பொழு தின்றியே வேலை செய்பவர்,*
*காண்பதற் கினியவர் கையிற் பைபிளைப்*
*பூண்பவர்; வேறொரு பூணு மற்றவர்.*

*கலகங்கள் விளைத்திடுங் கட்சி பேதமாம்*
*பலபல சர்ச்சுகள் பார்த்துப் பார்த்துமேற்*
*பொலிவுறு மலைமிசை பொருந்துந் தாஸரின்*
*இலகுறு மந்திரம் இருந்து கற்றனன்.*

*புதுமையும் பழமையும் பொருந்து பைபிளை*
*விதவித மதங்களின் வேறு பாட்டுடன்,*
*இதமுறக் கற்றனன் ஏசு தாஸரின்,*
*சுதந்தரச் சர்ச்சினிற் சுத்த தேவனே !*

*விண்ணவன் கடவுளுண்மை விண்டநம் ஏசு நாதன்,*
*புண்ணியத் திருநா ளாங்கே போந்தது ! மாந்தரெல்லாம்,*
*வண்ணமார் உடைய ணிந்து வரிசையாய்ப் பவனி சென்றே*
*பண்ணுடன் சிலுவை முன்னே பரவினார் பணிந்து நின்றார்.*

*அத்ததி ஊரா ரெல்லாம் ஆர்வத்தைக் கூறி வேண்டச்*
*சுத்தனு மகிழ்ந்து தூண்டச் சுடரணி மேடை யேறி,*
*வித்தகன் ஏசு தாசன், விண்ணுற நோக்கித் தெய்வ*
*பத்தியால் ஏசுநாதர் பண்பினை யிசைத்தான் மாதோ !*

## ஏசு கிறிஸ்து ஜோதி

*தேசு லாவுந் தியாகத் திருவினன்,*
*பேசுஞ் சொல்லைச் செயல்பெறப் பேணினான்,*
*ஏசு நாதன் இணையறு வாழ்வினை,*
*மாசி லாத மனமுறக் கேண்மினோ !*

*பூவியற் புரைகள் போகப் புண்ணியம் புரிந்த நாதன்,*
*தேவியற் குணத்தால், வெய்ய தீமையே தொழிலாய்ச் செய்த*
*பாவியர் தமக்கும் அன்பன் ; பரிவருள் கமலக் கண்ணான்,*
*ஆவியைப் பலிகொ டுத்தான், அறநெறி சிறக்க மன்னோ !*

*அருந்திறல் ஆகும் ஆத்ம சக்தியால் அவத ரித்தோன்,*
*பெருந்தவச் சுடரே யானோன், பேரின்பப் புலவர் உள்ளம்*
*பொருந்திய கிழக்கிற் பூத்துப் பூவெங்கும் பரம ஞான*
*மருந்தெனப் பரவுந் தெய்வ மணங்கமழ் வாழ்வி னானே !*

*காமமுங் கொலையுங் கள்ளுங் கவருடன் கடிய வட்டித்*
*தீமையும் திருட்டும் பொய்யுஞ் சிறுமையுங் கொண்ட மாந்தர்,*
*நேமமொன் றறியா நீசர், நெஞ்சினில் அன்பே யில்லார்,*
*சாமியின் பெயரைச் சொல்லித் தனக்குவை சேர்த்தா ரம்மா !*

*பொய்யொழுக் கங்கள் மாறப் போலிகள் சேட்டை தீர,*
*மெய்யொளி பரவ, யூதர் விளக்கொளி யாக வந்த,*
*துய்யவன் ஏசு நாதன், சுடச்சுடத் துன்பந் தாங்கிச்*
*செய்ததோர் தியாக வேள்வி செப்புதற் கரிய தம்மா !*

## திருப்பிறப்பு

*அணிக்கணி யான செல்வி, அகப்புறந் தூய நல்லாள்,*
*கணிக்கருங் கற்பின் மிக்காள், கருணையே புரியு நீராள்,*
*மணிக்கொடி யிடையாள் மேரி மாசறு வயிற்றில் வந்தான்,*

பணிக்குட லெடுத்த நாதன் பரிசுத்த சக்தி யாலே !

திருவுடை அபிர ஹாமின் சீர்பெறு மரபிற் பூத்தான்,
உருவுடை மதனன் போன்றான்; உள்ளத்தில் அன்பு மிக்கான்;
கருவுடைக் கன்னி தன்னைக் கடிமணம் புரிந்த நல்லோன்,
அருளுடை யோசேப் என்னும் அருங்கலைத் தச்ச னம்மா !

நங்கையுங் கணவ னாரும் நாசரத் தினிலே, தூய
மங்கல மனைய றத்தில் மனமொன்றி வாழு மெல்லை,
அங்கர சாளும் ஏரோ தரசனுஞ் சனத்தை எண்ண
நுங்களூர் செல்லீ ரென்று நூதன அறிக்கை விட்டான் !

பிள்ளையைச் சுமந்தாளோடும் பிறந்தவூர் பெத்தல் ஹாமை,
நள்ளிரா வினில்யோ சேப்பு நண்ணினான்; ஆங்கு மாந்தர்
எள்ளிடும் இடமி லாமல், எங்குமே நெருங்க வேறு
கொள்ளிடம் அற்றோர் மாட்டுத் தொழுவத்திற் குந்தி னானே !

மன்னுல கின்ப மெய்த, வானகம் புதுமீன் காட்ட,
உன்னத உணர்ச்சி யாலே உயிருளம் உவகை கொள்ள,
பன்னருங் கடவுள் வாக்கே பருவுடல் கொண்டு, மேரி
அன்னையின் அன்பு பொங்க வரதனும் அவத ரித்தான் !
பரத்தொளிர் பரமா னந்தம் பரிவுடன் கருணைத் தாயின்
கரத்தொளிர் மதியாய்ப் பொன்னின் கதிர்மணிச்சேயாய்க்காலை
சிரித்தலர் கமலம் பூத்த திருவடி வாகி, ஏசு
கிறித்தெனும் கனியாய்ப் பூவின் வரமெனக்கிடைத்ததம்மா !

இரவினைப் பகல்செய் மீனை வியந்திடும் இடையர் முன்னே,
மருவியோர் தூதன், ஞான வரதனின் வரவைக் கூறப்
பெருகிய வுவகை தூண்டப் பிள்ளையை விரைந்து கண்டுள்
உருகினார் வஞ்ச மில்லா உளத்தினார்க் கருளுண் டாமே !

கண்டனர் புதுமீன் மூன்று காட்சிசேர் முனிவர்; உண்மை
விண்டனர், ஏரோ தின்பால் விரைந்தனர்; வேந்தே யுன்றன்
மண்டலத் துதித்த யூத மன்னனை ஈன்ற பேறு,
கொண்டுநல் லூரின் பேரைக் கூறெனக் குறிப்பிட் டாரே !

மங்கலச் செய்தி யென்று மாமுனி வோர்கள் கேட்கப்
பொங்கிய பொறாமை யேறி நூல்களைப் புரட்டிப் பார்த்தே,
அங்கவன் பெத்தல் ஹாமில் வருவனென்றறிவோம்; நீவிர்
இங்குடன் கண்டு வாரீர் என்றனன் இகலு ளானே !

மாணுறு முனிவர் சென்று, வழியினில் இடையர் அன்பு
பேணுறத் தெய்வச் சேயின் பிறப்பிடம் அறிந்து வந்தே,
நாணுறு மேரி தாங்கும் ஞானமாச் சோதி தன்னைக்
காணுறு கண்ணும் உள்ளுங் களித்திடக் கண்டா ரம்மா !

"உய்யுமிவ் வுலகம். உண்மை ஒளியினைக் கண்டோம்" என்றே
செய்யமா மணியைப் போற்றிச் சேமங்கள் சொல்லிப் போந்த
துய்யமா முனிவர் தம்மைத் தூதனும் எச்ச ரிக்க,
வெய்யமா வேந்தைத் தப்பி வேறொரு வழியே போனார்.

இகம்புகழ் ஏசுக்றிஸ்து எனும்பெயர் விளங்கப் பெற்றோர்,
மகவினைக் கொஞ்சும் போது, மண் வெறி கொண்ட மன்னன்,
இகலுறு கொலைஞர் தம்மை ஏவினான் ; "எகிப்தி னுக்கே,
புகல்பெறச் செல்மின்" என்றோர் தூதனும் புகன்றானம்மா !

*இளந்தளிர்ச் சேயைத் தாய்முன் இரத்தவா ளரக்கர் வந்து*
*பிளந்துயிர் குடிக்கு முன்பே, பெற்றவர் பிழைத்தோம் என்றே,*
*அளந்தடி வைத்துத் தப்பி, எகிப்தினை யடைந்தார்; ஆங்கே*
*வளர்ந்தனன் ஏசு நாதன் வளர் பிறை வட்டம் போலே !*
*முனிவருந் திரும்பவில்லை ! முதியவர் சொன்ன சேயின்*
*தனியிடந் தேடும் போதே பெத்தல்ஹாம் சவலைக்கெல்லாம்*
*சனிதொடர்ந்ததுவே யென்று தருமமும் நடுங்கிற்றம்மா !*
*கனிவுள தாய்மார் அஞ்சக் கடுங்குர லெடுத்தான் பாவி !*

*ஆற்றிலன்; சேயை நெஞ்சில் அனலுக நினைத்தான்; ஊழிக்*
*காற்றென உயிர்த்தான், கண்கள் கனற்பொறி பறக்கக் கையிற்*
*சீற்றவாள் உயர்த்தி, எட்டுத் திசைகளுங் கிடுகி டுக்கக்*
*கூற்றினுங் கொடிய ரான கொலைஞரைக் கூவி னானே !*

*ஒளிந்துளான் சேயுட் சேயாய் ஒன்னலன்; எனது நெஞ்சங்*
*குளிர்ந்திடப் பெற்றோர் நெஞ்சங் கொதித்திட, வாளை வீசி,*
*இளந்தளிர்ச் சேய்க ளெல்லாம் இறந்திடச் செய்மின்; உள்ளே*
*பிளந்தன்றோ பலாவின் கெட்ட சுளையினைப் பிரித்த லாமே!*

*மின்னின கொடிய வாட்கள்; வெடித்தன வெறியர் சொற்கள்;*
*அன்னையர் கண்ணீர் சோக அருவிபோற் பொழிந்த தந்தோ !*
*இன்னிளம் சேய்கள் 'அம்மா' என்னுமுன் இரண்டு துண்டாய்ப்*
*பொன்னுடல் இரத்த மோடப் புழுதியிற் புரண்ட தம்மா !*

*பிறந்தநம் பகைவன் அந்தப் பெத்தல்ஹாம் சேய்க ளோடும்,*
*இறந்தனன் என்று பொங்கும் கொடியவன் இறுமாப்பெல்லாம்?*
*பறந்திடக் கால வேடன் பகழியைத் தொடுத்தான், அச்சந்*
*துறந்தனர் நல்லோர்; ஆவி துறந்தனன் ஏரோ தம்மா !*

*தனந்தருஞ் செருக்கும், இந்தத் தாரணி நமதே யென்னும்*
*மனந்தருஞ் செருக்கும், ஆசை மாதரின் செருக்கும், போற்றும்*
*இனந்தருஞ் செருக்கும், எம்மின் இல்லெனும் செருக்கும்,ஊனின்*
*கனந்தருஞ் செருக்கும், எல்லாங் காலன்முன் சருக்கி மண்ணாம்!*

**நசரேன்**

*பொன்றி னான்புவிப் பொறையெனப் போந்த மாபாவி,*
*என்று கேட்டலும், இறைவனின் செயலென மகிழ்ந்தே,*
*அன்றெ கிப்தினிற் கரந்துறை அருந்தவம் அனையார்,*
*இன்று நாசரத் தெழுந்தனர் ஏசுவைச் சுமந்தே !*

*தேசுலாம்இயற் காட்சியிற், செழுமனந் தோய்ந்தே,*
*யோசப் பாற்றிடுந் தச்சினுக் குடனிருந் துதவி,*
*ஏசு நாதனும் இளந்தொழி லாளியாய்ப் பயின்றான்,*
*மாசி லாதவன் பள்ளியின் கல்வியும் வாய்ந்தான் !*

*அறிஞர் போற்றிடும் உள்ளறி வமைந்தநல் லறவோன்*
*பெறலரும் உயர் பெருந்தகைக் குணநலம் பெற்றோன்,*
*பொறையும் வாய்மையும் புண்ணிய வாழ்க்கையும் பூண்டான்,*
*இறைவன் மைந்தனென் றுலகெலாம் உணர்ந்திட எழுந்தோன்.*

*பெற்ற வர்க்குறு கடமையும் பிரியமும் உடையோன்,*
*உற்ற வர்தமை உபசரித் திடும்கனி வுளத்தோன்,*
*மற்ற வர்தமைத் தானென மதித்திடு மதியோன்,*
*கற்ற வர்க்கரி தாகிய கருணையின் கடலோன் !*

பொங்கு யார்தன்மா நதிக்கரை போந்தவோர் பகலில்,
அங்கு வந்தனன் அருள்வர வுரைத்திடும் யோவான் !
சங்கை யற்றநற் சனத்திரள் பணிந்திடுஞ் சாந்தன்,
மங்க ளப்புன லாட்டிடு மாசறு மனத்தான்.

வருந்து மின்பிழை, வழியினைத் துலக்குமின், ஞான
விருந்து கொண்டுறுந் தெய்விக வேந்தனைப் பணிமின்;
மருந்தவன் மணி மொழியென மந்திர கானம்,
திருந்தச் செய்திடுந் தூதன்முன் திருமகன் பணிந்தான் !

"ஞானத் தீம்புனல் ஆட்டுக" என்றலு நாதன்,
"வானத் தீங்கதிர் நீ" யென வணங்கியோ வானும்,
ஞானத் தீம்புன லாட்டிய நற்பொழு தாங்கு
வானத் தின்பம்வந் திறங்கிற்றோர் மணிப்புறா எனவே !

நதி சிலிர்த்தது, நானிலஞ் சிலிர்த்தது, மாந்தர்
துதி சிலிர்த்தது, தூண்டிய உவகையி னாலே
புதிய வாழ்க்கையின் புண்ணியஞ் சிலிர்த்தது, நாதன்
மதிசி லிர்த்தது சிலிர்த்தது வானமும் வாழ்த்தி !

திருக்கு மாரனே தேவனென் றெண்டிசை யதிர,
உருக்க மாயொரு வாணியும் உதித்தது; யூதர்
வருக்கும் உய்ந்ததென் றருட்பெறுந் தூதனும் வாழ்த்தி,
அருக்கன் போலொளிர் ஏசுவை அடிபணிந் தகன்றான் !

தந்தை யாகிய தயாபரன் அருளினால், உலகில்
வந்த காரியம் யாதென வரதனும் அறிந்தே,
அந்த மெய்வினைக் கறிவொளி பெற்றிடக் கருதி,
முந்து சாதனஞ் செய்தனன் மோகத்தை முனிந்தே !

நாடி ழந்தயல் ஆட்சியில் யூதரிந் நாளில்,
பீடி ழந்துதம் பிறவியின் பயன்களை யிழந்தே,
காடி ருந்திடும் விலங்கெனக் காமத்தின் வெறியால்,
வாடி நின்றனர், மானிடத் தருமமும் வறண்டே !

கொலையும் கொள்ளையுங் குடியுடன் கூத்தியர் வீசும்
வலையு மானிடர் மனத்தையும் இனத்தையும் கெடுத்தே,
நிலைகு லைத்திடு நிலைமையை நேருறக் கண்டே,
உலகம் உய்வழி தேடினான் உட்குவிந் திருந்தே !

## விரதம்

உனதுளப் படியே செய்வாம் உயர்பரம் பொருளே யென்று
தனதெலாம் கடவுட் கீந்து, தனித்தொரு பற்று மின்றி,
மனதினை யடக்கி வென்ற மாசிலாக் கிறிஸ்து நாதன்,
வினையுடல் எடுத்த நன்மை விளைந்திட விரதங் கொண்டான்.

மறவழி விலகி, மாந்தர் மாசிலாத் தூய ராகி,
அறவழி பயிலச் செய்யும் ஆற்றலைப் பெறவே, காட்டில்,
உறையுநாற் பதுநாள், ஊணும் உறக்கமு மின்றி ஐயன்,
பொறைவளர் தவம்பு ரிந்து, புண்ணியப் பணியிற் புக்கான்.

அடர்வனத் தவத்தி னாலே அடங்கறு பசிகொண் டுற்ற
திடம்பெறு மனத்தி னானைத் திடீரென மடக்க வேண்டி,
விடங்கொளுந் தீய சாத்தான் விரைந்துவந் திழிவு செய்து,
கடவுளின் மைந்த னேநீ கற்களைப் புசியென் றானே.

"கற்களை வேண்டேன் ; ரொட்டி தன்னினுங் கடவுளின்பச்

சொற்களை யுண்பேன்; மாந்தர் சோற்றுக்கே வாழ்வ தில்லை.
கற்பன கற்று நின்று, கருணையின் விளக்கங் காண்பேன்.
அற்பனே அறிதி" என்றான் அன்புடை வள்ளல் ஆங்கே !

நீங்கறு சாத்தான் அந்த நிமலனை வாரிச் சென்றே
ஓங்குயர் கோபு ரத்தின் உச்சியில் ஏற்றி, "உன்னைத்
தாங்கிறை பேரைச் சொல்லித் தா"வெனச் சாத்தான் ஏசு
"ஈங்குட லாசை யில்லை ஏகுபின் பேயே" என்றான்,

அயர்வறு சாத்தான் மீண்டும் ஐயனை ஆசை காட்டி,
உயர்மலை முடியி லேற்றி, "உலகெலாந் தருவேன்" என்றான்;
"வியனுல காசை காட்டும் வீணவுன் சூழ்ச்சி யிங்கே
பயனிலை செல்பின் பேயே; பயமிலை" யென்றான் யோகி !
பொன்னிலு மயங்கான்; பூவின் பொருளிலு மயங்கான்; முன்னே
புன்னகை காட்டும் பெண்ணின் பொய்யழ கிலுமயங்கான்,
அன்னிய மாயம் வீசுந் தந்திர வலைக்கும் அஞ்சான்—
தன்னைத்தான் கண்ட யோகி, சத்திய வேதந் தந்தான்.

மல்குபே ராசை காட்டி, மயக்கிடும் பேயை நோக்கிச்
"செல்கபின் செல்க" வென்றே சீரியன் வெருட்டத் தீயன்,
பல்கிய பொறாமை கொண்டு, பாரகர் மனதிற் புக்கு,
நல்கிய துயரைப் பின்பு நவின்றிடக் கேட்பீ ரன்றே !

எண்ணறு நன்மை செய்யும் இன்சொலா ரேனுந் தூய
புண்ணியப் புலவ ரேனும், பொதுநலத் தொண்ட ரேனும்,
கண்ணிய முனிவ ரேனுங் கடைக்குண கசட ராலே
புண்ணுறச் செய்யுந் தீய பொறாமையைப் பிழைப்ப துண்டோ?

நசைதரு செல்வ வாழ்க்கை நாடக மெல்லாம் ஆடி,
வசைதருங் கனவு போல மறையுமென் றறிந்த ஞானி,
இசைதரும் புகழி னுக்கும் இன்னல்செய் பகைவ ருக்கும்,
அசைவுறக் கலங்கி டாமல் அருட்பணி புரிந்தான் மன்னோ !

இறைவனின் அருளார் மைந்தன், வருகையை இயம்பி னோனைச்
சிறையினில் அடைத்தும், வெய்ய சித்திர வதைகள் செய்தும்,
பறையடித் தேசு தன்னைப் பகைவர்கள் ஏசி நின்றும்,
குறைவறத் தருமத் தந்தை குறித்ததைச் செய்தான் அன்னோன்.

"வருந்துமின் பிழைகள்! இன்ப வானர சுற்ற" தென்றே
திருந்துற மொழிந்து, நான்கு திசையிலுந்திரிந்தான் சொல்லைப்
பெருந்தகை யெளியர் கேட்டுப் பின்பற்ற முன்வந் தார்கள்.
அருந்திரு வாள ராகும் அன்பரின் பெயரைக் கேளீர்:—

பேதுரு யோவான் மத்தாய், பெர்தலோ மியன், ஜேம்ஸ்ஆந்த்ரூ
யூதசு, தாமன், பில்லிப், சீமன், தியோடி யூஸும்
மேதினி யாசை யெல்லாம் விட்டருட் குருவின் பின்னே,
வாதறச் சென்றார் இந்த வஞ்சமில் வணிக ரம்மா !

நற்றவக் குருவும், தூய நன்னெறி யொழுக்கங் காட்டிச்
சுற்றிலும் அன்பு மார்க்கஞ் சொல்லுக வென்று தூண்டிப்
பற்றுத லுள்ள சீடர், பணியினை வகுத்த ளித்து,
மற்றவன் ஊரைச் சுற்றி மன்பதைக் குபதே சித்தான் !

பிணியிடர் களைந்து, மாயப் பேய்களை ஓட்டி, நல்ல
பணிகளைப் புரிந்து, மாந்தர் பதம்பெற வுதவி செய்தே,
குணமலை கலீலி மேவுங் குன்றின்மேல் விளங்கிச் சொன்ன

கனிமொழி யொன்றே வேதக் கனியெனப் போற்ற லாமே !

வாழிய எளியோர் வானர சாள்வார்,
மனநிறை வெய்துவார் அறவோர்,
வாழிய தூயர் இறைவனைக் காண்பார்,
வையகம் புரப்பர்சா துக்கள் ;
வாழிய வருந்துந் தியாகிகள்; அவர்க்கே
வானர சாட்சியும் ஆகும்.
வாழிநல் லருளார் வருத்தந்தீர்ந் திருப்பார்,
வாழியுள் ளன்பரின் வாழ்வே !

புல்லியல் மாந்தர் பொறாமையாற் செய்யும்
புண்களைப் பொறுத்தவர்க் கமைதி !
அல்லியின் அழகும், பறவையின் உணவும்,
அளித்தநம் அப்பனை நினைந்தே,
தொல்லையி லாத மனத்துற வுடனே
தொண்டுகள் செய்பவர்க் கமைதி !
எல்லையில் லாத பேரின்ப வானை
இதயத்திற் கண்டவர்க் கமைதி !

விரும்பி யன்பர்கள் வித்தகன் வேதத்தைக் கேட்கக்
கரும்பை மொய்த்திடும் எறும்பெனக் காதலோ டணைந்தார்;
அரும்ப சிக்குறும் அன்னமென் றறமொழி யுவந்தார்.
இரும்பு நெஞ்சினர் இனுமினு மிகலினை வளர்த்தார்.

குருடர்கள் செவிடர் ஊமர், குட்டர்கள், பேயர் நோயர்,
தெருவினில் ஐயன் வந்து தீண்டவும் வருத்தந் தீர்ந்தார்.
செருமிகு புயலுஞ் சாந்தஞ் சேர்ந்தடங் கியதைக் கண்டார்.
அருளூறு சக்தி மானுக் கரியதிவ் வுலகி லென்னே !

கள்ளுண்ட காமப் பித்தன், காவலன் ஏரோ தென்பான்,
கிள்ளினான் யோவான் சென்னி; கேட்டதை வருந்தி ஏசு,
உள்ளன்ப ருடனே காட்டில் உறைந்தனன் விசனந் தீர்க்கும்
வள்ளலை யெண்ணி யெண்ணி வடித்தனன் இரக்கக் கண்ணீர்!

அத்ததி அப்பம் ஐந்தை அன்பரின் பசிநோய் தீரச்
சித்தினாற் பெருக்கி யீந்தான் ! சீடரைத் துணிவு றுத்தித்
தத்துவ மெல்லாஞ் சொல்லிச் சமரசச் சாந்த மூட்டி,
பத்தியாற் சேவை செய்யப் பணித்தனன் ஏசு நாதன் !
"ஆணவ மின்றி மண்ணின் ஆசைக ளின்றி, என்றும்
ஊனுடைக் கவலை யின்றி, உலகினை அஞ்சி டாமல்,
வீணிடம் பங்க ளின்றி, மெய்வழி நடந்து காட்டி,
மாணுறு தொண்டு செய்ய மகிழ்வுடன் செல்மின்" என்றான்.

என்ற கட்டளை ஏந்திப் பலதிசை
சென்று சீடர் திருப்பணி செய்தனர்.
நன்று நாதனு நாட்டினைச் சுற்றியே,
என்று முள்ள எரூசல மேகினான்.

## எரூசலத்தில்

ஈசன் ஆலயம் என்பதை எண்ணிலார்
காசு வட்டிக் கறிக்கடை யாக்கினார்—
மோசச் செல்வர்கள் மொய்க்கும் எரூசலம்,
ஏசு நாதன் மொழியை எதிர்த்ததே !

அருளி னப்பன் அமர்ந்தநல் லாலயம்,
இருளின் பேய்கள் இழிநட மாடிடத்
திருவ ழிக்குந் திருட்டுப் பதர்களா !
கருவ ழித்திடும் காமப் பிசாசுகாள் !

*அடியர் கூடிடும் ஆலயம் ஆணவத்*
*தடியர் கூடிடுஞ் சந்தையென் றானதே,*
*குடியர், கூத்தியர், குண்டர், கடுவட்டிக்*
*கடையர் கூடுங் கடைநில மாயதே !*

*வெற்று ரைகளும் வீண்மயக் காடலும்,*
*கற்றுங் கண்ணறு காம நடங்களும்,*
*சற்றுந் தாங்கிலன், சத்திய வீரனே,*
*குற்றங் குற்றமென் றேகுறித் தானரோ !*

### பாரகர் சீற்றம்

*ஈன வெஞ்சின மேறிய வஞ்சகர்*
*போன போக்கில் வினாக்கள் புனைந்தனர்;*
*ஞான மாமணி சொல்லு நயமொழி*
*தேனின் மிக்கும், கசந்ததத் தீயர்க்கே !*

*புனித னென்றனர் புந்தி தெளிந்தவர்;*
*இனிய னென்றனர் ஏசுவை நல்லவர்;*
*மனித னில்லை மனிதரைக் கொள்ளைகொள்*
*சனிய னென்றனர் தாமதப் பாரகர் !*

*தூறு பேசினர் தூண்டும் பொறாமையால்,*
*ஊறு செய்தனர், உட்பகைத் தீயெழத்*
*தாறு மாறெனத் தாக்கினர், நூக்கினார்,*
*கூறினார் கொடுங் கோள்கள் அரசன்பால் !*

### அரசன் முன்

*தச்சர்குலக் கன்னி மகன் தந்தையற வந்தோன்,*
*மெச்சுமுனை ஏளனஞ்செய் ஏழையிவன் வேந்தே !*
*அச்சமற யூதர்பதி தானெனவே ஆர்த்தான்;*
*சிச்சியிவன் செய்கைகளைச் செப்புவதுந் தீதே !*

*மனத்திறல் படைத்தவன், மறுத்தனன் உனைத்தான்,*
*கனத்திறல் படைத்தபுவிக் காவலனென் கின்றான் !*
*தனத்திறல் படைத்தவர் சருப்பமெனச் சொன்னான்,*
*இனித்த மொழி யாலிவன் புரட்சிக ளிழைத்தான்.*

*வாய்மை யெனு மாயவலை மாந்தரிடை வீசி*
*நாயடியர் கூட்டமொடு நாடறியச் செல்வான்.*
*பேயனிவன் வந்தவுடன் பேய்களு நடுங்கும்,*
*போயதிசை யெங்கிலும் புகைந்தது புரட்சி !*

*தேசு லாவுந் திருமுகச் சீருளான்,*
*பேசக் கன்மனம் பின்வருஞ் செஞ்சொலான்,*
*காசி னிக்கிதங் காட்டுமிக் கள்ளனே*
*ஏசு க்றிஸ்துவென் றேத்தினர் பாமரர் !*

*சீட ரோடவன் சேர்ந்துறைச் சூழலைத்*
*தேடிக் கட்டிச் சிறையிடின் அல்லது*
*வாடு முன்னறம், வாடுமுன் னாட்சியும்,*
*நாடும் போமிந்த நாடறி வேடனால்.*

*சள்ளை யின்னமுஞ் சாற்றிடு முன்னவன்,*
*கொள்ளை கொண்டவர் கூட்டம் பெருகுமால்.*
*வெள்ளை யாக விளம்பினம் வேந்தனே,*
*கள்ளனைக் கடுங் காவலில் வைத்திடாய் !*

*ஆத்தி ரப்பகை யாளர் சொற் கேட்டதும்,*
*தீத்தண லெனச் செஞ்சினங் கொண்டனன்,*
*"கோத்துக் கட்டிக் கொணருக" வென்றனன்,*
*ஏத்தி வேந்தனை ஏகினர் பாரகர் !*

*கொள்ளி போலக் கொதிசினப் பாரகர்,*
*கள்ளச் சீடன்யூ தாசின் கரத்திலே,*
*வெள்ளி முப்பது தந்து விமலனை,*
*அள்ளித் தங்கை யளித்திடச் செய்தனர் !*

## இறுதி யுண்டி

*தறுக ணாளர்செய் தந்திரச் சூழ்ச்சியை*
*மறுக ணந்தன் மனத்தி லறிந்தெலாம்*
*உறுக மண்ணி லுறுவதென் றேசுவும்*
*இறுதி யுண்டி யிராவினிற் கொண்டனன் !*

*பர பரப்புடன் பன்னிரு சீடரும்,*
*கரமுங் கண்ணுங் கலந்துரை பேசிட*
*விரைவி லுண்டி நடந்திடும் வேளையில்,*
*உரைசெய்தான் உரை எட்டரும் உத்தமன் :—*

*"பன்முறை பகை பேசிய பாரகர்,*
*இம்மு றைவந் தெடுத்துச்சென் றென்னையே*
*வெம் முறைசெய வேண்டி வருகின்றார்—*
*நம்முளே யொரு நாத்திகன் வஞ்சத்தால்!"*

*கள்ள நெஞ்சங் களுக்கென யூதசும்,*
*"வள்ளலே அந்த வஞ்சன்யா னோ" வென*
*மெள்ள ஆமென வித்தகன், மாணவர்*
*உள்ளம் விம்மி யுகுத்தனர் புன்கணீர்!*

*"கோழி கூவுமுன் பேதுரு கொட்புற்றே*
*ஏழை யேனை மறுத்திழி வாக்குவான்,*
*கோழைச் சீடர் குணுக்கென ஓடுவார்,*
*வாழும் என்னுடன் மாசறு வாய்மையே !*

*தூய்மை யான துறவுடன், அன்புடன்,*
*வாய்மை பேசி வளர்நலஞ் செய்யினும்,*
*தீயர் என்னைச் சிலுவையில் ஏற்றியே*
*மாயக் கொல்லுவர் ; மாயம் பலிக்குமோ?*

*மூன்று நாளில் எழுந்துமுன் போலவே,*
*ஆன்ற தந்தை யருகினிற் செல்லுவேன்,*
*ஊன்றும் பின்என துண்மை; புதுயுகம்*
*தோன்று " மென்று தொழுதனன் யோகியே !*
*அன்னையின் அன்புடை அப்பனே ஒப்பிலாய்,*
*உன்னதென் ஆவியும் யாக்கையும் உன்னதே !*
*உன்னதே எண்ணமும் உன்னதே செய்கையும்,*
*உன்சரண் உன்சரண் உன்மன மாகவே !*

*என்னகம் என்புறம் என்னுயிர்ப் பானவா !*
*மன்னரின் மன்னவா, மாசிலாக் காதலால்*
*உன்னையே நம்பினேன்; உலகையாள் ஒருவனே*
*என்னநீ செய்யினும் எளியனுக் கினியதே !*

*அன்பருக் கன்பனே அன்பிலா ருள்ளுநீ*
*அன்புருக் கொண்டுளாய்; ஆருயிர்க் காவியே,*

*இன்பமுந் துன்பமும் ஏற்றமும் தாழ்வுமுன்*
*மென்பணிப் பாதையின் மேடுபள் ளங்களே !*

*புன்புலாற் புற்புதம் போலுமிப் பொய்யுடல்,*
*உன்பணிக் கேபலி யுற்றிடின் உய்குவேன் !*
*அன்பணிந் துன்னிடம் ஆவியாய் வாழுவேன் !*
*என்பரத் தந்தையுன் இச்சையே வெல்கவே !*

### பகைவர் கொடுமை

*என்றுதி யானிக்கும் இரவில் ஒற்றர்கள்,*
*குன்றுறு காட்டினிற் குலவிச் சூழ்ந்தனர்;*
*தன்றிருக் குருவினைத் தழுவிக் காட்டினான்*
*நன்றியி லாநய வஞ்ச நஞ்சனே !*

*குற்றமில் பசுவினைக் குறித்த வேங்கைபோற்*
*சுற்றினர் சாதுவைத் துன்பப் பாதகர்;*
*தெற்றென வாளினைச் சீமன் வீசியே,*
*செற்றனன் ஒருவனைச் சிங்கம் போலவே !*

*ஒன்னலர் உயிரினை யுண்க யானென்றே*
*இன்னொரு சீடனும் எடுக்க வாளினை,*
*கன்மன முருகிடுங் கருணைச் செம்மலும்,*
*அன்னவன் கைகளை அமர்த்திக் கூறினான்:—*

### இறுதி மொழி

*"என்றென துடலுயிர் ஈசன் ஆணையால்,*
*நன்றுல கின்பணி நாடி வந்ததோ,*
*அன்றென தனைத்தையும் அவன்கை யீந்தனன்,*
*இன்றிவர் இழைத்ததும் இறைவன் இச்சையே !*

*எந்தையின் கட்டளைக் கிரத்த மின்றுநான்*
*சிந்திடுஞ் செயலிலும் சிறந்த தொன்றுண்டோ?*
*வந்தது வாய்மையை வாய்மை யாக்கியே,*
*சந்ததம் வாழ்ந்திடுந் தருணம் அன்பரே !*

*சாவெனப் படுவது சட்டை மாற்றமே.*
*தேவிய லாகிய தேகி தானென்பார்,*
*ஆவியை அச்சத்திற் கடிமை செய்வரோ?*
*பூவெலாம் அதற்கிணை பொருந்த லாகுமோ?*

*ஒன்னலர் இடும்பைகள் ஒறுக்கு மட்டுமே !*
*மின்னலைப் போலுடன் மிளிரு மட்டுமே !*
*புன்னகை யுடனதைப் பொறுத்த புண்ணியன்,*
*மன்னுயிர் நெஞ்சிலே மன்னி வாழ்வனே !*

*ஆதலால் உண்மையுள் ளறிந்த தூயவர்,*
*தீதறு மெய்யறந் திகழ வாழுவீர்.*
*மேதினிக் கன்பளி மேவு வீரெனப்*
*போதகன் புன்னகை பொலியப் போயினான் !*

### கொடியர் கொடுமை

*கன்மனக் கொடியவர் கருணை யற்றவர்,*
*ஒன்னலர் ஐயனை யூத சற்குரு*
*தன்னிடந் தந்ததும், தருக்க ரீதியில்*
*அன்னவன் ஆயிரங் கேள்வி ஆர்த்தனன் !*

*சத்தியஞ் சொல்லிடுஞ் சாந்தத் தூதனைப்*
*பித்துறு வசைமொழி பிதற்றி வைதனர்*

மொத்தினர் பிய்த்தனர், முதுகி லேயறை
வைத்தனர் பாரகர் வஞ்சந் தீரவே.

பேதுரு மறுத்தான், இன்னோன் பெயரையும் அறியேன் என்று,
சாதுவை விட்டுச் சீடர் சங்கமுங் கலைந்த தம்மா !
பாதகப் பணத்தை வீசி யூதசும் பதறி மாய்ந்தான்.
தீதெலாம் பொறுத்தான் ஏசு; தேசத்தார் கொடுமை யென்னே!

கட்டுண்டு காபாவிற் கல்நெஞ்சர் துப்பிடவே கடுமையாகத்
திட்டுண்டு திருடனெனச் செப்புண்டு,திருவற்றசெல்வர்கையாற்
குட்டுண்டு, பொறையுண்டு, குரைகடற்கும் அமைதியினைக் குறித்த சாந்தன்,
பட்டுண்ட பாட்டினுக்குப் பஞ்சுபடும் பாடெந்தப் பங்கேயம்மா?

பொருளாசை வேதியரும் புலையாசைச் சதுசயரும்
புலிபோற் சூழ்ந்தே,
இருளாசை வழிமனத்தர், இறவாத திருவோனை
இணையி லானை,
அருளாசை கொண்டவனை அரசேயுன் ஆட்சிக்குப்
பகைவன் காணீர்
பொருளாசைப் பித்தனிவன் பொன்றுவதே புகழென்னப்
பொய்கள் சொன்னார் !

வைதார்கள் வாய்வரா வார்த்தையெலாஞ் சொல்லியிவன்
வஞ்ச னென்றே,
பெய்தார்கள் சொல்லம்பு. பெரும்பொறுமைப் பெரியோனைப்
பிடித்துத் தள்ளிச்
செய்தார்கள் அவமானஞ் சிலுவையிட்டுக் கொல்லுவதே
சிறந்த தென்று,
பொய்வாயர் மெய்யவனைப் பொன்பிலாத் தின்முன்னே
புகுத்தி னாரே !

## போன்ஸ்பிலாத்தன் முன்

உன்னதக் கலைகள் ஓங்கும் உரோமா புரியி னின்றும்,
பொன்னிறை யுதியா தன்னைப் புரந்திடப் போந்தாய் வாழி !
இன்னருன் முன்னே நிற்கும் எம்பெரும் பகைவ னாகும்
இன்னவன் ஏசு வென்னும் ஏழை, ஓர் தச்சன் பிள்ளை...

அன்னவன் வாய்நீட் டத்தால், அரவெனப் பழித்தான் எம்மை;
உன்னர சிகழ்ந்தான்; இந்த உலகெல்லாம் இவனே வென்று
தன்னர சாளு வானாம், தருவனாம் சுவர்க்க ராஜ்யம்,
என்னவோ உளறு கின்றான் இவனொரு புரட்சிக் காரன் !

நாமெனும் அகந்தை யாலே, நரருக்கு வானோ ராட்சி
சேமமா யீந்து காக்கும் தெய்வகு மார னேயாம்,
பாமரர் தம்மைப் பேச்சால், பகட்டினால் மயக்கு கின்றான்;
பூமியை ஆள வந்த புரவலன் முகத்தைப் பாரீர்;

கைபெறு வாயான், ஊரைக் கலக்கிடும் கலகச் சிங்கம்,
உய்வனேல் உயிரோ டின்னோன், உரோமரின் ஆட்சி யில்லை..
ஐயநின் அரசு வேண்டின், அரைக்கணந் தன்னில் இந்தப்
பொய்யனைச் சிலுவை யேற்றிப் பொன்றிட மடிப்பீர் என்றார்.

கண்ணறு பகைவ ரிந்தக் கற்பனைப் பொய்கள் சொல்லப்
புண்ணியன் முகத்தைப் பார்த்துப் பொந்தியோமலைத்துநின்றே
கண்ணிய மனைவிக் கிந்தக் கதையினைச் சொன்னான்; அன்னாள்,

எண்ணினாள் ஏசு நாதன் பக்கமே யியம்பி னாளே !

கண்ணினாற் கண்டேன் இந்தக் கடவுளார் குமரன் மாண்பைப்
புண்ணியன் இவனைப் பொய்யர் புரட்சியன் என்றார்! ஐய
திண்ணிய நீதி யாளர் சிலுவையிட் டிவனைக் காணார்...
விண்ணொளி மேனியானை விடுதலை செய்க வென்றாள் !

மெய்யினை யறிந்து வந்தே, வேதனை முகத்தில் ஏங்கக்
கைதவர் வாய டக்கிக் "கருணையைச் சிலுவை யேற்றேன்!
செய்வதைச் செய்வீர்; அந்தச் செயற்பய னறியேன்" என்றே
கையினைக் கழுவிச் சென்றான் கலங்கிய கவர்ன ராங்கே !

கூகுவென் றயோக்கி யர்கள் கூகைபோற் சத்த மிட்டார் !
சாகவே சிலுவை செய்யச் சம்மதந் தாரும் என்றார்;
ஓகோவென் றெக்க ளித்தார்; உரம்பெறக் கட்டித் தூக்கி
ஏகுவோம்; அன்றே லுன்னை எதிர்ப்ப மென் றிரைந்து நின்றார்.

பகையினன் அல்ல னென்று பரிவுடன் கவர்னர் மீண்டும்,
வகையுறச் சொல்ல யூதர், வாயினை யடையும்; இன்னான்
மிகைசெய்தான் மிதமாய்விட்டால், வேந்துனைமுனிவானென்றார்
பகவனை யவர்கை யீந்தும் பாடெனக் கவர்னர் சென்றான்.

**பகைவர் கொடுமை**

பச்சிளஞ் சேயைச் சூழ்ந்த படுகொலைப் பேய்கள் போன்றார்,
நச்சுறு பாம்பு போன்றார் நாதனைக் கொல்கோ தாவில்
கொச்சையாய்த் திட்டிக் கொட்டிக் கோதறு குளிர்மு கத்தில்
எச்சிலையுமிழ்ந்தார்; அந்தோ எண்ணிடின் உள்ளம் வேமே !

முண்முடி சூட்டினர் மூங்கி லீந்தனர்,
புண்படு மேனியிற் புனைந்து செவ்வுடை,
எண்கடந் தேசினர் "ஏசு மன்னனே
மண்ணினை யா"ளென வம்பர் வைதனர் !

துப்பினர் திருமுகந் தூய பொன்னுடல்
அப்பமாய் வீங்கிட அடித்துத் தொக்கினார்.
தப்பிய மட்டிலுந் தப்பி, ஐயனை
அப்புறஞ் சிலுவையில் அறைய முன்னின்றார் !

**சிலுவை யிடல்**

கோரப் புண்ணிற் குருதி யொழுகிடப்
பாரின் பாவம் பரிந்து சுமந்தநந்
தீரன் வெய்ய சிலுவையைத் தாங்கவே—
ஈரமற்றவர் ஏசி நகைத்தனர்.

சீலன், ஆண்டவன் சேயெனச் செப்பினாய்,
சித்து காட்டிச் செகத்தை மயக்கினாய்,
ஆல யத்தை இடித்தமைப் பேனென்றாய் !
அஞ்சிச் சாத்தா னடங்கிடச் செய்தனை,
ஞாலம் வானர சாட்சி நயந்திட
நான்வந் தேனென நல்லுரை சொல்லினை,
போலி நீயெனப் பொக்குளித் தந்தகோ !
புண்ணியனைச் சிலுவையிட் டாரம்மா !

திருக்கரங்களில் ஆணிகள், ஆணிகள் !
திருப்ப தங்களில் ஆணிகள், ஆணிகள் !

*திருப்புருவ நடுவினில் ஆணியே !*
*செய்ய மார்பில் அடித்தனர் ஆணியே !*
*இருப்பு நெஞ்சர் இளகிட வில்லையே !*
*இரத்த வெள்ளம் எழுந்து சிவந்துறு*
*நெறுப்ப லைகளை வீசிடக் கண்டவர்,*
*நீதி யில்லை யுலகினி லென்றனர்.*

*நெற்றிகை காலில் ஆணி புகுத்தியே நிமலன் றன்னை*
*மற்றிரு கள்வர் நாப்பண் மாட்டினார் சிலுவை யேற்றி,*
*சிற்றறி வாளர் நக்கார்; சிறந்தவன் "இறையே இன்னோர்*
*குற்றமென்றறியாச்செய்தார் குளிர்ந்துமன்னிப்பீர்!" என்றான்.*

*பெற்றதாய் மேரி சொந்தப் பிள்ளையின் இரத்தங் கண்டாள்;*
*வற்றறுந் துயரக் கண்ணீர் வடித்தனள்; வயிறு நொந்தாள்,*
*இற்றென உரைக்க வொண்ணா இன்னலால் மதிமயக்கம்*
*உற்றனள் ; "மகனே" என்றாள் உயிர்தடு மாறி வீழ்ந்தாள் !*

*கடவுளே கைவிட்டாயோ கடுமையாய்த் தாகங் கொண்டேன் !*
*விடுதலை...அப்பா உன்கை விடுத்தனன் ஆவி" யென்றான்...*
*கடவுளே தஞ்சம் காவாய் கருணையே என்று சோர்ந்தான்.*
*உடலசை யாது நின்றான் உயிரினை உலகிற் கீந்தான்.*
*மண்ணெலாங் கண்ணீர் வெள்ளம்; வானெலாம் துயர வாடை*
*புண்ணிலே எரி புகுந்தாற் போலுளம் வேகத் தொண்டர்,*
*கண்ணிலாக் காட்டுச் சேய்போற் கதறினார்; ஏசுநாதன்*
*புண்ணிய வுடலைப் பாறைப் பொந்தினில் அடக்கம் செய்தார்.*

*ஈன்ற தாயும் இனியநல் லன்பரும்,*
*சான்றுளோரு மகிழ்ந்திடச் சற்குரு*
*மூன்று நாட்கள் முடித்துயிர் பெற்றெதிர்*
*தோன்றி நல்லடி யார்க்கிவை சொல்லுவான்:—*

*"உண்மை யன்பர் உளத்தி லிருக்கிறேன் ;*
*எண்ணி யென்மொழி இப்புவி யெங்குமே,*
*நண்ணி நற்பணி நாட்டுமின்" என்றுடன்*
*விண்ண டைந்தனன் வித்தகச் சித்தனே !*

*கோதறு தாவீ தீன்ற குலமணிக் கொழுந்தே யென்கோ !*
*தீதெலாம் பொறுத்தி ரத்தஞ் சிந்திய தியாகி யென்கோ !*
*பூதலப் பலியாய்த் தன்னைச் சிலுவைசெய் புலவ னென்கோ !*
*போதஸத் குருவே யென்கோ! போற்றியுன் புனித வாழ்வே !*

*உன் பெய ராலே வாழ்வோம், உன்மொழி ஓதி நிற்போம்,*
*உன்னரு ளாலே நாங்கள் உலகிற்கு நலங்கள் செய்வோம்.*
*உன்னுதா ரணத்தைப் பற்றி உடல்பொருள் ஆவி யெல்லாம்,*
*தன்னல மில்லாத் தியாக சாதனைக் களிப்போம் ஐயா !*

*சிறுமைகள் செய்த தீயர் செத்துமண் ணானார்; என்றும்*
*பொறுமையைக் காத்த நீயே புண்ணியம் போல வாழ்ந்தாய்.*
*பிறவுயிர் தன்ன தென்று பேணுயர் வள்ளால், உண்மை*
*அறமுயர் விளக்கே உன்னை அடிபணிந் தன்புசெய்தோம்.*

*மாணுறு நல்லாரோடு மாக்தலீன் என்னும் பெண்ணும்,*
*காணுற வானிற் சென்று, கருத்தனு மறைந்த போது,*
*பூணுயர் அன்பி னாலே புண்ணியக் கீதம் பாடிச்*
*சேணுயர் பரலோகத்தின் அப்பனைச் சிந்தித் தாரே !*

ஆண்டவன் அருளை நம்பி, அகந்தையைச் சிலுவை யிட்டு,
மூண்டெழும் அன்பி னாலே மூதுல கெல்லாம் உய்ய
வேண்டிய பணிகள் செய்து, வித்தையும் தொழிலு நாட்டி
நீண்டிசை பெற்றார் தொண்டர் நிமலனின் பெயரி னாலே !

எத்தனை கல்வி மன்றம் ! எத்தனை தொழில கங்கள்,
எத்தனை மருந்துச் சாலை, எத்தனை திரும டங்கள்,
எத்தனை சர்ச்சி னங்கள், இரண்டுநூ றாண்டின் பின்னர் !
எத்தனை தொண்டர் கூட்டம் ஏசுவின் பேரால் அம்மா !

உள்ளத்தைப் பண்ப டுத்தி, உண்மையை நட்டு, ஞான
வெள்ளத்தைப் பாய்ச்சி யன்பு விரவிடும் எருவை யிட்டுக்
கள்ளத்தைப் போக்கி நல்ல கருணையைக் காத்து, மாந்தர்
விள்ளரும் ஆத்மா னந்த விண்கனி யுண்க மாதோ !

செய்யவன் ஏசு தாசன் செப்பிய கதையைக் கேட்டு
மெய்யுணர் வெய்தித் தூயன் விவிலிய வேதந் தேர்ந்தே,
வையகந் தன்னில் வானின் வளமைகள் எய்துந் தொண்டே
செய்தகு பணியாம் என்று சிந்தித்தான் பணியுஞ் செய்தான் !

## 11. பைபிள் படலம்

கல்வித் தாகங் கரையறக் கொண்டவன்,
சொல்லின் செல்வன், சுகவழி கண்டிடப்
பல் வழியிற் பயின்றிடுஞ் சாதகன்,
தொல் கிறிஸ்துவத் தூமறை தேறினான் !

எந்தை யீசனை யேத்தி யிதயத்தில்,
இந்தப் பூமி இறைவ னுறை வென்றே,
சிந்தை செய்து திருப்பணி யாற்றுவான்
பந்த மற்ற பரந்த உளத்தினான் !

இத்த கைய விமலனை ஏசுவின்
பத்தர் சீரிய பாதிரி யாக்கவே,
தத்தஞ் சர்ச்சினிற் சார்கென நித்தியம்,
நத்தி வந்து நயவுரை பேசினார்.

எனதுன தெனும் ஏட்டிக்குப் போட்டியால்,
மனிதரை விலை யாடிடு மாயத்தால்
மனதி லாத வலுமத மாற்றத்தால்
புனித மற்றன போலி மதங்களே.

அறிந்து வாழ்திற னற்ற கிறித்துவர்,
பிரிந்து வாழும் பிழைகளை ஓர்தினம்,
தெரிந்த சுத்தன் சிதைவறச் செப்பினான்;
புரிந்தி டாதினும் போர்கள் வலுத்தவே !
ஒரு மதத்தினர் ஓர்குரு மாணவர்,
ஒரு பயிபிளை ஓதிடும் உள்ளத்தார்,
இருபது வகைக் கோயில் எழுப்பியே,
பெருமை பேசிப் பெருஞ்சமர் செய்தனர்.

ஆளை யாள் அவ மானங்கள் செய்தனர்,
நீளத் தீயில் எறிந்துடல் நீற்றினார்,
வாளைத் தீட்டி வதைத்தனர்; இன்னொரு
நாளைச் சம்பவ மெண்ணி நடுங்கினார்.

ஒருவரை யொருவர் ஒடுக்கப் பார்த்தார்,

ஒருவரை யொருவர் கெடுக்கப் பார்த்தார்.
பொறாமையும், போட்டிப் புகைச்சலும் எழுந்து,
சாந்த முரைத்த சற்குரு பெயரால்,
மதங்கள் பேசி, மதங்களி னுள்ளே
கட்சிகள் பேசிக் கலகமிட் டாரே.
நடையுடைப் பாவனை நானா விதமாய்,
மனிதனை மனிதன் மனிதனாய் மதியான்;
எனதுன தென்னும் இறுமாப் போங்கி,
தத்துவச் சண்டையும், புத்தகச் சண்டையும்,
வாயைப் பெருக்கும் கோயிற் சண்டையும்,
வளர்ந்து வளர்ந்து வாழ்வைக் கெடுத்துத்
தடிமுதல் பறக்கும் வெடிவரைக் கிளம்பி
மானிட வாழ்வை மற்களஞ் செய்த
கொடுமையை யெண்ணிக் கொதிக்கும் சுத்தன்முன்,
கிறிஸ்து புரியிற் கிளர்ந்த கட்சிகள்
விரைந்து நடுநிலை வேண்டிநின் றனவே;
"எமது சர்ச்சே யினிதெனச் சொல்லும்;
தலையில் வைத்துத் தாங்குவோம்" என்றார்
"மேரியை வணங்கா விராத்தியன் வீழ்க !
அருவே கடவுள்; அன்பே தொழுகை !
உருவே கடவுள்; குருவே தெய்வம்.
நீட்சி சொல்வதே ஆட்சிக் கினிதாம்.
பணத்தைத் தந்தால் பாபமன் னிப்பு.
கிண்ணாமி வைத்தால் விண்ணின்ப மெய்தும் !
உருவைத் தொழுபவன் உணர்விலா மடையன் !
புரட்டும் வேண்டாம் போலியும் வேண்டாம் !
எம்மைத் தவிர யாவரும் மடையர்,
சர்ச்சும் வேண்டோம் சர்ச்சையும் வேண்டோம்,
ஆகா யத்தை அண்ணாந்து பார்த்துக்
கண்ணை மூடிக் கடவுளே என்றால்
எல்லாஞ் சரிதான், இன்ப முதிக்கும்...
எம்மை வைதால் எரியிட் டழிப்போம்,
பழித்தால் எம்மைப் படுகொலை செய்வோம்.
அடுவோம், சுடுவோம், படுவீர் கவனம்.........

* * * *

என்றிவ் வாறே இகல்வினை பேசி
வாயுங் கையும் வம்பு வளர்ப்பதைப்
புனிதன் கண்டு "பொறுமை பொறுமை !
ஐந்து நிமிடம் அமைதி யாக
உட்குவிந் திருமின் உண்மை உதிக்கும்...."
என்றான் ; மௌனமாய் இருந்தனர் கலகர்.
புன்னகை நிரம்பிய பூமுகங் காட்டி,
இதுவே பைபிள் என்றிசைத்தானே.

## பைபிள் விளக்கம்

ஆண்டவன் சேய்காள், அன்பையே சொன்ன
ஏசு நாதரின் மாசிலா மணிகாள் !
அடியேன் உங்கள் ஆதர வாலே,
பரம பிதாவின் பண்பையும் அறிந்தேன்;
பைபிளின் கருத்தைப் பழகிநன் றறிந்தேன்,
தியாக குருவின் திருவுள மறிந்தேன்.
அறிந்ததைச் சொல்வேன் அமைதியாய்க் கேளீர்:—

* * * *

செருக்கும் இடம்பமும் செல்வத் திமிரும்,

ஆத்திகம் போன்ற நாத்திகத் தடிப்பும்,
கொண்ட தீயரைக் குலமுடன் மாற்றி,
அன்புப் பொறுமையால் அறிவுரை சொல்லி,
அறவழி நடத்தி "ஆண்டவன் ஒருவனே,
வணங்கத் தக்கவன் ; இணங்கி நின்றவன்
அருளைப் பெறுதலே பொருளெனச் சொல்லவே
ஏசுநாதர் இங்கெழுந்தாரே.
தன்னுண் மைக்குத் தனைப்பலி யீந்தார்.
ஆயினும் அவர்தம் அருமைப் பெயரால்,
சமய வாதம் சாற்றவே யில்லை.
யூதராய்ப் பிறந்தவர் யூதராய் இறந்தார்.
சிலுவையில் இறந்த சேசுவின் சீடரும்,
ஒருபேச் சின்றி ஓடி யொளிந்தார்.
ஏசுவென் றியம்பினும் எதிரிகள் ஒறுப்பார்.
கிறிஸ்து மதமெனக் கிளர்ந்த கதையே
வியப்பெனக் கூறுவர் வித்தக ரெல்லாம்.
பீடரும் பாலும், பிலிப்பும் ஸ்டீபனும்,
ஜேம்சும் ஆர்வத் தீயுடன் எழுந்தே,
ஏசு நாதரின் தேசுறு வாழ்வை
மக்களுக் கோதினர், மந்திரம் அமைத்தார்,
முதலில் யூத முறைப்படி தொழுதனர்.
பெருநாள் வருந்திய பிறகே அன்பர்,
கிறிஸ்துவின் பெயரால் கிறிஸ்து மதமென
நாட்டினார்; அவரை வாட்டினார் அரசர் !
ஆதி கிறிஸ்துவர் அரசர் கொடுமையால்,
கல்லெறி பட்டும், கசையடி பட்டும்,
தூக்கி லேறியும் துண்டுதுண் டாகி,
சிங்கம் உண்ணச் சேதப் பட்டும்,
வாளுந் தீயும் வதைப்பதைப் பொறுத்தும்,
கிறிஸ்து சமயம் கிளர்ந்திடச் செய்தார்.
சிலுவைக் காலம் சென்றபிற் காலமே,
ஏசுவின் கதையும் பேசிய மொழியும்
மத்தாய், லூகா, மார்குடன் யோவான்
ஆகிய சீடரால் ஆக்கப் பெற்றன.
இவையே புதிதாம் ஏற்பா டென்றனர்.
ஈபுரூ கிரேக்கம் இலத்தீன் சுவடியை
உரோமப் போப்பே உரிமையாய்க் கொண்டார்.
பிறமொழிப் படுத்தியோர் பெருந்துயர்ப் பட்டார்.
தீயிலும் சிறையிலும் தீரர் வாடி
பைபிளைப் பன்மொழிப் படுத்தி யளித்தார்.
அக்கா லத்திலே இக்கா லம்போல்
பிரிந்த சர்ச்சின் பெருஞ்சம ரில்லை,
ஏசு நாதரின் இனிய மொழிகளை
எல்லா உலகும் ஏற்றுப் போற்றுக.
பைபிளின் சாரம் பகருவேன் கேளீர்:

*　　*　　*　　*

அன்பே வடிவாம் இன்பப் பொருளே,
உன்பரஞ் சோதி உலகெலாம் பொலிக !
உன்னரு ளோங்குக !　உன்னிசை வாழ்க !
உன்னர சாட்சி உலகெலாம் பரவுக !
ஒவ்வொரு நாளும் ஊட்டி வளர்ப்போய்,
உனக்கே எங்கள் உயிரும் உடலும்
வெவ்வழி தவிர்த்தெமைச் செவ்வழி சேர்ப்பாய்,
பொறையுடன் ஒழுகுந் திறனெமக் கருளாய்.

*தேவனே, உனது திருவுளப் படியே*
*செல்லத் துணிந்தோம் சேம மளிப்பாய்.*
*ஏழைக் கிரங்கும் எம்பிரான் போற்றி !*
*வாழியுன் கருணை வையக மெல்லாம்.*
*வாழி எளியார் வானர சாள்வார்.*
*வாழி யிரங்குவோர் வருத்தந் தணிவார் !*
*வாழிசா துக்கள், வையகம் புரப்பார்,*
*வாழி அறவோர், மனக்களிப் படைவார்,*
*வாழி தியாகிகள், வானர சவர்க்கே !*
*தூயர் வாழ்க, சுத்தனைக் காண்பார் !*
*நேயர் வாழ்க, நிம்மதி யடைவார்.*
*அமைதி நல்கிடும் அன்பர் வாழ்கவே !*
*அவர்களே யாவார் அருட்குல மைந்தர்.*
*தமைப்போற் பிறரைச் சகிப்போர் வாழ்க !*
*பகைக்கும் அன்புசெய் பரிவுளோர் வாழ்கவே,*
*பகையை வெல்லும் தகையுளோர் அவரே !*
*நகைக்கும் வசைக்கும் நயவுரை சொல்கவே !*
*கோளும் வஞ்சக் கொடுமையுந் துயரும்*
*வாளும் வருத்தினும் மனங்கலங் காதீர் !*
*புன்னகை யுடனே புண்ணைப் பொறுமினோ !*
*இனிமையே இன்னலை இனிதுற வெல்லும்.*
*எப்படி மற்றோர் இருந்திட விருப்பமோ,*
*அப்படி அவருடன் அன்பா யிருமினோ !*
*அழியா உண்மை ஆன்மா வாகும்.*
*அழியாச் செல்வம் அருளே யாகும்.*
*ஆன்மா வுக்கிணை அகிலமும் இல்லை.*
*அதுவே நாமும் ; அதுவே யனைத்தும்.*
*வானர சதனுள் வளருவ தறிவீர் !*
*வானர சடைந்தால் வரும்பின் அனைத்துமே !*
*பூரணன் போலப் பூரண ராவீர் !*
*பூரணத் தந்தையின் புதல்வர் நீரே !*
*பாரின்ப வேட்கையை வேருடன் விலக்கிப்*
*பேரின்ப வேட்கையே பெருகிட வளர்மினோ !*
*இருள்வழி நீங்கி அருள்வழி சேர்மினோ.*
*கருணைத் தந்தை காப்பான் உங்களை.*
*அஞ்சா திருமின்; அறவழி நடமின் !*
*நெஞ்சினில் அன்பே நிரம்ப வளர்மின் !*
*குருவிக் குணவு கொடுப்பவன் யாரோ,*
*அல்லிக் கணிசெய் அழகன் யாரோ,*
*அவனுண வுடையும் அளித்துமைக் காப்பான்.*
*கட்டுங் கவலையுங் கசடென விலக்கீர்;*
*உம்மால் ஆவ தொன்றுமே யில்லை;*
*தம்மால் ஆவது தந்தையின் செயலே !*
*உம்மைத் திருத்தி உலகிற் குதவுமின் !*
*தீமையை நன்மை செய்தே தீருமின் !*
*வருத்துவோர் தம்மையும் வாழ்த்திடு வீரே !*
*வெறுத்தவர் தம்மையும் வெறுத்த லொழிமினோ !*
*பொறுத்துக் கொண்டு புண்ணியஞ் செய்மினோ !*
*உற்றவர் போலே மற்றவர்க் குதவுமின் !*
*அற்றவர்க் கீமின் ; அகந்தையை விடுமின் !*
*ஒன்னலர் தம்மையு மன்னித் தொழுகுமின் !*
*தன்னலந் தவிர்மின் ; சத்தியங் காமின்.*
*ஆணை யிடாது, வீணுரை யின்றி,*
*ஓதுமின் சுருக்கமாய் உண்டிலை யென்றே !*
*மலைக்குடில் போலும், வயல்விதை போலும்,*

*அலைவற ஊன்றுமின் ஆண்டவன் அருளில்.*
*முத்திற் கரசு முழுதுந் தந்த*
*வேந்து போலவே விண்ணர சிற்கே*
*பற்றெலாந் துறந்து பரசுகம் பெறுமின் !*
*மனதிலுங் காம நினைவை யகற்றுமின் ;*
*மனது நினைப்பதும் மருவிய தாமே.*
*இருளிற் சுவைக்கினும் இனிக்குமே வெல்லம்;*
*இடதறி யாதே ஈக வலதுகை*
*அடங்கித் தருவதை ஆண்டவன் அறிவான் !*
*அவனடி பற்றி அனைவரும் வாழ்கவே !*
*சவலைச் சேயெனத் தந்தையை நாடுமின் !*
*கவலை தீரும். கட்டுகள் விலகும்.*
*தேடுக கிடைக்கும், தட்டுக திறக்கும்.*
*கூடுக சுவைக்கும் குணநிதி யருளே !*
*வானத் தந்தையை வழுத்தி வணங்குமின் ;*
*அன்பே வடிவாம் இன்பப் பொருளே,*
*பரலோ கத்தின் பரஞ்சுட ரொளியே,*
*எம்பிழை பொறுப்பாய் ! எமக்கொளி காட்டுவாய்;*
*ஏழைக் கிரங்கும் எம்பிரான் போற்றி,*
*வாழியுன் கருணை வையக மெல்லாம் !*
*ஆவதும் போவதும் அனைத்துமுன் இச்சை,*
*தேவநின் விருப்பமே மேவுக வுலகில் !*
*இன்று நாம் செலுத்தும் நன்றியை ஏலாய் !*
*என்றுமுன் னருள்வழி நின்றிடச் செய்வாய் !*
*இவ்வா றிறைவனை இறைஞ்சுமின் ; உய்வீர்*
*ஆமன், ஆமன், ஆண்டவன் அருள்கவே !*

*　　　*　　　*　　　*

*என்பதே பைபிள்..... ஏசுவின் மார்க்கம்.*
*இப்பொது வாக்கை ஏற்பவ ரெல்லாம்*
*ஒருகுல நண்பர். இருமன மில்லார்...*
*பொதுநலம் வாழ்வின் பொருளெனக் கொள்வார்.*
*உள்ளதைச் சொன்னேன் உண்மைகண் டுய்வீர்.*
*ஏசு தாசன் இதுநலம் என்றான்,*
*சுத்தன் மொழியைத் தூயவர் உணர்ந்து*
*கலகந் தீர்ந்து கலந்து வாழ்ந் தனரே.*
*"விழியைத் திறந்த வித்தக மணியே,*
*என்றும் எம்மிடை யிருந்தெமை நடத்தத்*
*தயைசெய்" என்று தாள்பணிந் தேத்தும்,*
*அன்பரை நோக்கி அறிஞனு முரைத்தான் ;*
*அறிவுப் பசியால் அலைகிறேன் இன்னும்*
*அறிவின் அளவை யறிவார் யாரே?*
*ஒவ்வொரு மகானின் உள்ளமுங் கண்டு*
*நல்லதைக் கொண்டு நடுநிலை காப்போம்.*
*தனிமதஞ் சார்தலும், தனிப்பிரி வாற்றலும்,*
*கட்சியைச் சேர்தலும், கருத்தெனக் கில்லை.*
*உலக மெல்லாம் ஒருகுல மாக*
*வாழும் உண்மை வழியே தேடினேன்.*
*இன்னொரு மதத்தை ஏசுத லின்றி,*
*உள்ளந் தொட்டே உண்மையாய் நடந்தால்,*
*ஆண்டவன் ஒருவனே ஆருயிர் ஓர்குலம்*
*என்னும் உணர்வால் இவ்வுல கெல்லாம்*
*சேர்ந்து வாழுந் திறமையுண் டாமே.*
*பிரிவினை யின்றி ஒருகுல நேயராம்*
*பக்தரை இனிநான் பார்க்க விரும்பினேன்.....*

*உள்ளன் புடையீர் ! உங்களை மறவேன்;*
*உரியகா லத்தில் உம்மிடம் வருவேன்.*
*அன்பிற் கன்பை அளித்துச் செல்கிறேன்....*
*என்று சுத்தனும் எழுந்த நாளே*
*அப்துல் லாவெனும் அந்தண் மௌல்வி*
*முல்லாக்க ளுடனே அல்லாவைப் போற்றி*
*வந்தான் சுத்தனும் வளம்பெற வினாவி*
*இஸ்லா மியத்தின் இயல்பறிந் தானே....*
*மௌல்வியும் சுத்தனை மசூதி புரிக்கு,*
*வருந்தி யழைத்தான்.... வள்ளலும் சென்றான்...*
*இனியவன் செய்யும் இஸ்லாம் சாதனம்*
*யாதென் றறியநாம் ஏகுவோம் வாரீர்.*
*அறிய அறிய அறிவும் பெருமே !* 253

## 12. நபிநாயகப் படலம்

*அன்புடை வள்ள லாகும் அப்துல்லா மௌல்வி, சுத்தன்,*
*பண்புடை யன்ப னென்று பழுதறத் தெரிந்து கொண்டே,*
*நண்புடை நண்ப னாகி, நபிமணி வாக்கை யோதி*
*இன்புடைத் தீனிஸ் லாமின் இயல்பினை விளக்கி னானே !*

*அறிவிற்குப் பொருந்தும்வேதம், இயற்கைக்கும் அமைந்தவேதம்*
*துறவிற்கும் இல்ல றத்தின் சுகத்திற்கும் இசைந்த கொள்கை,*
*இறைவற்கே வணக்க மீயும் இணையறு பக்தி மார்க்கம்,*
*நெறிநிற்கு மனித வாழ்வு நிறைபெறு நியம மாமே.*

*இன்னவை கேட்ட சுத்தன் "தீனிஸ்லாம் ஈந்த தீரன்,*
*அன்னவன் முஹம்மத் ஸல்லம்; அல்லமீன் சரிதை சொல்வீர்"*
*என்னலும் ஹஜரத் மௌல்வி ஈதுல்நோம்பிரவிற் சொல்வோம்,*
*முன்னர் மசூதிக் கேகித் தொழுகையை முடிப்போம் என்றான் !*

*திருக்குரான் ஷெரீபின் ஓசை திசைபிளந் ததிரொ லிக்க,*
*உருக்கமாய் ஈமான் கொண்ட வாழ்க்கையை உலாமா ஓத,*
*செருக்கிலா நேயர் முன்னே சலாமிட்டுச் செல்லச் செல்வப்*
*பெருக்கமார் மசூதி யூரைப் பெருந்தகை யன்பர் சேர்ந்தார் !*

*தீனிஸ்லாம் அன்பன் என்று திருவுறு சுத்த னாரைத்*
*தேனினும் இனிய சொல்லான் மௌல்வியுந் தெரியச் சொல்ல,*
*ஞானமார் முஸ்லிம் அன்பர், நல்வர வேற்றுச் செல்வர்*
*தானமார் விடுதி சேர்த்துத் தகுமுறை உபச ரித்தார்.*
*வழுவறு கடன்க ளெல்லாம் வகையுற முடித்த பின்னர்,*
*தொழுகையை நடத்தி, மௌல்வி தூயனை நடத்தி முன்னே*
*எழுகதிர் பொன்செய் வெண்கல் வீடுகள் எழுந்த ஊரை*
*முழுவதுங் காட்டி முஸ்லிம் ஊர்களின் முறையி தென்றான் !*

*மதவயி ராக்கியங் கொண்ட மாநகர்,*
*நித நிதங் கூடி நிமாசு செய்நகர்,*
*விதவிதத் தொழில்களை விரும்பிச் செய்நகர்;*
*மதுவெறி யற்றது மசூதி மாநகர்....*

*பற்றலர் நடுங்கிடும் பலங்கொள் வீரர்கள்,*
*ஒற்றுமை காத்திடும் ஒருகு லத்தவர்,*
*சுற்றறிந் தொழுகிடுங் கலைஞர், வாயினாற்*
*சொற்றதைக் காத்திடும் உண்மைச் சோதரர் !*

*அப்பெரு மாநகர், அன்பு மேவியோர்*
*தப்பறு நியமத்தைத் தாங்கி, நீங்கற*
*முப்பது நாட்களை முழுது நோற்றபின்,*
*இப்புது நாளினை ஈதுல் என்னுமே.*

*இந்தநன் நாட்பெரும் இன்ப நாளதில்,*
*சந்தமார் திருக்குரான் சாற்றித் தானங்கள்*
*தந்தனர், மகிழ்வுடன் சாந்த நேயராய்*
*வந்தனர் வரிசையாய்ப் பள்ளி வாசலில் !*

*புத்தணி நிறங்களின் பொலிவும், பூவுடன்*
*அத்தரின் வாசமும் அகிலின் வாசமும்,*
*சித்தத்தை மகிழ்விக்கும் திரும சூதியில்,*
*சுத்தமா யனைவருந் தொக்கு நின்றனர் !*

*அலைகடல் போலஅல் லாஹு அக்பரென்(று)*
*உலையெழும் ஆர்வங்கொள் உள்ளம் ஓதிடத்*
*தலையணி வணங்கிடத் தாள்ப ணிந்திட*
*நிலைமன மூன்றியே நிமாசு செய்தனர்.*

*ஒருவனே, யாதும் ஆனாய், ஒப்பற்ற கருணைக் குன்றே,*
*அருவனே, இல்லல்லாஹு அக்பரென் றன்பின் எண்ணி,*
*உருகுவோர் உள்ளக் கோயில் உள்ளவா, ஈமான் கொண்ட*
*திருவுளார்க் கமுதே சுத்த சின்மய விளக்கே போற்றி !*
*என்றெல் லாரும் இறைஞ்சிடத் தூயனும்,*
*நின்றி றைஞ்சி நிமாசு முடிந்தபின்,*
*"நன்றிந் நாளில் நபிகதை கேட்டலே"*
*என்று சொல்ல மவுல்வி யியம்பினான் !*

*இல்லல் லாஹுவென் றெண்ணறு மன்பர்கள்*
*பல்கு மார்வம் படர முழங்கியே*
*"சொல்க சொல்கநந் தூய ரசூல்கதை*
*வெல்க சத்தியம்" என்று விளம்பினார்.....*

### முஹம்மது ஸல்லம்

*அந்தணனும் வாணிகனும் வீரனுமாய்,*
*அளவற்ற கருணை மேவி,*
*வந்துலகில் வழிதுலக்கி மனைவழ்வை*
*வாழ்வாங்கு வாழந்து காட்டி,*
*சந்ததமும் அல்லாவைச் சரணடைந்து*
*சாந்தமுடன் அன்பு செய்த,*
*பந்தமறு யோகிமுஹம் மதுசரிதை,*
*பத்தியுடன் பகர்வேன் கேளீர் !*

### அல் குரான்

*மனிதர்மன மாசறுக்கும் பேரின்ப*
*மருந்தேநல் விருந்தேபோற்றி !*
*இனிதருளிற் பழுத்தொழுகும் இஸ்லாமின்*
*கனிரசமே என்றும் போற்றி !*
*புனிதநபி மணிவாக்காய்ப் பொலிகின்ற*
*திருமறையே போற்றி, போற்றி !*
*அனைவருக்கும் அமைதிசொலும் அல்குரான்—*
*பாசுரமே, போற்றி , போற்றி !*

## திருப்பிறப்பு

தேசுலாங் கிழக்கே, ஞானச் சிகரமே, போற்றி, போற்றி !
மோசையைத் தந்து நீதி முறையினை வகுத்தாய் போற்றி !
ஏசுவை யளித்தாய் போற்றி, இப்ரஹீம் நபியைத் தந்தாய் !
ஆசிய வுலகில் வாழும் அரபிய நாடே போற்றி !

அத்தகை நாடு தன்னை அணிசெயும் ஹஜாஸில் வாழும்,
உத்தமக் குரைஷி யர்கள், உயர்வுற வுதித்த நேயன்,
முத்தலீப் என்பா னுக்கு மூத்தவன், ஆபூ தாலி ;
பத்திமான் அப்துல் லாவே பண்புறும் இரண்டா மைந்தன்!
பெருந்தகை அப்துல் லாவும் பெண்மணி அமீனா தன்னைத்
திருந்திய மணம்பு ரிந்து, கருவுடன் விட்டுச் சென்றான் !
தெரிந்தநன் மகவைத் தந்த சீரிய தாயும் ஆங்கே
பிரிந்தனள் ஆறாண் டுள்ள பிள்ளையை யுலகிற் கீந்தே.

## பிள்ளைப் பருவம்

அன்புடனே சீராட்டப் பெற்றோ ரில்லை;
அழகான முஹம்மதெனும் அருளார் சேயை.
முன்புவளர்த் தான்பாட்டன் முத்தலீபு,
முறையாக அபுதாலி மோகங் கொண்டு,
பின்புவளர்த் தான்; அன்னோன் ஒட்ட கத்தைப்
பிள்ளைமுகம் மதுமேய்த்தார் பிரிய மாக....
தன்பணியைச் செயும்போதே இயற்கையான
தாயினிடம் தத்துவங்கள் கற்றார் மாதோ !

அல்லாவின் அருளாலே அமைந்த பிள்ளை,
அரபியரின் குருநாத ரான பிள்ளை,
கல்லாமே ஞானங்கள் கற்றுக் கொண்டார்.
கண்ணாலே கண்டதெலாங் கருதிப் பார்த்துச்
சொல்லாத அனுபவத்தைச் செலுத்திப் பார்த்துச்
செகவியல்பைச் சீர்தூக்கி ஆராய்ந் தாய்ந்து,
பொல்லாத வுள்ளத்தே புகுந்துப் பார்த்துப்
புண்ணியராம் நண்பரிடம் புகலு வாரே.

வாலிபராம் முகம்மதுவும் வணிக ராக
வணிகருடன் ஒட்டகையில் வலியச் செல்வார்;
நாலுதிசை நாட்டினிலும் நன்கு சுற்றி,
நல்லதுபொல் லதுகண்டு நடுவ கிப்பார்.
காலத்தின் அலங்கோலங் கண்டு நோவார்.
கருத்துள்ள நண்பரிடங் கருத்தைச் சொல்வார்.
ஞாலத்தைத் திருத்திட வோர் ஞானசக்தி
நல்கெனவே அல்லாவை நாளுங் கேட்பார் !

## முறையீடு

ஆண்டவனே ஆருயிரின் அப்பா, உன்னை
அருவாகப் பணிகின்றேன், குருவே போற்றி !
மூண்டவிரு ளரங்கினிலே மூடர் செய்யும்
முழுமோகக் கூத்துகளை யுரைக்கப் போமோ ?
மீண்டு மிந்த மேதினியில் அறம்விளங்க
மேலான பதிபக்தி விளக்கஞ் செய்வாய்.
வேண்டுகிறேன் உனதருளை விமலா போற்றி,
மெய்யடியார் கலிதீர்க்குந் துய்யா போற்றி !

அறமென்னுந் திருமதிலை அழித்தார் மாந்தர்,
ஆபாசப் பொய்களிலே அழிந்தார் அந்தோ !

*பொறையின்றிச் சினவெறியாற் புந்தி கெட்டுப்*
*பொறாமைப்பேய் பிடித்தலைவார் பொல்லா ரந்தோ !*
*பொறிவழியே சென்றுநெறி தப்பி வாழ்வார்,*
*போட்டியிட்டுப் போர்புரிவார் கொலைகள் செய்வார்.*
*அறிவிழந்த காமுகராய் அழிப்பார் கற்பை,*
*அல்லாவே நல்ல வழி சொல்லாய் சற்றே !*

*பண்ணாத படுகொலைகள் பண்ணு கின்றார்,*
*பகல்வேஷத் திருடர்களாய்ப் பழிசெய் கின்றார்.*
*பெண்ணான வாழ்வெல்லாம் புண்ணாய் நோகப்*
*பேய்க்காம நோய்கொண்டு பிழைசெய் கின்றார் !*
*எண்ணாத பொல்லாங்கை யெண்ணி நாளும்....*
*இகல்செய்வார் இந்நாட்டு நிலையை, அந்தோ !*
*கண்ணாரக் கண்டுமனங் கலங்கு கின்றேன்;*
*கடவுளே அருள்காட்டிக் கவலை தீர்ப்பாய் !*

*கொல்கொலைக்கும் அஞ்சாதார் கத்தி கொண்டு,*
*கொடுமையாய் நரபலியுங் கொடுப்பார், அந்தோ !*
*பல்லாயி ரந்தெய்வம் பகரு வார்கள்,*
*பலிபூசை யுடன் பாய்ந்தே பூசல் செய்வார்.*
*நல்லவழி சொன்னாலு நடக்க மாட்டார்,*
*நாசவழி யேசென்று நலிவா ரந்தோ !*
*மெல்லமெல்லத் திருந்தியிவர் மேன்மை யான*
*விவேகமுறச் செய்அன்பு விளக்கே போற்றி !*

*“ஒருபரத் தந்தை மக்கள் உள்ளன்பு கொண்டு வாழ்வீர்*
*அருளினை யடைவீர்” என்றே அருளிய ஏசு நாதர்*
*திருமொழி மறந்து, செல்வச் சிற்றின்பச் செருக்கி லாழ்ந்து,*
*தருமத்தைப் பழித்தார் அந்தத் தரங்கெட்ட தீய ரம்மா !*

*மிடியிருள் அடிமை நோயால் மேதினி படுமி டர்க்கும்*
*விடிபொழு துறுமோ என்றே வேதனைப் பட்டு நிற்கும்*
*அடியரும் சென்ற ஊரில் அறநெறி யுபதே சித்தார்...*
*விடுதலை வழியைச் சொன்னார். வியப்புற மாந்தர் கேட்டார்!*

*அருளொளிர் முகத்தார், ஓங்கும் அறிவொளிர் கமலக்கண்ணார்,*
*ஒருபரம் பொருளை யெண்ணி உருகிடும் பெரிய பக்தர்.*
*உருவிலே அழகர், உண்மை உரையிலே அழகர், வீரத்*
*திருவிலே அழகர் செவ்வி செப்பிடற் கரிய தாமே !*

*அன்னவர் அழகுஞ் சொல்லும் அருட்பெரும் அன்பும் பண்பும்,*
*உன்னத நினைவும் கண்டே உள்ளத்தைப் பறிகொ டுத்தாள்,*
*பொன்னொளிர் திருவின் மிக்காள், புண்ணியப் புகழின் மிக்காள்*
*கன்னலைப் போன்ற சொல்லாள் கதிஜையென் றினிய பேராள்!*

*இளமையே முதிர்ந்த மூத்தாள், இருபத்தைந் துடைய செம்மல்*
*அளவறும் அன்புச் செல்வர் என்பதை அறிந்து தன்பேர்*
*வளமிகு வாணி கத்தை மகிழ்வுறத் தந்த நாளே*
*உளமுறு காதலீந்து கடிமண முவந்தாள் மாதோ !*

*ஒருவரை யொருவர் சொந்த உயிரென உறவு பேணி,*
*இருவரும் ஒருவ ராகி, இல்லறம் புகுந்த நாளே,*
*தருமமு மகிழ்ந்த திந்தத் தரணியு மகிழ்ந்த தான்ற*
*கருணையும் அருளும் வெற்றி கண்டுளங் குளிர்ந்த மாதோ !*

*மின்னகை குலுங்கும் வாயாள், மென்மொழிக் குயிலே யன்னாள்*

*பொன்னொளிர்திருமுகத்தாள்புதுப்பொலி வுடையபொற்பாள்,*
*கன்னலும் பாலும் போலக் கலந்தவர்க் கின்ப மாவாள்,*
*அன்னவள் கணவ ரானோர் அன்புடை வள்ள லன்றோ ?*

*பரிந்துல கின்ன லெண்ணிப் பரிதவித் திடும்போ தன்னாள்*
*மருந்தென வருத்தந் தீர்த்து மாதயை வருகு மென்பாள்.*
*பரம்பொருள் உமது மூலம் பாலிக்கும் அருளிங் கென்பாள்.*
*வரம்பெற்ற நபியைத் தூய மணாளராக் கண்ட நல்லாள் !*

*இத்தகைக் காத லாளர் இல்லறக் கனியாய் வந்த*
*பத்திமா என்னுஞ் செல்வி, அபுதலி பயந்த நல்லோன்*
*பத்திமான் ஆலி தன்னைப் பண்புடன் மணம்பு ரிந்தாள்.*
*அத்தகை ஆலி இஸ்லாம் அன்பராய்ப் பணிசெய் தாரே !*

*தலைக்குட நங்கை போலுந் தடாகத்தில் ஆமை போலும்,*
*கழைக்குடக் கூத்தன் போலும், கலங்கறும் ஒருமை பூண்டார்;*
*விழைமன உலகில் ஒட்டா விமலனாய் மனைய றத்தைப்*
*பழுதறக் காத்தார் சித்தம் பரம்பொரு ளிடமே வைத்தார் !*

*தாரத்தோ டிருக்கும் போதுங் குடும்பத்தைத் தாங்கும் போதும்,*
*சீர்மிகு வணிக ராக ஒட்டையிற் செல்லும் போதும்,*
*பாருடன் பழகும் போதும், பணத்தினை யெண்ணும் போதும்,*
*கார்தவழ் மின்னல் போலக் கடவுளைக் கலந்தி ருப்பார் !*

**நபியாதல்**

*வரவர உலகின் பற்றை மாசறத் துறந்து, ஞானந்*
*தெரிவரத் துலக்கு கின்ற தியானசா தனங்கள் செய்ய,*
*ஒருவரும் அணுகா ஹீரா உயர்மலைக் குகையி னுள்ளே,*
*திருவரு ளிறையைத் தன்னந் தனியராய்ச் சிந்தித் தாரே !*

*காய்வர இதழு திர்க்குங் கடிமலர் இயற்கை போலே,*
*வாய்மையை ஆழந்து கண்ட வரமிகு நபியும் அந்நாள்,*
*நோயுல காசை யின்றி, வாணிக நோக்க மின்றித்*
*தாயுளங் கொண்டு தீனர் தந்தைபோல் உதவி னாரே !*

*வறியவர் வறுமை தீர்ப்பார், வகையிலா விதவை மாரைப்*
*பரிவுடன் ஆத ரிப்பார், பாவையர் கற்பைக் காப்பார்,*
*பிரியமாய்த் திக்கி லாரைப் பேணுவார் ஊண ளித்தே,*
*பெரியவர் பரோப காரி எனப்புவி பேச நாளும் !*

*நம்புதற் குரிய நம்பி, நம்பினார் துணைவர் என்றே*
*எண்புவி போற்றி, நீரே அல்லமீன் என்று சொல்லத்*
*தம்பெருங் கடமை யாற்றித் தயைவடி வான நல்லோர்,*
*என்பதும் உருக இவ்வா றீசனை வணங்கு வாரே !*

*என்னையான் மறந்திட் டாலும், எனக்குநல் லினிய தாரந்*
*தன்னையான் மறந்திட் டாலுந், தமரினை மறந்திட் டாலும்,*
*முன்னுள புவியின் வாழ்வை முற்றிலு மறந்திட் டாலும்,*
*உன்னையான் மறவேன் என்னுள் உள்ளவா, ஒருவா, போற்றி !*

*கதறுகிறேன் கசிந்துருகிக் கண்ணீர் விட்டுன்*
*காதலெனும் கற்பகத்தை வளர்க்கின் றேன்யான்.*
*பதறுகிறேன் சீரழியும் பாரைக் கண்டு,*
*பாராயோ, பாவிபடுந் துயர்தீ ராயோ ?*
*சிதறுகிறேன் கவலையினாற் சிறியேன் மீது*
*சித்தமிரங் காயோஎன் சிந்தை யுள்ளாய் !*

*முதிருகிறேன் வயதினிலே, உனது ஞான*
*மோகமதே தாகமதாய் முறையிட் டேனே !*

*எம்மாயத் துன்பங்கள் இடர்செய் தாலும்,*
*இறப்பென்னும் இருட்கணவாய் எதிர்நின் றாலும்,*
*இம்மாந்தர் இகலென்னை வாட்டி னாலும்,*
*எதிர்ப்புடனே ஏமாற்றம் எனைச்சூழ்ந் தாலும்,*
*வெம்மனத்தின் பாசங்கள் வெருட்டி னாலும்,*
*வேதனைகள் எனைவந்து சோதித் தாலும்,*
*உம்மனத்தின் படிநடப்ப துறுதி சொன்னேன்:*
*உயர்பொருளே வழிகாட்டி உய்விப் பாயே !*

*மாசான மனமாய வஞ்சத் தாலே,*
*வலைப்பட்டுப் பாருயிர்கள் வருந்தக் காணேன் !*
*கூசாது காமவெறி கொண்ட தூர்த்தர்,*
*கோதையரைக் கற்பழிக்குங் கொடுமை காணேன் !*
*தேசமெலாங் கள்வெறியுங் கத்திக் குத்தும்*
*திருட்டுருட்டு வேலைகளுஞ் செருவுங் காணேன்.*
*ஈசனே, புவிக்கெல்லாம் இறைவா போற்றி !*
*இவ்வுலகம் உய்நெறியை இலக்கு வாயே !*

*எனையறிவார் உனையன்றி எவரும் இல்லை ;*
*ஏழைக்குன் இரக்கமலாற் புகல்வே றில்லை.*
*உனையன்றி வேறுயர்ந்த பொருளு மில்லை.*
*உலகிற்குன் கருணையலால் உய்வு மில்லை.*
*தனையொவ்வாத் தனிக்கருணை வள்ளால், உன்னைத்*
*தஞ்சமடைந் தேனைநீ தயைவைத் தாளாய் !*
*மனைவிரிவாம் உலகமன மாசு தீர*
*வாய்மையொளி காட்டிடுவாய் எல்லாம் வல்லாய் !*

*தாயறியாச் சூலுண்டோ ? தந்தாய் நீயென்*
*சங்கடத்தை யறியாயோ ? சாற்றிக் கேட்க*
*வாயில்லேன்; உனையறிய வகையு மில்லேன்;*
*வந்துநீ சிந்தையிலே தந்தா லன்றி,*
*தூயவருட் டிறமறியேன்; சுத்த ஞானச்*
*சுடரொளியே, எனக்குவழி துலக்கி யாளாய் !*
*நீயறியா நானுண்டோ? நின்ப ணிக்கே,*
*நிலவுலகில் என்னைநீ நியமித் தாயே ?*

*உலகமெலாம் உன்பெயரை ஓத வேண்டும்,*
*உள்ளமெலாம் உன்கோயி லாக வேண்டும்,*
*சலசலத்துத் தாவிவரும் அருவி போலுன்*
*சக்திநதி யெம்முள்ளே தழைக்க வேண்டும்.*
*கலகமெலாந் தீர்ந்தமனக் கருணை கொண்டுன்*
*காவலிலே மாந்தரெலாம் வாழ வேண்டும்,*
*இலகுபரா பரனேயுன் இரக்கத் தாலே*
*இன்னுலகம் பொன்னுலகாய் இலகச் செய்வாய் !*

*பலசாதிப் பாழ்வேறு பாடு நீங்கிப்*
*பகையச்சம் பழிநீங்கிப் பாபம் நீங்கி,*
*நலமான தொண்டுகளை நாடு செய்து,*
*நானென்னும் அகந்தைவெறி நாயை ஓட்டி,*
*உலகமெலாம் ஒருகுலமாய் வாழ வேண்டும்,*
*உனைஅருவாய் உயிர்க்குலங்கள் வணங்க வேண்டும்,*
*நலவழியைக் காட்டியெனை நடத்த வேண்டும்,*
*ஞானானந் தப்பொருளாம் வானே போற்றி !*

*தனை மறந்தனர், சகத்தினை மறந்தனர், அன்பு*

மனை மறந்தனர், மறப்பறப் பரம்பொரு ளதுவே
நினைவ தாகினர் இப்படி நீண்டநாள் வணங்கும்,
புனித ருக்கருள் பூத்தனன் புண்ணிய முதல்வன் !

ஜபுர யில்எனுந் தூதனைத் தயவுடன் அனுப்பி
ஜபதி யானத்தில் ஆழந்திடுஞ் சாந்தனை எழுப்பி,
நபிகள் நாயகம் எனுந்திரு நாமமுஞ் சூட்டி,
நுபுவத் தீந்தனன் பரமனு நூதனம் புரிவான் !

தெய்வ வாசகந் திருவுறத் தீட்டிய துயிலைத்
துய்ய னாகிய தூதனுங் காட்டிட, நபியும்
ஐய யானெழுத் தறிகிலேன் எனப்பணிந் தோத
மெய்ய உன்னுளே மெய்யறி விறங்குமென் றுரைத்தான் !

வான மாதிய பூதங்கள் வரம்பறப் படைத்த
ஞான மாப்பொருள் ஒன்றையே பெரிதென நாடி,
மானிடர் தொழு தேத்திட, மாண்புறும் அல்லா
தீனிஸ் லாமுனுட் செப்புவான் எனச்சொலி மகிழ்ந்தான் !

"கண்ணெ னப்புவி காத்திடுங் கல்வியும் இல்லேன்,
எண்ணெழுத் தறி யேன்எனக் கிதுதகா" தெனவே,
"புண்ணியா, பரி பூரண பத்திசெய் புனிதா,
மண்ணின் வாழ்விற்கு வானகத் தூதனாய் வந்தோய் !

கற்ற கல்வியிற் பெரிதொரு கடவுண்மாக் கல்வி
பெற்றனை யுனுட் பரம்பொருள் பேசிடும் பேச்சை,
மற்றவர் பயன் பெற்றிட மகிழ்வுடன் உரைப்பாய்,
நற்றவக் கடன் உனக்கிது நபிமணி என்றான்.
ஈசன் வாசகம் இயம்பிய தூதனும் செல்ல,
தேசு லாந்திரு முகத்துடன் உளஞ்சிலிர்த் திடவே,
பேசலற்றனன் பேரின்பப் பெருக்கினில் மூழ்கி,
மாசி லாதவன் மனைவிக்கு விளம்பினான் உடனே !

மெய் சிலிர்த்திட விழிபுன லுகுத்திடக் காலுங்
கையு மின்னுறு காந்தமே றியதென நடுங்கத்
தெய்வ சேதனம் முகத்தினிற் செவ்வொளி வீசும்
ஐயன் பெற்றதை யறிந்தனள் அன்புள கதீஜா !

சித்தி பெற்றனை; செகத்தினுக் குண்மையைப் பேசும்
சக்தி பெற்றனை; ஆத்தும சாந்தியும் பெற்றாய்,
முத்தி பெற்றனை; முஹம்மது நபியென முகிழ்ந்தாய்,
அத்தன் ஆண்டவன் ஆணையும் பெற்றனை அறவோய் !

நன்று நன்றினி நவையறு நாயக வாக்கால்,
இன்று சூழ்ந்திடும் இருளினைத் துடைத்தறி வேற்றி,
ஒன்று சேர்ந்து நம் உலகினர் ஓங்கிடச் செய்வோம்,
என்று பத்தினி இயம்பிட நபிமணி யெழுந்தார் !

## இஸ்லாமியப் பிரசாரம்

கதிஜாவும் உமரலியும் அபுபக்கர், உசுமானும், கருணை நேயன்,
அமிஜாவும்,அருள்பெற்ற நபிமணியின் அன்பினிலே ஈடுபட்டார்
துதி மிகுந்த திருத்தொண்டர் இஸ்லாமின் சூட்சுமத்தைத்
துலக்கி நின்றார்.
சதிமிகுந்த காப்பிரியர் சைத்தானின் வேலை செய்யச்
சார்ந்தாரம்மா !

ஆண்டவன் அருளால் ஊறும் அமுதமா மொழியை அள்ளி
வேண்டிய மட்டுந் தந்த விமலனை விவேக முள்ளார்
ஈண்டினர் ஈனந் தீர மாறினர் ஈமான் கொண்டார்

தூண்டினர் பகையும் போரும் பொறாமையுந் தூர்த்த ரந்தோ !

அழகனை வெறுத்த மன்னன் அபூஜகல் நபியைக்கண்டான்.
நிழலறு பொலிவும், வாச நிமலமா வடிவுங் கண்டான்,
பிழையுறு பிண்ட மாந்தன் பெண்ணவர் மகிமை யாலே,
செழிதிரு வாகக் கண்டு திகைத்தனன் பகைத்த தீயன் !

கூரையில் ஓட்டை யென்று கொண்டலைத் தடுப்பா ருண்டோ?
சோரரின் வசவிற் கஞ்சிச் சூரியன் ஒளிவ துண்டோ ?
பாரினில் அறிவி லார்கள் படுத்திடும் பாட்டை யஞ்சித்
தீர்தங் கருமந் தன்னிற் சிதைவுறத் திகைப்ப துண்டோ ?

ஆருயிர்த் துயரைத் தீர்க்கும் அருளுறு நபி மாணிக்கம்,
பேர்புகழ் பட்டம் செல்வப் பெருமைகள் எவையும் இன்றிப்
பாருயர் நலத்தைப் பேசிப் பகைவர்க்கும் இனிதே செய்தார் !
காருயிர் அமுதம் போன்று கருணையால் உயிரைக்காத்தார்.

## பகைவர் கொடுமை

தாமத வகந்தை யாலே தடித்த குரைஷி யர்கள்,
நாமறி சிறுவ னின்று நபி யென நவிலப் பெற்றான்.....
பாமர ஜனங்கள் உள்ளம் பறிகொடுத் தவன்பின் செல்லுந்
தீமையைப் பழிப்போம்; அன்னான் செம்மையைக்
கெடுப்போம் என்றார்.

துறந்த தூயவ ரேனுந் துணிந்துநல்
அறந்த னக்குயிர் ஆனவ ரேனுந்தாம்
பிறந்த ஊரிற் பெரியரென் றேபுகழ்
சிறந்த சீலர் செகத்தில் அரியரே !

நல்ல வார்த்தை நவின்ற நபியினை,
எல்ல வர்க்கும் இனிதுரைச்சீடரைப்
பொல்லதே தொழிலாகிய புல்லர்கள்
கொல்ல நோக்கிக் கொடுமைசெய் தார்களே !

பிடித்தனர் பெரு மானின் பிரியரை
அடித்து வைதனர் ஆத்திரந் தீரவே,
இடித்த னரவர் இல்லத்தை நாத்திகந்
தடித்த பாதகர் பேயின் சகாக்களே !

அறத்தினைச் சொல்லிடும் அன்பு வள்ளலைத்
துரத்தினர் துப்பினர் தூற்றி வைதனர்.
கரத்தினில் அகப்பட்ட கல்லை வீசினார்;
பரத்தையர் மோகத்திற் பாழ்பட் டார்களே !

மெய்ம்மொழி யொன்றையே விளம்பு மெய்யனை,
துய்யநன் னெறியினைத் துலக்குந் தூயனைப்
பொய்மனப் புரட்டர்கள் பொறுமை காணென
வெய்யிலில் வெந்திட விடுத்து நீங்கினர் !

தொகைமிகும் அடியவர் தொகுத்த கூட்டத்தே
நகைமிகச் செய்குவர் ; நலிவு செய்குவார்
பகைவர்கள் செய்திடும் பாத கத்துயர்
மிகமிகப் பொறுத்தனர் விழுமி யோர்களே !

சாமியும் பலபல; சாதியும் பல;
நாமெனுஞ் செருக்குரை நவிலுந் தெவ்வரின்
காமமும் பலபல; கடவுள் ஒன்றெனில்,
வேமவர் உள்ளமும் வினையும் வெய்யதே.

*அல்லலைப் போக்கிநல் லறிவைத் தூண்டிடுஞ்*
*சொல்லினை நபிமணி சொல்லத் தீயவர்,*
*கல்லினை யெறிந்தனர்; கத்தி தீட்டியே*
*கொல்லவுந் துணிந்தனர் கொடிய பாதகர்.*

**அபிஸீனியாவில்**

*பகைசின முற்றிடப் பார்த்து, நாயகன்*
*உகந்தநல் லன்பரை உடன்கொண் டேகியே*
*நெகிஸபி ஸீனிய நிருபன் மாளிகை*
*புகலென வடைந்தனன் பொருத்த மாகவே !*

*கண்டனன் கேட்டனன் கருணை வள்ளலைத்*
*தெண்டனிட் டரசனுந் தீனிஸ் லாமினைக்*
*கொண்டுநன் றொழுகினன்; கொள்கை யின்படித்*
*தொண்டருந் தொழுதனர் தூய ராகவே !*

*ஈத றிந்த பகைவ ரிடர்செயப்*
*போத லூற்றுப் புரவலன் மாறிடக்*
*கோதி ழைத்திடுங் கோள்க ளியம்பியே*
*வாது செய்தனர் யாதும் வழியிலார்:—*

*"மன்ன நீயிந்த வஞ்சனை நம்பிடின்*
*இன்ன லாகும்; இவன்பெருந் தப்பிலி !*
*முன்னவர் மொழி முற்றும் உதறினான்*
*தன்ன தேமத மென்றிவன் சாற்றினான்!"*

*பேதச் சூதர் பிதற்றிடுங் கோள்களை*
*நீதி கற்ற நெகுசனும் ஏற்றிடான் ;*
*தீதி ழைத்திடுந் தீயவர் வெட்கவே*
*வாதி ழைத்திடும் வாயை யடக்கினான் !*

*"நயம றிந்த நலத்துறை யாளர்க்கே,*
*பயன றிந்த பதிமொழி யின்பமாம் ;*
*சுயந லத்திமிர் துள்ளி யிடர்செயும்*
*கயவ ருக்குக் கனிமொழி ஏற்குமோ ?*
*கொல்ல வந்த கொடிய பகைவரை*
*நல்ல ஞானி நபிமணி யென்குரு....*
*தொல்லை செய்யிற் சுடச்சுட வாங்குவீர்*
*எல்லை விட்டுடன் ஏகுமின்" என்றனன் !*

*வாய டைத்த வலிய பகைவர்கள்,*
*போயொ ழிந்து பொறாமையைத் தீட்டியே,*
*பேயின் வாளெனப் பேச்சை யடக்கியே*
*பாய வெங்கும் பதுங்கி யிருந்தனர் !*

*அச்சமறத் துணை நின்ற கதிஜாவும் அபுதலியும் அல்லமீனை*
*இச்சமயம் விட்டல்லா இணையடியைச் சேர்ந்ததுயர் என்னே*
*என்னே !*
*பட்சமுறு நபிமணியின் பரிதாபக் கண்ணீரைப் பார்த்தி ரங்காத்*
*துச்சமனப் பகைவர்கள் சுதந்தரமாய்த் துயர்செய்யத்*
*துணிந்திட்டாரே !*

*தாங்கமுடி யாதுதுயர் தாயீபு சென்றவனைத் தாக்கித் தீயர்*
*ஓங்குநலத் திருமேனி புண்ணீரின் ஊற்றொழுகக் கல்லால் வீசி*
*வாங்கினரக் கல்லாத கல்மனத்தர் வசை கொடுமையின்ன*

லெல்லாந்
தாங்கியினுந் தயவுடனே தாரூலிஸ் லாமுரைத்தான் தரும மன்னான் !

தீன்விளக் கான தூதன் செப்பிய கலிமா கேட்டுத்
தானென வகங்க ரித்துத் தருக்கிமிக் கிடர்கள் செய்த
ஜீன்களும் சோதனைகள் செய்துபின் ஈமான் கொண்டு
தேன்கனி மலர்கள் ஈந்து, திவ்விய நபியைச் சார்ந்தார்!

சாத்திர ஞான மெல்லாந் தன்னுளே தழைத்த ஞானி,
பாத்தியா ஓதி, ஹஜ்ஜு நாளிலே பரவ வந்த
யாத்திரீ கருக்கு, மிக்கக் கருணையோ டிறைவன் அன்பு
பூத்திட வார்த்தை சொல்லிப் புண்ணியப் பணிகள் செய்வார்.

## உபதேசம்

காசினி மாந்தர் நல்ல கதிபெறக் கருணை வள்ளல்,
"ஈசனை நம்பி அன்பு செய்மினிங் கெந்த நாளும்
நேசராய்ச் சேர்ந்து சாந்த நிமலராய் வாழ்மின்" என்று
பேசினார் அருளி னாலே பேசிடக் கற்ற பேறார் !

கடலினைக் காணீர்; ஈசன் கருணையைக் காணீர் என்பார்,
சுடரினைக் காணீர்; ஈசன் சோதியைக் காணீர் என்பார்,
இடமகல் வானைக் காணீர்; இறைவனின் விரிவைக் காணீர்,
புடவியைக் காணீர்; ஈசன் புலமையைக் காணீர் என்பார் !

வான்மழை காணீர் அல்லா வழங்கிடும் அமுதங் காணீர்,
தேன்மலர் காணீர் அல்லா திருநகை யழகைக் காணீர் !
யானெனும் அகந்தை யின்றி இறைவனே பரவி யெங்கும்,
ஊனுயிர்க் குயிராய் வாழும் உண்மையை யறிவீர் என்பார் !

இருளுறு மடமை யாலே யியற்றிடுங் கொலைகட் காம
மருளுறு செயலை நீமின், மாசறு வாய்மை போற்றி
அருளுறு மன்பும் ஐந்து தொழுகையும் அறமுஞ் செய்மின்;
பொருளுறுதொழிலைச்செய்துபுரையறப்பொலிமின்என்றார்!

தீவிர தியானத் தாலே திருவருள் வாக்கெ ழுந்த,
ஓவறு ரம்ஜான் மாதம் பகலினில் உண்ண லின்றி,
ஆவியைத் தூய்மை யாக்கி, ஆண்டவன் அருளை எண்ணித்
தீவினை தவிர்த்து, நல்ல தருமத்தைச் செய்மின் என்பார் !

## ஹிஜரத்து

நடுநிலை யாள ரிந்த நல்லுரை இனிதென் றேற்றார்,
கெடுநிலை யாளர் பின்னும் கேடுசூழ்ந் திடர்கள் செய்தார்,
இடமகல் அன்புச் சோதி ஏசுவைச் சிலுவை யேற்றிப்
படுகொலை செய்த பாவிப் பதகரே மீண்டும் வந்தார் !

காமத்தின் அடிமை யாவார், கலகத்திற் குடந்தை யாவார்,
தீமைக்கு நேய ராவார் திருட்டுக்கு மச்சா னாவார்,
தாமத மடைமைக் கெல்லாந் தரங்கெடு சீட ராவார்,
பூமிக்குப் பார மாகப் பொருந்திய புல்ல ரம்மா !

தூயவன்; எல்லை யற்ற துயர்பொறுத் தினிதே செய்யுந்
தாயவன்; வஞ்ச மற்ற தளிரிளஞ் சேயைக் கொஞ்சுஞ்
சேயவன்; சைத்தா னுக்குச் சிம்மசொற் பனமே யன்னான்;
வாய்மையை யறியாப் பொய்யர் வம்புகள் செய்தா ரம்மா !

மக்கமா நகரம் அந்த மடையரின் இடர்க ளாலே
துக்கமா நரக மாகத் தூயனும் அன்பு நேயர்

*மிக்கமா மதீனஞ் சேர விரும்பிநள் ளிரவில் மெல்லப்*
*பக்குவ மாகத் தப்பிப் பாய்ந்தனர் சீட ரோடும் !*
*இடியிடித் திந்தச் செய்தி இப்ளீசு சொல்ல வெய்யோர்,*
*"கடிநகர் காவல் விட்டுக் கம்பியை நீட்டி விட்டான்,*
*பிடிபிடி பின்சென் றந்தப் பித்துறு நபியை நொய்யப்*
*புடைபுடை" எனக்கு ரைஷிப் புல்லருந் துரத்தி னாரே !*

*இவ்வழிச்சென்றான் என்பார், இங்கவன் ஒளிந்தான்; என்பார்,*
*"எவ்வழி எங்கே சென்றும் இவனுயிர் தப்பா" னென்பார்,*
*உய்வழி தருவ தாக ஊரையே மாற்றும் இந்தத்*
*திவ்வியப் போலி தன்னைச் செகுப்பது கடனே" யென்பார் !*

*தடிபிடித் தோடு வாருந் தடம்பிடித் தோடு வாரும்,*
*நெடுவழி குதிரை யேறி நிலமெலாந் துருவு வாரும்,*
*உடையுரு மாற்றி வஞ்ச ஒற்றராய்த் தேடு வாரும்,*
*முடிவினில் "அதோபார்" என்றே முஹம்மதுநபியைக்கண்டார்.*

*"கொல்ல டா" என்றார் கூடை கூடையாய்ச் சுமந்து வந்த*
*கல்லெடுத் தடித்தார்! அந்தோ காயம்பட் டுதிர மோடி*
*"அல்லஹோ அல்லா" வென்றே அலறிடு நபியை நோக்கிக்*
*கொல்லெனச் சிரித்து மேலுங் கொட்டினார் வசையுங் கல்லும்.*

*விண்ணுள தந்தை வேகம் அளித்திட விரைந்து, தூதன்,*
*புண்ணுறச் சிவந்த மேனி பொய்யர்கை வீழ்ந்தி டாமல்,*
*கண்ணுறக் கண்ட தௌரி குகையினுட் கரந்து கொண்டு,*
*மண்ணுறு தீமை யெண்ணி மனங்கசிந் திரங்கி னானே !*

### தௌரிக் குகையில்

*கொடிய ரான குரைஷியர் வாசிமேல்,*
*கடிது தேடியக் காடு வன மெலாம்,*
*தடத டென்று தனிநபி புக்கதோர்*
*இடமி தென்றிரைந் தேகி வளைத்தனர்.*

*ஏக்க முற்றபு பக்கரும் "யாரசூல்,*
*மூர்க்கர் வந்தனர் முற்றுந் தனித்துளோம்,*
*தாக்கி யந்தத் தறுகணர் கொல்லுவார்...*
*காக்க யாருங் கதியிலை" என்றனன் !*

### நபி யுரை

*ஏக்க மில்லை நா மென்றுந் தனியில்லை,*
*காக்க நம்மைக் கடவுள் இருக்கிறான் !*
*ஆக்கு வான்அழிப் பான்அவ னாற்றலைத்*
*தேக்க வல்ல திறமையிங் குள்ளதோ !*

*வைய மெல்லாம் எதிர்த்து வருத்தினும்,*
*ஐயன் அல்லா வுளான் அருள் பாலிப்பான்,*
*வெய்யர் வெம்மைகள் வெம்பி மறைந்திடும்,*
*தெய்வ காரியம் வென்று திகழுமே ....*

*அன்பும் உண்மையுங் கொண்டரு ளப்பனை*
*நம்பி வாழு நமக்கினி அச்சமேன்? .....*
*எம்பி ரான்பரம் என்றிருப் போமென்றான்,*
*நம்பிரான் நபி நாயக மாமணி .....*

*"சொல்லு பிஸ்மில்லா ஹிர்ரஹ்மான் இர்றஹீம் !*
*வெல்லு வோம் பகை" யென்று விளம்பவே*
*நல்ல சீடனு நம்பித் தியானித்தான் ;*
*பொல்ல வரும் குகைமுழை போந்தனர் !*

*"பாருள்" ளேயெனப் பாதகர் கூவினார்,*
*"யாருள்" ளே யென் றரற்றினர் அத்ததி,*
*பேர்சி லந்திகள் பின்னு வலைகண்டே,*
*காரி ருட்குகை காலியென் றேகினார் !*

*மூன்று நூல்வலை காத்த முழையிலே,*
*மூன்று நாட்கள் முழுதும் ஒளிந்தவர்,*
*ஆன்ற நேயர் அனுப்பிய ஒட்டையில்,*
*ஏன்ற வேகத்தில் யாத்திரேப் பேகினார் !*

*வருந்து மன்பர் வருத்தந் துடைப்பவன்,*
*அருந்து ணைவன் அடியவர்க் கீசனே*
*தெரிந்து தன்மனந் திவ்விய சேவையிற்*
*பொருந்தி னார்க்குப் புகலவன் ஆவனே !*

*வல்ல வன்பணி வாய்த்தஉள் ளன்பர்கள்,*
*பொல்லர் தீதைப் பொறுத்துத் திருத்தவே*
*கல்லெ றியினுங் கான்மலர் என்னவே,*
*அல்ல லின்றி யருட்பணி செய்வரே !*

## இஸ்லாம் குடியரசு

*வான்மழை சொரிந்தது, வன்மலர்க் குழாம்*
*தேன்மழை சொரிந்தது; திவ்ய வாணியாம்*
*தீன்மழை சொரிந்தது; திருநபிப் புகழ்*
*ஈன்மழை சொரிந்தது மதீனம் எங்குமே !*

*அறந்தவிர் காபிர்கள் அளித்த புண்ணெலாம்*
*பறந்தன; பழிசெயும் பதகர் தீமைகள்*
*இறந்தன; புதுமைகொள் ஹிஜிரி நாட்களும்*
*பிறந்தன நபிஜயம் பெற்ற நாளிதே !*

*அன்பரும் அறிஞரும் அருளின் வேந்தனை,*
*"எம்பெரு நகரினுக் கெழுந்து வாழ்கெனாப்*
*பண்பல பொழிந்தெதிர் பாய்ந்து நல்லபே*
*ரின்பமே வந்த" தென் றேற்றுப் போற்றினார்.....*

*திண்பெறும் பொறுமையின் செவ்வி நோக்கினார்.*
*புண்படு மேனியின் புண்க ளாற்றினார் ;*
*கண்படு திசைதொறுங் காத லார்முகம்*
*தண்புறத் தழைத்தன ! தளிர்த்த நெஞ்சமே !*

*வந்தனர் மாணவர் வரிசை யாகவே;*
*வந்தனர் அன்புகொள் ளறிஞர் யாவரும் !*
*வந்தனர் அனாதையர் 'மதீன மாநகர்*
*தந்தது புக'லெனச் சாற்றி வாழ்த்தினார்.*

*திறந்தது வெற்றியின் செய்ய வாயிலே ;*
*சிறந்தது நிறைந்தது தீனிஸ் லாமியம்;*
*பறந்தது பிறைக்கொடி பரந்த வானிலே;*
*பிறந்தது புதுயுகம் பெரிய தீரத்தால்.*

*தீங்குறு பகைவருந் திகைத்து நின்றனர்;*
*ஈங்குறு "நேயர்கள் என்றும் எங்களைத்*
*தாங்குக நபிதரு தருமம்" என்றுடன்*
*பாங்குற வமைத்தனர் பள்ளி வாசலே !*

*பத்தியிற் சிறந்தவர் பழுதி லாமனம்*
*வித்தினன் அருளெனும் வித்தை வித்தகன்;*
*சுத்தமுந் தொழுகையுந் தொடர்ந்த வாழ்வினாற்*
*புத்துருக் கொண்டதப் புனித மாநகர்.*

*மடயரு மூர்க்கரு மதங்கொண் டேந்திய*
*தடியர சொழிந்தது ! தயையும் சாந்தமும்*
*இடைவிடாத் தொழுகையும் பணியும் ஏந்திய*
*குடியர செழுந்தது குதாவின் சக்தியால் !*
*உலகின் உள்ளத்தை ஊழ்கடந் தாளுவோன்,*
*கலக மின்றிக் கருணைக் கடவுளைத்*
*தலைமை கொண்டு தழைத்திட நோற்றனன்*
*குலவிஸ் லாமின் குடியர சோங்கவே !*

*உள்ள மெல்லாம் உயர்பர மானந்த*
*வெள்ள மான விமலனுள் ளன்பரைப்*
*பள்ளி வாசலிற் பாங்குறக் கூட்டியே*
*வள்ள லீசன் வணக்கம் வகுத்தனன் !*

*தூய உள்ளுமுந் தொண்டுசெய் கைகளும்,*
*நேய மாக நினைத்தொரு தேவனை*
*பாய லையெனப் பண்ணுடன் அன்பிலே*
*தோயக் காணுந் தொழுகைநல் லின்பமே !*

*தொழுகும் போதுந் துகளறு தொண்டினைப்*
*பழகும் போதும், பரிவுடன் ஏழைகட்*
*கிளகும் போதும் இறையுணர் வோங்கியே*
*அழகு மிக்க தணிநகர் வாழ்க்கையே !*

*உருக்க மான உரைவளர் உத்தமன்*
*பெருக்க மான பிரிவறு நேயர்க்குத்*
*திருக்கு ரானுப தேசஞ்செய் துண்மையாம்*
*அருட்கு லத்தை அமைத்தனன் அன்பினால் !*

*இதஞ்செயும் அன்பு வள்ளல் இரக்கமே யன்னான் மீதுங்*
*கொதிபகை முரடர் வெய்ய கொலைசினப் படைகள் ஏவிப்*
*பதுரெனும் இடத்திற் கூடிப் பண்பனைத் தாக்கு மெல்லை,*
*இதுஜய நாளென் றெண்ணி எழுந்தனர் முஹம்ம தாங்கே !*

*எளியவர்க் கெளிய ராவர்; இகல்கொளும் பகைவர் சேனை*
*வலியினைத் தாக்க வேண்டி வன்பெரும் படையுங் கொண்டார்.*
*சலிவறு கலிமா ஓதி முஹம்மது ஸல்லம் பாய்ந்தார்;*
*புலியென வந்த வெய்யர் பூனைபோல் ஒடுங்கி னாரே !*

*பற்றலர் மீண்டும் வந்து, மதீனத்தைப் படையெ டுத்து*
*முற்றுகை யிட்ட போது, முகம்மதைத் தனியாய்க் கண்டே*
*"பற்றினோம் ஒண்டி யாயுன் சமர்த்தினிப் பலியா" தென்றார்...*
*"ஒற்றைநான் அல்லேன்; அல்லா உடனுளான்" என்றார் ஞானி.*
*சுற்றிய பகைவர் சேனை சூழ்ச்சிகள் செய்த தெல்லாம்,*
*சிற்றறி வாளர் செய்த செயலெனச் சிதைந்த தம்மா !*
*மற்றுமோர் புயலும் வந்து, மாண்டது சேனை வெள்ளம்;*
*முற்றுகை முறிந்து டைந்து முடுகினர் மூர்க்க ரம்மா !*

*"மார்தட்டி வருவோம்" என்றே மக்கத்தை யடைந்த அன்னார்*
*போர்முர சொலியைக் கேட்டார், புனிதனின் சேனை கண்டார்..*

*வார்முர சடித்து வாளை வீசிட வந்தார்; அந்தோ*
*வேரினை வெட்டிச் சாய்த்த மரமென விழுந்தா ரம்மா !*

*தடித்தகங் காரப் பேயால், சத்திய நபியைக் கல்லால்*
*அடித்தவர் மண்ணா னார்கள். அறப்பயிர் தழைக்க ரத்தம்,*
*வடித்தவன் புகழே யின்றும் வாழ்ந்திடக் கண்டோம் அன்பு*
*துடித்திடுந் தெய்வ தூதன் வெற்றியே விளங்கிற் றம்மா !*

*மாண்டது பகைவர் சேனை; மற்றவர் பணிந்தே ஈமான்*
*பூண்டனர்; வெற்றி பெற்ற புண்ணிய நபியும், ஆங்கே*
*ஆண்டவன் செயலறிந்து நிமாசுகள் ஆற்றி, இஸ்லாம்*
*ஈண்டிய பெருமை சேரப் பணிகளை இன்னுஞ் செய்தார்...*

*பித்துறு பகைவ ருக்கும் பெருமனப் பண்பு காட்டி,*
*நித்தியப் பொருளைத் தூய நிமாசினால் வணங்கச் செய்து,*
*சத்திய வுறுதி சொல்லிச் சலாமென நேயங் கூட்டி,*
*உத்தம நபியிஸ் லாமின் கொடியினை உயர்த்தி னாரே !*

*பொய்தரும் உருவ ணக்கம் பொருளறப் பொன்றச் செய்து,*
*மெய்தருந் தொண்ட ரோடு வியன்பணி பலவுஞ் செய்து,*
*வெய்துயர் தாண்டி யின்ப விடுதலை நாட்டி, வந்த*
*செய்தகு காரி யங்கள் செய்தமென் றகம கிழ்ந்தார்.*

**குருபானி**

*மக்கத்து மாநகரில் கஸ்வா மீது,*
*மாண்போங்கும் அரபாத்து மைதா னத்தில்,*
*தொக்கெழுபத் தைந்தாயி ரம்பேர் தொண்டர்,*
*சுத்தமுடன் கலிமாவைச் சொல்லி நிற்கத்*
*திக்கொளிர ஹஜ்ஜுமதி ஈதுல் அல்லாஹ்,*
*தினமென்று குருபானி திருவோ டீந்தே*
*எக்காலும் உலகெல்லாம் ஏற்றுப் போற்றும்*
*இனியமணி வாக்களித்தார் இரசூல் சல்லம் !*

*அருளோங்கும் அன்பர்களே அமர்ந்து கேளீர்;*
*அல்லாவை ஐந்துமுறை வணங்கீர் நாளும்.*
*ஒருவனவன்; அவன் படைத்த உலகோர் எல்லாம்*
*ஓர்குலமென் றன்புடனே ஒன்றி வாழீர் !*
*இருளோங்கும் சைத்தானுக் கிடங்கொ டாதீர் !*
*எப்போதும் இனிதுள்ளம் விழித்தி ருப்பீர்.*
*திருவோங்குந் தொழில் செய்வீர்; சிறந்த ஞானச்*
*சீரோங்க வாழ்ந்திடுவீர் இஸ்லாம் சேய்காள் !*

*ஒற்றுமையை உயிர்போலக் காக்க வேண்டும்.*
*உடன்பிறந்தார் போற்பிறரை உன்ன வேண்டும்.*
*மற்றவரைத் திருடாது வாழ வேண்டும்.*
*மாதர்களின் கற்பினைநீர் மதிக்க வேண்டும்.*
*குற்றமறிந் ததைத்திருத்திக் குணம்வ ளர்ப்பீர்.*
*குரான்ஆணை காத்திடுவீர். கொடுத்துண் டோங்கீர்.*
*முற்றறிவன் மந்திரத்தை மொழிவீர்; என்று*
*முஹம்மதுஸல் லம்சொல்லி முடித்தா ரம்மா !*

*ஆண்டவன் அருள்கென விரதம் ஏந்திய*
*காண்டகு மன்பரைக் கருணை நோக்கினார்...*
*ஈண்டென தருட்பணி இனிது வெற்றியைப்*
*பூண்டதோ பொதுவுறப் புகலிர் என்றனர்.*

*"வென்றதுங் காரியம் விளைந்த தொற்றுமை,*

நின்றதும் வாக்" கென நிமலர் போற்றவே,
"என்றுணை யாகிடும் இறைவன் சாட்சியாம்"
என்றுளங் களித்தனர் இறுதி நாளிலே !

பொதுப்பரம் பொருளினைப் போற்றி செய்யவும்,
புதுமறை வகுக்கவும், பொதுத்தொண் டாற்றவும்,
முதுமையைப் போக்கிய முகம தாலிக்கே
இதுவெனக் குறித்தனர் இறுதி நாளையே !

அலிமீதும் பஸல்மீதும் அருளார் சாய்ந்தே
"அன்பர்காள் அறியாது பிழைசெய் தேனோ?
சலியாது, கடனிருப்பின் சாற்றீர்" என்னச்
"சகம்புகழத் தருமநலம் செய்தீர், ஐய.
நலியாது சத்தியத்தை நாட்டி விட்டீர்,
நபிமணியே" எனச்சீடர் நவிலக் கேட்டு
மெலியாத உறுதியுடன் இறுதி யாக
வேதமொழி விளம்பிச்செல் விடைகொண் டாரே !
"வீண்செருக்கை விட்டெளிமை பூணு வீரே,
வியனுலகில் அன்புமிக விளைவிப் பீரே !
மாண்புபெறச் சத்தியராய் வாழீர்" என்றே
வணக்குமுறத் தொழுகையிலே மனத்தை நாட்டி,
ஆண்டவனை அல்லாஹோ அக்ப ரென்றே,
அன்போங்கி அவனருளின் வீடு கொண்டார் !
ஈண்டன்பர் உள்ளத்தில் இருப்பார் என்றும்,
இற்றஹ்மான் ரசூல் ஸல்லம் இனிது வாழ்க !

புண்ணி யக்கதை கேட்ட புனிதனும்,
கண்ணியம் பெறு கற்றறி வாளரும்,
எண்ணி யெண்ணியிஸ் லாமிய நாதனைத்
திண்ண மான தியாகிக ளாயினர் !

## 13. அல்குரான் படலம்

முஸ்தபா முஹம்மத் ஸல்லம் முறைவகுத் தளித்த வேதம்
பத்தியாய்ப் படித்து நாளும் பாத்தியா ஓதித் தூயன்
அப்துல்லா மௌல்வி சீட னாகவே இஸ்லாம் யோக
சித்தியைப் பெற்று மேலும் சிந்தனை செய்கின் றானால் !

தருமத்தைத் தாங்கித் தூய சத்திய ஒளியைக் காட்டிக்
கருமத்தை உலக நன்மைக் காகிய கதியென் றாக்கி,
ஒருபரம் பொருளை நம்பி உலகதன் கோயில் என்றே
திருவுப தேசஞ் செய்யுஞ் சமயமே சிறந்த தாமே !

பல்லுயிர்க் குலத்தை யெல்லாம் பரிவுடன் மதித்துப் போற்றி,
நல்லுயிர்க் கின்ன லின்றி, பிறவுயிர் நமதென் றெண்ணிச்
சொல்லுடன் செயலும் போற்றித் தூநெறி காட்டி மற்றோர்,
செல்வழி மறித்தி டாது செல்வதே சமய மாமே !

தன்னதே சமய மென்று பிறரதைத் தாக்கி டாமல்,
தன்னலச் செருக்கி லாமல், சத்திய ஒளியைப் பற்றி,
உன்னத மான தெய்வ வாழ்வினை உயிர்க்கு நல்கும்
அன்னதே சமயம் அன்பே அதன் அடி முடியு மாமே !

இத்தகைப் பொதுமை யாகும் இலக்கணங் கொண்ட ளந்தே,
உத்தமச் சமய மெல்லாம் ஒன்றொன்றாய்ப் பயின்று பார்த்தேன்
அத்தகைச் சமயத் தேவர் அனைவரும் பெரிய நல்லார்....

சத்தமிட் டவர்பின் வந்தோர், சண்டைகள் செய்கின்றாரே !
முஸ்தபா முகம்மத் ஸல்லம் மூர்க்கரைச் சாந்த ராக்கச்
சத்திய வழியைச் சொன்னார் ; சங்கமொன் றியற்றிச் சென்றார்.
இத்தலச் சமயத் துள்ளே இனியவுள் ளொற்று மைக்குச்
சித்தமாய் அமைந்த திந்தத் திருக்குரான் சமய மம்மா !

சேர்ந்துவாழ் இதிலும் சுன்னி ஷியாமுதற் பிரிவுண் டேனும்,
கூர்ந்துளே நோக்கின் ஒன்றே குலமெனக் காண லாகும்,
பேர்ந்தநற் சமயத் தாரைப் பேதமாய்ப் பாரா தன்பு
கூர்ந்திடின் கொலைக ளின்றிக் குணநலம் சிறப்ப தாமே !

அந்தமில் வான்கு டைக்கீழ் ஆண்டிடும் ஒருவன் மக்கள்,
இந்துமுஸ் லிம்க ளென்றே இருமனப் பிரிவி னாலே,
சந்ததம் சண்டை செய்யும் சழக்கறச் சேர்ந்து வாழும்
அந்தஓர் வழியைச் சொன்னார் தமையினி அடைகு வேனே !

இத்தகை எண்ணங் கொண்டே இனிச்செலும் படியையெண்ணிச்
சுத்தனாங் கிருக்கும் போது, சுந்தர சிங்கன் என்பான்
சத்துஸ்ரீ அகாலென் றுற்று நானகர் தந்த சீக்க
தத்துவ மளிக்குந் தூய சமரஸச் சாந்த மென்றான் !

தீனிஸ்லாம் சாதனத்தைத் திருத்தமாய் உபதே சித்த
ஞானியாம் அப்து லுக்கு நன்றியைச் செலுத்தித் தூயன்,
யான்விடை கொள்வேன் என்ன 'ஹஜ்ஜுநாளிதனில் இஸ்லாம்
மேன்மையை உனது வாக்கால் விளம்'பென மௌல்வி சொன்னான்

மகிழ்வுடன் சொல்வேன் என்று மசூதியின் வழிபாடாகித்
திகழ்ஜன சங்க முன்னே செய்யவன் சலாமிட் டூன்றிப்
புகழ்பெறுந் தீனிஸ் லாமின் புதல்வர்காள்கேளீர் என்றே
துகளறு நபியின் போதம் சுருதிகொண் டுரைசெய் தானே !

அல்லாஹு அக்பர்! அல்லாஹு அக்பர் !
பிஸ்மில்லாஹிர் றஹ்மா னிற்றஹீம்,
லாயி லாஹி இல்லல் லாஹு.
அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் !
முஸ்தஃபா ரசூலாம் முஹம்மது ஸல்லம்,
அல்லா ஆணையாற் சொல்லிய நல்லுரை
சிரமேற் கொண்டு சேர்ந்து வாழும்,
இஸ்லாம் அன்பர்காள் ! சலாம்உமக் கெல்லாம் !
உண்மையைத் தேடி உலகினிற் சுற்றும்,
யாத்திரி யான யானும் மிடையே,
வாழ்ந்த நாளை மறவேன் என்றும் ;
நபியின் பெருமையும் நற்குரான் உள்ளமும்,
கற்பித் தெனக்கும் கல்வி புகட்டிய
ஹஜரத் மௌல்வி அப்துல் லாவை,
நன்றி யுடனே என்றுமே நினைப்பேன் !
மசூதி நகரில் வாழுந் தோழர்
எனக்குக் காட்டிய மனத்துறு மாண்பும்,
அன்புத் தயவும் அடியேன் மறவேன் !
நன்றி, இஸ்லாம் நண்பீர் ! நன்றி !
அடியேன் வாழ்க்கை அருவியைப் போலே
அகண்டமாம் ஒன்றை அள்ளிக் கலக்கவே
மேன்மேற் செல்லும் விதியைக் கொண்டது.
மேற்கொண் டேகுமுன் மேதகு நண்பீர்,
என்மனங் கவரும் இஸ்லா மியத்தின்
இயற்கைத் தத்துவம் இயம்புத லாலே,

அல்லா விடமும் அல்குரா னிடமும்
அல்லமீ னிடமும், அவர்மர பிடமும்,
அன்பைக் காட்டி இன்புறு வேனே;
கண்தலை தெரியாக் காட்டுமி ராண்டிகள்,
பெண்கற் பழித்துப் பிறரை வருத்திப்
பஞ்சமா பாதகப் பதகராய் வாழ்ந்த
நிலையை மாற்றிக் கலைபெறும் அறத்தை,
தியாகவாழ் வாகச் செய்து விளக்கி,
நாகரி கத்தை நாட்டினார் நபியே.
அவர்வழி பற்றியோர் அரும்பெரு ஞானிகள்.
அவருள் ஹாஃபீஸை அறியார் யாரே.
குலிஸ்தான் ஸாதியைக் குறியார் யாரே.
உமர்ஹை யத்தை உணரார் யாரே ?
இஸ்லாம் உலகில் எழுப்பிய கலையும்,
சிற்பமும், இசையும் சிறந்த கவிதையும்,
எக்கா லத்திலும் இன்ப மளிக்குமே !
இந்தநன் னாட்டின் முந்தைய மன்னர்
மனவேற் றுமையால் இனம்வே றாகி,
கோரியின் உதவியைக் கோரிய நாளே,
இஸ்லாம் ஆட்சி எழுந்ததை யறிவீர்.
அக்பரின் பெருமையை அறியார் யாரே,
தாசு மகாலும் தான்ஸேன் பாட்டும்,
தாரா ஞானமும் சரித்திரப் புகழாம்.
குரானை எழுதியும், குல்லா முடைந்தும்
உழைத்த கையால் உலகைத் தாங்கிய
ஔரங்க ஜேபை அறியார் யாரே?
மஸ்தான் சாஹெபை மதியார் யாரே !
உமறுப் புலவர் உரைத்த சீறாப்
புராண நயத்தைப் புகலார் யாரே?
உலகொற் றுமையை ஊக்கிய பஹாயின்
பொதுநல வாழ்வைப் புகழார் யாரே?
இத்தகைப் பெரியார் எண்ணிலார் வந்த
தீனிஸ் லாமின் சிறப்பே சிறப்பாம்.
பாமர மக்களை ஏமாற்றி வந்த
பலவுருத் தொழுகையைப் பலமாய்த் தகர்த்தே,
ஒன்றே இறைவன், உருவிலான், எங்கும்
உள்ளவன், எல்லாம் வல்லவ னென்றே
உரைத்து மாந்தரைத் திருத்திய பெருமை
முஹம்மது நபியின் முதற்பெரும் பெருமையாம்....
பிரிந்து வாழ்ந்த பேய்மனச் சாதியைச்
சேர்ந்து வாழச் செய்தவர் அவரே.
அரபிநாட் டிற்குச் சுரபியாய் வந்த
குரான்சா ரத்தைக் குறிப்பேன் கேளீர் :—
ஆண்டவன் ஒருவன். அவனே பரம்பொருள்.
ஈண்டவ னுக்கிணை எதுவுமே யில்லை.
அவனையே தொழுமின் அல்லும் பகலும்.,
அவனைக் கலத்தலே ஆத்துமா னந்தம்.
முதல்வனை யெண்ணி முழுதுந் தெளிந்த
இதய சாந்தமே இஸ்லாம் ஆகும்,
எனதியான் என்னும் இறுமாப் பொழிமின்.
எல்லாம் அல்லா இச்சையென் றுணர்மின்.
மறவா தவனை மனதி லிருத்துமின்.
குலைவற நம்புமின் குன்றும் இணங்கும் ;
மலைவறப் பணிமின் மாதே வனையே !
காற்றுங் கடலும் கதிரும் மழையும்,

*ஊற்றும் பயிரும் உயிரும் உலகும்,*
*அவனருள் விரிவாம். அவனுயிர்க் குயிரோன்.*
*அவனை மறத்தலே அனைத்தினுந் தீதாம்.*
*அவனை நினைத்தலே அனைத்தினு மேலாம்.*
*அகந்தை, காமம், அச்சம், பொறாமை*
*சுகந்தனைத் தேய்க்குந் துயர்க்குல மாகும்.*
*குடியுங் களவும் கொலையும் கூத்தியும்,*
*சழக்கும் வழக்கும் சைத்தான் வேலையாம்.*
*அன்பு செய்வதே ஆண்டவன் கட்டளை.*
*உலகிற் கெல்லாம் பலபய னாகும்*
*அருட்பணி செய்பவன் அல்லா பக்தன்.*
*பலருக் கவனாற் பயன்மிக வாமே;*
*அவனை அல்லா அன்புடன் காப்பார்.*
*சமநோக் குடனே சனங்களை மதிமின் !*
*அடிமையென் றெவரையும் கொடுமைசெய் யாதீர்.*
*நன்மை விதைக்க நன்மை விளையும்,*
*தீமை விதைக்கத் தீமையே விளையும்.*
*தீயன வற்றை நோயென விலக்கித்*
*தூயன வற்றைத் துணையெனக் கொள்வீர்.*
*எளிமையும் பொறுமையும் ஈகையும் விரதமும்,*
*தூய்மையும் உண்மையும் வாய்மையும் அன்பும்,*
*பசிக்கொரு தொழிலும், பண்புறப் போற்றுமின்.*
*எவ்வுயி ருக்கும் இன்னலைத் தவிர்மின்.*
*புசிப்பிலும் செயலிலும் புனிதம் பேணுமின்.*
*ஆண்பெண் இருவரும் அறிவை வளர்மின்.*
*மாண்புறு கல்வியே மாந்தர் விளக்காம்.*
*இல்லற மாகிய நல்லறம் போற்றி,*
*அல்லா வுக்கே ஆளென வாழ்வீர்.*
*எதிரிற் காணும் எவர்க்கும் சலாமென*
*நல்லுரை பேசுமின் பொல்லுரை தவிர்மின்.*
*ஐம்பொறி புலனை அடக்கி யொழுகுமின்.*
*ஐம்பூத உடலை அழுக்கறக் காமின்.*
*பேயைத் துரத்துமின் நோயைத் தவிர்மின்.*
*குரானைப் பயின்று குணமுட னிருமின்.*
*அல்லா பெரியோன் அவனையே தொழுமின்,*
*எல்லாங் கூடும் இன்பம் பெருகுமே !*
*அன்பீர் இதுவே அல்குரான் சாரம்:*
*ஆர்வமோ டிதனை அனைவரும் பயின்றால்*
*சமரஸ மோங்கும் சத்தியந் தழைக்கும்;*
*இன்னோரு மதத்தையுந் தன்மதம் போன்றே*
*எண்ணி மதிக்கும் இயல்புண் டாகுமே.*
*போதக னாகப் புகன்றே னில்லை,*
*சாதக னாகவே சார்ந்தேன் இங்கே;*
*மாணவ னாகவே மற்றும் செல்கிறேன்.*
*நல்விடை தருவீர் நண்பீர் அன்பீர்,*
*அல்லா போற்றி அருட்சுடர் போற்றி !*
*இன்பக் கடலாம் இறைவனை நினைவோம்.*
*அப்துல் லாவின் அருமை மாணவன்,*
*வாயுரை கேட்ட மசூதிமா நகரார்,*
*பாத்தியா ஓதிப் பரிவுகள் கூறி,*
*வாழ்த்தி நல்வழி மகிழ்வுட னனுப்பி,*
*மீண்டும் வருகென விரும்பிச் சொன்னார்,*
*"உரிய காலத்தில் ஒன்று சேர்வோ" மெனச்*
*சுந்தர சிங்குடன் சுத்தன் சென்றான்.*
*நாமும் சென்று நடந்ததைக் கண்டு,*

*நானகன் மதத்தை நன்றறி வோமே !*

## 14. குரு நானகப் படலம்

*பெயரினுக் கேற்ற தேகம் பெற்றவன்; குற்ற மில்லா
உயரமும் உரமுங் கொண்டோன்; உயிரென உடல்வ ளர்த்தான்
துயரினைத் தூவென் றெள்ளித் தொண்டுசெய் கர்ம யோகி;
சுயநலந் துறந்த வீரன், சுந்தர சிங்க னென்பான் !*

*சாதுக்குப் பரம சாது; சண்டைக்குச் சலியா முண்டன் ;
யாதுக்கும் அஞ்சா நெஞ்சன், இறைவனுக் கேவல் செய்வோன்;
வாதுக்குச் சலியா வாதி, வழிநடை முழுதும் பாடி,
மேதக்க குருகி ரந்தம் விளக்கிநல் விருந்த ளித்தான்.*

*சாதிக ளின்றி முற்றுஞ் சமரஸ வாழ்வைச் சொல்லும்,
கீதத்தைப் பருகி யுள்ளக் கிளர்ச்சியால் விரைந்து சென்று,
கோதறு நண்பர் தூய குருபுரி மருங்கில் வந்தார்;
வீதியில், குருகி ரந்த ஊர்வலம் விளங்கக் கண்டார்....*

*திண்டிறல் படைத்த தீரர், தீநிறங் கொண்ட வீமர்,
எண்டிசை யெதி ரொலிக்க "ஏகஓங் கார ஸத்நாம்,
கொண்ட ஸ்ரீ அகால போற்றி! குருமணி போற்றி!" யென்று
பண்டிசை முழக்கி, யாங்கு புத்தகப் பவனி வந்தார் !*

*சுந்தர சிங்க னோடு சுத்தனை யுபச ரித்துச்
சந்தமார் கீத மோதும் சாதுக்க ளுடனே வைத்து,
"வந்தனம் இறைவா! உண்மை வழிதருங் குருவே" யென்று
முந்தினர்; குருத்வா ரத்தின் மூலஸந் நிதிக்கு வந்தார்..*

*ஏகஓங் காரன், சுத்தன் இன்பமெய் யறிவே யானோன்,
தாகங்கொண் டிசைத்த நல்லோர் தம்முளே நிலவுஞ் ஜோதி,
மோகசோ கங்க ளற்ற முத்தருக் கெளிய னாவான்,
பாகிஸத் ஸ்ரீ அகாலன் பரனருள் போற்றி போற்றி !*

*என்றிசை யெழுப்பி யன்பர் இடமறிந் தமர்ந்த பின்னர்,
மன்றுள பெரியார் வேண்ட, வாஹிஸத் குருவென் றன்புக்
குன்றென நிவந்து நின்று, நானக குருவின் காதை
இன்றுமக் கியம்பு கின்றேன் சுந்தர சிங்கன் என்றான் !*

### குரு நானக விஜயம்

*குருமணி நானக் வாழ்க, கோவிந்த சிங்கன் வாழ்க
திருசுக மணிய ளித்த இராமதாஸ் தீரன் வாழ்க !
உருகியன் பூறத் திவ்ய நாமங்கள் உரைக்கும் அன்பர்,
பெருகுசு யேச்சை யெய்திப் பேரின்பம் பழுத்து வாழ்க !*

*தொல்லுலகில் மக்களெல்லாந் தொல்லைதரும் பேதமின்றி,
எல்லவரும் ஒருகுலமாய் இறைவனருட் குடை நிழலில்,
அல்லலற வாழ்ந்திடநல் லறம்வகுத்த குரு மகிமை
சொல்லுகிற வாயமுதச் சுனையென்றே சொல்லுவமே !*

### பிறப்பு 1469

*பனிமலையின் பாலெனவே பஞ்சநதி பாய்ந்துவளர்,
இனியவள நாட்டினிலே இரவிநதிக் கரையினிலே,
தனமிகுந்த தால்வந்தி, சத்திரியர் குலத்தினிலே,
கனமிகுந்த கணக்கனுளான் கலியாண சந்த னென்பான்.*

*கருணையுள திருப்தை யெனுங் கற்பரசி யுடன்அவனும்*

*மருவிவளர் இல்லறத்தின் மணிவிளக்காய் அவதரித்தான்:*
*அருளுடனே நானகெனும் அற்புதமாம் சுயஞானி,*
*குருமணியாய்ப் பிறவிமுதற் கொள்கையுற மிகப்பொலிந்தான்.*

*பூவணிந்த காலையெனப் பொற்புடைய சாந்தனவன்,*
*நாவணிந்த நல்லுரைகள் ஞானமணி மாலைகளே ;*
*பாவணிந்த தீங்குரலான், பரிசுத்த நெஞ்சினிலே*
*தேவணிந்த தியானியவன் சித்தமெலாம் பத்திமயம் !*

*தெய்வநிலை கண்டறிந்த தீரனுக்குத் தந்தைபணப்*
*பைநிரம்பும் படிப்பளிக்கப் பண்டிதர்முன் கொண்டு சென்றான்*
*ஐயர் அரிவரி யதனை ஆரம்பிக்கும் போதினிலே,*
*பையலிந்தப் படிப்பெல்லாம் பதரென்றே மறுத்து நின்றான் !*

*பந்தனையைக் கரியாக்கிப் பகுத்தறிவே காகிதமாய்,*
*சிந்தையன்பே பேனாவாய்ச் சிரத்தைமிகும் உள்ளத்தால்,*
*எந்தைபரா பரனொருவன் எங்குமுளான் என்றெழுதின்,*
*அந்தவரி பரிசுத்தம் அளிக்கு மென்றே அறிவுரைத்தான்.*
*வாதமிகு பண்டிதரும் வழக்கான சடங்குடனே*
*வேதவிதி சாதிவிதி விளம்பிடவே நானகனும்,*
*சாதிமதச் சடங்கறியேன் ! சத்தியமே யானறிவேன்,*
*பேதபுத்தியொழிகவென்றான்; பேச்சடைத்தான் பண்டிதனும்*

*கல்லினையும் கட்டையையும் கடவுளெனக் கைகுவியேன்;*
*எல்லையற்ற பரம்பொருளுக் கேதுருவம் என்றுரைத்தான்.*
*அல்லலுற்ற தந்தையிவன் அடங்காத பித்த னென்றே,*
*நல்லதொரு வைத்தியன்பால் நானகனைப் பாருமென்றான் !*

*பைத்தியத்திற் கிம்மருந்தே பத்தியமென் றீந்தவனை,*
*"வைத்தியரே எமபாசம் மாறுமருந் தறிவீரோ?*
*மெய்த் துணையாந் திருவருளை மேவவொரு மருந்துளதோ*
*உய்த்துரையீ" ரென்றதுவும் உளந்திகைத்தான் மருத்துவனே.*

*ஞானியிவன் எனப்பணிந்து வைத்தியனும் நடந்திடவே,*
*கான்மலையுந் திரிந்தியற்கை, கனிந்தருளுங் கல்விகற்றே,*
*நானிலத்திற் பிறந்தபயன் யாதெனவே நன்கறிந்து,*
*கானமல ராலிறைவன் கருணையினைப் பெற்றுகந்தான் !*

*உபநயனஞ் செய்திடவே உவகைகொண்ட தந்தையிடம்,*
*சுபஞான நூலாகத் தூயமனந் திரித்த ணிந்தே,*
*தபமிகுந்த பிரமசரி யத்தாலே சத்தியத்தை,*
*உபசாந்த முடன்கூடல், உபநயனம் என்றுரைத்தான்.*

*காரியத்திற் குதவாத கதையவிழ்க்கும் பிள்ளையினைப்*
*"பாராயென் வயல்வேலை" எனத்தந்தை பணித்திடவே,*
*"பார்நிலத்தை யுழுவதெல்லாம் பாழ்வயிற்றின் பசி நீக்கப்*
*பேரின்ப விவசாயம் பேசுகிறேன்" கேளென்றான் !*

*"என்புடலே நிலமாக, இன்மனமாம் உழவாளி,*
*ஐம்புலனாம் கலப்பையினால், ஆழவுழு தார்வமெனும்*
*பைம்புனலைப் பாய்ச்சிநல்ல பக்திவிதை நட்டுநிதம்*
*எம்பெருமான் அருட்கனியை எய்துவதே" இன்ப மென்றான்.*

*கடைவையென் றுரைத்திடவே கடவுளன்பை மாந்தரெல்லாம்,*
*அடைந்திடவே உண்மையறி வாஞ்சரக்கை அளந்தளிக்கும்,*
*கடையேயென் பரஞானக் கடையெனவே வாலிபனும்,*

“அடசடமே” எனத்தந்தை அரசர்பணி செய்யென்றான்.
“அரசனெனக் காண்டவனே; அவன்பணியே என்பணி” யென்
றுரைமகனை “எப்படி நீ உருப்படுவாய்? சாஹரிலே
வருசந்தைச் சரக்குகளை மலிவாக வாங்கி வந்தே,
பெருலாபம் பெற்றேனும் பிழை” யெனவே பணங்கொடுத்தான்.

ஊதியங்கொண் டுறுவனென ஓர்பரியிற் சென்ற மகன்,
பாதையிலே பக்கிரிகள் பத்தியிலே மனமிழந்து,
மாதுரிய விருந்தளித்தே, மகிழ்ச்சியுடன் வந்து “பெரும்
ஊதியம்புண் ணியமப்பா உண்டுபர லோக” மென்றான் !

கேட்டி றைந்த கிளர்சினத் தந்தைக்கும்
”ஈட்டுஞ் செல்வத்தை ஈந்திடப் புண்ணியம்,
பூட்டப் பாவம் புரிந்தது வா” மெனக்
காட்டினான் அறங் காத்திடும் வாழ்க்கையே !

தங்கை நாதனுந் தால்வந்தி மன்னனும்,
பொங்கு ஞானப் புனிதனை நேசித்தே,
துங்க மானசு லக்ஷணை யென்கிற
நங்கையைச் சுப நன்மணங் கூட்டினார்.

சடங்கு — மந்திரஞ் சாற்றிட லின்றியே,
கடவு ளைக்கவி மாலையி னேத்தியே,
திடவு றுதிகொள் ஞானி திருமணக்
கடனை யாற்றிக் களிப்புற வாழ்ந்தனன் !

இல்ல றத்தை இழுக்கறக் காத்திரு
நல்ல மைந்தரை நானகன் பெற்றபின்,
அல்ல லாக்கிடும் ஆசைத் தினவின்றி,
மெல்ல மெல்லத் துறவினை மேற்கொண்டான் !

வளமி குந்த நவாபின் வளர்பெருங்
களஞ்சி யத்திற் கணக்குறு தானியம்
அளந்து கொட்டும் அலுவல் கிடைத்ததும்,
தளர்வி லாது தழைத்தனன் இல்லறம்.

காரி யத்திற் கருத்துறு நானகன்
தேரா வென்னிற் சிலிர்த்துளம் பூரிப்பான்.
வாரி வேந்தன் வழங்குசன் மானத்தை,
மாரி போல வழங்குவன் ஏழைக்கே.
எளிய வாழ்வும் இறைவன் அருளையே,
தெளிய வேண்டுந் தியானமுங் கானமும்,
ஒளிவி லாத்திரு ஞான வுரைகளும்,
இளகு நெஞ்சமும் இன்பம ளிக்குமே.

வான் முகிலை விரும்பும் பயிரைப்போல்,
தேன்ம லரினைத் தேடிடும் வண்டுபோல்,
ஞான வத்துவை நாடிய நானகன்
மோனப் பித்தென மூடர் நகைத்தனர்.

சிந்தை யெல்லாந் திருவருள் வேட்கையாய்ப்
பந்த வாழ்வைப் பதரென் றுதறிய
தொந்த மற்றுத் தனிமை துலங்கிடும்,
இந்த ஞானியைப் பேயென்றும் எண்ணினார் !

*விரைந்திப் பேயை வெருட்டென லோடியே,*
*தெரிந்த னுப்பிய சித்திக் மவுல்வியும்,*
*புரிந்த மந்திரம், போட்ட புகையுடன்,*
*கரிந்த தன்றியோர் காரிய மில்லையால் !*

*“எந்தப் பேயினி ஏ” கென் றரற்றிடும்*
*மந்தி ரனை “மவுல்வி மாகாசய,*
*பந்த மற்ற பரம்பொரு ளாசைப்பேய்,*
*இந்தப் பே” யென் றிடிநகை செய்தனன் !*

*ஊச லாடும் உளத்தை யடக்கியே,*
*பாச மெல்லாம் பரம னிடத்திலே*
*நேச மாக நிறுத்தி, யவனருள்*
*ஆசைப் பேய்பிடித் தாடிடும் அன்பன்யான் !*

*அரிஅல் லாவென் றழைக்கும் அவனையான்,*
*உரிமை கொண்டென் உளத்திற் கலக்கவோர்*
*பெரிய மந்திரம் பேசென நானகன்,*
*உரை யெழாது மவுல்வியும் ஓடினான்.....*

*முந்து கோன்முன் முடுகிய மௌல்வியும்*
*மந்தி ரத்தில் வளைப்பறு பேயிவன்,*
*இந்து முஸ்லிம் இறைவரை ஒன்றென்பான்,*
*வந்து பாருமென் றேவசை கூறினான் !*

*“ஏனிப் பித்” தென் றிறைவனுங் கேட்டிட,*
*ஞானப் பித்தன், பயமறு நானகன்,*
*தீனிஸ் லாமிற்கும் சீக்கியர்க் கும்பொது*
*வான தேவன் வளர்த்திடும் பித்தென்றான் !*

*“பொதுவெ னிலெம் புனிதம சூதியில்,*
*முதல்வனைத் தொழு” வென்ன முஸல்மனும்*
*“அதுசரி” யென் றமைந்த நிமாசிலே,*
*இதய வாசனை யெண்ணினன் புண்ணியன் !*

*எம்மைப் போல வழுத்தி யெழாததேன்?*
*பொம்மை போலமர் வாய்புக லென்றுமன்,*
*வெம்மை யாக வினவலு நானகன்,*
*செம்மை யாகச் சிரிப்புரை பேசினான் !*

*காண்டஹார் குதிரையிற் கருத்த லைந்திட*
*ஈண்டுன துடலமே இசைத்தெ ழுந்ததே*
*ஆண்டவ னருளையான் அமர்ந்து மோனமாய்*
*வேண்டினன் என்றனன் வியக்க வேந்தனே !*

*நானகன் போக்கை நவாபு கண்டிவன்*
*ஞானியென் றறிந்ததும் அன்பு நாட்டியே*
*ஏனினி ஊழியம்? இனியுன் வாழ்விற்கே*
*கானமுந் தியானமுங் கடமை யாமென்றான்,*

*இத்ததி நானகன் இராம்ரஹிம் என*
*நித்தியம் அன்புசெய் நிமல னாகிய*
*பத்தக பீரினைப் பார்த்துப் பேரின்பத்*
*தத்துவ மறிந்தவன் சரண் புகுந்தனன்.*

*பவபந் தத்தைப் பழுதறப் போக்கியே*
*சிவந்து லங்கிடச் சீரிய நானகன்,*
*அவனி மாந்தரின் அன்பை வளர்த்திடத்*
*தவம்பு ரிந்து தனித்துற வேந்தினான் !*

*செருக்கி லாத செழுமன ஞானியின்*
*உருக்க மான உளத்துறு சாந்தியில்,*
*கருக்கொண் டீசன் கருணை யருளின்பம்*
*பெருக்க மாகப் பிறங்க வளர்ந்ததால் !*
*அரு ளெழுச்சி யடைந்த பெரியவன்,*
*இருள டர்ந்த உலகுமுன் னேறியே,*
*பொரு ளுணர்ந்து திருந்திடப் போதிக்கும்,*
*திரு வினையைச் சிரமிசை கொண்டனன்.*

*வேட மின்றி வெளிப்பகட் டின்றியே,*
*ஓடுஞ் சித்தம் ஒடுங்கித் தியானத்தில்,*
*கூடி நிற்கக் குலவிடும் ஈசனை*
*நாடு மென்று நவின்றன னாட்டிலே !*

*ஆசைப் பேயை அடித்துத் துரத்துமின் !*
*வேசை போன்ற விழைவை யடக்குமின்,*
*ஈச னன்பை யிசைமினென் றோதினான்,*
*பாச மற்றுப் பழுத்த முனிவனே !*

*வசையி லாத மணிமொழி கேட்டதற்*
*கிசைய வந்தனர் இன்னியல் மாணவர் ;*
*இசைவலார் பலன் மர்த்தனன் என்பவர்*
*அசைவ றுந்துணை யாயுடன் ஏகினார் !*

*குருவின் பாட்டைக் குவலயங் கேட்டுளம்,*
*உருகப் பாடினன் உத்தம பாய்பலன்,*
*கருவி மீட்டிக் களிப்புறப் பாடினான்,*
*மருவு மர்த்தனன் வான்குயில் என்னவே !*

*எளியர் அன்புடன் ஈந்திடுங் கூழினைக்*
*களிமி குந்து கடும்பசிக் குண்ணுவார் !*
*எளியர் நோக இரத்தப் பணத்திமிர்*
*விளை விருந்தை விரும்பியுந் தொட்டிடார்.*

**ஏழையின் விருந்து**

*என்விருந் துதறி ஏழையின் பழையதைத்*
*தின்றதேன் என்று சினந்ததோர் செல்வனை*
*இலட்டு விருந்தை எடுத்துவா என்றான்....*
*அதனைப் பிழிந்தான் அனைத்தும் இரத்தமே.*
*ஏழையின் பழையதை இருகையாற் பிழிந்தான்*
*பாலாய் வடிந்ததைப் பார்த்தனன் செல்வன்....*
*"செல்வநின் விருந்து தீனரின் இரத்தம்....*
*உழைக்கும் ஏழையின் உப்பும் அமுதே....."*
*எனவே நானகன், கனவான் உணர்ந்து*
*தனத்தை யெல்லாந் தானஞ் செய்து*
*தாஸ னாகிச் சாதனஞ் செய்தான்.*

**நான் சர்க்கரை**

*மூல்டான் சென்ற மூதறி வாளனைப்*
*பக்கிரிப் படைகள் பகடிசெய் திடவே*
*கிண்ணந் ததும்ப வெண்பால் அனுப்பினர்*
*சர்க்கரைபோட்டுத் தந்தான் நானகன்.*

*"பருகும் பாலைப் பருகுக: திருப்பித்
தருவது நன்றிலை தயாளுவே" என்று
மர்த்தனன் சொல்ல "மாணவ மணியே,
பக்கிரி நிரம்பிய பட்டணந் தனிலே,
நீயினும் எதற்கென நினைத்துக் குறிக்கவே
பாத்திரம் நிரம்பப் பாலை யனுப்பினர் ;
நீங்கள் இங்கே நிறைந்த பாலே,
ஆயினும் யானும் அந்தப் பாலில்
சர்க்கரை போலச் சார்ந்தேன் ; எனவே
"குறித்தேன்" என்றே குருமணி யறிவை
அறிந்த துறவிகள் அடிபணிந் தேற்றார்.*

**அர்க்கியம்**

*பலதலஞ் சுற்றி நலவழி சொல்லி,
நானகன் கங்கை நதிக்கரை நடந்து,
அரித்துவா ரத்தை அணுகிக் குளித்தான்....
ஆங்கே காலை அந்தணர் கிழக்கே,
அருக்கனை நோக்கி அருக்கியம் விடுத்தார்....
நானகன் மேற்கே நன்னீர் இறைத்தான்.....*

அந்தணர்: *நீயேன் மேற்கே நீரிறைப் பாயோ?*
நானகன்: *நீரேன் கிழக்கே நீரிறைப் பீரோ?*
அந்தணர்: *இரவிமண் டலம்புக இறைக்கிறோம் யாமே!*
நானகன்: *பஞ்சாப் வயல்களிற் பாயயான் இறைப்பதே.*
அந்தணர்: *பாஞ்சாலத்திற் பாயுமோ உன்னீர்?*
நானகன்: *உந்நீர் இரவிக் கேகுவ துண்மையேல்,
என்னீர் பஞ்சாப் ஏகிடத் தடையேன்?*
அந்தணர்: *தருப்பணம் செய்யும் அருக்கியம், எங்கள்
பிதுர்க்கள் பருகப் பெய்திடும் அன்றோ?*
நானகன்: *யானிங் கிறைப்பதும் எதிரூர் ஏழை
குடிக்கக் கிடைக்குமே ; குதர்க்கம் ஏனோ?*
அந்தணர்: *இங்கே விடுநீர் அங்கேன் செல்லும்?*
நானகன்: *நீங்கள் விடுநீர் நீளச் சென்று
மதிக்கும் எட்டாப் பிதுருல கேகுமோ?*

*வாயாடி என்று வைதனர் பலபேர்.
வாய்மை என்றே வணங்கினார் சிலரே !*

**மா விளக்கு**

*காசி கங்கையில் கணக்கறு பக்தர்,
பட்டப் பகலிற் பகல்விளக் கேற்றி,
விட்டனர் கங்கையில் விநோதமாய்க் கண்டே,
"பகல்விளக் கேனோ, பக்தர்காள் கேளீர்!
மாசறு முடலே மாவிளக் காகி,
அன்புநெய் வார்த்தே ஆர்வத் திரியில்,
அறிவொளி யேற்றின் ஆனந்த மாமே !
அவ்வொளி யிறைவன் அருளொளி யாமே !"
என்றலும், சிலபேர் எரிந்து விழுந்தனர்.
அறிந்த சிலபேர் அடிபணிந் தாரே !*

**பிரயாணம்**

*இவ்வா றேகும் இடந்தொறும் உண்மை
இலகக் காட்டி இந்தியா முழுதும்,
இமய மலைமுதல் இராமேச் சுரம்வரை
இலங்கை முதலாச் சிங்களத் தீவெலாம்,*

*பார்த்த பின்னொரு பாய்மரக் கப்பலில்*
*அரபிக் கடலை அமைதியாய்த் தாண்டி,*
*புண்ணியன் மெக்கா புரியடைந் தானே !*

## எங்குங் கடவுள்

*எங்குங் கடவுள் என்னுமித் துறவி,*
*காபா வுக்கெதிர் காலை நீட்டிக்*
*கண்ணயர்ந் துறங்கக் கண்டு வெகுண்டே,*
*காஃஜி கானுதின், "காபிர், ஹராம்" எனக்*
*குருவின் காலைக் கொட்புற வுதைத்தான்....*
*"களைத்துளேன் ஹஜரத், காபா இல்லாத்*
*திசையிற் காலைத் திருப்பிப் போடும்...."*
*எனவே முனிவன், எதிர்த்திசை காலை*
*இழுத்துப் போட்டான் என்னே வியப்பு !*
*கடிதினில் அத்திசை காபா கண்டான்.*
*மற்றொரு திசையில் மாற்றிப் போடவே*
*கடிதிலத் திசையும் காபா கண்டான்.*
*சித்தன் இவனெனத் தேர்ந்த காஃஜியும்,*
*"இந்துவா முஸ்லிமா எம்மதம் சொல்" லென,*
*நானக குருஜீ நவின்றதைக் கேளீர்:*
*"இந்துவு மில்லை; இஸ்லாமு மில்லை;*
*தந்தை இறைவன்; சகோதரர் மாந்தர்*
*அன்பே கொள்கை அறிவே பூசை*
*அம்மத மெனக்குச் சம்மத மாமே !*
*இதுவே இஸ்லாம் இசைப்பது; சலா" மெனக்*
*காஃஜியுங் குருவின் கதைகேட் டுவந்தான்.*
*இவ்வா றுலகெலாம் எம்மதத் தாரும்*
*ஒப்பவே உண்மையை ஒளிரக் காட்டி,*
*தாய்நா டேகித் தயைமிகு குருவும்*
*கர்த்தார் புரியிற் கடைசிநா ளிருந்தான்.*
*இஸ்லா மியரும் இந்து நண்பரும்,*
*சீட ராகித் திருநெறி பயின்றார்.*
*காலை மாலை கவிபுனைந் திசைத்து,*
*ஜப்ஜி படித்துத் திருப்பெய ரோதி,*
*இறைவனில் உள்ளம் இரண்டறக் கலந்து,*
*நானகன் ஒருநாள் தியான சமாதியில்*
*இருந்துதன் இறுதி இதுவென மொழிந்தான்....*
*அங்கதன் என்னும் அருமைச் சீடனைக்*
*குருபீ டத்திற் குலவிடச் செய்தான்.*
*வாஹி குருவென வாழ்த்திடு மாணவர்,*
*உத்தம குருவின் உடலை எப்படி*
*எவர்கொள் கைப்படி யிடுவதென் றருள்கென,*
*"நானக னுக்கு நானா மதமிலை.*
*அன்பே மசூதி, ஆர்வமே விரிப்பாம்,*
*தருமமே குரானாம், தயையே காபா,*
*உண்மையே குருவாம், உதவியே கொள்கை,*
*இறைவனை நினைத்தலே எண்ணும் ஜபமாம்,*
*சர்வாத் மாக்களின் சமரஸம் கோயிலாம்,*
*பொதுநலத் தொண்டே பூஜையாம்; ஆதலின்,*
*உடலின் இருபுறம் உதிர்மலர் வைத்தே*
*எவர்மலர் வாடா திருக்குமோ மறுநாள்,*
*அவர்மதப் படியே அடக்கம் செய்மின்....*
*எம்மத மகானையும் இறைஞ்சி நீவிர்*
*உள்ளன் புடனே ஒருகுல மாக*
*வாழ்வீர் சீடர்காள் ! வழிவழி வாழ்வீர் !....*

*ஸத்ஸ்ரீ அகால், ஓம் ஸத்ஸ்ரீ அகால்" என*
*உடலை நீத்தான் உண்மைக் குருவே—*
*இருமதத் தினரும் இருபுறம் மலரை*
*வைத்துப் போர்த்த மறுநாட் காலை,*
*மலரே கண்டார். மனிதனங் கில்லை.*
*போர்த்த துணியைப் போட்டிரு துண்டாய்,*
*அவரவர் மனப்படி அடக்கஞ் செய்தே,*
*இருவரும் ஜப்ஜீ இனிதுற ஓதி,*
*ஒருமன நேயராய் ஒன்றுபட் டிருந்தே,*
*குருக்களைப் பணிந்து குருகுல மக்களாய்,*
*வீர தீரராய் விளங்கினார் வாழி !*
*நோக்குயர் வீரச் சீக்கியர் வாழ்கவே !*
*இத்தகைப் பெரியோ னாலே இந்துமுஸ் லீம்கள் ஒன்றாய்த்*
*தத்துவ வுண்மை கண்டு சமரஸ ராக வாழ்ந்தார்...*
*சத்திய வடிவாய் வந்த சத்குரு வாழ்க வென்றே*
*சுத்தனார் மகிழக் காதை சுந்தரன் முடித்தான் மாதோ !*
*மங்கல மலர்கள் வாஹி குருவென வாரித் தூவி,*
*பொங்கி மதுர கீத மிசைத்தனர் ; புனித நூலைச்*
*செங்கையால் வணங்கிச் சீடர் செயசெய முழக்கஞ் செய்து,*
*சிங்கம்போல் வீறு பெற்றுத் திருவிழா முடிந்த தென்றார்...*

## 15. கிரந்த ஸாகெபுப் படலம்

*சுந்தரன் சொற்படி சுத்தனாங் கிருந்தே,*
*சீக்கிய சாதனம் சிறப்புறச் செய்தான்,*
*நானக பக்தி கானம் பருகினான்,*
*சுகமணி ஆத்துமச் சுகந்தரக் கண்டான்,*
*நானக ருக்கு நண்பரா யமைந்த*
*கபீரின் பாட்டைக் களிப்புறப் பாடினான்.*
*குருமந் திரத்திற் குவிந்த மனதுடன்*
*தினமிரு வேளை தியானஞ் செய்தான்,*
*உதாசிக ளுடனே ஓதினான் கிரந்தம்,*
*அகாலி களுடன் அன்புற வாடிக்*
*குருகோ விந்தனின் கொள்கையைக் கற்றான்,*
*உடலும் மனமும் உறுதிபெற் றொளிரும்,*
*சுத்தன் வீரமும், தூயநல் வாழ்வும்,*
*பத்திப் பெருக்கும் பார்த்த சீக்கியர்,*
*என்றுந் தம்மிடை இருந்திட வேண்டினார்...*
*ஆயினும் சுத்தன் அறிவின் எல்லையைக்*
*காணக் கருதி மாண்பெறு வேதம்*
*ஒப்பிய சமய உண்மையை வேட்டான்....*

### ஆரியமான்

*அருவையும் அன்புக் குருவையும் வணங்குஞ்*
*சமய மனைத்தையுந் தானறிந் ததன்பின்*
*உருவா யிறைவனை உள்ளன் புடனே*
*மதிக்கும் பண்டை மதங்களைக் காண*
*விரும்பிய நாளில், வெண்ணிறச் சோதியைக்*
*கதிரிலுந் தீயிலுந் துதியுடன் வணங்கும்,*
*ஆரிய மானெனுஞ் ஜாரதுட் டிரனைக்*
*கண்டான், கேட்டான். கலந்துற வாடினான்....*
*ஆரிய மானும் அழைத்திடத் தூயன்,*
*மிக்க விருப்புடன் அக்கினி புரிக்குச்*
*செலவுடன் பட்டுச் சீக்கிய ருக்கு*

*நல்லுரை சொன்னதை நவின்றிடக் கேளீர் ;
ஓங்கார னென்னும் உயர்ந்த பெயரால்,
குருபுரி வந்து குலவிய சாது,
சுத்தனைச் சீக்கியர், மெத்தவும் போற்றிக்
குருத்துவா ரத்திற் கூட்டங் கூடி
அகமகிழ் வுடனே சுகமணி பாடி,
புகழுரை கூறிப் போவிடை தந்தார்....
சுத்தன் எழுந்து "ஓம் சத்திய நாம"
என்ற கீதம் இனிதுறப் பாடி,
சீக்கிய மதத்தின் சிறப்பை விளக்கி,
அரியதோர் சொற்பொழி வாற்றினான் ஆங்கே !*

## குரு கிரந்த சாரம்

*"ஸத்ஸ்ரீ அகாலெனச் சத்தியப் பொருளை,
தியானத் தாலும் கானத் தாலும்,
வழிபட் டின்ப வாரிதி யாடும்,
பாக்கியங் கொண்ட சீக்கிய நண்பீர்,
சுந்தர ருடனே வந்தயான் உம்பால்,
ஒவ்வொரு நாளும் செவ்விதின் எய்திய
ஞானப் பயனை நவின்றிடப் போமோ?
என்றும் உமக்கு நன்றிமிக் குடையேன்,
என்மனங் கவர்ந்த உம்மதச் சிறப்பை
உணர்ந்த படியே உரைப்பேன் கேளீர்:—*

## கபீர்

*இந்து முஸ்லிம் இருமதத் தாரும்,
கலகமில் லாது கலந்து வாழச்
செய்த மகான்கள் செவ்விய இருவர்.
ஒருவர் கபீர்மற் றொருவர் நானகர் !
நெசவுத் தொழிலார் நீரு நிமாவெனும்,
இஸ்லாம் அன்பர் இனிது வளர்த்த
அனாதைச் சேயே அன்பர் கபீர்தாஸ்,
செந்தமிழ் வைணவச் செல்வ ரான
இராமா னந்தர் இராமோப தேசம்
செய்யக் கபீர்தாஸ் தீஞ்சுவை இந்தியால்
'இராம் ரஹீம்' என்னும் நாம ஜபத்தால்
இறைவனை வழுத்தி, இன்னிசை பாடி,
இந்துமுஸ் லிம்களின் இணைப்பா யிருந்தார்.
அனைவ ருள்ளும் ஆண்டவன் உள்ளான்.
வெற்றிலைப் பச்சையில் விளங்குஞ் செம்மைபோல்,
கரந்தவ னுள்ளான் ; காதலால் வருவான் !
எல்லாம் அவனெனில் எவருன் பகைவர்?
பகைவன் உன்மனப் பான்மையே யாகும்,
எண்ணரும் பகைவர் எதிர்த்துத் தாக்கினும்,
சித்தம் இறையிடம் வைத்தவர் அஞ்சார்,
உயிரி ரக்கமும், உள்ளத் தூய்மையும்,
அமைதியும் சேவையும், அன்புங் கொண்ட
சாது ஜனங்களைத் தாங்குவான் பரமன்.
அடைய துடிக்கும் அன்ப ருள்ளே,
இறைவன் வருவான், குறைகளைத் தீர்ப்பான்.
இந்து வாயினும் இஸ்லா மாயினும்,
பக்தருக் கருளும் பகவான் ஒருவனே.
படித்துறை பலவெனில் படிநீர் ஒன்றே,
இதழ்கள் பலவெனிற் இனமலர் ஒன்றே.
எந்தச் சாதி எனும்பேச் சில்லை,*

*அந்தக் கரணம் அழுக்கற் றிருந்தால்,*
*ஆண்டவன் அருளை வேண்டியோர் பெறலாம்,*
*என்றுப தேசம் இயற்றிடும் பாடலால்,*
*பக்திமார்க் கத்தைப் பரப்பிய கபீர்தாஸ்,*
*பசிக்கு நெசவும் பரத்திலே நெஞ்சும்*
*வைத்து வாழ்ந்த உத்தமர் கபீர்தாஸ்,*
*ஒருமுறை வந்து குருநா னகரை,*
*அன்புறக் கண்டார் ! அடியார் இருவரும்,*
*இசைமல ராலே இறைவனை வணங்கினார்,*
*கபீரின் தெய்வக் காதலும் ஆர்வமும்,*
*இல்லறத் துறவும், நல்லறச் செயலும்,*
*நானகர் உளத்தே நன்றாய் ஊன்றவே,*
*இவரும் அவர்போல் இந்து முஸல்மான்,*
*ஒற்றுமை பெருக உளங்கனிந் தாரே.*
*இல்லறத் துறவியாய் இறைவனுக் காளாய்,*
*ஆசை யகந்தையை அறவே நீத்து,*
*முற்றும் உண்மையைக் கற்றுத் தன்னுள்,*
*ஞானமுந் தியானமும் கானமு மாக,*
*சாதி மதமாம் பேதமே யின்றிச்*
*சமரஸ நோக்குடன் சகத்திற் குதவிய*
*நானகர் பெருமை நவின்றிடப் போமோ?*
*காசியி லில்லைமெக் காவிலு மில்லை,*
*கட்டுப் பட்டோர் கடத்தினி லில்லை:*
*அருவா யெங்கும் ஆண்டவன் இருக்கிறான்,*
*தருமமும் ஞானமும், கருமமு மறிந்தே*
*உண்மை யின்பம் உணர்ந்து நடந்தால்,*
*தெளிந்த மனமும் செருக்கிலா நடையும்,*
*வெளிப்பகட் டில்லா எளிமையும் தூய்மையும்*
*போற்றினால், வாழ்வு புண்ணியப் பயனாம்.*
*ஏகஓங் காரன் இறைவனாம்; அவனை*
*அன்பும் தியாகமும் அடைந்திடும் வழியாம்.*
*அன்பைப் பெற்றோர் அனைத்தையும் பெற்றார்;*
*அன்பை யிழந்தார் அனைத்தையும் இழந்தார்.*
*தாமத புத்தியைத் தள்ளி யொதுக்கி,*
*நாம ஜபத்தை நாளுஞ் செய்மினோ !*
*சேமம் அருளும் சித்தவை ராக்கியம்,*
*காமமோ கங்கள் கவலைப் பிணியாம்.*
*சாதி பேதச் சடங்குகள் வேண்டா.*
*நெஞ்சிற் கடவுளை நினைப்பவர் அஞ்சார்.*
*ஆண்டவன் அருளே அச்சந் தவிர்க்கும்.*
*சாது சங்கமும் சத்திய வாழ்வும்,*
*ஆத்தும சுத்தியும், ஐம்புல னடக்கமும்,*
*அருட்பெருங் குருவிடம் அன்பும் பணிவும்*
*தீமையைப் போக்கி நன்மையைச் செயுமே.*
*இப்பொரு ளடங்கும் இசைப்பாட் டாலே,*
*மனிதருக் கெல்லாம் இனியதே செய்து,*
*ஜப்ஜி என்னுந் திருநூ லளித்து,*
*சீக்கிய மரபை ஆக்கிய நானகன்,*
*என்னுளக் கோயிலில் என்றும் இருப்பனே.*
*அவன்பின் வந்த தவம்பெறுங் குருமார்,*
*அங்கதன், உமர்தாஸ், அருச்சனன், இராமதாஸ்,*
*ஹரிகிருட் டினன், தேஜ் பகதூர் ஆகியோர்,*
*அனைவரும் தியாகிகள், ஆத்தும வீரரே.*
*உயிரை மதியா உண்மைத் தொண்டரே,*
*அவருள் இராமதாஸ் அருளிய சுகமணி,*

*படிக்கப் படிக்கப் பரமா னந்தமாம்.*
*பத்தாங் குருமணி பாரத திலகம்,*
*குருகோ விந்தன் உருவீந் தோங்கும்*
*அகாலியர் வீரமும் ஆத்தும தியாகமும்,*
*உலகம் புகழும் உதாரண மாமே.*
*இக்கா லத்திலும் இச்சமு தாயம்,*
*வீறு படைத்த வீரக் கூட்டமாம்.*
*நாட்டிற் சிறந்த நண்பரைக் கண்டேன்.*
*அன்பீர், உம்மை அகல மனமிலை.*
*என்னினும் என்பசி எல்லையில் லாததே;*
*இன்னும் இன்னும் முன்னே சென்றே*
*அறிவின் ஆழமும் அகலமும் அறிய*
*விடைபெறு கின்றேன், வீரக் குழுவீர்,*
*சுந்தர சிங்கரே, வந்தனம், வந்தனம் !*
*ஸத்ஸ்ரீ அகாலெனச் சாற்றிமெய் யன்பர்,*
*வழியனுப் பிடவே மாசறு தூயன்*
*ஆரிய மானுடன் அக்கினி நகரை*
*அடைந்தான்; அங்கே அடைவோம் நாமே !*

## 16. ஜரதுஷ்டிரப் படலம்

*ஆவிநல்கும் அகரக் கடவுளை*
*தேவ தேவனைத் திவ்விய ஜோதியை*
*நாவு ரைக்க நடையெளிதாகவே*
*மேவும் ஊரிது வென்றனன் மித்திரன் !*

*சொக்கத் தங்கச் சுடர்விரி நன்னகர்,*
*மிக்கத் தூய விழுமிய தொன்னகர்,*
*அக்கி னிபுரி யாகும் அணிநகர்*
*தக்க செல்வர் தழைக்கும் அளகையே !*

*சுத்த மாகத் துலங்கிடும் வீதிகள்,*
*சுத்த மாகத் துலங்கிடும் வீடுகள்,*
*சுத்த மாகத் துலங்கும் அகரனின்*
*பத்தர் வாழும் பழம்பதி யிஃதரோ !*

*கல்வி கேள்வி கணக்கறி வித்தகர்,*
*செல்வ மோங்கிச் செழிக்குந் தொழிலினர்,*
*நல் குரவு நடுங்கு மிவர்உறை*
*எல்லைப் பக்கம் எடுத்தடி வைக்கவே !*

*கற்பு மிக்க கவின்பெறு மாதரார்,*
*பொற்பு மிக்க பொலிமுகச் செவ்வியர்,*
*அற்பு தக்கலை ஆருயிர் பெற்றனார்,*
*சொற்க ரும்பரஞ் ஜோதி வணங்குவார் !*

*பிச்சை வாழ்வும், பிறன்மனை பார்த்திடுங்*
*கொச்சை வாழ்வுங் கொடும்விலை வாழ்க்கையும்,*
*நச்சு வாழ்வெனப் போக்கிய நன்னகர்,*
*மெச்சு வாழ்வை வியந்தனன் சுத்தனே !*

*கூர்ந்த மூக்குங் குளிர்முகப் பார்வையும்,*
*தேர்ந்த சொல்லுந் திருவின் பெருமையும்,*
*சேர்ந்த நண்பர் சிறந்த கடவுளன்*
*பார்ந்த சீலரை ஆர்வமோ டேற்றனர்.*

*வருக ஜோதி வளர்நகர் ஆர்யமான்,*

வருக நண்பர், வருக நலமெனா,
இருகை யாலும் இனிதுற வேற்றனர்,
வருவி ருந்தை மதித்திடும் வண்மையர் !

முகமன் கூறி நகர முதல்வர்கள்,
அக மகிழ விருந்தளித் தானதும்,
அகர மந்திரம் புக்கின் றருளினைப்
பகவன் பெற்றதோர் பண்டிகை நாளதால்.

ஊர் முழுதும் உவந்திட நங்குரு
ஜார துஷ்டரன் சரித்திரஞ் சாற்றென,
ஆரி யனும் அமுத விருந்தெனச்
சீரி யன்கதை செப்பலுற் றானரோ !

கிளர் பசும்பொன் கெழுமிய சோதியாய்
வளர்சுடரை வழுத்தி வணங்கியே,
ஒளி யரசனை உள்ளத் திருத்தியே
தெளி வுரைகளைச் செப்பினன் ஆர்யமான் !

## ஜரதுஷ்ட்ரர் சரிதை

அழகுங் கலையும் அணைந்து பொலியும்
இரானிய நாட்டில் இருள்படிந் தொருகால்,
அறிவும் ஒழுக்கமும் அன்பும் குறுகி,
கொடுமையுஞ் சினமுங் கொலையுங் கொள்ளையும்
பேயுபா சனையும் பில்லிசூ னியமும்,
தீமையும் வளர்ந்து திருவிழந் ததுவே !
இந்த நிலைமையை எண்ணி வருந்திய
ஸ்பைதா மர்குலப் பாக்கிய மன்னாள்,
துக்தோ வாவெனுந் தூய பெயரினாள்,
அகர மஜதனை அகங்குழைந் துருகி,
நாட்டைக் காவாய் நாயகவென்றாள்,
தஞ்ச மளித்துத் தயாபர னாங்கே,
"புனிதக் கன்னியே புருஷா சுவனைத்
திருமணம் புரிவாய் ஒருமகன் வருவான் !
எனதரு ளாலவன் இப்புவி காப்பான்" !
என்றலுங் கன்னி நன்றி செலுத்தி
அகர னன்பில் அகங்குழைந் திளகும்,
புருஷா சுவனைத் திருமணம் புரிந்தே,
இல்லற மாகிய நல்லறங் காத்தாள் !
மங்கள மனையறம் பொங்கிட வந்த
மக்கள் ஐவருள் வாய்மை யொளியாய்
வந்தவன் மூன்றாம் வரம்பெறு மகனே !
பிறந்ததும் புன்னகை புரிந்தநன் மைந்தன்
பொன்னொளிர் அழகன் புண்ணியன், அவனை
ஸ்பிதாமன் என்றனர் பெற்றவர் ; பின்னே,
ஜரதுஷ் டிரனெனச் சகமறிந் ததுவே !
ஜரதம் பொன்னாம் உஷ்டிரம் ஒளியாம்,
பொன்னொளி வண்ணன் என்பதே பொருளாம்!
அன்னவன் பிறந்த நன்னல நாளில்,
புவியுளஞ் சிலிர்க்கப் புண்ணியந் தளிர்க்கவே,
புதுமீன் காட்டிப் பொலிந்தது வானே !
சீனத் துதித்த ஞானி லவோத்ஸன்
போல ஸ்பிதாமன், புவியின் இயல்பை,
ஐந்து வயதிலே அறிந்து மோனமாய்ச்

*சிந்தனை செய்து தீமையை விலக்கி,*
*நல்ல தன்மையே நாளும் வளர்த்தான்.*
*செருக்கும் வஞ்சமும் சிறுமை பொறாமையும்,*
*காம வெறிகளும் கடுஞ்சினப் போர்களும்*
*அழிநடம் புரியும் ஆத்திர வுலகை,*
*பார்த்துப் பார்த்துப் பரிதபித் துள்ளே,*
*மருந்தருள் என்று மஜதனைத் தொழுதான் !*
*புறஞ்செல் லாது புலன்களை யடக்கி,*
*மனத்தை வென்று மாசிலாத் துறவியாய்ப்*
*பதினைந் தாண்டிற் பட்டணம் விட்டு,*
*வீட்டை மறந்து, நாட்டையு மறந்து,*
*ஞானப் பசிக்கு மோனத் தனிமையில்*
*தியான வுணவு செழிப்புறத் தந்து,*
*சபாதன் மலைமிசைத் தவம்புரிந் தானே !*
*அதன்பிற கன்னோன் ஆரிய நாட்டின்*
*வித்தக ரிடத்தே வேதமுங் கற்றான்....*
*வேத வழியே வீறுடன் பயின்று,*
*ஸ்பிதாமன் மீண்டும் பெருந்தவம் புரிந்தான்.*
*உயிர்க்குயி ரான ஒருவன் அகரன்,*
*அன்பரின் பக்குவம் அறிந்தொரு சோதியாய்,*
*உள்ளே கிளர்ந்து, தெள்ளிய ஞானம்,*
*பொழிந்துபே ரின்பப் புதுவாழ் வளித்தான்.*
*அந்த ஞானமே ஜெந்தவஸ் தாவெனும்*
*வேதமா யெழுந்து விளங்கிய தாமே !*
*நலந்தீ தென்னும் பலங்க ளிரண்டு*
*மானிட ருள்ளே வளருவ தாமே.*
*மாசறு நலமே வகுமான தேவதை,*
*அழிக்குந் தீங்கே ஆங்கிர மானன்.*
*ஆங்கிர மானனை அடியொடு நீக்கி,*
*வகுமான னுக்கே மனதைக் கொடுத்து,*
*நல்லது சொல்லி, நல்லது செய்து,*
*காத்தலே இன்பக் கதிர்வழி யாமே !*
*சுத்தமே நன்மை — ஆஷேம் வாஹு*
*சுத்தமே இன்பம், சுத்தனாம் இறைவன்*
*இச்சையே நீதி— யதா ஆகு வைர்யா,*
*இறைவன் பணியை இயற்றிடு வோர்க்கே,*
*நல்லன யாவும் பல்குறக் கிடைக்கும்,*
*எனுமந் திரங்களை என்றும் போற்றி,*
*காழ்ப்புறு தீமையைக் கட்டுடன் விலக்கி,*
*எல்லா ருக்கும் நல்லதே செய்தால்,*
*அகர மஜதன் அருள்பெற லாமே !*
*இவ்வா றோதி எழுந்த தூயனை*
*ஆங்கரி மானன் அடக்கிட நினைத்துச்*
*செல்வர் செவியைச் செவிடாக் கினனே !*
*சொந்தநாட் டாருந் துளியும் போற்றிலர்.*
*பேயை வணங்கிய பித்தனே என்றார்.*
*செம்மொழி கேட்டுச் சீறி விழுந்தார்.*
*பன்னீ ராண்டுகள் பரிவுடன் முயன்றும்,*
*மைத்தோய் மாங்கன் ஒருவனே மாணவன்:*
*மற்றோர் எவரும் மதியா மையினால்,*
*துயர்மிகு ஜொரஸ்தர் சொந்த நாடொரீஇ,*
*புண்ணிய நாட்டை நண்ணிக் காசியில்*
*வேதமும் யோகமும் விருப்புடன் கற்றான்,*
*சீனநா டேகி ஞானம் பயின்றான்,*
*உன்னத மலையில் உட்குவிந் திருந்து,*

*சுடச்சுட நோற்றுச் சுத்த சித்தனாய்,*
*அகரன் அருளை மிகவும் பெற்றான்.*
*அன்பும் இரக்கமும், அறிவொளி ரமைதியும்,*
*பொருந்திய பொன்னார் புலவன் மீண்டும்,*
*இறைவன் ஆணையை நிறைவேற் றிடவே,*
*எழுந்தான் ; எதிரே எழுந்தாங் கிரிமான்,*
*"அரசும் செல்வமும் ஆட்சியுந் தருவேன்,*
*மாதரைத் தருவேன், வணங்கெனை" என்றான்.*
*"கிட்ட வராதே ; எட்டிநில் பேயே,*
*சுத்தன் சொல்லாற் சுடுவேன் உன்னை;*
*அகர னிடத்தில் அன்புகொண் டிருப்போர்,*
*மாய வலையிலே மாட்டிக் கொள்வரோ?*
*போபோ தீய புல்லனே" என்று*
*பேயை ஓட்டிப் பெருந்தகை யாளன்,*
*பொதுஜனங் களுக்குப் புனித நெறியை,*
*உபதே சிக்கவே ஊர்தொறுஞ் சென்றான்.*
*பொறாமை கொண்ட புத்தகப் பூச்சிகள்,*
*விஷா சுவனெனும் வேந்தனைத் தூண்டி,*
*அரசே ஸ்பிதாமன் அண்டப் புளுகன்,*
*மாயக் காரன் மாற்றான் என்றே*
*கோளேற் றிடவே, கொற்றவன் வெகுண்டு,*
*கலங்கறு தூதனைக் கடுஞ்சிறை யிட்டான்.*
*உடலே சிறையில்; உள்ளம் இறையில்;*
*துயரெலாம் யோகப் பயிற்சியில் மறந்து,*
*மாசறு தூயன் மனதை வென்றோன்,*
*கட்டுற் றிருந்துங் கவலையற் றானே !*
*வாதத் தாலே மன்னன் குதிரை*
*வருந்தக் கண்டு மருந்தொன் றின்றி,*
*ஜார துட்டிரன் சௌக்கியப் படுத்தவே,*
*அதிசயித் தரசன் அடிபணிந் துடனே,*
*குலத்துடன் மஜதாய் நலத்தினுக் குழைத்தான்.*
*மந்திரி பிசோஸ்திரன் மகளைத் தந்தான்.*
*இறைவன் புதல்வன் இஸ்பேந் திரனும்,*
*சகோதர னான ஜாரி பைரியும்,*
*அருட்பணி புரிய விருப்புட னெழுந்தார்.*
*இறைவன் கட்டளை இனிது நிறைவுற*
*ஜாரதுட் டிரனும் சமயத் தொண்டில்*
*ஈடுபட் டிரானிய நாடெலாஞ் சுற்றி,*
*வெற்றிமேல் வெற்றி பெற்றனன் ஆங்கே,*
*தீயர் அடங்கினர்; தூயர் செழித்தார்;*
*சுடர்மணிக் கோயில்கள் சுற்றிலு மெழுந்தன.*
*ஒளிவடி வான ஒருவனை அகரனை*
*சுத்தத் தாலே துதித்து வணங்கி,*
*அருட்பெரும் இன்பம் அடைந்து சிறந்தான்;*
*எங்கும் அமைதி இலகுறு நாளில்,*
*துரானிய மன்னன் அரஜா சுவனும்,*
*பேய்வெறி கொண்ட பெரும்பகை யாளரும்,*
*ஒளிவழிச் சென்ற ஒப்பறு மன்னனாம்*
*விஷதா சுவனுடன் வெஞ்சமர் தொடுத்தார்.*
*ஜாரதுஷ் டிரனும் தானைகள் சேர்த்து,*
*வாளைத் தீட்டி வன்சமர் செய்தான் ;*
*ஜாரி பைரி போரில் இறந்தான்.*
*அவன்மகன் எதிரியை அக்கணம் வீழ்த்தினான்.*
*மீண்டுந் துரானிய மிண்டர் புகுந்து,*
*ஜாரதுட் டிரரைச் சாக மடித்து,*

*இரத்த வெள்ளம் பெருக்கி எங்கும்,*
*ஸ்பிதாமன் தொழுத பேரொளிக் கோயிலில்,*
*புகுந்தனர்: அந்தோ புண்ணிய மூர்த்தி,*
*ஆஷேம் வாஹு அகூர ஓம் என்று*
*ஜபஞ்செயும் போது சதிவாள்ஓச்சி,*
*வெட்டினார் "சுத்தம் வெல்" கெனப் புனிதன்*
*ஜபமா லையினைச் சத்துரு மீது*
*வீசவே அதிலோர் வியன்கன லெழுந்தது,*
*சத்துரு வெந்து சாம்பலா யொழிந்தான் !*
*இக்கணம் எழுபத் தேழாம் வயதில்,*
*வினையுட லுதறி விமலனு மாங்கே,*
*அகரன் அருளில் ஐக்கிய மானான் !*
*தியாக பலிக்குத் திறமை பெருகுமே ;*
*மாதவத் தூதன் மாப்பிளை யான*
*ஜாமா சுவனே ஜரதுட் டிரரின்*
*குரு பீடத்திற் குலவி யிருந்து,*
*சத்குரு வாக்கைச் சரிவரத் தொகுத்து,*
*ஜெந்தவஸ் தாவெனும் சிறப்புநூ லாக்கி,*
*உலகெலாம் அதனை ஓதிடச் செய்தான்.*
*சமய வளர்ச்சி சாந்தமாய் நடந்தது.*
*நீண்ட காலம் ஆண்டதச் சமயம்.*
*எனினும், இந்த இருவினை யுலகில்,*
*ஆக்கமும் அழிவும் தாக்குவ துறுதியே.*
*எண்ணறு ஞானப் புண்ணிய நூல்களை*
*கிரேக்கரும் உரோமரும் கிளர்ந்த துருக்கரும்,*
*படையெடுத் தெரித்துப் பாழாக் கியபின்,*
*எஞ்சிய சிலதை எடுத்து மஜாதர்,*
*இந்தியா விற்கு வந்து வசித்தனர்.*
*இரானி யருக்கும் ஆரிய ருக்கும்*
*இனவொற் றுமையும் மனவொற் றுமையும்,*
*மொழியொற் றுமையும் அழியா திருந்ததால்,*
*ஜெந்தவஸ் தாவைச் செப்பனிட் டிங்கே,*
*மஜதாய் மதத்தினர் மாண்புறச் செழித்தார்—*
*எண்ணிற் சிறியர் திண்மையிற் பெரியார்,*
*கல்வியுந் தொழிலுஞ் செல்வமும் அறமும்,*
*பொதுநலப் பண்பும் பொருந்திய மேலோர் !*
*உலகம் போற்றும் உத்தம ரான*
*தாதா மேதா டாடா பாபா*
*மேஹர் பாப வீரக் காமா*
*முதலிய பெரியரை உதவிய சமூகம்,*
*பார்ஸி சமூகம் பல்லாண்டு வாழ்கவே*
*மாசறுஜோதி மஜதன் அருள்கவே.....*

* * * *

*ஆர்யமான் இவ்வகை ஆர்வமாய்ப் பேசச்*
*சபையோர் உருகினர், சத்திய மைந்தன்,*
*புத்துணர் வடைந்து, மஜதாய் மதத்தைப்*
*பண்புறப் பயின்று பயன்பெற நாடினான்....*
*ஆரிய மானே சீரிய குருவாய்,*
*பஹல்வி மொழியிற் பகர்ந்த ஜெந்த*
*அவஸ்தா வேதம் ஆழ்ந்தா ராய்ந்து,*
*வேதச் சமயமே ஈதெனக் கண்டான் !*
*ஆதிஜெந் தாவின் காதா வெல்லாம்*
*முடித்ததும் வேத மூல மதங்களை,*
*அறிய விரும்பிப் பெரியரைத் தேட*
*வேத புரியின் வித்தக னான*

*தேவ தாஸனே தேடிவந் தாங்கே,*
*காலத் தாலே மூல வேதங்கள்,*
*சிதறிய நிலையைப் பதறிச் சொல்லித்*
*தம்முடன் வருகெனத் தயவுறக் கேட்டான்.*
*வேத புரிக்கு விமலன் செல்லுமுன்*
*அக்கினி முன்னே அன்புரை சொன்னான்:—*
*நன்மையும் சுத்தமும் நயமுற நவின்ற,*
*ஜரதுட் டிரனின் சந்தான மணிகாள்,*
*உங்கள் குருவையும் உயர்ந்த மறையையும்,*
*அறிய வுதவிய ஆர்ய மானுக்கும்,*
*அருந்துணை செய்யும் அன்பர் தமக்கும்,*
*நன்றி, நன்றி, என்றும் மறவேன் !*
*அறிவுநூ லாகும் அவஸ்த ஜெந்தா,*
*என்மனப் பசியை இனிதுறத் தீர்த்தது.*
*ஒருவனே இறைவன் ஒப்பறு முதல்வன்*
*உயிர்க்குயி ரானவன், உண்மைச் சோதியே,*
*மனமொழி மெய்யின் மாசறு தூய்மையும்,*
*தீதறு நன்மையுஞ் செம்மனச் சாட்சியைத்*
*தழுவி நடத்தலாந் தருமமும் இறைவனை*
*அடையும் வழியெனத் தடையறச் சொல்லும்,*
*ஜெந்தவஸ் தாவின் செம்பொரு ளெல்லாம்,*
*ஆரிய வேதம் அருளிய பொருளாம்,*
*ஒளிவணக் கத்தைத் தெளிவுறச் சொல்லும்.*
*உங்கள் வேதம் ஓதிய பிறகு,*
*பாரத நாட்டுப் பழம்பெரும் வேதம்*
*ஆராய்ந் ததனை வேராய்க் கொண்ட*
*உட்சம யங்களை உணரக் கருதியே,*
*விடைபெறு கின்றேன் விழுமிய நண்பீர் !*
*ஆத்தும ஞானமும், ஆருயிர்ப் பணியும்,*
*பக்தியும் பயின்று முத்தியை நோக்கும்,*
*ஜரதுஷ் டிரரின் சமயம் வாழ்கவே ....*
*அமர ஜோதியாம் ஆனந்த தேவன்,*
*அருளே வேண்டும் பொருளார் வாழ்கவே . . . !*
*என்று நல்லுரை இயம்பித் தூயன்,*
*வாழ்த்துரை பெற்று மலர்ப்பொழி லூடே,*
*தீம்பா முழங்குந் தேவதா சுடனே,*
*வேத புரிக்கு விரைந்த வழியில்*
*எழுந்து வீசும் இகற் புயலென்னே !*

## 17. புயலிடிப் படலம்

*போகும் வழியே புயலிடிமின்னல்....*
*கும்மெனும் பேயிருட் குகையிற் கொதிக்கும்*
*வெம்மனப் பேய்களின் வெறியாட்டங்கள்*
*வேகக் குரலுடன் வெடித்தெழுந்தனவே !*
*மோகத் திமிர்கள் முரண்செய்தனவே !*
*சாதியும் சாதியும் சமயமும் சமயமும்*
*மோதி மோதி முரட்டு வாதுடன்*
*சத்தச் சண்டை குத்துச் சண்டையாய்*
*குத்துச் சண்டை கொலைவெறிக் கூத்தாய்*
*வழியெலாங்குருதி வழிய வழியவே*
*பழிபகை யச்சப் படுகளத்தூடே*
*தூயன் உள்ளம் துணுக்குற நடந்தான்.*
*மடமடவென்று மடமடச் சண்டை*
*சொற்போர் தொடங்கிச் சுடுபோர் வரையில்*

*ஆசையாணவங்கள் மோசமாய்ப் பெருகும்
வெம்மையைக் கண்டு வெடிமனத் தூயன்
அம்ம ஓ அமைதி ! ஐய ஓ அமைதி
என்றே கூவி நன்றே யிசைத்தான்.*

*எம்மதமென்றும் உம்மதமென்றும் எதிரெதிர் போராடி
வெம்மதச் சூதில் உன்னை வைத்தாடும் வேடிக்கை யிது வென்னே
சம்மத மோவுனக் கிம்மதவாதம் சமயோகச் சுடரே
நிம்மதியாக நெஞ்சினில் உன்னை நினையாரோ உலகோர்?*

*தினவுறு காமச் சினவெறி யின்றித் தீயநினைப்பின்றி
மனமொழி மெய்யில் மாசற வாழீர் மானிடரே, இடரேன்?
இனவொருப் பாட்டில் இயல்புறவாழீர் இதயங் கலந்திங்கே
அனை வரும் ஆன்ம ஒருமையிலூறும் அன்பினில் இன்புறுவீர்*

*உடலில் உயிரே உயிரில் உணர்வே ஒருமைப் பெருமானே
கடவுள் என்னும் கருணைச் சுடரே கடல்சூழ் உலகினிலே
மடவுள்ளத்தார் மதவினையாலே மதிலுறு பிரிவாகி
அட வுன்னையுமா சிறையிலடைத்தே ஆலயக் கூத்திடுவார்!*

*அன்பே கடவுள் அன்பே யான்மா அன்பே உயிர்வாழ்வாம்
அன்பே அருளாம் அருளே அறிவாம் அறிவே பேரின்பாம்
அன்பே யில்லா ஆணவக் கூச்சல் அடுபேய்க் களமுரசாம்
அன்புப் பொதுவில் அனைவரும் கூடி அமைதியாய் வாழ்வோமே*

*அன்பை மறந்தார் அறிவையிழந்தார் ஆண்டவனை மறந்தார்
வம்பை வளர்த்தார்வயிறுவளர்க்க வாய்மைப் பலிகொடுத்தார்
துன்பப் பிரிவினைப் போர்களைக் கிளப்பித் தொல்லைப்படுகின்றார்
இன்பச் சமயோ கத்தினை யறியார் இதயத்தொளி காணார்.*

*நாளைச் சுற்றி நான் நீ என்ற நலியாச் சூதாட்டம்
ஆளைச் சுற்றிச் சுயநலமதங்கள் அழியாட்டஞ் செய்யும்
வாளைச் சுற்றி வம்புப் போர்கள் வடிக்கும் இரத்தத்தைத்
தாளேன் ஐயா தஞ்சமளிப்பாய் சாந்தப் பெருமானே !*

*கலியுக வரக்கர் கன்மனமுருகக் கருணை நிலவாதோ
புலியினுங்கொடிய பொறாமை தூண்டும் புன்சமர் ஓயாதோ
அலியென அஞ்சும் அடிமைத் தாதர்க் காண்மையும் வாராதோ!
கொலை கூத்தாடும் கோபப்புயலின் கோரந்தீராதோ*

*காயிதத் தீர்மானங்களி னாலே காரியமில்லையினி
ஆயுதம் பெருக்கும் விஞ்ஞானத்தால் அமைதி குலைந்ததுவே...
பாயும் ஆணவ அரசியலாலே பார் போர்க்களமாச்சே
ஓயா வஞ்சம் ஓயா நஞ்சம் ஓயாக் கல்நெஞ்சே !*

*அலையலையாக மனவெறி தூண்டும் ஆணவப் போராட்டம்
கலைகலை யாகப் புலைமனமாயக் கவர்ச்சிக் களியாட்டம்
கொலைபுலைகுடிசூ தாட்டக் கோட்டம் கோரக் கொண்டாட்டம்
நிலையறு முலகக் கலகக் காட்டை நினைக்கக் கலங்குகிறேன் !*

*யார் செய்த பிழையோ எவர்மனப்பித்தோ
இயற்சம யோகமின்றிப்
பார்நில மக்கள் பலபலச் சாதி
மதங்களின் பகுப்பாலே
ஓர்பரம் பொருளின் உண்மையுள்ளறியார்
ஓதியும் உணரகில்லார்
கார்மழை வானின் கருணையை யறியார்
கடலிசைக் கருத்தறியார் !*

*நால்வகை வேதம் நால்வகை யோகம்
நால்வகை ஆச்சிரமம்*

*நால்வகை முயற்சி நால்வகைப் பயிற்சி*
*நால்வகைப் பயனின்றி*
*தோல்வகை யுருவைச் சுற்றிலுந்தொகுத்த*
*சுயநலப் பிரிவினையால்*
*மேல்வகைச் செருக்குக் கீழ்வகையாக்கி*
*மிதித்தது சத்தியத்தை !*

*ஓம் எனும் தூய பரம்பொருளே எம்*
*உள்ளத்தின் உள்ளொளியே*
*சாம் உடல் வீழ்ந்தும் சாகாதென்றும்*
*தணலும் சத்தியமே*
*நாம் நமதென்றும் படமெடுத்தாடி*
*நச்சரவெனச் சீறி*
*தாம் பெரியோ ரெனச் சண்டை முறுக்கும்*
*சதிவினை தீராதோ !*
*அறிந்தது போலே ஆணவம் பேசி*
*அறிவைச் சூதாடிப்*
*பிரிந்து பிரிந்தே பேத மதங்களைப்*
*பெருக்கிடும் பொய் மனமே*
*எரிந்தொழிந் திடவே இக்கணஞ் செய்வாய்*
*இயல்புறப் புவிவாழ்வே*
*கரிந்துமுப் புரங்கள் சாம்பிட நெற்றிக்*
*கண்ணைத் திறந்தவனே !*

**கால் முறிந்தது**

*இவ்வகைத் தூயன் இரங்கி யுளத்தே*
*இரக்கக் கண்ணீர் வடித்தான்*
*ஒவ்வறு பகைவர் ஒவ்வொரு மொழிகள்*
*உரைத்தனை புது நீ யார்?*
*செவ்விய வழியைச் செப்பிட நீ யார்?*
*செரு தீர்த்திட நீ யார்?*
*வெவ்வியலாலே வெதுப்புவோம் உன்னை*
*வீண வென்றே யடித்தார்.*

*இரும்பு நேர் நெஞ்சர் இன்னலுக் கின்னல்*
*இழைத்திடும் வலிவுளதேனும்*
*கரும்பினில் வடித்த கற்கண்டு போலே*
*கனிவுரை யின்னமும் பேசி*
*துரும்பனேன் எனினும் துணையெனக் கிறைவன்*
*துலக்கிய நலவழியிதுவே*
*விரும்பியுள் ளொன்றி ஒருங்குயர் அன்பில்*
*விளங்குக மானிடர் குலமே.*

*கோபமே கொதிக்கக் கொலைவெறிக் கும்பல்*
*குணம்பெறு சுத்தனைத் தாக்கித்*
*தாபமே தகிக்கத் தடாரென வீழ்த்தித்*
*தாளெலும் புடைத்தனர் அந்தோ !*
*சாபமோ சதியோ சாதியோ வினையோ !*
*தயவினைத் தகர்த்தனர் தடியர் !*
*பாபமே சுமந்த பதகருக் கின்னும்*
*பரிவுடன் இனிமையே பகர்வான்:*

*படிப்பனபடித்துப் பார்ப்பன பார்த்துப்*
*பாருலகுயிர்களின் உள்ளத்*
*துடிப்பினை யளந்து சொல்வன சொல்வேன்*
*சுகம்பெறச் சகம்பெறும் வாழ்வே*
*தடிப்புறு மகந்தை அடங்கிடச் சீவன்*

சரண்புகுந் தருட்பெருமானின்
அடிப்பது மத்தில் அன்பினை நாட்டி
அமைதியின் படைந்திட வாரீர்.

பயிரினை யரிக்கும் புழுக்களைப் போலே
பாசங்கள் உமையரிக்காமல்
தயிரினைக் கடையும் மத்தினைப் போலே
சஞ்சலப்பட்டலையாமல்
உயிரினை வதைக்கும் பிணிதுயரின்றி
உட்புறந் தூயராய் வாழ்வீர்
நயமுறச் சொன்னேன் நானிடர்ப்பட்டும்
நன்மையே கருதினேன் உலகீர்.

இத்ததிதேவ தாசனும் வந்தே
இடர்ப்படும் சுத்தனைத் தூக்கி
மெத்தென வைத்து வாகை வல்லாறைச்
சாறுடன் வேகமாய்க்கட்டி
சத்துள பாலுந் தேன்கனிரசமும்
தக்காளிச் சாறுடன் அளித்தான்
உத்தமன் சுத்த சக்திஓம் ஜபத்தால்
உடைந்தகால் ஒட்டியங்கெழுந்தான்

படுகொலை நிண வுணவருந்திப்
படுகொலை மனக்கொதிப் பாலே
படுகொலைக் களஞ்செயும் கொடியீர்
பரமநன் ஞானியைப் புடைத்தீர் !
சுடுகொலைக் களமென நெஞ்சீர்
துயர்செயும் சூழ்ச்சியே யறிவீர்
கெடுமதி கொள் மத வெறியீர்
கேண்மைகொள் அன்பினை யறியீர்

இவ்வுலகத் தினில் மாந்தர்
இடர்ப்படும் இன்னலைத் தீர்க்கச்
செவ்விய கருணைவான் போலே
திகழுறு தீர்க்கதரிசி
வெவ்விடர் செய்திவன்காலை
வெட்டினீர் எலும்பு முறிந்தும்
திவ்விய குணநலத்தீரன்
தீஞ்சுவைக் கனிமொழி சொன்னான்.

இணையறு தூயநல் வாழ்வான்
இரக்கமே துடியித யத்தான்
குணமலையருவியைப் போன்றான்
குறைவறு நிறைமனக் குரிசில்
புணையெனத் துயர்கடந் துய்க்கும்
புண்ணியம் வருந்திட நஞ்சக்
கணைதொடுத் தின்ன லிழைத்தீர்
கருணைக்குத் தீங்கு விளைத்தீர் !

கலங்கிய கண்ணினீர் வாரக்
கருணைகொள் சுத்தனை நோக்கி
விலங்கியல் வீணரிற் சிலபேர்
வெம்மன வேற்றுமை மாறி
நலங் கெழு நல்வழி யென்றே
நாடினர் தூயனை யாங்கே !
இலங்குயர் மாளிகை சேர்ந்தே
இளகிய மருத்துவஞ் செய்தார்.

தேவதாஸ் அன்புடனுதவத்
திருவுறு மருத்துவர் உதவ
நோவுறு கால்குணம் பெறவே
நூறுநாள் கட்டுடன் படுத்தே
சோவுறு முலக நாடகத்தின்
சுருள் சுருளாகிய காட்சி
பூவுலகனுபவ மெல்லாம்
புத்தகஞ் செய்தனன் புனிதன்....

உலகினைச் சுற்றிய தெல்லாம்
உறவுகள் உதவிய தெல்லாம்
பலமதப் பண்புகளெல்லாம்
பார்த்ததும் கேட்டது மெல்லாம்
அலைமனப் போக்குகளெல்லாம்
அனுபவப் படலங்களெல்லாம்
நிலைபெறு மிலக்கியமாக்கி
நேயருக் கீந்தனன் தூயன்

பேர்புகழ் பெரியவர் உறவு
பெருந்திரள் செல்வநல் வாழ்வு
ஊர்புகழ் புண்ணிய வினைகள்
உலகினுக் கினியநல் லாட்சி
ஏருயர் இந்திர போகம்
எளியநல் லின்புறு வாழ்க்கை
சீருயர் ஞானிகளாசி
திகழுமவ்வனுபவ நூலால்

ஆத்தும சோதனை யுடனே
ஆத்துமச் சாதனை கூடப்
பூத்தநல்லனுபவச் சோலை
புலனுறக் கற்றவ ரெல்லாம்
தீத்தணல் சுட்டபொன் போலே
தீதறத்திகழ்ந்தன ராங்கே
கோத்தநன் மணிகளைப் போலே
கூடிநல் வாழ்வினை முயன்றார்.

பித்துறப் பிதற்றிய வெறியர்
பேய்மதக் கூச்சலை விட்டே
சத்தமில்லா வுபசாந்தம்
தந்திடும் சமயோகத்தை
நித்தியம் பயின்றினிதானார்
நெஞ்சினில் அன்பினை நட்டார்
சித்தத்தே தித்திக்கும் ஒன்றைத்
தியானத்திலே யுணர்ந் துவந்தார்.

பகைமையைப் பகைத்தார் வெறுப்பினை வெறுத்தார்
பலமத மயக்கத்தை விடுத்தார்
மிகைதறு மூடப் பழமையை விடுத்தார்
மேதகு புதுமையை மதித்தார்
தகையுறு தொழிலும் தருமசிந் தனையும்
தஞ்சமென்றிறைவனை வணங்கும்
வகையறிந்துலகில் வாழ்வாங்கு வாழ
வள்ளுவக் கலையினைக் கற்றார்

பசும்புல்லைத்தின்றே வெண்ணிறப் பாலைக்
கறந்திடும் பசுவினைப் போலே
விசும் பொளிர் இரவி வேலையை யுண்டு

விண்ணமு தளிப்பதைப் போலே
நசுங்கு நல்லணுக்கள் சக்தியின் கனலை
நல்கிடும் அற்புதம் போலே
நிசங்கண்ட நூலை நெஞ்சினிற் கொண்டார்
நெறிநின்று நிலவினரினிதே.

வான்குடை நிழலில் வையக மாந்தர்
வாய்மையுந் தூய்மையும்போற்றி
ஊனுயிர்க்குயிராம் ஒன்றினையுள்ளே
உணர்ந்து நல்லன்பினில் இணைந்தே
தேனுணும் வண்டு கனியுணும் புட்கள்
சேர்ந்து வாழ் பெட்பினைப் போலே
மானுடம் தெய்வ மாறுதலெய்த
மாசற வாழ்ந்தனர் மாதோ

## 18. வேதபுரிப் படலம்

மன்று ளேவளர் மாணிக்கத் திருநடத் தரசே,
நன்றிப் பாரத சக்தியை நயமுறப் பாடி
உன்றன் மெய்யருள் உலகினில் விளங்குயர் யோகம்
வென்றி நல்கிட நடத்தெனை வித்தகா போற்றி !

ஆர ணப்பொருள் யாவையும் அறிதரு நல்லோன்,
பூர ணத்தினைத் தேடிடும் புனிதனை நடத்தி,
வீரர், வித்தகர் விளங்கிடு வேதமா புரியைத்
தீர காணெனச் செப்பினான் தேவதா சனுமே !

ஓமெ னும்பர மானந்த மாகிய ஒன்றே
நாம ரூபம தாகிய ஞாலமும் விண்ணும்
ஆம தன்மயம் ஆருயிர் யாவுமென் றருளும்
தூம றையொலி துலங்கிய தொல்புரி யிதுவே !

பண்டை வேதத்தின் பயனெல்லாம் புறக்கணித் தின்று,
கண்ட கண்டவர் கண்கட்டி விட்டவா றாடிச்
சண்டை செய்திடுஞ் சாதிகள் சமயங்கள் அனந்தங்
கொண்ட வூரினைச் சுத்தனுங் குனிப்புறக் குறித்தான்.

வீதிக் கோர்மதம் வீட்டினுக் கொருவித மான
சாதி, சாதியுட் சாதிகள் ; அவைசெயும் சலியா
வாதம், வாதத்தால் வந்திடும் பிரிவினை வகையாம்;
தீதெலாம் பொது நலத்தினைத் தேய்த்திடக் கண்டான்.

அருளின் மாதவர் வாக்கினில் அரும்பிய வேதப்
பொருளு ணர்ந்திடார்; பொட்டைப்பா டஞ்செய்த புலவர்!
கருமி யின்பொரு ளென்னவே காத்தனர்! கருத்தால்
ஒருவ ரும்ஒரு வரியறி யாரிது உண்மை !

பெயரில் ஆரிய வேதியர் எனுஞ்சில பேரும்,
உயர்வெஞ் சாதியென் றுரைத்திறு மாப்பதை யொழிய
நியம வேதத்தை விட்டவர் நெடுந்தொலை நின்றார்;
நயம தாய்வட மொழியையு நவின்றிட வறியார்.

காலை மாலையிற் கடனுக்குக் கைப்புனல் கழிய
நூலை மாட்டிய தன்றியோர் நூலையு முணரார்;
போலி ஞானங்கள் பேசியே பொழுதினைக் கழிப்பார்;
ஞால மாறுதல் அறிந்திடார் நாட்டையு மிழந்தார்....

*அவன்கண் டுண்டிடின் அந்தண்மை போய்விடும் என்பர்;*
*இவன்கை தீண்டிடின் எங்குலம் பழுதுறும் என்பார்;*
*உவனெம் வேதத்தைக் கேட்டிடின் பாபமென் றுரைப்பார்*
*தவமி லாதவர் சாதியி லேசள சளப்பார்.*

*நெற்றிக் கோட்டினை நெடுக்கிலும் குறுக்கிலும் நிமிர்த்தே,*
*பற்றுக் கோடறு பலபல வகுப்புகள் பகுப்பார்.*
*கற்றுக் கேட்டவர் கல்வியைப் பரப்பிடக் கருதார்.*
*வெற்றுக் கோலங்கள் போட்டவர் வெருட்டுவா ருலகை !*

*உலகம் யாவையுங் கோயிலென் றுடையஓர் பொருளைப்*
*பலவு ருக்களிற் பதித்தவர் பதித்தவப் படியே*
*நிலவு தெய்வமென் றெழுப்புவார் நெடும்பெரு நிலைகள்*
*கலக மிட்டவர்; கல்லெறி யுண்டனர் கடிதே !*

*கல்லுங் காரையுங் கட்டிய கோயிலின் கடையுள்*
*எல்லை யிட்டனர் இன்னொரு சாதியைத் தடுத்தார்.*
*பல்கு சாதிகள் பலவகைக் கோயில்கள்! பலவாம்*
*சொல்லு மந்திரந் தந்திரம் சுயநலக் குரலே !*

*ஊருட் சோற்றினை உண்டொரு வேலையு மின்றிப்*
*பேருக் கேதுற வேற்றனர் பெருவுடற் பெரியார்;*
*யாருக் கும்பய னின்றிநல் லருங்கலை யெல்லாம்,*
*வேருக் கேமுழு மோசமாய்ச் சிதைந்தன விரைந்தே !*

*ஆதி யொற்றுமை, காலத்தால் அகன்றிட அதனால்*
*சாதி மாமத பேதமே தழைப்பதைக் கண்டோர்,*
*வேத மாமதம் வேற்றுமைக் கந்தலை விரிக்கும்*
*வாத மாமதம் உருப்படா மதமென மருண்டார்.*

*உய்யு ஞானமொன் றறிகிலார்; உய்விக்கவந்த*
*தெய்வம் யாமெனச் செருக்கினைச் சீடர்பால் உய்ப்பார்*
*ஐயகோ இவர்ஆண்டவன் அரியணை யடையப்*
*பொய்வெளிச்சங்கள்போட்டிடும்புரட்டை யென்புகல்வேன்!*

*கண்ணன் யாமெனக் காதலின் கடைகளை விரிப்பார்;*
*எண்ணி லாதவர் பெண்களை இராதைக ளெனவே*
*பண்ணுங் கூத்துகள் பகர்ந்திடிற் பரிகசக் கதையாம்;*
*உண்மை கண்டவர் உரைகளை எளிதினில் உணரார் !*

*கலை யுரைத்திடுங் கற்பனைக் கவிகளே கற்று,*
*நிலையி லாப்பசு வுடல்களை நித்திய மென்றே,*
*விலையி லாப்பொருட் செலவினில் விழாவணி செய்வார்...*
*தலைசி றந்தநற் கல்விக்குத் தருமமொன் றியற்றார் !*

*கிட்ட வந்தன்பு செய்திடுங் கேண்மையும் கிடையார்;*
*எட்டிச் செல்லெனத் தமரையே இழிவுசெய் கின்றார்.*
*எட்டுத் திக்கிலும் உலகிவர் இயல்பினை இடித்துக்*
*குட்டிச் சொல்லியும் பழம்பெருங் குருடியின் குணமே.*

*கோயிற் சண்டையுங் குலப்பெருஞ் சண்டையு மோட்ச*
*வாயிற் சண்டையும், வகுப்புறு சண்டையும் மாமூல்*
*சாயச் சண்டையுஞ் சாப்பிடுஞ் சண்டையும் பெருகி*
*வாய்மை கெட்டது மாந்தரின் மனங்கெடு மதத்தால்.*

இந்த வேற்றுமைக் காட்டினை இனிதுற நீவிச்
சுந்த ரம்பெறு மலர்வன மாகவே துலக்க
வந்த தேவதாஸ் வாக்கினை மதித்திலர் இனையோர்
பிந்தி நில்லெனப் பிரிவினைச் சேற்றிலே யுழன்றார்.

பன்ன ருந்துயர் படிந்தவிப் பதியிடைப் புகுந்தே,
அன்னி யர்உதட் டன்பினால் ஆதரம் பெற்றே,
பின்னொ துக்கியிப் பிரிவினைக் காரரைப் பிடித்தே,
முன்முன் சென்றனர் முயற்சியின் உறுதியால் முறையே.

பரிந்து பேசியும், பணத்தினை வீசியும், பழமை
தெரிந்த தந்திரஞ் செய்துமிச் செயலிலார் சிலரை,
விரைந்து தம்மத மாக்கிட வேற்றவர் புகுந்தார்...
கரைந்த தின்னகர் சனத்தொகை கருணையின் கழிவால்...

பிறந்த நன்மதம் பிழையெனப் பிறமதம் பிடித்தோர்
மறந்து தம்மவர் மடையரஞ் ஞானிகள் எனவே
திறந்து கூறினர் ! பகையினைத் தீட்டினர்; வேதஞ்
சிறந்த வூரினர் சீர்கெடு நிலையிவை ! சிவமே !

சிறிது ஞானமும் யோகமுந் தெரிந்தவர் தமையே,
இறைவ னென்றுல கேத்திட விளம்பரஞ் செய்தே,
பிறரைத் தாழ்த்தித்தம் அவதரப் பெருமையைப் பேசிப்
பறை யறைந்திடும் பக்தரைச் சேர்ப்பதிற் புகுந்தார்.

இதயந் தோறுநல் லொளிபெறும் அறிவதா யிருந்து,
பொது நடஞ்செயும் புனிதமெய்ப் பொருளினை யுணர்ந்தே
கதிபெற் றுய்ந்திடத் தியானமாம் வழியினைக் காட்டார் ;
பதியைத் தாமெனப் பாடுவார் பாமரர் பணிய !

ஒப்பி லாப்பரம் பொருளினை மறந்திட உலகம்,
பொய்ப்பு ரட்டுகள் புனைந்திடும் அடிமைகளுடனே
கற்பி தம்பெறுங் கதைகளைக் கவிதைசெய் தெங்கும்
அற்பு தம்புரி அவதர மெனச்சிலர் அலைந்தார்.

கண்ணன் யாமிந்தக் கலியுக வரதன்யாம் என்றும்
விண்ணின் இன்பத்தை விளைத்திடும் விஷ்ணுயாம் என்றும்
பெண்ணி னத்தினைக் கோபிகா லீலையின் பெயரால்
கண்ணி வைத்திடும் காமுகக் கண்ணரும் பலரே.

குடியுங் கூத்தியும் கொலைகளும் திருட்டுடன் சூதும்
பொடி சுருட்டுடன் புகையிலைத் துப்பலும் பொழுதைக்
கொடிய வீண்செயும் வம்பரின் குப்பைவாய்க் குசும்பும்
தடியும் சண்டையும் வழக்குமே தடித்தன ஊரில்.

ஊர் திருந்திட மாந்தரின் வேற்றுமையுள்ளம்
சீர் திருந்திடத் தூய்மையும் வாய்மையும் சிறக்க,
நேர் முறையினிற் பணிசெயுந் தேவதாஸ் நிமலன்
சோர்வுறத் துயர் செய்தனர் சுயநலச் செருக்கர்.

வீட்டுக் கோர்குரு, வீட்டுக்கோர் வியனுருத் தொழுகை,
வீட்டுக் கோர்மதம் வீட்டுக்கோர் வியன்பெறும் சாதி,
பாட்டு டன்பறை யடித்திடும் பத்தரி னிடையே
போட்டி எத்தனை.... போர்க்கள மானதப் புரியே.

இனைய தீமைகள் இறைவனை மறைத்திடும் ஊரில்,
புனை புராணமும் வேடமும் கபடமும் புகுந்தே

நினைவு டன்செயல் கெடுமொழி நிலையினைக் கண்டான்
அனைவ ரும் ஒரு குலமெனும் அன்பனாந் தூயன்.

அன்ன தூயனை யணுகியோர் அரட்டரின் கும்பல்,
என்ன சாதியெம் மதங்குலங் கோத்திர மென்னே ?
என்ன கோயிலில் எவ்வகை எவ்வுருத் தொழுவாய்?
உன்னை உய்விக்கும் குருபெயர் உரையென மொய்த்தார்.

**சுத்தன்**

மனிதச் சாதியான், மனிதரின் குலம்; உலகெல்லாம்
எனது கோயிலாம், இதயத்தில் இருப்பதென் இறையாம்,
மனதை வென்றவன் மமதையைக் கொன்றவன் குருவாம்.
புனித நெஞ்சுரை போதமே வேதமென் றறிவீர்.

**ஊரார்**

தேவ தாசனின் சரக்கெலாந் தெரிந்துகொண் டிங்கே
ஆவ லாகச்சீர் திருத்திடும் ஆசையோ டடைந்தீர்....
பூவெ லாம்புகழ் வைகுண்டப் பொருளினைக் காணா
யாவர் நீரெனப் பையினை அழுத்தினர் இழுத்தே.

**சுத்தன்**

உலக வீட்டினில் உயிர்களை உடலெனத் தாங்கி
அலகி லாவிளை யாடல்செய் ஆண்டவன் சக்தி
அலது வேறொரு கோயிலுங் கடவுளும் அறியேன்—
பலபெ யர்வடி வொருமையின் பன்மையென் றுரைத்தான்.

தூய னிவ்வகை சொல்லலும் துணுக்கெனச் சிரித்தே,
மாய வார்த்தைகள் பேசினீர் வைகுண்ட மணியின்
தூய காலடித் தூசியுந் தலையிலே தூவின்
நாய ராகுவீர் எனவிரைந் திழுத்துடன் நடந்தார்.

வெண்ண கைபுரி தேவனை விழிக்குறி காட்டி,
உண்மை கண்டிட ஓடினான் உலகறி யறிஞன்
கண்ம யக்கிடுங் காட்சிகள் கவின்பெற நிலவும்
பெண்ம யத்திரு மாளிகைப் பெருமையைக்கண்டான்.

மலர்கொய் வார்சிலர் வைகுண்ட மாலைகள் புனைவார்,
புலவர் போற்றும்வை குண்ட புராணத்தைப் பொழிவார்
பலர்நி வேதனம் வருவழி பார்த்துக் கண் பூத்தே
இலகு "வைகுண்டா உன்னருள் வாழி" யென் றிசைப்பார்.

பைகண்டே உப சரித்திடும் பக்குவம் அறிந்தே,
கைகண்டார் சிலர், கல்மனங் கரைந்துடன் உருக
வைகுண்டர் அவ தாரத்தின் மகிமையை அளப்பார்.
மெய்கண்டா னிந்த வெளிச்சத்திற் கப்புறம் விரைந்தான்.

**வைகுண்ட புராணம்**

இந்தி ராதியர் போற்றிடும் எமதுவை குண்டன்,
மந்தி ராதிநன் மறைகளுக் கெட்டிடா வரனாம்
தந்தி ராதிநல் யோகங்கள் சாதனஞ் செய்தும்
வந்தி டாதவன் அருளடி புகுந்திடின் வருமே !

மூன்று லோகமும் ஆண்டிடும் எம்பெரு முதல்வன்,
மூன்று தேவரின் மூத்தவன் ; மூதுல கெல்லாம்
ஆன்ற மோட்சத்தை அடையவே அவதரித் துள்ளான்;
ஊன்று மின்அவன் பாதுகைத் தூசிமேல் உளமே.

*உள்ள தானத்தில் ஊன்றியே யோகநித் திரைசெய்,*
*வள்ளல் அன்னவன் வையகம் எங்குமே உள்ளான்;*
*கள்ள மற்றநல் லன்புடன் காணிக்கை யாக*
*உள்ள யாவையும் உதவிடின் உயர்பதம் உறுமே.*

*கேளும் எங்களை யாண்டவன் கீர்த்தியை; வையம்*
*ஆளு நாயகன் பிறந்ததும், ஆறடி நீண்டான்.*
*காளி, லட்சுமி, கலைமகள், கவுரியார் அந்த*
*நாளிலே முலைப் பாலினை நல்கினார் நயந்தே.*
*நான்கு வேதமு நவின்றனன் மூன்றரை வயதில்;*
*தேன் குயிலெனப் பாடினான் தேவரும் திகைக்க—*
*பூங் குழலினை யூதியெம் புண்ணிய முதல்வன்,*
*ஊன் குலாவிடும் உயிர்களை அடிமைகொண் டுவந்தான்.*

*தேவரிற் சிலர் திருவுடை வைகுண்ட மணிபால்,*
*மேவு தீயபொ றாமையாற் சேட்டைகள் விளைத்தார்.*
*யாவ ரும்பிடி சாம்பலாய் எரிந்திட வியற்றிப்*
*பூவ ளர்த்தனன் இவ்விடம் புண்ணிய மூர்த்தி.*

*தெய்வ மில்லையென் றேசிய சிற்றர சொருவன்*
*ஐயநீங்கிடத் தன்னையே அரியெனக் காட்டி*
*மெய்வி ளக்கிய குருவரன் விஷ்ணுவே யென்று*
*வைய கத்தினர் அறிகுவர் மாசிலா மனதால்.*

*வெற்று நீரினால் ஊரெலாம் விளக்கொளி யெரிப்பார்,*
*பற்றுக் கொண்டநன் மலடிக்கும் பதின்மகர் அளிப்பார்,*
*கற்றுக் கொள்ளுதல் இன்றியே கல்வியைத் தருவார் ;*
*மற்று மின்னவர் அதிசயம் வழுத்திடப் போமோ?*

*பண்ணு டன்புகழ் பாடுவார் பரிவினைப் படைப்பார்,*
*எண்ணரும் பண மீந்தவர் இகபரம் பெறுவார்;*
*மண்ணி லிந்திர போகங்கள் வாய்ந்தனு பவிப்பார்,*
*தண்ண டியினிற் பொருளுடன் சரண்புகுந் தவரே !*

*கோபம் வந்திடிற் குபேரனுங் குடிகஞ்சிக் கலையச்*
*சாபம் வைத்திட வல்லவர், தாள்பணிந் தோரின்*
*பாபம் யாவையும் பாதத்தின் தூசியால் விலக்கித்*
*தீபம் போலுடன் புண்ணியந் திகழுறச் செய்வார்.*

*பத்தி செய்திடும் அடியவர் பயத்தினைப் பறிப்பார்,*
*செத்தவர் தமை எழுப்புவார் ; செகத்தினில் இவரே*
*சித்த ரென்றறிந் தேத்திய சீர்மிகு புலவர்*
*புத்த கங்களை வைத்திடப் போதுமோ உலகே !*

*அன்பு கொண்டெங்கள் அரும்பெரும் வைகுண்ட மணியை*
*நம்புங் கோளெனும் அடியவர் நவின்றதைக் கேட்டே,*
*தென்பு றத்தினிற் பார்த்தனன் சுத்தனுஞ் சிறிதே;*
*பொன்பொ லிந்தது, பொலிந்ததோர் புருடனின் உருவே !*
*"கருணை பூண்டுனைக் காத்திட வந்தனன்; எங்கள்*
*குருமணி" யெனச் சீடர்கள் கும்பிடச் சொன்னார்...*
*"வருக வைகுண்ட மாமணி வரந்தரும் பெருமான்*
*வருக" வென்றனர் அடியவர் மலரடி பணிந்தே !*

*கொம்மை நேர்முலை மாதர்கள் கோபிமா ராகி,*
*எம்மை யாளுடை இமையவர்க் கிறைவன்வாழ் கெனவே*

*கும்மி தட்டினர் கோலடித் தாடினர் குதித்தார்;*
*தம்மை யுள்ளுறக் கண்ணனே தழுவினான் என்றார்.*

*பூக்கள் தூவினர்; மாலைகள் புனைந்தலங் கரித்தார்,*
*பாக்கள் சூட்டினர்; பயபக்தி யுடன்பணிந் தெழுந்தார்,*
*கூக்கு ரல்களை முடித்தபின், குருபரன் மதுர*
*வாக்கி னாலவர் அமரராய் வாழவாய் மலர்ந்தான்.*

*"அறந்தவிர்ந் துல கதர்மத்தால் வருந்திடக் கண்டே*
*இறங்கி வந்தனம்; அன்பர்காள் எமையறிந் துய்ந்தீர்;*
*மறங்கிளர் அசு ரர்களை வதைத்துநம் ஆட்சி*
*பிறங்க நாட்டுவோம் பேசறக் காணுவீர்" என்றான்.....*

*யாவு முன்செயல் ஐய; நின் னிச்சையின் அடியார்*
*ஏவுங் காரியம் செய்குவோம் அடிமைகள் என்றும்;*
*தேவ தேவனே திருவுற வாழ்கெனச் செப்பி,*
*ஆவ லாய்வட திசையினிற் பார்த்தன ராங்கே....*

*நெய் மணந்திடும் வகைவகை நிவேதனம் வந்து,*
*தெய்வ சத்குரு திருக்கையால் உண்டதும், உருட்டி*
*தை யிலையினி லன்பர்க்குத் தந்தனர் அடியார்,*
*துய்யனும் அதைத் துய்த்தனன் சுடுபசி யறவே !*

*உண்டதும் பலர் மின்னென மறைந்தனர் உடனே;*
*தண்ட னிட்டனர் காணிக்கை தந்தடிச் செல்வர்,*
*கண்ட சுத்தனுங் கருத்துறக் கணித்தெல்லாம் அறிந்தே,*
*தொண்ட னுக்கொரு மனக்குறை துடைத்தருள் கென்றான்!*

**வைகுண்டர்**

*மூன்று வாரங்கள் நாளுக்கோர் ஆயிர முறையே,*
*ஊன்று நெஞ்சுடன் எம்மடி பணிந்திடின், உடனே*
*தோன்று முங்குறை நீங்கிடுந் துணிவெனச் சொன்னார்;*
*ஆன்ற வேதத்தில் ஆதரங் கேட்டனன் சுத்தன் !*

**சீடர்**

*பாரும் இப்படி எங்குரு நாதனைக் கேளார்;*
*பாரு ளோர்களின் படிப்பவர் படித்தது மில்லை.*
*ஓர்பரம் பொரு ளேயுரு வாகிய உருவன்*
*பேரறி வின்முன் வேதமும் பேசிடப் பெறுமோ?*

*சரண் புகுந்தவர் சாற்றிய பணிசெய லொன்றே*
*மரண முந்தவிர் வழியென மாணவர் இயம்ப,*
*கரண சுத்தனுங் கைகுவித் "தன்புள பெரியோய்*
*மரண மின்றி யெம் மானிடர் வாழந்தனர்?" என்றான் !*

**சுத்தன்**

*தாய் வயிற்றினிற் பிறந்தவர், வாழ்ந்தபின், சாவின்*
*வாயினிற் புக வையக மெங்குமே கண்டோம்,*
*நோய் நுடக்கற வாழ்வகை நுவன்றிட வல்லோம்,*
*மாய்வறும் வகை மானிட வியல்பினி லறியோம்....*

*ஒப்பு யர்வறும் ஒருமயக் கடவுளே நிலையாம்,*
*அப்ப ரம்பொருட் கிணைசொலும் அரும்பொருள் என்றும்,*
*இப் புவியிலும் விண்ணிலும் இல்லவே யில்லை;*
*தப்பு நீருமை யிறையெனச் சாற்றுதல் என்றான் !*

*வேண்டு மோரருட் குருபரன் விசனப்பொய் மனத்தைத்
தாண்டி நிட்டையிற் சச்சிதா னந்தத்தைக் காணத்
தூண்டு மெய்வழித் துணையவன் அல்லது தானே
ஆண்ட வன்எனும் செருக்குறல் அடாத தீதாமே !*

*முத்தொ ழில்புரி முதல்வனுக் குலகினி லிணையோ
செத்தொ ழிந்திடுஞ் சென்மங்கள்? சிற்சக்தி யிறைவன்
பத்த ருக்கவன் அருள்பெறச் சாதனம் பகர்வோன்
உத்த மக்குரு; பணிவினால் உயர்ந்தவன் அவனே.*

*என்று ரைத்ததுஞ் சீடர்கள் எரிந்துவீழ்ந் தவன்மேல்,
உன்றன் வாய்த்துடுக் குயிரையே வாங்கிடும் உடனே,
வன்ற வக்குரு மலரடி வணங்கினால் உய்வாய்?
என்று கூறினார் சுத்தனும் இறைவனை நினைந்தான்....*

*ஊனு டலினை வணங்கலின், உள்ளத்தின் உள்ளே
நானெ னும்பரம் பொருளினை நலிவற நினைந்து,
மோன மாகத் தியானஞ்செய் முறையொன்றே தூய
ஞான மாமென நவின்றனன் பயின்றநன் னாவான் !
வேத சாத்திர விதியுமிவ் வாறென விளம்பத்
தீதருள் சினப் பார்வையைத் திருப்பிவை குண்டன்,
வாத சாத்திரி தனைவர வழைத்திவன் வாயைப்
போதி யாதினி யடக்கெனச் சடக்கெனப் போனான் !*

*சந்தை சொல்லிநால் வேதமுஞ் சாத்திரக் கலையும்,
சிந்தை யிற்படிந் திடலற வாயுருச் செய்தோன்,
எந்தக் கட்டத்தின் அடியினை யியம்பினு நுனியை
வந்து தொட்டிடுஞ் சமர்த்தனாம் வாதசாத் திரியே !*

*எட்டு மட்டுந்தன் குரலினை யெழுப்பியே, யெதிரி
குட்டுப் பட்டிடக் குடுகுடுப் பாண்டியி னடையிற்
கொட்டு வான்உப நிடதத்தைக் குறிதவ றிடினோ
திட்டு வான்அவன் செருக்குரை கண்டவர் திகைப்பார்...*

*இன்ன வாதியை அறிஞர்முன் எதிர்த்திடத் தூயன்
முன்னின் றானிதைக் கேட்டனன் முதுபெருந் தாஸன்,
இன்ன ரேயென துளங்குளிர் இன்பநாள் என்றான்...
பின்னும் பற்பல கட்சிகள் பேசின நன்றே !*

*இட்ட நாளினில் இந்நகர் மாசன மெல்லாம்
பட்டி மண்டபம் கூடினர் ; தருக்கத்தைப் பார்க்க ;
நெட்டை வாதியு நிமலனு மேடைமேல் வரவே
கொட்டி னார்கரந் தொடங்குக குதர்க்கமென் றார்த்தார் !*

**வாதி**

*வேத மாகமம் விதிப்படி பன்னிரண் டாண்டும்
ஓதி ஆரிய கேசரி யெனும்புக ழுடையேன்....
ஆதி நாரணன் அவதரித் தெம்மையாண் டிடவே
சோதி வைகுண்ட மணியெனத் துலங்கினான் என்பேன்...*

**சுத்தன்**

*ஒருவ னாகிய பரம்பரன் ஒப்பிலாக் கடவுள்,
அருவ னாகுவன் பிறப்பிறப் பற்றவன்அவனே,
இருவி னைதரும் இப்புவி தனிற்பிறந் திறத்தல்,
அருவ றுத்திடும் கருமமென் றருமறை சொலுமே.*

**வாதி**

*பிறக்க வில்லையெங் குருபரன் பிறர்களைப் போலே;
துறக்கத்தேவர்கள் போற்றிடத் தொப்பெனக் குதித்தே*

இறக்கு மண்ணுயிர்க் கிரங்கியே வந்தனன் அவனே;
திறக்கு நெஞ்சினில் அறிவெனுந் தினகரன் அவனே !

தொப்பெனக் குதித் தானெனுஞ் சொல்லினைக் கேட்டுப்
பப்பெனச் சிரித் தார்புதுப் பகுத்தறி வாளர் !
இப்பொ ழுதுமுன் குருபரன் வானத்தி லேறித்
தொப்பெ னக்குதித் தாலுடன் தொழுவமென் றாரே.

முதுமை தந்திடு நரைதிரை முழுமையு முடையான்,
நிதமு மாதரை நினைத்தவா றனுபவித் திடுவான்,
மதுவுண் பானவன் மறலியை வென்றவன் என்னல்,
பொது சனங்களை யேய்த்திடும் புளுகினிற் புளுகாம்...

நன்று நன்றெனச் சபையினர் நவின்றுகை தட்டக்
"கொன்று போடுவேன் வேதத்தைக்கொட்டிநான் அளப்பேன்"
என்று வாதியும் அடைமழை யெனமறை பொழிந்தான்....
ஒன்றிற் கும்உரை கேட்பவர்க் கோதிடான் அவனே !

தோற்ற னையெனத் தேவதா சுடன்பலர் துணிந்து
சாற்ற வாதியுஞ் சாற்றுநீ வேத்தின் சாரம் ;
ஏற்றுக் கொள்வோம் எங்குரு பரனரு ளிருந்தால் !
ஆற்ற லுண்டெனில் அனைவரும் காணுவோம் என்றான்....

குருவை குண்டனுங் குலவியாங் கிருந்திடச் செய்து,
திரும றைதருந் திவ்விய வாழ்க்கையும், அதனை
அருளின் வந்தநல் லறிஞர்கள் ஆதரித் தமையும்,
உருகி நல்லவர் கேட்டிட உரைத்தனன் சுத்தன்.....

அத்தகும் உரை கேட்டவர் அனைவரும் உணர்ந்தே
சுத்த னேகுரு பரனெனத் துதித்தனர் ஆங்கே....
பத்து நாட்களிற் பகர்ந்தநம் பண்பனின் உரையை
மெத்தவுந் தெளி வாகநாம் விளம்பிடு வோமே !

## 19. வேதசாரப் படலம்

சுத்த சமரஸ சுதந்தர மான
சின்மயந் தன்னைத் தியானம் செய்வோம் !
ஓம்எனும் அதனை ஓதிடும் வேதம்
ஒன்றே பரம்பொருள் ஒன்றே உண்மை,
ஒன்றே ஆன்மா, ஒன்றே அறவழி.
ஒன்றை நன்றாய் ஊன்றி யறிதலே,
அறிவெனச் சொல்லும் அவ்வே தத்தின்
சாகைக ளெல்லாம் சத்திய விளக்கமாம்.
தெள்ளிய ரிஷிகள் உள்ளனு பவத்தால்,
அருளின் வாக்கால் ஆர்த்ததே வேதம்....
மனந்தரு தடைகளை மாசற வென்று
மானிடச் சீவன் மாறிப் பொலிந்து,
தேவ ஜீவனம் மேவிச் சிறத்தலே
நரவாழ் வமர ஞானவாழ் வெய்தலே,
வேதப் பொருளென விளம்புத லாமே.
வேதத் தில்வரும் தேவர்க ளெல்லாம்
பரம்பொரு ளொன்றின் பலவகைக் குணமாம்.
அதிதி என்பதே அமரசிற் சக்தி,
அக்கினி சேதன சக்திக் கனலாம்,
அழகும் இளமையும் அர்யமா னாகும்,
ஒள்ளிய ஜீவரே ஓங்கிய தேவர்.
உண்மை யொளியே வெண்பசு வாகும்,
இருளற ஒளிபெறல் இயற்றும் வேள்வியாம்;

வீறுபெற் றொளிரும் விவேகமே இந்திரன்.
அன்பே மித்திரன், அறிவே சூரியன்,
இன்பமே சுபஸ்பதி, இன்னுயிர் வாயு,
இந்த வாறே எல்லாப் பெயர்களும்,
கடவுட் பெருமையைக் காட்டுவ தாமே.
இந்தத் தெய்வக் குணங்களை யெதிர்க்கும்
வஞ்சம் பொறாமை, வலிய செருக்கு,
எனதுன தென்னும் இருளிறு மாப்பு,
பஞ்சமா பாதகம்— பாணிசு, தஸ்யு,
விருத்திரன் வாளன் வெய்ய நமுசி
முதலிய அரக்கராய் மோதுங் குணங்களாம்.
உருத்திர சிவனே உயர்த்தும் கனலாம்.
தேவசே னாதிபன் செவ்வேள் கந்தன்.
பரந்தசுத் தான்மா பரம்பொரு ளெல்லாம்,
அதனருள் வாக்கே ; ஆசான், பிரகஸ்பதி....
அமரக் குணங்கள் அசுரக் குணங்களை,
எதிர்த்து வென்றுமே லேறிச் சென்று
சச்சிதா னந்த சத்திய சித்தி
பெறலே வேதம் பேசிடும் போராம்.
ஏழ்ஆ தாரமாம் ஏழுல கங்களைப்
படிப்படி யாகப் பதமுறக் கடந்து
பூபுவர் ஸ்வர்மஹர் ஜனதவ ஸத்தெனும்
ஏழ்நிலை தாண்டி இருளை வென்றே,
அசுரக் குணங்களை, அறிவிலித் தடிப்பை
அகம்பா வத்தை அறவே தொலைத்து,
திவ்விய வாழ்வைச் சேர்தலே வேதம்
விளக்கும் வேள்வியின் விரிபொரு ளாமே....
மனிதன் தெய்வப் புனிதனா கிடவே
வேத ரிஷிகள் விதவித சாதனம்
வாழ்வுடன் அமைய வகுத்தனர் கேளீர்;
பிரம சரியம் பேணிக் கற்றல்,
மாதுடன் கூடி மனையறங் காத்தல்,
மக்கள் வளர்ந்தபின் மனையின் பொறுப்பை
அவரிடம் விடுத்தே அருந்தவங் காத்தல்,
இறுதியில் அனைத்தையுந் துறந்த துறவியாய்,
சுத்த யோகமும் சுயநல மற்ற
பொதுநலத் தொண்டும் புரிதலே கடனாம்.
அறிவும் ஆற்றலும் பொறிபுல னடக்கமும்,
கலையுந் தொழிலும், கருத்துயர் கொள்கையும்,
வீரமும் தீரமும் வென்றுல காளும்
சக்தியும் தெய்வ பக்தியும் பொலியும்
பிரம சரியமே இருபா லார்க்கும்
வாழ்வின் வேராம் ; மனையறங் கிளையாம்.
பதினாறு முதலிரு பத்துநான் காண்டு
வரையில் மாதர் மணம்புரி வயதாம்.
இருபத் தைந்தை எட்டிய பின்னும்
நாற்பத் தாறு நடக்கு மட்டும்,
அறிவை வளர்த்தே ஆண்கள் மணக்கலாம்.
பொருத்த மான புலமையும் குணமும்
வயதும் மனமும் வடிவும்பலமும்
விருப்பமும் தெரிந்தே விவாகம் நிகழ்கவே,
ஆண்பெண் குடித்தனம் அகிலவாழ் வாகும்.
பேரறி வோங்கலே பிரம வேள்வியாம்.
பெற்றவர்ப் பேணலே பிதுர்வேள் வியதாம்.
தெய்வக் கனலைத் தியானயோ கத்தால்

*சீர்பெற வளர்த்தலே தேவ வேள்வியாம்.*
*பூவுயிர்த் தொண்டே பூத வேள்வியாம்.*
*மானிடர் பணியே மனித வேள்வியாம்.*
*இவ்வைந்து வேள்வியும் இல்லறக் கடனாம்.*
*உலக வாழ்வின் உயர்பய னெய்த,*
*வீடும் நாடும் பீடுற வேண்டி,*
*சுதந்தர வீறு துலங்கிட வேண்டி,*
*அச்சமும் அடிமையும் துச்ச நினைவும்,*
*ஒழிந்து, நம்புகழ் ஓங்கிட வேண்டி,*
*அறிவும் இன்பமும் செறிந்திட வேண்டி,*
*குணகர் மங்களைக் குறிக்கும் நான்கு*
*வகையாய் மாந்தர் வாழ்வதே வருணம்.*
*சாதி மதத்தின் சாயமும் அன்று;*
*தாழ்வுயர் வென்னுந் தனிச்செருக் கன்று,*
*பிறவி யன்று; பெருமையாம் அறிவே*
*அவரவர் குணமே அதனை வகுக்கும்....*
*தவமுங் கல்வியும் சத்திய ஒழுக்கமும்,*
*சுத்தமும் அந்தணர் மெத்தவும் உடையார்.*
*வீர தீரமும், ஆருல காட்சியும்,*
*போர்வலிப் பெருக்கும், பொதுநலத் திண்மையும்,*
*தியாகமும் போகமும் ஈகையும் கல்வியும்,*
*க்ஷத்ரியர் போற்றுந் தன்மைக ளாகும்.*
*பலவகைத் தொழிலும் பயிர்பசுக் காத்தலும்*
*வணிகமும் ஈகையும் வைசியர் சிறப்பாம்.*
*ஊருக் குழைத்தலே உயிர்க்கட னாகக்*
*கொண்டவர் நான்காய்க் குறித்த தொண்டராம்.*
*அவரவர் அறிவின் அளவே வருணம்....*
*எவருந் தாழ்விலை; இன்றைப் பார்ப்பான்,*
*ஒழுக்கம் வழுவின் ஒருபடி யிறங்குவான்.*
*அந்தணன் மகனே அந்தண னில்லை*
*அந்தண் மையனே அந்தண னாவான்.*
*சாதிக் கொடுமை, வீதிக் கொடுமை,*
*தீண்டாக் கொடுமை வேண்டா தறமே.*
*தன்னுயிர் போலே மன்னுயிர் ஒன்றே,*
*எல்லாம் ஒருமயம் என்பது வேதம்.*
*அறம்பொரு ளின்பம் அருளுடன் கூடி*
*நூறாண்டு வாழும் பேறாண்டு முடிவில்*
*இறைவனை யடைகென் றியம்பிடும் வேதம்.*
*அறச்சபை, அறிஞர் அவை, அர சவையுடன்*
*அறிவும் வீரமும், ஐக்கிய பலமும்,*
*செல்வத் தொழிலும் சேனையும் வெற்றியும்*
*செழிக்க நாட்டைச் சீர்பெறப் புரந்து,*
*பகைவரை ஒழித்துப் பழுதற நீதியை*
*நாட்டிச் சிறத்தலே நாட்டார் கடமையாம்.*
*பிறத்தல், கற்றல், பெண்கொளல், இல்லறம்,*
*பெரியார் திருநாள், அரிய துறவறம்*
*இவைவரும் நாட்களை இறைவழி பாட்டுடன்*
*ஹவனம் செய்தும், அறங்கள் செய்தும்,*
*கொண்டா டும்பணி குலத்தினர்க் கழகாம்.*
*ஆண்பெண் சரிநிகர் அனைத்திலும் ஆவார்.*
*ஒருவர் இறந்தால் உளம்பத றாமல்,*
*மகப்பே றற்றார் மறுமணம் புரியலாம்.*
*விதவன் விதவையை விதவை விதவனை*
*நன்முறை கூடி நன்மகார்ப் பெறலாம்.*
*விபசா ரத்தை விலக்கிட வேண்டும்.*

*வேசி யென்பதே வேதத்தி லில்லை.*
*ஆசை தீரும் ஐம்பது வயதில்*
*வானப் பிரத்தம் வகையுறக் காக்கலாம்.*
*நன்னூற் பயிற்சி நல்லறி வளித்தல்,*
*பொதுநலம் புரிதல், பொய்யா ஒழுக்கம்,*
*தவசா தனங்கள் இருவருக் கேற்றதாம்.*
*எழுபத் தைந்தை எட்டிய பிறகு*
*பற்றெலாந் துறந்து பழுத்த ஞானியாய்,*
*முற்றுஞ் சுயநலம் அற்றுல கிற்கு*
*வேத ஞானம் போதித் தவரவர்*
*பக்குவங் கண்டு தக்க சாதனம்*
*சொல்லி யனைவரும் சுகம்பெறுந் தொண்டுகள்*
*செய்யுந் துறவியே மெய்யுணர் துறவியாம்.*
*மானிடர் அனைவரும், ஞானச் சுடராம்*
*கடவுள் ஒருவனைக் காலை மாலை*
*தெள்ளிய உள்ளமாந் திருக்கோ யிலிலே*
*தியானஞ் செய்தலே சிறந்த பூஜையாம்.*
*நேரே இறைவனை நெஞ்சிலே நினைமின்...*
*எல்லா ருள்ளும் இறைவன் இருக்கிறான்.*
*உயிர்க் குயிரான ஒருவன், அருவன்,*
*இரண்டிலா முதல்வன் இதயசுத் தான்மன்*
*ஆருயிர்த் தொகுதியே அருளுட லானான்—*
*அவனுக் கிணையாய் ஆருண் டுலகில்?*
*கட்டையுங் கல்லும் களிம்புறு செம்பும்,*
*கொண்டுளி யாலே கொத்தி யமைத்த*
*உருவெலாம் மானிடர் உதவிய கற்பனை.*
*அவற்றைச் சுற்றிச் சுவற்றை எழுப்பி*
*எனது சாமி எனதே கோயில்,*
*எனதே சமயம் எனதே மோட்சம்*
*எனக்கே தட்சிணை என்னும் தரகர்*
*இனியிவ் வுலகில் இடம்பெற மாட்டார்.*
*எங்கும் நிறைந்த துங்கக் கடவுள்*
*அவரவ ருள்ளிருந் தனைத்தும் செய்வார்.*
*நம்மை யறிந்து நன்மை யளிப்பார்.*
*இருவினைப் பயன்களே இன்ப துன்பமாம்.*
*சீரிய சிந்தையும் செய்ய ஒழுக்கமும்*
*அறமும் பொருளும் ஆண்மையும் அறிவும்*
*வளர்த்தவர் வாழ்க்கை தளிர்த்திசை கனியும்.*
*உடுக்குங் குறியும் உளங்கை ரேகையும்,*
*சோதிடக் கூத்தும் சுயநலக் கூத்தே.*
*ஆடுமா டுகளை அதஞ்செயும் வேள்வியும்,*
*காளி மூளி கறுப்ப னென்றே*
*உருவைக் காட்டி உயிர்ப்பலி யிடுதலும்,*
*படுகொலைப் பாவம் விடுமினித் தீமையை !*
*ஈசனை யடையப் பூசாரி யில்லை.*
*மனத்திரை விலகினால் அனைத்துளும் இறைவன்.*
*சித்த சுத்தியும் தியான சித்தியும்*
*சாதன உறுதியும் சக்தியும் பெருக*
*சந்தியும் ஜபமும் மந்திரத் தாலே*
*பொருளறிந் தாற்றிடப் பொலிவுறும் வாழ்வே !*

**சந்தி ஓம் மந்திர சாரம்**

*ஓம்புவி அந்தரம் ஓம்விண் மஹஜன,*
*ஓம்தப ஸத்திய உலகெலாம் பரவிய*
*சச்சிதா னந்தா, சர்வாத்ம நாதா,*

எல்லாம் வல்ல இறைவா போற்றி !
சூரிய னுள்வளர் ஜோதியே போற்றி,
உயிர்க் குயிரான உயிரே போற்றி,
நலந்தரு மங்கள நாயகா போற்றி,
விண்புவிக் கெல்லாம் வேந்தே போற்றி,
வணங்கத் தக்க வாய்மையே போற்றி,
உள்ளிடங் கொண்ட ஒப்பிலா ஒருவா,
அன்பும் ஆர்வமும் அடக்கமும் உறுதியுங்
கொண்டு மனதுட் குவிந்துனை நினைந்தோம்
அருளால் அறிவைத் திருவுறத் தூண்டி
பேரின்ப சித்தி பெருக நடத்துவாய் ;
மடவிருள் போக்குஞ் சுடரொளி யாவாய்,
பொய்தவிர் சத்திய போகமே யாவாய்,
இருளற ஒளிக்கொளி எம்மை நடத்தாய்;
பொய்யற வாய்மைப் பொருளை யுணர்த்தாய்.
தாமத மொழியச் சத்துவ மீவாய்,
சாவறு ஞானத் தண்ணமு தாவாய்.
மானிடம் அமர வாழ்வுறச் செய்வாய்,
சுத்தா சர்வ சுதந்தரா போற்றி,
பாபம் போக்கிப் பரிசுத்த மருளாய்,
கிழக்குந் தெற்கும் வடக்கும் மேற்கும்,
மேலுங் கீழும் மேவிய பரமா,
சக்தி மயனே, சாந்த ஜோதியே,
எல்லாத் திசையிலும் எல்லா நிலையிலும்,
உளங்கொண் டுன்னை உபாசிக் கின்றோம்,
சுகநா யகனே சுபதா யகனே
சிவன்அரி அயன்குரு தேவேந் திரனெனப்
பலபெயர் கொண்ட பகவனே போற்றி !
சர்வமுந் தானாம் சமத்துவக் கடவுளே,
எங்கள் வாழ்வுன் இச்சையா லியங்கி,
மனமொழி மெய்யில் மாசிலா தொழுகி,
நலமே நினைந்து நலமே பேசி
நலமே செய்து நற்கதி யடைந்து,
விஞ்ஞா னத்தவ வேள்வியாய் வளர்ந்து,
நாலாச் சிரம நன்மையும் பெற்று,
அறம்பொ ருளின்பம் அருட்கலப் பென்னும்
பேறுக ளெல்லாம் பெரிதும் அடைந்து,
துன்மார்க்க மற்ற சன்மார்க்க மாகி,
நோய்துய ரற்ற தூய பலத்துடன்,
பகைசினம் பொறாமைப் படைகளை வீழ்த்தித்
தீர சக்தியாற் செயமே ஓங்கிப்
புகழ்பெற வாழ்ந்துன் புண்ணியம் போற்றி,
உன்னொளி கலந்து தன்மய மாகி
சச்சிதா னந்தந் தழைத்திட வருளாய் !
உனது தியானமே உயிர்ப்பா குகவே,
உனது துதியே உரையா குகவே,
உனது சேவையே உழைப்பா குகவே !
பொறிபுலன் கரணம் அறிவாம் ஆன்மா,
ஆகிய தத்துவம் அனைத்துமுன் அருளால்,
தூய இன்பந் துலங்கிடச் செய்வாய்.
நலந்தருங் கனலே ஞாயிறே போற்றி.
உன்னரு ளாலே உலகெலாம் வாழ்க !
எல்லா உயிர்களும் இன்புற் றொளிர்க.
ஒருவரை யொருவர் திருடுத லின்றி
உன்மய மான உலகினர் என்றும்,

*தொழில்செய் தீந்துண் டெழில்பெற வாழ்கவே.
யோகமும் சுத்த போகமும் வளர்க !
தியாகமும் போகமும் யோகமும் வளர்க.
ஞானமுஞ் செல்வமும் தானமுந் தவமும்,
நீண்டநல் ஆயுளும் நிறைவாம் இன்பமும்,
அருள்வாய் ஓம்பரம் பொருளே வணக்கம் !
சேதனக் கனலே, திவ்வியச் சுடரே,
ஞான சக்தியே நலந்தருங் கொழுந்தே,
ஆருயிர் உனக்கே ஆகுதி யாகுக !
ஓம்சுத்த சக்தி, ஓம்பர மாத்ம ஓம்
ஓம் ஓம் வணக்கம் உண்மையே போற்றி
இந்தமந் திரமே சந்தி ஜபமாம்,
ஹவனத் திற்கும் அமைவது மாமே !
வேதமந் திரங்களின் விழுமிய சாரம்
இவையெனக் கொண்டு தவறா தியற்றுக.
ஒருமையும் அன்பும் உளங்குவிந் தியற்றும்
தியானமே பூஜை, தியானமே வேள்வியாம்.
ஆர்த்த வேதமும் கீர்த்தனாஞ் ஜலியும்
வசையறு மனதுடன் இசைத்தல் இனிதே.
என்மதம் சாதி எனும்பிரி வின்றி,
எல்லா உலகும் எல்லா உயிரும்
எல்லா ருளமும் ஏகமாய் நிறைந்த
உயர்பொருள் ஒன்றையே உள்ளார்ந் துணர்மின்.
அதைக்கலந் திருத்தலே அருந்தவ யோகமாம்—
வாழ்வெலாம் கடவுள் வேள்வியாம் யோகம்....
இதுதத் துவமே இதுசத் தியமே !*

## வேத முனிவர்

*வேத புரியின் வித்தக நல்லீர்,
ஒற்றுமை யாக ஒருகுல நேயராய்,
வாழ்வீர் உம்மை வாழ்வித் திடவே,
வந்த மகான்களைச் சிந்தை செய்வீர்.
தற்புக ழின்றிச் சாந்த சீலராய்,
யோக தீரராய் உத்தம ரிஷிகள்
உள்ளுணர் உண்மையை உரைத்துச் சென்றனர்.
பராசர வியாசர், பாரதம் எழுதிய
மஹாகவி முனிவர், வரம்பிலா வேதச்
சுருதியை நான்கு மறைகளாய் வகுத்து,
வழிவழி சீடரால் வழங்கச் செய்தபின்
உபநிட தங்களை உருவாய் வகுத்தார்.
வேதோப நிஷத்தின் விரிந்த பொருளைப்
பிரமசூத் திரமாய்ப் பின்னும் வகுத்தார்.
"இதயப் பொருளாம் இன்பமே நீஅதைத்
தியான சமாதியால் மோனமாய்க் கலந்தால்,
உள்ளும் புறமும் உலகும் அதுவே."
என்பதே அந்நூல் இயம்பும் பொருளாம்.
வியாசருக் கப்புறம் வேற்றுமைப் படர்ந்து,
வேதக் கலைகள் சேத மாகவே,
சத்திய முரைக்கச் சங்கரர் வந்தார்.
சிவகுரு மைந்தராந் தவமிகு சங்கரர்,
கோவிந்த பாத குருவிடம் பயின்று
காசியி லிருந்து பாஷிய மெழுதி,
பகவத் கீதை பத்துப நிடதம்,
பிரம சூத்திரம் அருமறை ஞானம்
சொல்லும் விவேக சூடா மணியுடன்,*

*பஞ்ச தசி, பல பத்திப் பாடல்,*
*எல்லாம் இயற்றி, எதிர்ப்பார் பலரை*
*வாதில் வீழ்த்தி, வாகை பெற்றாரே*
*தக்க சீடரைப் பக்குவ மாக்கி,*
*தத்துவ மஸியெனும் அத்வை தத்தை,*
*நாடெலாம் பரப்பி ஞான ஜோதியாய்*
*விளங்கிய சங்கரர் வேததர் மத்தின்*
*அருவியால் வளர்த்தார் அறப்பயி ரெங்குமே !*
*சங்கரர் சுத்த சத்தியச் சுடரே.*
*அவருக் குப்பின் அஹம்பிர மம்எனப்*
*பக்குவ மில்லாப் பண்டிதர் எழுந்து,*
*வாய்வே தாந்த வாதமே பேசிப்*
*பதியை மறந்தார்..... பக்தியைத் தூண்டவே*
*காக்குங் கடவுட் காதலில் ஆழ்ந்தே*
*உள்ளும் புறமும் ஒருவனைக் கலந்த*
*பரம சுகத்தைப் பாசுரம் பாடிய*
*பாணர் கோதை பராங்குசர் ஆகிய*
*ஆழ்வா ராதியர், அன்பே வடிவாம்*
*உடையவர் தேசிகர் உலோகா சாரியார்*
*மத்வசை தன்யர், மகான்கபீர் துகாராம்*
*ஆகிய பெரியார் அன்பொளி பரப்பி*
*அடைக்கல வழியை அருளிச் சென்றார்...*
*கம்பனுந் துளஸியும் கவிதைசெய் தாரே.*
*ஆடிப் பாடி ஹரிஓம் எனவே,*
*கூவிக் கோயிலிற் கும்பிடு போடும்*
*காரிய மன்றிக் கருமயோ கத்தைத்*
*துறந்து நாட்டினர் துர்ப்பல ரானார்.*

**தயானந்தர்**

*கேலிக் கிடமாம் போலித் துறவும்*
*மோட்ச வணிகமும், மோசடி பலவும்,*
*கண்ணன் பெயரால் கார்முக ராமன்*
*பெயரால் எத்தர் பிழைக்கும் வஞ்சமும்,*
*நாடெலாம் பரவிய மூடமா மூலும்,*
*பொருளறி யாத புரோகிதச் சடங்கும்,*
*அருளறி யாத ஆடம் பரங்களும்*
*பொம்மைத் தொழுகையும் புராணக் கதைகளும்*
*மலிந்து தேசம் மெலிந்திடக் கண்டு*
*வேதமார்க் கத்தை விளக்கவே வந்த*
*முனிதயா னந்தர் தனிச்சிறப் பறிமினோ !*
*சிவபக் தியுடன் சிவராத் திரியில்,*
*கண்விழித் திருந்து, கல்லுரு வான*
*இலிங்கத் தின்மேல் எலிவிளை யாட்டைக்*
*கண்டிது கல்லென விண்டுருத் தொழுகை*
*பொய்யென உணர்ந்து பொருளிலாப் பூசையை*
*உதறித் தள்ளி உருக்குவே தத்தை*
*ஆராய்ந் ததன்பொருள் சீரா யறிந்து*
*வீட்டைத் துறந்து விரதியாய்க் கிளம்பி,*
*நாடெலாம் போலி நாடகங் கண்டு,*
*வருந்தி யலைந்து விரஜா னந்தரைக்*
*குருவா யடைந்து, மறைப்பொரு ளறிந்து,*
*வேத உண்மையை வீறுடன் பேசிப்*
*பொய்யர் கூத்தையும் புராணப் புரட்டையும்,*
*பணத்தைப் பிடுங்கும் பகல்வே டத்தையும்,*
*கண்டித் துண்மை காட்டினார் அவரே.....*

*பாரத தேசம் பண்புற வேண்டிச்*
*சீரிய ரோங்கும் ஆரிய சமாஜம்,*
*நாட்டிவே தத்தை நாடெலாம் பரப்பப்*
*பள்ளிகள் எழுப்பிப் படிக்கநன் னூல்களை*
*இந்திய மொழியாம் இந்தியில் எழுதி,*
*சத்தியார்த் தப்ரகா சத்தினைத் தந்து,*
*வேதத் திற்கும் விரிபொரு ளுரைத்தார்.*
*வாளும் விடமும் கோளும் வசையும்*
*கொலையும் எதிர்த்தும் கொடுமையைக் குமைத்தார்.*
*கருணை கொண்டு கனிவுரை யாலே,*
*பொதுஜனத் திற்குப் பொதுவழி காட்டி,*
*புதிய பாரதம் பூத்திடச் செய்தார்.*
*பொல்லாப் பகைவர் நல்கிய நஞ்சால்,*
*உடலை நீத்தார் ஒப்பிலாப் பெரியார் !*
*இவரது மொழியே இன்றும் என்றும்*
*வேதப் பொருளாம், ஓதக் கேளீர்,*
*ஓமெனக் கடவுளை ஓதி நினைமின்.*
*அவனே அரசன் அவனே ஆண்டான்,*
*யோகத் தாலும், ஒழுக்கத் தாலும்,*
*அறவழி யாலும் அருளைப் பெறுமின்.*
*கவலையை விடுமின் கடவுளைப் பணிமின்,*
*பொய்யை ஒதுக்கி மெய்யைப் போற்றுமின்.*
*செல்வ மெல்லாம் கல்வியுந் தொழிலும்*
*வளரப் பொழிமின், மக்கள் இன்புற*
*வேத நெறியை ஓதுமி னெங்கும்,*
*வீர தீரராய் விளங்குமின் உலகில்*
*ஆருயிர்க் கெல்லாம் அமைதி வருகவே !*

** ** ** **

*சுத்தன் இவ்வகை சுருதியின் சாரம்,*
*உரைக்கக் கேட்ட ஊரார் பலரும்,*
*"உண்மை யறிந்தோம் ; உம்மையே குருவாய்*
*வணங்குவோம் எமக்கு வழியைத் திறந்த*
*கடவுள் போன்றீர் கைதொழு கின்றோம்....."*
*என்றனர். சுத்தன் "இனியநல் லன்பீர்,*
*காலில் விழாதீர்; கைதொழு காதீர்.....*
*இறைவனுக் கிணையாய் எனைக்கரு தாதீர்.*
*அவனைத் தேடும் அன்பன் யானே....*
*வேத புரியார் வேறுபா டொழித்தே*
*இதய பீடத்தில் இறைவனைப் பணிந்தே,*
*அன்பும் அறிவும் அருட்பணித் திறனும்*
*வளர்த்து நீடு வாழுமின்" என்றான்.*
*தீரன் அவ்வூர் திருந்திட நாட்டிய*
*சத்திய சங்கம் தழைத்தது நன்றே.*
*ஆயினும் பழைய அஞ்ஞா னிகளும்*
*பேயினும் பெரிய பிழைகளைச் செய்தார்.*
*வீம்புக் காகவே வேள்விக் கொலைகளும்,*
*பலிகளுஞ் செய்து புலிகளாய் வாழ்ந்தார்.*
*உயிரைக் கொடுத்தும் உத்தமச் சுத்தன்*
*கொலைகளைத் தடுத்துப் புலால்மது வொழித்துப்*
*போலித் தொழுகையை போக்கியவ் வூரில்,*
*வேத நெறியை விளங்கச் செய்தான்*
*சங்கர ஞானந் தழைத்த தவ்வூரே.*

## 20. சங்கர கீதப் படலம்

*சங்கரமணி யெனும் துங்க வேதாந்தி*
*சங்கர பவனம் சதுரமாய்க் கட்டி*
*நாலு வேதமும் நவின்றிட வைத்து*
*பாரத தருமம் பரவிட நான்கு*
*யோக சாதனமும் ஒளிபெறத் தந்து*
*சலவைக் கல்லாற் சங்கரர் உருவை*
*நாட்டி ஓவியந் தீட்டி யாங்கே*
*சங்கர கீதம் பொங்கிடச் செய்தான்.*
*சுத்தன் பாடிய தூயநற்கீதம்*
*பாடி நாமும் பயனுறு வோமே.*

### குருபரம்பரை

*ஓம் சதாசிவ குருபரமனை*
*நாம் வணங்குவோம் நமः சிவாய ஓம்*
*நாதஓம் நமோ நா ராயணா என்றே*
*ஆதி விஷ்ணுவின் பாதம் பணிவோம்*
*நான்மறைதரும் நான் முகனை நாம்*
*நான்குமெய்தவே நாம் வணங்குவோம்*
*அருந்ததிபதி யாம் வசிஷ்டரின்*
*திருந்து ஞானத்தைப் பொருந்தி வாழுவோம்*
*சக்தி யோகியைப் பக்தி செய்பவர்*
*சுத்த யோகத்தின் சித்தராவரே*
*தரும சாத்திரம் தருபராசரர்*
*கருமவேள்வியின் கருத்தறிகுவோம்*
*வேத வித்தகர் வியாசர்பாடிய*
*கீதை பாரதம் ஓதி உய்வமே*
*மகனைக்கூவிட மரங்கள் ஏன் எனும்*
*சுகனை ஞானநா யகனைப் போற்றுவோம்*
*காரிகைதருங் கவுட பாதர் சொல்*
*ஓர்பரம் பொருள் ஓம்என் றோதுவாம்*
*விவர்த்த ஞானி கோ விந்தபாதரின்*
*நிவர்த்தி மார்க்கமே நிலைத்த பேரின்பாம்.*

### சங்கரர் பெருமை

*பொங்கும் அத்வைதச் செங்கதிர் அவன்*
*சங்கரன் புகழ் எங்கும் பரவுமே*
*"அந்தி வண்ணனே அறிவுத் தெய்வமே*
*மைந்தனாகநீ வந்தருள்" என்றே*
*சிவகுருவுடன் செல்வி ஆரியை*
*தவமிருந்தனர் மகவு வேண்டியே.*
*கனவில் வந்தனன் கைலையம் பரன்*
*மனமுவந்தநன் மகவை யீந்தனன்*
*ஞாலமுய்யவே காலடியிலே*
*ஆலடிச்சிவன் அருள் எழுந்ததே*
*மங்கலந்தரும் சங்கரன் எனத்*
*தங்கச் சேயினைத் தழுவிக் கொஞ்சினார்*
*தந்தைபொன்றவே தாய் கதறினாள்*
*விந்தை வாழ்வினைச் சிந்தித்தான் மகன்*
*பிரமசாரியாய் அருமறைகற்றான்*
*பரம ஞானியாய்ப் பழுத்த சங்கரன்*
*மனமுறநெல்லிக் கனிநல் கேழைக்குக்*
*கனக மோங்கவே கவிதை பாடினான்*
*வாட்டமாகத்தாய் வந்து குளிக்கவே*

வீட்டருகிலே ஆற்றை ஏவினான்
அறிவுச் செல்வனை அரசன் வேண்டினான்
துறவுச் செல்வமே தூயன் வேண்டினான்
மாசிலானைத் தாய் மணம்புரியென்றாள்
ஆசைப் பற்றறும் அறிவு பேசினான்
முதலைப் பற்றவே மதலைகத்தவே
பதறித் தாய்வினைப் பற்றுநீங்கென்றாள்.
வீட்டைநீத்தனன் நாட்டைச் சுற்றினான்
காட்டுங்குருவினைக் கண்டு வந்தனன்
குகைதிறந்துகோ விந்த பாதரும்
மிகமகிழ்ந்துயார் விளம்பு கென்றனன்
ஊனுடல் இல்லேன் உலகு நானிலேன்
நான் சிவம் என்றான் ஞானச் சீடனும்
தத்வமஸிஓம் தத்துவத்தினை
ஒத்துரைத்தான் ஓங் காரகுககுரு
கங்கை சூடிய சங்கரன் எனப்
பொங்கு வெள்ளத்தின் போக்கை நீக்கினான்
உற்ற ஞானத்தை உலகிற்கீயவே
கற்றவர் மிகுங் காசிக் கேகினான்
காசிப் புலவர்கள் கனிந்து கேட்கவே
மாசில் அத்வைதம் பேசி வென்றனன்
பிரம சத்தியம் பரவநாட்டிலே
வரம் பெறுந்திரு வாக்கை நாட்டினான்
ஸஹஸ்ரநாமம் ப்ரஸ் தானத்ரயமுடன்
யுகமுணர்விரி வுரைவகுத்தனன்
சமரசச்சுட ரானசங்கரன்
அமரஜீவனே யாவுமென்றனன்
"நலங்கொள் ஆத்துமா நானென் றறிகுவான்
புலயனில்லையே ; புலவன்" என்றனன்
ஜீவசாட்சியாம் சிவபிரான் வந்தே
தேவனாலயம் தேகம் என்றனன்
பண்டிதன் உய்யப் பஜ-கோ விந்தத்தை
விண்டனன் இருள் விலகு ஞானமே
உலக மாயத்தை விலகி வாழவே
இலகு மின்பமே இதயத் தென்றனன்,
உத்தமகுரு பக்தரத்தினம்
பத்மபாதரின் பணிவைக் காண்மினோ?
காசிமாநகர் கனிந்த சங்கர
பாஷியத்தினை வியாசர் போற்றினார்
வாதம் செய்தபின் வியாச தேவரும்
ஆதி சங்கரர் அறிவுக் கடலென்றார்
கரும மண்டனர் கற்புச் சாரதா
பெரு விவாதத்தின் பிறகு தோற்றனர்
நேச மண்டனர் சுரேசராகியே
பேசி யத்வைதம் பெருந்தொண்டாற்றினார்
திக் விஜயஞ்செய் ஜெகத் குருவுக்குப்
பக்குவம் பெற்ற பக்தர் கூடினர்
சீசைலத்திற்கா பாலிவாளினை
வீசி வந்தனன் சிங்கம் வீழ்த்தினான்
சங்கரர்க்கெதிர் சதிசெய் கூட்டமும்
பங்கமுற்றதே பத்மபாதரால்
உற்றருகிலே உலகிசை மகன்
பெற்ற தாய்க்கடன் முற்று மாற்றினான்
முதியதாய்பர முத்தியெய்திடப்
புதியவீறுடன் போற்றி செய்தனன்

*தவளைபாம்புடன் கவலையற்றுவாழ்*
*சிவநிலையம் ஸ்ரீங் கேரிபூத்ததே*
*கேவலாத்வைதம்-சிருங்-கேரியூன்றியே*
*பூவெலாம் இசை பொங்கப் பொலிவதே*
*சகமெலாம்புகழ் சாரதா பீடம்*
*இகபரசுக மீயும் தாயகம்*
*ஸ்ரீநகரிலே ஜெயசிம்மாசனம்*
*மேநிலைபெறும் வேதாந்தக் கோயிலே*
*சங்கரக்குன்றில் துங்கவேதாந்தச்*
*சங்கநாதமே பொங்குமென்றுமே*
*காஞ்சி காமாட்சி கருணையன்பினால்*
*தீஞ்சுவை யிசை திகழுமெங்குமே*
*அங்கிங் கென்றிலை இங்குளத்திலே*
*சங்கரசிவம் எங்கும் வாழுமே*

*ஆலடி வீற்றி ருந்தே அங்கைமுத் திரையால் அன்று*
*நாலறி வாளருக்கு ஞானத்தை யளித்த மோனி*
*கோலமே உலகம் உய்யக் குருவடி வாக வந்து*
*காலடி யமர்ந்த தந்தக் காலடி யமர்ந்தேன் யானே.*
*துங்கமாம் இமயத் தேவன் சுருதிசெய் வீணைபோன்ற*
*கங்கையைப் போல வேதக் கருத்தினை யிசைத்த தேவன்*
*அங்கையின் நெல்லிபோல அத்வைதஞானம் தந்த*
*சங்கரர் வளருகின்ற சாந்தமா நிலையம் வாழ்க !*
*தேனினும் இனிய சொல்லான் தீச்சுடர் போன்ற தூய*
*ஞான பாரதியாய் வந்த நரசிம்ம ஜோதி வாழ்க*
*ஊனுயிர் துடிக்கும் உள்ளக் குகையினில் ஒளிருகின்ற*
*வானுயர் வள்ளல் வாழ்க வைதிகச் சமயம் வாழ்க !*

## பக்தி பரவசம்

*பொங்குயர் மோன வெள்ளம் பூரிக்கப் பொலியும் வேதச்*
*செங்கதிர்ப் பிழம்பே ! ஞானத் தீச்சுடர் மணியே ஆதி*
*சங்கர குருவே போற்றி சனாதன தருமம் வாழ*
*மங்கள வேதாந்தத்தின் மழைபொழி முகிலே போற்றி*

*அவத்தினைப் போக்கி யாசை ஆணவ மாசைப் போக்கி*
*நவத்திரு வுலகநோயாம் நாத்திகத் தீமை போக்கி*
*சிவத்திரு விளங்கிச் சீவன் சின்மயந் துலங்க வேண்டித்*
*தவத்திரு வளர்க சுத்த சத்திய தருமம் வெல்க !*

*நாதவே தத்தின் வேராய் நானெனும் அதுவாய் உள்ளே*
*பேதமில் லாமல் ஓங்கும் பேரின்ப நிறைவாம் ஒன்றின்*
*போதமாய் விளங்கு கின்ற பூரணக் கதிர் பரப்பும்*
*ஆதிவேதாந்த ஞானம் அருள்சிவசக்தி போற்றி !*

*அங்கிங்கெ னாது பூவில் அவரிவர் அதுவெ னாமல்*
*எங்குந்தா னேதா னாகும் இயல்நிலை யினிது கண்ட*
*துங்கவே தாந்தத் தொண்டர் தொகைதொகையாகச் சென்று*
*சங்கர சிவனைப் போற்றிச் சகமெலாம்பணிசெய் வோமே.*

*சிலைதரு சிற்பி போலே சிந்தனைச் சிற்பி யாகிக்*
*கலைபெற ஞான தீரர் கணத்தினைக் கணத்திற் கூட்டி*
*மலையரு வியைப்போல், அன்னார் மாமறை வழங்குமின்ப*
*நிலைபெற வேண்டியிங்கே நிலைதவம் புரிகின்றேனே.*

*ஆணவ மாயம் போக்கி அன்னிய வலைகள் போக்கி*
*பாணினி பட்டர் பாதர் பகவரின் படிவ மாகக்*

*காணரு குருவின் ஞானக் கலையினைப் பயிலும் அன்பு*
*மாணவ னாக வாழும் வாழ்வெனக் கின்ப மாமே.*

*முப்பொருள் விளக்கங் காட்டி முழுப்பரம் பொருளைக் காட்டி*
*மெய்ப்பொரு ளதுநீ யென்று விளக்கிமுந் நூலைக்காட்டி*
*அப்பொருளாடல்காட்டி, அதுவுலகென்று காட்டி*
*அப்பநீ அறிவாற் செய்யும் அற்புதம் என்சொல்வேனே !*

*பிரமத்தை யறிந்த ஞானி பிரமமே யாகு முண்மை*
*உரம்பெற விவேக சூடா மணியினை வாழச் செய்வாய்*
*கரம்பெறு கனியேபோலக் கைவல்யசுகத்தையீவாய்*
*சிரம்பெறு சுத்த சக்தி சிவமயமான ஒன்றே.*

*இருளர சினிலே துன்புற் றேங்குமிவ் வுலக முய்ய*
*மருளறு மருந்தாய் வந்த மாதவ மணியே போற்றி*
*அருளொளிப் பிழம்பே போற்றி அகமுக குகையி லோங்கும்*
*குருமணி சிவமே நின்சீர் குலவுக வுலக மெல்லாம்.*

## 21. சிவகிரிப் படலம்

*பற்பல மதமும் பார்த்துப் பலமதக் கொள்கை கற்றும்,*
*கற்பனைக் கலைகள் பேசும் கதைகளை வெறுத்துத் தள்ளித்*
*தற்பரம் பொருளை யெண்ணித் தவம்பல புரிந்துந் தூயன்*
*சிற்பர ஞான மின்றிச் சித்தத்தில் அமைதி காணான்....*

*உலகினில் வழங்கு கின்ற சமயத்தின் உள்ள மெல்லாம்,*
*அலசினேன் எனக்கு வேண்டும் அமைதியுங் கனலுங் காணேன்,*
*கலகமும் "எனதே" யென்னுங் கட்சியுங் கண்டேன்; அன்றி*
*நலமுறு பரமா னந்த ஞானத்தை யடைந்தி லேனே !*

*யாரெனக் கந்த ஞானம் ஈகுவார் அவனி தன்னில்,*
*யாரென தார்வங் காண்பார், யாரென தன்பு தேர்ந்து*
*கோரிய பொருளை நேரே குணமுடன் கொடுப்பா" ரென்றே*
*ஊர்தொறுந் தேடித் தேடி உண்மையை நாடிச் சென்றான்.*

*பொன்னகர் அரசன் பார்த்துப் புனிதனை யுபச ரித்தென்*
*கன்னியை மணந்து கொண்டு, கடிநகர் ஆள்வா யென்ன,*
*"மன்னரின் வாழ்வுங் கண்டேன்; மனையினர் வாழ்வுங்கண்டேன்*
*உன்னத ஞானங் காண உவந்தனன்" என்றான் சுத்தன்.....*

*மாயமா புரியின் சாக்தர் அழகிய மாதைக் காட்டித்*
*தாயிவ ளோடுகூடிச் சாதனஞ் செய்து வந்தால்,*
*மாய்வறும் உடலம் வாய்க்கும்! என்றனர்; வாய்மை கண்டோன்*
*நோயறும் உடலம் போதும் என்றுமுன் னோக்கிச் சென்றான்*

*ஆண்டவன் அவத ரித்தான் ; அடிமைசெய் துய்வா யென்றே*
*தூண்டிய தொண்டர் கூட்டந் தொந்தரை செய்யக்கண்டான்...*
*வேண்டிய மட்டும் இந்த வேடிக்கை பார்த்தேன் ஐயா,*
*காண்டகு ஞான ஜோதி காண்பனென் றேகி னானே !*

*இப்படிப் பலவா றாகச் சோதனை யிடையே தாண்டிச்*
*செப்படி வித்தை போன்ற செகப்பகல் வேடந் தாண்டி,*
*எப்படி யோஓர்சக்தி யியக்கிடச் சித்த னாங்கே,*
*ஒப்புயர் வற்ற ஞானச் சிவகிரி உயரச் சென்றான் !*

*வான ளாவிய தீச்சுடர் இலிங்கம் போல் வளர்ந்த*
*தேன ளாவிய நதிவளர் சிவகிரி செறிந்த*

*கான ளாவிய காட்சியைக் கவியெனக் கண்டே*
*ஊன ளாவிய உடலுடன் உள்ளமும் சிலிர்த்தான்....*

*ஆர்வங் கொண்டுதன் ஆனந்த ஞானத்தை அணுகும்*
*பேரன் பர்மன மகிழ்ந்திடப் பிறங்கிய பிறங்கல்*
*தீர்க தாகமென் றுதவிடுந் தீஞ்சுவை யருவி*
*கார்வ ரையுளக் கருணையைக் கவிசெயுங் காட்சி,*

*பண்ணவர் தவப் பயன்பெறுஞ் சிவகிரி பணிந்து,*
*கண்ணியம் பெறு ஞானமா முனிவரன் கண்ட*
*புண்ணியம் பெறு நிலையத்திற் புனிதனும் புகுந்தான்...*
*உண்மை யன்பரைக் கண்டனன்: ஒருகுரு கண்டான் !*

*“வருக” வென்றனர் அன்பர்கள், வணக்கமாய் வந்தான்,*
*“வருக” வென்றனன் ஞானமே வடிவென வாய்த்தான்,*
*பெருக வானந்தக் கண்ணினீர், “பிள்ளையான்” என்றே*
*உருகித் தூயனுங் குருவரன் உவந்திடப் பணிந்தான்.*

*சொக்கத் தங்கம்போற் சுடர்விடு மேனியன், ஞான*
*மிக்க சாந்தமும், சமரஸ மேன்மையும் உடையான்,*
*எக்கு லத்தவர் மதத்தவர் எனினுந்தன் எதிரே*
*ஒக்க நன்கமர்ந் திறைவனை உணர்ந்திடச் செய்வான்....*

*சகந்தனை யொரு சித்திரச் சுருளெனக் காண்பான்,*
*அகந்தை யற்றவன்; அடக்கமே அழகென வுடையான்,*
*தகுந்த பக்குவம் அறிந்தவன் ! சாதனம் வகுத்து,*
*மிகுந்த நேசமோ டனைவர்க்கும் விவேகத்தைத் தருவோன் !*

*தூய வேதியர் தோன்றலாய்த் துறந்திளம் வயதில்,*
*பேய கந்தையைப் பெரியவி சாரத்தால் அடக்கித்*
*தாயுந் தந்தையுஞ் சிவனெனத் தனித்தவம் புரிந்து,*
*மேய ஞானத்தைச் செருக்கற மேதினிக் கீந்தோன் !*

*மூடு மந்திர மற்றவன், மூடரின் புகழைத்*
*தேடுந் தந்திர மற்றவன், சீடரை ஆள*
*நாடு நாடக மற்றவன்; அனைவரு நன்றாய்க்*
*கூடி ஒன்றினைக் குலவிடக் கூட்டிடுங் குரவன் !*

*அவர வர்மன மறிந்துரை அமைதியின் பளிப்போன்,*
*புவி தரும்புகழ் வேண்டிலான்; போதமெய்ப் பொருளை*
*எவரும் உள்ளுணர்ந் ததுமய மாகிட விளம்பித்*
*தவம்பு ரிந்திடுஞ் சத்திய சித்தனாம் இவனே !*

*எனதி யானெனும் எதனையும் பற்றிடா இதயன்,*
*மனதை வென்றவன் ! மமதையைக் கொன்றவன்; மனிதர்*
*இனமெ லாம்ஒரு திருவருட் குலமென்றே இயம்பித்*
*தினகரன் எனத் திவ்விய ஒளிதருந் திருவோன்.*
*சாதி யற்றவன், சமயமும் அற்றவன், உலகின்*
*பீதி யற்றவன், பெண்களைத் தாயென மதிப்பான்;*
*வேத மாகமம் வேறுள விரிமறை கற்றோன்.*
*பேத மற்றவன் பிரிவினை யற்றவன் இவனே !*

*கற்ற கல்வியை அனுபவச் சித்தியாற் கண்டு,*
*முற்ற றிந்துணர்ந் தொன்றினை முடிவுற மொழிவான்,*
*பற்றி லாதவன் ; பரிவுடன் அனைவர்க்கும் உடனே*

*உற்ற நண்பனென் றுதவுவான் உண்மையே யுரைப்பான் !*

*பணத்தைக் கண்டுடை, பட்டமும் பதவியுங் கண்டு,*
*நிணத்தைக் கண்டுயர் தாழ்வினை நினைத்திடா நிமலன்;*
*குணத்தைக் கண்டுளே, குற்றத்தை மோனமாய்த் திருத்தி,*
*அணைத்தெல் லாரையும் அன்புடன் கனிவிக்கும் ஆசான்...*

*உண்மை சத்குரு வெனவுல கொப்பிடு மேனும்,*
*பெண்மைநாணத்தைக்கொண்டவன்; பிறர்தன்னைப்புகழ்ந்தால்,*
*கண்ணை மூடியுட் கடவுளுக் கதுவென நினைப்பான்...*
*வண்மை மிக்கவன் அமுதென வழங்குவான் அறிவே !*

*குருவெ னத்தனை மாந்தர்கள் கும்பிடச் சகியான்.*
*அருமை யன்பருஞ் சீடரென் றாதிக்கஞ் செலுத்தான்.*
*கருமி போலத்தன் சக்தியை கரந்துளே காவான்.*
*வரும வர்க்கதை வகையுற வழங்கிடும் வள்ளல்.*

*முன்ன மர்ந்துளங் குவிந்துணர் முமுக்ஷுக்க ளுள்ளே*
*தன்னை வைத்தவர் உயிர்க்குயி ராகிய தன்மை*
*இன்ன தென்றறிந் தருட்சிவக் கனலினை யேற்றி*
*மன்னு தத்துவம் அறிகென வழிதரும் வரதன்.*

*இத்த கைக்குரு வரனைக்கண் டின்பமோங் கியநம்*
*சுத்த னைமுகங் கண்டதுஞ் சுடர்நகை புரிந்தே...*
*வைத்த ருள்விழி மௌனமாய் மனந்திறந் துள்ளே,*
*சத்தி யத்தினைத் தூண்டினன் சதானந்த யோகி !*

*உள்ளு ணர்ந்தநந் தூயனும் உவகைமேற் கொண்டு,*
*பள்ள நீரினிற் படிந்திடும் படிகமா நதிபோல்,*
*அள்ளு மன்பினால் அடிபணிந் தருட்பெரும் உணர்வால்*
*வெள்ள மேயென விழிகணீர் வழிந்திடத் துதித்தான்....*

## குருமணிக் கண்ணி

*ஆனந்த ஜோதி யருள்வெள்ளம் பாய்ச்சி யென்னுள்*
*ஞானப் பயிர்வளர்ப்பாய் ஞானக் குருமணியே !*
*பிடித்துன் மலர்ப்பாதம் பித்தாகிக் கூவும்*
*அடித்தொண்ட னைக்காவாய் அன்புக் குருமணியே !*
*நினையே நினைத்துருகி நீள்விழிநீர் பாய்ச்சும்*
*எனையாண்டு கொள்வதெப்போ தின்பக் குருமணியே !*
*அத்தா உலகில் அலைந்து பரிதவித்தேன் ;*
*சுத்தசன் மார்க்கச் சுடரே குருமணியே !*
*பல்சமயத் தத்துவத்தைப் பார்த்துப் பயின்று மின்னும்*
*அல்லலறு ஞானம் அறியேன் குருமணியே !*
*தாந்தாம் உயர்வென்று தம்பட்டம் போடுகின்றார்;*
*மாந்தர் மனமயக்கை மாற்றாய் குருமணியே !*
*நாட்டி லடர்ந்துவளர் நானா விகாரமதக்*
*காட்டைத் திருத்தக் கருதாய் குருமணியே !*
*பாரெல்லாந் தானாம் பரமனைச் சாதனத்தால்*
*ஓராது கெட்டார் உலகோர் குருமணியே !*
*சாதிக் கொருசாமி சாமிக் கொருகோயில்*
*வீதிக் கொருமதமேன் ? வேதக் குருமணியே !*
*ஆளையாள் மீறி அடிதடியி லேயிறங்கி,*
*நாளைக் கொலைசெய்வார்; நல்ல குருமணியே !*
*சுற்றுலகின் போக்கைச் சுயமாகக் கண்டலுத்தேன்,*
*நற்றவத்திற் கானகதி நல்காய் குருமணியே !*
*நேராக உண்மை நிலையறிந்து நின்றிடஓர்*

*சீராம் உபதேசம் செய்வாய் குருமணியே !*
*இன்றென்று நாளையென்று மேமாற்றங் கொள்ளாமல்*
*என்றென்று நிற்குநிலை யீவாய் குருமணியே.*
*வற்றாச்சி வானந்த வாரிதியே, உன்னருளைப்*
*பெற்றா லினிக்குறையேன் பேசாய் குருமணியே !*
*கண்ணாரக் காண்பதெல்லாங் காணாப் பரம்பொருளாய்*
*எண்ணியுணர் சாதனத்தை ஈவாய் குருமணியே !*
*என்னுயிருக் குள்ளே இருந்தென்னை யாட்டுகின்ற*
*தன்மயத்தைப் போற்றுதவந் தாராய் குருமணியே !*
*பூரணத்தைக் கண்டுபரி பூரணமாய் மக்களெல்லாம்*
*பூரணமாந் தொண்டு புரிவேன் குருமணியே !*
*ஆருலகை வாட்டும் அரக்கர் செருக்கழிய*
*ஓருயர்ந்த சக்தி யுவந்தேன் குருமணியே !*
*வாய்மை யுபசாந்த வாழ்வு நலம்பெறவே*
*தூயதொரு ஞானந் துலக்காய் குருமணியே !*
*உன்னைப் பிரியாமல் உள்ளத்தி லேவைத்தேன்*
*என்னைப் பிரியாமல் இருப்பாய் குருமணியே !*

*இவ்வகை யுண்மை யன்பன் இறைஞ்சிட மனமிரங்கித்*
*திவ்விய ஞானவள்ளல், "செய்யனே உன்னைப் போலத்*
*துவ்விய லான்மா கேட்குந் துகளறு போதஞ் சொல்லல்*
*எவ்விய லடியா ருக்கும் ஏற்றதோர் கடமை" யென்றான்.*

*"தவமுறு சித்தர் கண்ட தத்துவப் பொருளை யேநான்*
*சிவமெனச் சிந்தை செய்து தெள்ளிய ஞானம் பெற்றேன்...*
*அவனரு ளாலே வாய்க்கும் அனுபவ முனக்குச் சொல்வேன்*
*கவனமாய்க் கேட்டு நீயுங் கடவுளை யடைதி" யென்றான்..*

*உனைப்பிரி யாத ஞான ஒளியினைத் தூண்ட வேண்டி,*
*எனைப்பிரி யாத சக்தி இறைவனை வேண்டிக் கொண்டே*
*நினைப்புயர் மேலோர் சொன்ன மெய்வழி நிலையைச்சொல்வேன்*
*அனைத்தையும் அறிதியென்றே அறிஞனுஞ் சொல்லலுற்றான்152*

## 22. ஞானோபதேசப் படலம்

*இன்பமே தானாம் இதயச் சிவனே,*
*நம்பும் அடியார் நலம்பெற வாழ்கவே !*
*அன்பநின் பக்குவம் அறிந்து மகிழ்ந்தேன்.*
*பரமன் என்னுட் பரிவுடன் அருளிய*
*பொதுமறை யான பதியறி வூட்டும்,*
*சிவாத்து விதத்தைச் செப்புவேன் கேளாய் !*
*வேதந் தெளிந்தாய், வேதத் தெளிவே*
*சித்தாந்த மென்ன வித்தகர் சொல்வார்.*

### மெய் கண்ட போதம்

*பதிப்பொருள் கண்ட பரஞ்சோதி முனிவர்,*
*கருவிலே திருவுடைக் கண்மணிப் பிள்ளை,*
*சுவேத வனர்க்குச் சுடர்சிவ ஞான*
*போத மளித்துப் பொருளு முணர்த்திப்*
*பொய்யறு புலவரா மெய்கண் டாரெனும்*
*பெயரு மளித்துப் பெருமைசெய் தாரே !*
*நீண்ட காலம் நிட்டையி லிருந்து,*
*சிவஞான போத சித்தியும் பெற்று,*
*சத்திய தரிசி தன்னுளே யுணர்ந்த,*
*ஞானத் தாலே ஞாலம் பயன்பெற,*
*அருணந்தி முதலிய திருவடி யார்கள்*
*அறியப் புகட்டி அரனடி சேர்ந்தார்....*

*உந்தியார், சித்தியார், உண்மை விளக்கம்,*
*சிவப்பிர காசம் திருவருட் பயனாம்*
*சிவஞான பாடியம் இவையினும் பலநூல்*
*விளக்குசித் தாந்த விளக்கென விளங்கும்*
*சிவஞான போதத் தெளிவிது வாமே !*

## சிவஞான போதத் தெளிவு

*ஆதி முதல்வன் அருட்பெருஞ் சிவனே,*
*அவனே பரமன், அவனே பசுபதி,*
*அவன் அவள் அதுவென ஆடிச் செல்லும்*
*பாருயி ரான பசுக்க ளெல்லாம்*
*அவனுடல் போலும் ; அவனே உயிர்க்குயிர்.*
*ஆற்றைப் பார்த்தால் ஊற்றை நினைப்போம்—*
*ஊற்றால் மழையை, உயர் வா னத்தை*
*நினைப்பது போலே நிலவுயிர் கண்டே*
*பரமனை அன்பர் பாவனை செய்வார்.*
*ஆருயிர் வாழும் ஆதார மான*
*பஞ்சபூ தங்களும் பரிதியும் மதியும்*
*ஆன்மா தானும் அரன்வடி வாமே.*
*ஒவ்வோ ருள்ளமும் உள்ள பொருளாம்*
*பரமனை யன்றிப் பாருல கிலையே.*
*உயிரில் லாமல் உடலா டாதுபோல்,*
*உயர்சிவ மின்றி உயிரா டாதே.*
*காற்று, மேகம் கணக்கறு மீன்கள்*
*அனைத்திற் கும்வான் ஆதார மாகும்.*
*அவனிக் கெல்லாம் சிவனா தாரமே.*
*வளர்பயிர் தாங்கும் மண்ணிலம் போலே,*
*பரமன் இந்தப் பாருல கனைத்தையும்*
*தாங்கி எதிலுந் தாக்கற் றிருக்கிறான்,*
*இரவியைப் போலே இருந்தவா றிருக்கும்*
*சதாசிவ சுத்த சக்தியி னாலே*
*அயர்வற உலகில் ஐந்தொழி லாடுமே.*
*அவன்சந் நிதிக்கே ஐந்தொழி லாமே*
*சக்தியுஞ் சிவமும் சமமாந் தத்துவம்,*
*கதிருடன் பிரியாக் கதிரவன் போலாம்.*
*யந்திர உலகின் எசமான் பரமன்.*
*அதன்மின் சாரமே அருட்பெரும் சக்தி,*
*மாறி மாறி மன்னுவ துலகே,*
*கடலெழு மழைநீர் கடல்கலப் பதுபோல்,*
*மண்ணெழும் பயிர்கள் மண்கலப் பதுபோல்,*
*வித்தெழு மரத்தை வித்தடக் குவதெனச்*
*சிவனரு ளொன்றிலே சீவன் அடங்குமே.*
*சீவ போதம் சிவபோத மாதலே*
*வாழ்வின் பயனென வகுத்தனர் மேலோர்.*
*ஆக்கும் பிரமன் காக்கும் திருமால்,*
*அழிக்கும் உருத்திரன், மறைக்கும் மகேசன்*
*அருளும் சதாசிவன் ஆகும் ஐவரும்,*
*துரியா தீத சுத்த பரமனின்*
*ஐந்தொழிற் சக்தியென் றறிந்தனர் மேலோர்.*
*ஆதியும் அவனே அந்தமும் அவனே ;*
*ஆதியந் தமிலாச் சோதியும் அவனே,*
*வினையுயிர்க் குலங்கள் விசுத்தி யடைந்து*
*பெத்தான் மாக்கள் சுத்தான் மாக்களாய்,*
*இன்புற வேதொழில் இயற்றுவான் இறைவன்.*
*ஆவதும் போவதும் அவனரு ளாலே,*

உடலைத் தருவதும் உட்கர ணங்களைத்
தந்துல கத்தை வந்து நுகர்ந்தே,
(அழுக்கை அழுக்கால் அகற்றுவ தொப்பவே,
முள்ளை முள்ளால் விள்ளுவ தொப்பவே,)
பாசத் தாலே பாச மறுத்தே
அனுபவத் தாலே தனுகர ணங்களிற்
சிக்கிய உயிரைப் பக்குவ மாக்கி,
உருக்கி யுருக்கி உலகத் தீயில்,
அருண்மெரு கேற்றி அம்பொன் னாக்கிச்
சீவனைத் தன்மயஞ் செய்யுஞ் சிவமே !
இருவினை விளைவுங் கருணையின் விளைவே !
"இதயத் துடிப்புடன் இருக்கிறேன்" என்றுள்
உணர்த்துஞ் சிவனை உணர்வது ஞானமே,
கண்ணுங் கதிரும் காண்பா னும்போல்,
அப்பும் உப்பும் ஆழியும் போலே,
வெல்லமும் பருப்பும் விரவும் உருண்டைபோல்,
மணமும் அழகும் மலரும் போலே,
உடலுங் கரணமும் உயிரும் போலே,
பேதா பேதமாய்ப் பெரிய பரம்பொருள்,
அருளாற் கலந்துயிர் அனைத்துட னுள்ளான்.
ஆரெனில் யானெனும் அதுவே ஆன்மா !
ஆண்டா னின்றேல் ஆன்மா வில்லை.
உள்ளவன் கடவுள் ஒருவனே ; அவனே
யாக்கைக் கோயிலுள் ஈசனா யுள்ளான்.
ஒற்றுடன் உயிர்போல் உயிருடன் இறைவன்;
இறைவனுக் கிங்கே இணையிலை யெதுவும்,
தானே தானாந் தனிமுதற் பரமன்,
நீக்கமற் றருளாய் நிறைந்தவ னாவான்.
பிறப்பிறப் பில்லான், பெயர்வடி வில்லான்,
அவத ரிப்பதும் அவசிய மில்லையே.
அருட்சக்தி யாலே அனைத்தும் புரிவான்.
உயிர்ப்பைப் போலே உட்புறஞ் செல்வான்.
சேயைக் கழுவுந் தாயைப் போலே,
சாணையிற் கத்தி சமைவது போலே,
மாதா அருளால் மாசறும் ஆன்மா !
காட்டும் அறிவே கடவு ளறிவாம்.
காணும் அறிவே நானெனும் ஆன்மா,
காந்தந் தன்னிற் கவற்சி யெதுவோ,
நீரிற் குளிரெது, நெருப்பிற் சூடெது,
கதிரில் ஒளியெது காணின் அதுவே,
மனத்தில் நினைவாய், மனத்தைக் கடந்த
புந்தியி லறிவாய்ப் பொலிவது மாமே !
தேகதத் துவத்தைச் செப்பிடக் கேளாய்:
எலும்புதோல் ஊன்மயிர் நரம்புநீர் குருதி,
விந்துமூ ளையுடன் உந்துறும் வாயு,
நாடிக ளாலே ஆடுமித் தூலம்.
பூதம் மாத்திரை, அறிசெயற் பொறிகள்,
அந்தக் கரணமோ டான்மதத் துவமாம்,
இயற்கை யுடலென் றியம்புவா ரிதையே.
காலம் நியதி கலையுடன் வித்தை,
அராகம் புருஷன் விராவு மாயை
ஏழும் வித்தியா தத்துவ மென்பரே.
சுத்த வித்தையும், சத்தி சிவமுடன்
ஈசுர சதாக்கியம் இவைசிவ தத்துவம்.
தற்பரம் பொருளே தத்துவா தீதம்.

*சடத்திற் சூக்கும சக்தியொன் றுண்டாம்,*
*ஆதா ரங்களில் அமைந்தது வாமே.*
*மூலா தாரம் மூண்டுறங் கதனை*
*மேன்மே லேற்றி விசுத்தி ஆஞ்ஞை*
*தாண்டித் தலைபெறு ஸஹஸ்ரா ரத்திற்*
*சேர்த்தால் யோக சித்திய தாமே !*
*ஆதார சக்தி ஆங்கே சிவனை*
*அணைதலே சச்சித் தானந்த மாமே !*
*அரவிந்த சித்தியென் றதையறி வாயே !*
*நாத விந்துவே ஆதிதத் துவமாம்.*
*ஓமென் றுள்ளே ஒலிப்ப ததுவே.*
*சிவோஹம் என்றதைத் தியானம் செய்கவே.*
*ஆதார சக்தியை அறிந்துமே லேற்றுக,*
*விழிப்புங் கனவும் சுழுத்தியும் துரியமுந்*
*துரியா தீதமும் அறிவு நிலைகளாம்.*
*துரியா தீதம் சுத்தா னந்தமாம்.*
*காமம், வெகுளி, கலக்கம், இருவினை*
*மயக்க மாகிய மாசுகள் பொதிந்த*
*அந்தக் கரணம் அன்பால் உருகி,*
*அருள்பெற் றொளிபெற் றறிவுட னமர்ந்தால்,*
*சக்திமின் சாரம் பற்றுமாம் அதிலே.*
*சிற்றறி வுடனே பற்றுறும் ஆன்மா,*
*பாசத் தின்வழி மாசற லாமே.*
*பதிவழி பற்றிக் கதிபெற லாமே !*
*ஐம்புல வேடருக் கடிமை யாகிக்*
*கொள்ளிவட் டம்போற் கள்ளுண் பேய்போல்,*
*துள்ளு மனத்தினாற் சள்ளைகள் பலவாம்....*
*சரியை கிரியை சதாதியான யோகம்,*
*அருளறி வதனால் ஆன்மா பழுத்துப்*
*பிரிவற வாழும் பரமனை யுணர்ந்து,*
*சின்மய மாகிச் சிவமய மாமே !*
*வினைமயக் காணவந் தனைமயக் கிடராம்.*
*சகலர் மூன்றுஞ் சார்ந்தவ ராவார்.*
*இறைவ னருளை எய்திய குருவால்,*
*இவர்சிவ ஞானம் எய்திட லாமே.*
*இருவினை ஆணவம் பிரளயா கலர்க்காம்.*
*பரமனே இவர்க்குக் குருவென வருவான்.*
*ஆணவ மாசே காணுவிஞ் ஞானரை*
*உள்ளிருந் திறைவன் உயர்த்திடு வானே.*
*பின்னிலை முன்னிலை, தன்னிலை யிருந்தே*
*அன்னைபோல் அன்புடன் அருள்புரிந் திறைவன்*
*அன்பு செய்யும் ஆன்மா முதிர்ந்தே,*
*இருளகன் றொளிபெற் றிருவினை மாறி,*
*அணுவணு வாகவே ஆணவந் தேய்ந்து,*
*மாயைத் திரையை மாசற விலக்கித்*
*தன்னை யறிந்து தலைவனை யறிந்து,*
*சுத்த சிவபர முத்தி பெறவே*
*படிப்படி யாகப் பக்குவஞ் செய்வனே ;*
*இறைவனே உயிரின் உறுதுணை யாவனே*
*அவனருள் பெற்றோன் அருளா சிரியனாம்.*
*ஆசான் றனையே அவதார மென்பார்.*
*குருவழி சென்றால் உருவழி யாமே,*
*உருவழி பற்றின் அருவழி யாமே....*
*இலிங்கம் கூத்தன் இருவுரு வங்களும்,*
*தியானத் திற்குச் சிறந்த தாகுமே.*

*கரும்பின் இனிப்பை விரும்புவ தொப்பவே*
*உருவிற் குள்ளே அருவை நினைகவே—*
*படிகம் போன்ற பரிசுத் தான்மா*
*பாசம் பற்றிற் படுந்துயர் கோடி.*
*ஈசனைப் பற்றின் இன்பச் சிவமாம்.*
*ஓம்சிவ வணக்கமென் றோதிப் பணிந்து,*
*இறைவ னன்றி இல்லையா னென்னும்*
*சிவோஹம் பாவனை தினந்தினஞ் செய்தே*
*தியானம் பழுத்துச் சிவமயம் எல்லாம்*
*என்றனு பூதி எய்திய முத்தரே,*
*சுத்த சமத்துவ சுதந்தர மகான்கள்.*
*திருநெறித் தொண்டர் தேச விளக்குகள்,*
*அருட்பிர காசர் ஆனந்த ரவரே !*

**மாணிக்கவாசகர்**

*அத்தகை முத்தருள் அன்பால் உருகிப்*
*பெருந்துறைப் பதியிற் குறுந்தடி நிழலில்,*
*சிவகுரு பரமன் சிவாய நமவென*
*உபதே சிக்க உட்பொரு ளறிந்து,*
*மும்மல நீங்கி, நின்மல மாகித்*
*தன்னைக் கொடுத்துச் சதாசிவம் பெற்றுத்*
*திருவா சகமெனுந் தேனார் வேதம்*
*அருள்மணி வாசகர் அடிதொழு வோமே !*
*பாண்டிய னுக்கவர் வேண்டிய மந்திரி.*
*குதிரை வாங்கக் கொண்டு போன*
*பொற்குவை யெல்லாம் அற்புதக் கோயிற்*
*பணிக்கே யாக்கப் பாண்டியன் சினந்து,*
*சிறையிட் டொறுக்கப் பொறுமையிற் பொறுத்து,*
*மறவா திறைவனை மாசற நினைத்தே*
*புன்னகை யுடனே இன்னலைத் தாங்கி,*
*சவத்தை மறந்து சிவத்தைக் கலந்து,*
*பாரொடு விண்ணாய்ப் பரந்த பரமனின்,*
*அருளிற் கரைந்தார் திருவா சகரே !*
*நரிபரி யாக்கிப் பரிநரி யாக்கி,*
*வைகை விம்ம வன்னியின் பிட்டை*
*உண்டகூ லிக்கே உடைப்படைப் பவனாய்*
*ஆடிப் பிரம்படி அடைந்து மறைந்தே,*
*அடியார் திறத்தை அரசனுக் குணர்த்திய*
*சிவனை நம்பினார் எவனுக் கஞ்சுவார்?*
*மதுரையை நீத்த மாணிக்க வாசகர்,*
*சிதம்பரக் கூத்தன் சேவடி நிழலில்,*
*அன்பே தானாய், அருளே உயிராய்,*
*பாடிப் பணிதலே பக்திசா தனமாய்,*
*தியானமே வாழ்வாய்ச் செய்தவம் செய்தார்.*
*அன்புடன் வெள்ளி யம்பலக் கிழவன்*
*திருவாச கத்தைத் தீட்டி மறைய,*
*அதன்பொரு ளிதுவென் றருள்மணி வாக்கார்,*
*கனக சிவச்சுடர் கலந்ததைக் காணாய்....*
*மணிவா சகரின் வாக்கமு துண்டால்,*
*அன்பாற் சிவனை அடைந்திட லாமே !*

**அப்பர்**

*அப்பரின் அன்பும் அற்புத மாமே !*
*உலகை யறிந்து நலம்பெறத் துறந்து,*
*சமணம் பயின்று சைவம் புகுந்து,*

சுத்த னருளாற் சூலைநோய் தீர்ந்தே
கூற்றையும் அஞ்சாக் கொள்கையிற் சிறந்தே
அடியார்க் கெளியான் குடியாய்ப் பயின்றே
மகேந்திர னென்னும் மன்னவன் செய்த
கொடுமைக ளெல்லாம் பொறுமையாய்த் தாங்கி,
நீற்றறை குளிர, நீலநஞ் சினிக்க,
கரியும் வணங்கக் கல்லும் மிதக்க,
சிவனருள் காக்கத் தீமையை வென்று,
அரசனுஞ் சிவனடி பரவச் செய்து,
அருளை விளக்கிய திருநா வரசர்,
நெஞ்சிற் சிவத்தை நினைத்தெப் போதும்,
நாவார நாளுந் தேவாரம் பாடி,
அருட்பா லுண்ட ஆளுடைப் பிள்ளையும்,
அப்பரே யென்ன ஒப்பரு தொண்டுகள்
செய்ததை எண்ணிச் சிவஞ்சார் வோமே !
அந்தண ராகும் அப்பூதி யடிகள்,
அப்பரின் அன்பால் அரனருள் பெற்றார்.
அடியார் நேயம் அருட்சிவ நேயமாம்,
செந்தமிழ் மதுரையில் சிவக்கொடி நாட்டிய
ஞானசம் பந்தரும் நாவுக் கரசும்
அருள்வாக் காலே அற்புதஞ் செய்தார்.
முதுமையில் அப்பர் முயன்று, முயன்று,
கயிலை சேரக் கடுந்துயர்ப் பட்டார்...
சிவனரு ளாலே திருவை யாற்றிற்
கயிலைப் பரமனைக் கண்டு களித்தார்.
இறுதி நாளில் இணையிலா அப்பர்,
உள்ளம் அன்பு வெள்ளம தாகவே
பெண்பொன் மயக்கு மண்ணாய் மறையவே
பத்தியும் பணியும் சுத்த நிட்டையும்,
துதியுந் தொழிலாய்த் தூய சிவனையே
எண்ணினார் மற்றோர் எண்ணந் தவிர்த்தே
சித்திரை சதயம் சிவனடி சேர்ந்தார்...
அப்பரைப் போலே அன்பும் பணியும்
செய்யுந் தூயர் சிவம்பெறு வாரே !
பெரிய புராணமுந் திருவிளை யாடலும்
விரிவுறக் கூறும் அரனடி யாரெலாம்,
அன்பு வழியால் இன்புற் றனரே !

### தாயுமானவர்

முற்றத் துறந்த பட்டினத் தாரும்,
மோனம் விரும்பிய ஞானி யான
தாயுமா னாரும் தந்தபா சுரங்கள்
மனமா சறுக்க மருந்தா கும்மே !
பார்க்கு மிடமெலாம் பரமனைக் கண்டிட
நீக்க மில்லா நிட்டையி லிருந்தே,
சிவாத்து வைத சித்திகள் பெற்று,
என்றுநீ யன்றுநான் என்றுணர் ஞானி—
தாயுமானவரின் தமிழ்வாக் கெல்லாம்,
உள்ளறி வீயும் உபநிஷத் தாமே
பாச மறுத்துப் பரமனை யறியப்
பராபரக் கண்ணியே நிராமயத் துணையாம்.
இதய வெளியிலே என்றுஞ் சிவனைப்
பாவித் திறைஞ்சிப் பத்தி பழுத்துத்
திருவரு ளாலே இருவினை மலமறச்
சுத்த சித்தி துலங்கு மென்பதே,

*தாயுமா னவரின் தத்துவ சாரமாம்.*

**வள்ளலார்**

*வடலூ ரிருந்த வள்ளற் பெருமான்,*
*சாதி சமய சாத்திர கோத்திரச்*
*சண்டைக ளின்றிச் சமரஸ சுத்த*
*சிவசன் மார்க்கம் புவிக்கெலாஞ் சொன்னார்.*
*அவர்தரும் அருட்பா அகில வேதமாம்..*
*அருட்பெருஞ் சோதி தனிப்பெருங் கருணையாம்*
*ஆண்டவ னுக்கே அடைக்கல மாகி,*
*ஆன்மநே யமுடன் அருட்பணி புரிந்தே*
*ஆருயி ருலகெலாம் ஓர்குல மாகி*
*இகத்தே பரத்தை இலக்கி வாழலாம்....*
*என்றுபே ரின்ப மன்றுளே புகுந்தார்....*
*அருட்பா உயிருக் கருட்பா லாமே !*
*பெரியார் இவ்வகை பேசி யடைந்த*
*சுத்தசன் மார்க்கச் சுடர்நெறி நிற்கத்*
*தக்காய், ஒழுக்க மிக்காய், தவத்திலும்,*
*புக்காய் யோகம் புரிந்தாய், நீயினி*
*வேறு நினைவற வீற்றிங் கிருந்து,*
*சித்தங் குவிந்து, சிவத்தி யானமே*
*ஒருமா தஞ்செய். திருவரு ளூதிக்கும்......*
*அதனிடம் உன்னை அளித்து விட்டால்,*
*கவலையே யில்லை புவியிலோ விண்ணிலோ*
*நடக்கவேண் டியதை நடத்தும் அதுவே !*
*சிவனரு ளொன்றே சீவனுக்கின்பம்*
*சிவனே இன்பம் சிவசிவ சிவஓம்*
*குருவடியமர்ந்து திருவடியானும்*
*தியானம் செய்து மோனமா னானே*
*ஆத்துமநாதம் ஆர்த்திட வுள்ளே :*

## 23. ஆத்ம நாதப் படலம்

*ஆதிபர மாத்மனே அகிலாண்ட நாதனே,*
*அக நாடகத் தரசனே,*
*அனந்த குணனே குணா தீதனே, அமலனே*
*அருவனே அரு ளுருவனே !*
*சாதிமத வாதங்கள் சாராத சாட்சியே,*
*சக்திக் கதிர்ப் பிழம்பே .....!*
*சாந்தவொளி வீசிடும் சமயோக தீபமே,*
*சத்திய சொரூபமே ஓம்!......*
*பூதபௌ திகமான பேதங் கடந்த சிற்*
*போதமே, சிவ போகமே !...*
*பொங்குபரி பூரணப் பொருளே, புவிக்கெலாம்*
*புகலான வான் கருணையே !...*
*சோதி மயமாம் அமுத வெள்ளமே, உள்ளமே*
*தூயவுள் ளத்தி னுணர்வே*
*துரியபரி பூரண சுதந்தர நிரந்தர*
*சுயம் சச்சி தானந் தமே !*

*ஆங்கார மற்றவர் அகத்தொளிரு ஞானமாய்*
*ஆனந்த வானமாகி*
*ஐம்பூத நிலையமாய், அகரத்தின் சிகரமாய்*
*ஆருயிர்க் குயிர் நாதமாய்,*
*நீங்காத சகசசன் மார்க்கத்தின் சோதியாய்*

நித்தியச் சுக ராசியாய்
நிலையாத மனதினை நிலைநிற்க நாட்டிடும்
நிகரற்ற ஜப நிட்டையாய்
ஏங்காத நெஞ்சிலே தூங்காத சாட்சியாய்
இருந்தபடி நிற்கும் அதுவாய்
ஏக ரசமாய் ஆத்ம போகரசமாய், ஓங்கும்
எல்லை யில்லாச் சுகமதாய்
ஓங்கார மாகி ஒளியாய் உயிர்க்குயிராய்
உலாவிடும் உயர் பரமனே !
ஒன்றென்றும் நன்றென்றும் என்றென்றும் உன்னையே
உள்ளொன்றி நிற்க வருளே !

அன்பான நெஞ்சிலே அருளான சாட்சியாய்
ஆனந்த நடன மிடுவாய் !
அரகர சிவாய நம எனுமடியர் வாக்கிலிசை
அருவியென வேபெருகு வாய் !
உன்பாத மலரன்றி வேறொன்றும் அறிகிலேன்
ஒருமையுடன் உன் பெருமையை,
உயர்வான கவிபாடி உலகெலாம் புகழவே
ஓதநான் காதல் கொண்டேன்
என்பால் இரங்கியருள் இரவுபகல் இல்லாமல்
இதயகுகை ஒளிர் இரவியே
எண்ணியதை 'இந்தா' எனத் தரும் தந்தையே,
எனையூட்டி வளர் அன்னையே !
இன்பான ஜோதியே, ஏகாந்த மோனத்தில்
இனிதுவரும் அனுபூதியே,
இதந்தரு சுதந்தர பதந்தரு திகம்பர
சிதம்பர பரம் பிரமமே !

தானாகி நின்றெலாச் சகமாகி யுகமாய்ச்
சலிக்கின்ற கால மாகித்
தன்னுளே யாவுமாய் யாவிலுந் தானாய்த்
தனித்தொன் றனந்த மாகி,
வானாகி வளியாகி யனலாகி நீராகி,
மண்ணாகி மண் ணுலகிலே
மாயையாய், மாயியாய் மட்டுக் கடங்காத
மன்னுயிர்க் குயி ராடலாய்,
நானாகி, நீயாகி, அவனாகி, அவளாகி
நானாவிதப் பொருள் களாய்,
நலியும்வினை யுடலிலே நலியாத ஒன்றாகி,
நடுநின்ற சாட்சி யாகித்
தேனாகிப் பாலாய்த் தெவிட்டாத கனியாய்த்
தியானத் திலே இனிக்கும்
திவ்ய குணமே குணா தீதமே, போதமே,
சிற்சுகா னந்த சிவமே....

பிறப்பிலே யென்னுட் பிறந்தசிற் காந்தமே,
பெரியவுல கத்தின் இயல்பைப்
பிள்ளையாம் போதிலே பேசியறி வித்தெனைப்
பிரியாக் கவிக் காந்தமே,
மறப்பிலே கண்மூடி மாயத்தில் வீழாது
மனதினைக் கவர் காந்தமே,
மாசைத் துடைத்தன்பு மதியைத் துலக்குகிற
மாதவ ஒளிக் காந்தமே!.....
இறப்பிலாப் பேரின்பம் இதுவென உணர்த்தியுள்
ளெழுந்திரு வருட் காந்தமே !

இரவுபக லற்றவிடம் என்னோடு யானாகும்
எல்லையறும் ஏகாந்தமே !
சிறப்பிலே உள்ளமாம், பொதுவிலே உலகமாம்,
சிற்றம் பலக் காந்தமே,
சித்தாந்த வேதாந்த சிரமான பரமான
திருவான சிவ காந்தமே !.....

கார்கொண்ட வள்ளலே, கதிர்கொண்ட ஜோதியே,
கடல்கொண்ட கருணை விரிவே,
கண்கொளா மின்வீசு கனிமுறுவ லேயென்
கருத்தினைக் கொண்ட கவினே,
சீர்கொண்ட மார்பே, செயங்கொண்ட கையே,
சிவங்கொண்ட ஞான மனமே,
சித்திக ளெலாங்கொண்ட முக்தியே, சக்தியருள்
திவ்யசிற் காந்த ஒளியே !
யார்கண்ட போதிலும் அன்புமயம் என்றுருகும்
இன்பமய மான பொருளே,
ஏர்கொண்ட உலகிலே எல்லோரும் அருளாட்சி
எய்திடச் செயும் இரவியே !
தூர்கொண்டெம் வாழ்விலே துரியகற் பகமென்று
தோன்றிய சுகப் பெருக்கே,
சுத்தான்ம சமரச சுதந்தர நலம்பெருகு
சோதியே, தூய சுடரே !. . .

நீயின்றி நானில்லை, நீரின்றி வளமில்லை
நெஞ்சின்றி நினை வில்லையே !
நிலையான சுடரின்றிக் கலையான உலகில்லை,
நிதியின்றி அரசும் இல்லை ;
தாயின்றிச் சேயில்லை, தனுவின்றி வடிவில்லை,
தறியின்றி யாடை யில்லை,
சத்திய மிலாதுபொது மதமில்லை; சமயோக
சாதன மிலாத் தவமிலை;
பாய்திரையும் ஆழியும் இரண்டென மருண்டமதி
பதியன் பியல் பறியுமோ? . . . .
பார்வையும் ஒளியும் பகுத்துவிழி பார்க்குமோ,
பசுமையற மரம் வளருமோ ?...
ஆய்ந்தவரின் அனுபவமெ லாந்திரண் டாராயின்
அருளுநீ, பொருளு நீயே !. . . .
ஆன்மபரி பூரண சுகானந்த வாரியே,
அறிவான பர தெய்வமே !....

நீயே எனக்கன்னை, நீயே எனக்கப்பன்,
நீயே எனக்கு சுற்றம்...
நீயே யெனக்குலகு, நீயே யெனக்குறவு,
நீயே யெனக் கிகபரம்.
நீயே யெனக்கு நிதி, நீயே யெனக்கு மதி,
நீயே யெனக்கு கதியே,
நீயே யெனக்கு குரு, நீயே யெனக்கு மொழி,
நீயே யெனக்கு வழியே !
நீயே யெனக்குணர்வு, நீயே யெனக் குயர்வு,
நீயே யெனக் கனுபவம்....
நீயே யெனக்கருமை, நீயே யெனக்கபயம்,
நீயே யெனக் கிறைவனே ! . . .
ஆயிரங் கதிர்வீ சருட்பெருஞ் சோதியே,
ஆன்ம நிறைவே, ஆதியே !
அருள் பெருகு மறிவுவள மருவுதிரு மலைவளரும்

ஆனந்த மோன வடிவே !

உண்ணுவது முன்னால், உயிர்ப்பதுவு முன்னால்,
உணர்வதுவு முன்ற னாலே,
ஊருவது முன்னால், உரைப்பதுவு முன்னால்,
உவப்பதுவு முன்றனாலே !
எண்ணுவது முன்னால், இயங்குவது முன்னால்,
இருப்பதுவு முன்ற னாலே,
ஏதேது செய்திடினும் எல்லாமு னிச்சையே,
எல்லாமுன் ஆராதனை.
கண்ணிருந் துங்கருத் தற்றவர்கள் காண்பரோ
கண்ணுளே காண் கண்ணனே !
காட்சியே, ஜகஜீவ சாட்சியே, காட்சிதரு
கதிரே, கதிர்ப் பிழம்பே !
அண்மைக்கும் அண்மையே, அப்பாற்கும் அப்பால்
அதற்கும் அப்பா லியங்கி
அருள்பெருகு மறிவுவள மருவுதிரு மலைவளரும்
ஆனந்த மோன வடிவே !. . .

அன்பே யுனக்குவமை, அன்பே யுனக்குருவம்,
அன்பே யுனக் காலயம்,
அன்பே யுனக்கு மலர், அன்பே நிவேத்தியமும்
அன்புவழி பாடு னக்கே . . .
அன்பே யுனக்காகும் ஆசார நியமமுள்
ளன்பே யெனக் கறநெறி,
அன்பே யெனக்குமதம், அன்பே யெனக்குசுகம்,
அன்பே யெனக்கு முக்தி.
அன்பே யெனக்குடலம், அன்பே யெனக்குயிருன்
னன்பே யெனக் குலகெலாம் . .
அன்பே யெனக்குவரம், அன்பே யருந்தவமுன்
னன்பே யனந்த பதவி,
அன்பழகு பொங்கிநிறை யன்பலை புரண்டோடும்
அன்புமய மான பொருளே !
அருள்பெருகு மறிவுவள மருவுதிரு மலைவளரும்
ஆனந்த மோன வடிவே ! . . .

எப்போது முன்பூசை யெப்போது முன்னெண்ணம்,
எப்போது முன்ற னுறவே.
எப்போது முன்சக்தி, எப்போது முன்முக்தி,
எப்போது முன் சித்தியே!.....
எப்போது முன்சுத்த மெப்போது முன்ஸத்ய
மெப்போதும் உன் சமரசம்
எப்போதும் உன்யோக மெப்போதும் உன்போகம்
எப்போதும் உன்தாகமே!.....
எப்போதும் உன்சச்சி தானந்த மயமாகி
என்றென்றும் உன்ற னுடனே,
ஏகாந்த நித்திய சுகாதீத நிஷ்டைபெறும்
இன்பப் பசிக் கமுதமே ;
அப்பனே யுனையன்றி யெனையாவ ரறிகுவார்?
அனந்த ஞானப் புனிதனே !
அருள்பெருகு மறிவுவள மருவுதிரு மலைவளரும்
ஆனந்த மோன வடிவே ! . . .

இன்னிய துணைவனுனை யல்லாமல் இவ்வுலகில்
எவருமிலை, யாங்கும் இல்லை;
ஈசவுன் முன்னிலையி லைந்தவித் தென்னையினி

தேகாந்த மாக்கி விட்டேன்.
தன்னிக ரிலாத்தடங் கருணையே, உன்பதந்
தஞ்சம் புகுந் தொழிந்தேன்;
சதானந்த யோகந் தழைத்திடற் காகிய
தனிப்பெரிய மௌன உறவே!....
கன்மங்கள் யாவையும் கதிர்கண்ட பனியெனக்
காய்ந்திடும் தவ நெருப்பே !
கட்டவிழ்த் தென்மனக் கவலையினை முற்றும்
களைந்தசுடர் ஞான வாளே,
அன்னிய மெணாதசக சானந்த மருளுவாய்,
அன்புநீ, யாதரவுநீ
ஆன்மபரி பூரண வகண்டசுக வாரியே,
அறிவான பரதெய்வமே !. . .

நீயின்றி யாருண்டு நில்லாத வுலகிலே
நிலையான பரமாத்மனே
நின்னடி யலாமலொரு நிழலில்லை, இதுவுண்மை;
நின்னருளிலாது வாழேன்.....
ஞாயிறில் லாதுநல் லொளியில்லை, சூடில்லை,
ஞாலத்தில் வளமை யில்லை....
நல்குவான் இல்லாது பல்லுயிர்க் குலமில்லை,
நாடின்றி வீடும் இல்லை,
ஆயாவுன் னன்பின்றி யென்பிலா வுயிரென்ன
அகநெருப் பில் வாடுவேன்;
அம்மையப் பாவுன்னை யல்லாது வேறொன்றும்
ஆதரவிலேன் அனாதி,
தீயினில் இரும்புசெந் தீயாத லெனவுனைச்
சேர்ந்துநீ யாக வருளாய்....
தெள்ளிய சுகாதீத வெள்ளமே, உள்ளமே,
தேடரிய சிவஞானமே......!

ஓம்வடிவ மாகிய வினாயகக் கடவுளே,
உன்னைச் சரண் புகுந்தேன் !
உள்ளத்தில் உள்ளபடி உலகெலாம் உன்னை
உயிர்த் தொகுதியாய் உணர்ந்தேன்.
தீம்புனல் இசைத்துவரும் சிவகங்கை யென்னத்
தெளிந்த நல்வாக் கருளுவாய்,
தேடித் திரிந்ததைத் தியானத்திலே வந்து
தீம்பா லெனத் தந்தனை.
பூம்புவிக் கோயிலிற் பொலிகின்ற தெய்வமே,
புண்ணியக் கணநாதனே !
பூரணத் தவயோக சித்திக்கு வித்தே,
புகழ் மணக்குங் கருணையே !
ஆம்பணிக ளின்பயன் அனைத்தும் நிவேதனம்
அறிவான குரு நாதனே !
அகரமும் உகரமும் மகரமும் பொலிவேத
சிகரமும் ஆன சிவமே ! . . .

ஒன்றாகி யிங்கே உயிர்க்குலம் அன்புடன்
உன்னருளில் ஓங்க வேண்டும்,
ஒவ்வாத சாதிமத நாடுநிற பேதங்கள்
ஒய்ந்துபட் டொழிய வேண்டும்,
நன்றாக உண்டுடுத் தெல்லோரும் வறுமையற
நலமோங்கி வாழ வேண்டும்.
நானென் றெழும்பாது நீயென்று நம்பியிஞ்
ஞாலம் நடக்க வேண்டும்.

மன்றான உள்ளே மகாதுரிய சிவஜோதி
மங்கலம் பொழிய வேண்டும்.
மனித வாழ்க்கை தெய்வ வாழ்க்கையாய் மாறிடும்
மாதவச் சித்தி வேண்டும்.
வென்றிமேல் வென்றிகண் டெம்பணிகள் உலகிலே
வேரூன்றி வளர வேண்டும்.
வேதாந்த சித்தாந்த தேசிக வினாயகா
வேண்டினேன் வர முன்னையே ! . . .

அஞ்சாத நெஞ்சமும் அருளான்ம வீரமும்
அருளன்பர் நேய வுறவும்
ஆத்திரப் பகைவர் பொறாமையை அதஞ்செயும்
அறிவாற்றலும் பெருகவே ! . . .
கெஞ்சாத வுரிமையும் கேடுசூ ழாதநற்
கேண்மையும் வளர் ஆண்மையும்
கீழான நினைவற்ற மேலான செய்கையும்
கீர்த்தியும் பெருக நாளும்
எஞ்சாதி உஞ்சாதி யென்னாத சமரஸ
இணைப்புடன் வாழும் உறவும்
ஏமாற்ற மில்லாத காரியத் திண்மையும்
இயல்பாய் எனக் கருளுவாய். . .
துஞ்சாத தியானச் சுகத்தில்வளர் சோதியே,
சுருதியின் இறுதி மொழியே
சுத்தான்ம தத்துவச் சுடரே, வணக்கம் !
சுதந்தரக் கண நாதனே !

கர்ச்சித் தெழுந்துவிழு திரைகளுக்காதியாம்
கடலலாற் கதியு முண்டோ?
கரைபுரண் டோடுமிக் கானாற்றி னுக்கருட்
கடலலா லமைதி யுண்டோ?
தர்க்கித் தெழுந்துதான் றானெனும் வாதமுந்
தன்னறி விலாற் றணியுமோ ?
சகத்தினை யலைக்குஞ் சழக்கும் சமர்களும்
சாந்தமல் லாற் றீருமோ?
துக்கசுக தொந்தமுறு முக்குண வகந்தை
துளிர்க்குமன மாயை தோன்றாச்
சுத்தசிவ ஜோதிவளர் துரியசம நிலையே
சுதந்திரப் பதவி யென்பார். . .
அக்கதிக் காளாகி யானுமிங் குய்யவருள்,
ஆன்ம நேயப் பரமனே.....
அருள்பெருகு மறிவுவள மருவுதிரு மலைவளரும்
ஆனந்த மோன வடிவே ! . .

ஆசையெனு மதயானை தனையடக் கிடவெனக்
கங்குசம் போன்ற ஞான
அமைதியை யளித்தனை. அகந்தையிருள் மாற்றினை
அகத் துறவிலே வளர்த்தாய் ! . . .
வேசைவிழி போலவலை வீசுமா மாயமன
வெறியாட்டும் வீண் மினுக்கும்
வேடங்கொள் சூழ்ச்சிகளும் வெட்டவெளி யாகவொரு
விடுதலைக் கன லீந்தனை.....
தேசைச் சிதைக்கின்ற பாசக் குழிக்குள்யான்
சிக்காது பாது காத்தாய்;
சிறுவயதி லேயெனைத் திடமாக வுன் வழி
திருப்பித் திருத்தி வந்தாய்.....

*ஆசானு மன்னையுமெ னப்பனும் அருந்துணையும்*
*ஆனவிஞ் ஞான மூர்த்தி .....*
*ஆன்மபரி பூரண வகண்டசுக வாரியே,*
*அறிவான பர தெய்வமே !*

*மறைகளோ பலபல, மதங்களோ பலபல,*
*வகைவகை முரண்கள் பலவாம்,*
*மனிதமதி யாலே வகுப்புண்ட விதிகள்பல,*
*வாதபே தங்கள் பலவாம்,*
*குறைமல்கு கோடிநூற் சுமைகொண்டு பரசுகக்*
*குன்றின்மிசை யேற வசமோ?....*
*கோதற்ற வாதற்ற குறியற்ற பிரிவற்ற*
*குணமூன்று மற்ற நிலையே !*
*நிறைவான நின்னோடு நீயாய் இருந்திடும்*
*நிரந்தர சுதந் திரத்தில்*
*நீநான் அவனவள் அதுவென்னு முலகற்ற*
*நிர்மலா னந்த மருளாய்*
*அறைவாத மதபேத மணுகாத சமயோக*
*அத்வைத சித் தாந்தமே,*
*ஆன்மபரி பூரண வகண்டசுக வாரியே*
*அறிவான பர தெய்வமே!.....*

*எத்தனை மதங்களுள் எத்தனை வகுப்புகள்,*
*எத்தனைப்பிரிவினைகள் !...*
*எத்தனை மடங்களிங் கெத்தனைத்தடைகளிங்*
*கெத்தனை எதிர்க்கடைகள்!...*
*எத்தனை கொள்கைகள் எத்தனை கோலங்கள்,*
*எத்தனை மதவாதுகள்*
*எத்தனை முக்குண விகாரங்கள், அத்தனையும்*
*எண்ணவோ ரெண்ணும் உண்டோ?*
*இத்தனையும் அல்லா திருந்தபடி யென்றும்*
*இருந்திடும் ஒருமை தருவாய்...*
*இவ்வொருமை நிலையிலே இதயத்திருப்பதே*
*இயல்பாகு மின்ப நிலையே;*
*அத்தனே, யதுவே அடைவதற் கரியநிலை;*
*ஆராய்ந்த உண்மை யிதுவே !*
*ஆன்மபரி பூரண சுகானந்த வாரியே,*
*அறிவான பர தெய்வமே !*

*குருவே, யெனைக்கொண்டு கோதறுத் தாண்டசற்*
*குணமே, குணங் கடந்தோர்*
*கூடிடும் சமரச சிவானந்த முத்திவளர்*
*குன்றமே, யென்று முள்ள*
*பொருளே, பொருண்மேவு போதமே, யப்பெரும்*
*போதங் கடந்த விரிவே !....*
*பொங்கிப் பொலிந்துநிறை மங்கலக் காட்சியே,*
*புகலரிய சகஜ நிலையின்*
*உருவே, உணர்வாகும் உறவே, உளங்காணு*
*மொளியே, பரந்த வெளியே,*
*உண்மைநீ உண்மைநீ யெனையாண்ட பகவனே!*
*உலகாளு மருளாளனே...*
*அருவே, அருட்பெருஞ் சோதியே, ஆதியோ*
*டந்தமில் லாப் பரமனே ! . . .*
*ஆன்மபரி பூரண வகண்டசுக வாரியே,*
*அறிவான பர தெய்வமே !....*

*தாயாகிலும் வறுமை சாற்றியிலை யென்னுவாள் ;*
*சகோதரர் துணை மறுப்பார்,*
*தந்தையும் சிந்தையிற் சங்கடப் படுவனுன்*
*சக்தியினை யார் தடுப்பார்?*
*வாயால் அறிந்திடா வள்ளலே, வெள்ளமாய்*
*வாரிக் கொடுக்கும் அரசே,*
*மண்ணுலகை மழையாய் வளர்த்திடும் கொண்டலே,*
*வரம்பிலா வான்கருணையே !*
*தூயா, திருத்தொண்டர் நேயாவுன் சேயனைத்*
*துன்பங் கெடுத் தாளுவாய் ;*
*தொல்லுலகில் அல்லலறு துணையில்லை, சுந்தரத்*
*தோழநின் இணையும் இல்லை ;*
*ஆயாமல் ஓயாமல் அலறியுன் அருளினில்*
*அடைக்கலம் புகுந்து விட்டேன் ;*
*அருள்பெருகும் அறிவுவள மருவுதிரு மலைவளரும்*
*ஆனந்த மோன வடிவே ! ...*

*காமிய அழுக்கின்றி உன்கருணை யாலெனைக்*
*கைமலரில் அர்ப்பணித்தேன்.*
*கரணம்உட லுயிர்பொருள் கருத்தன் பனைத்தையும்*
*காலடியில் அர்ச் சித்தனன்.*
*சேமமுற எனையாண்டு கொள்ளுவாய் ! சாந்தச்*
*சிவானந்த சிற் காந்தனே !*
*சிறியனேன் பிழைகளைச் சிட்சித்து ரட்சித்து*
*சிந்தைவைத் தாளாக்குவாய் !*
*நீமனது கொண்டநல் லிசையினை நிரப்புவாய்*
*நின்வீணை யென் வாழ்க்கையே !*
*நீயின்றி நினைவில்லை, கலையில்லை, நிலையில்லை,*
*நெறியில்லைஅற நாதனே ....*
*ஆமென்றும் அன்றென்றும் ஒன்றுபல வென்றுநல்*
*லருளென்றும் ஓத நின்றாய்....*
*அன்பாகி யறிவாகி அறிவுக்குள் ஒளியாகி*
*ஆடல் புரியும் பரமனே !*

*அன்னையின் அருள்மிகுமென் அப்பனுய ரறிவினுக்*
*காயிரம் பகல் போன்றவன் ;*
*யானாரென் றாராய்ந் தடங்குவோ ருள்ளத்தில்*
*அதுநான் எனத் திகழுவோன் . .*
*சின்மயக் கனல்வீசிச் செய்யநல் லன்பர்பிணி*
*செற்றிடும் செங்கண் வேலன் !*
*சிந்தனைக் கமுதினுந் தீஞ்சுவை யளிப்பவன்,*
*செகசீவ பர மறிந்தே*
*தன்னிலையில் உள்ளபடி சாந்தக் கதிர்பரவும்*
*சந்நிதிப் பெருமையாளன் ;*
*தானன்றி வேறிலா ஸதஸத் விலாஸனாந்*
*தத்வமஸி மந்த்ர வடிவோன்.....*
*என்னிதய வெளியிலே எப்போது நீங்காம*
*லின்பநட மாடு முதல்வன்....*
*ஏகனு மநேகனாம், சிற்சத்தி போகனாம்,*
*இறைவனென் குரு பரமனே ! . .*

*கால்வீழ்ந்து கைகட்டி வாய்பொத்தி முகமனாற்*
*காரிய முடித் தேகுவார்;*
*கைதந்த நன்றியைக் காலினால் எத்துவார்,*
*கடன்வாங்கி 'இல்லை' என்பார்;*
*வால்கெட்ட நரிபோல, கால்கெட்ட புலிபோல*

*வஞ்சக மதம் பேசுவார்;*
*வாக்கினை மறுப்பர், பிறர் வாழ்வைக் கெடுத்திட*
*வழக்கிற் கிழுத் தடிப்பார்...*
*சேல்விழியர் மோகவலை சிக்கியே சீரழிவர்,*
*தீமையே செய்து மகிழ்வார்*
*சீடர்போன் றாஷாட பூதிவேலை செய்வர்,*
*தெய்வத் தையுந் தூற்றுவார்,*
*தோல்வருண பேதங்கள் ஆயிரஞ் சொல்லுவார்,*
*சுத்தசம யோக மறியார்;*
*சுயநலக் கும்பலின் சூதொழியத் தீதழியத்*
*தூண்டி யருள் ஆன்ம ஒளியே !*

*இன்றுநே சித்தவர்கள் நாளையே வெருகுபோல்*
*இகல்வேட்டை யாடும் உலகம்,*
*எமன்வரினும் இணையறோம் என்றென்றும் அன்புளோம்*
*என்றுருகு காத லாளர்,*
*சென்றுண் டுறங்கிமன மொன்றென்று கொஞ்சி'யென்*
*செல்வச் சிறப்பின் வளமே,*
*தேனினும் பாலினும் தித்திக்கும் இன்பமே*
*திருவே' எனக் கலந்து*
*நின்றவர் செருக்குறு சினம்வர நிலைதவறி*
*நேர்பகைவ ராய்ப் பொருதுவார்;*
*நிறைகெட்டு மதிகெட்டு நெறிகெட் டலைவரிது*
*நீசவுல கத்தின் இயல்பே;*
*தொன்றுதொட் டிவ்வுலகை நன்றுதேர்ந் துன்னையே*
*துணையாக நம்பி யுள்ளேன்;*
*சுத்தபரி பூரண சுகானந்த வாரியே,*
*சுடர்பரவு சோதி மலையே !....*

*ஊரென்ன? பேரென்ன? உறவென்ன? மதமென்ன?*
*உள்ளசெல் வங்க ளென்னே?*
*ஓதிய வகுப்பென்ன? உத்தியோகம் என்ன?*
*ஊதியம் மாத மென்ன?*
*சீரென்ன? வீட்டின் சிறப்பென்ன? செய்யென்ன?*
*செய்தந்த விளை வென்னவோ?*
*சீதனங் கொண்டுவரு மனையின் சிறப்பென்ன ?*
*செல்வரின் செவ்வி யென்ன?*
*பாரென் னிசைகளைப் பாரெனது பங்களா,*
*பாரெனது காரை யென்பார்;*
*பயனற்ற கேள்விகள் அடுக்குவார், வம்பிலே*
*பகலிரவு போவ தறியார்....*
*யாரென்ன வினவிநான் அதுவென் றிருந்திடார்,*
*யாதோ புகன்று திரிவார்;*
*யாதிலுந் தாக்கின்றி யாங்கணுந் தானாய்*
*அமர்ந்த பர மானந்தமே ....!*

*யாரிறைவ னெங்குளான்? யாங்குமுள தெங்ஙனம்?*
*யாது குலம் எச்சமயமே?*
*எவ்வண்ணன்? எவ்வடிவன்? எப்படிப் பேசுவான்?*
*எதிரே நிறுத் தென்னுவார் ;*
*பாரிலவன் உண்டென்னில் எம்மெண்ண மெல்லாம்*
*பலித்துவர வேண்டு மென்பார் ;*
*பல்லுயிர்கள் ஆண்பெண் படைப்பா யிருக்கையில்*
*பரமன் படைத்த வகையென்?*
*வேரினி லெழுந்தமர மோவிதைய தோமுதல்?*
*வினைவிளைவு மெய் யல்லவோ?*

*வேதாந்தம் 'அதுநான்' எனில்வேறு கடவுளேன்?...*
*வித்தகக் குருநாதன் ஏன்?*
*போரிடும் புலவரிக் கேள்விக ளடுக்குவார்,*
*புந்திநிலை நின்று பாரார்:*
*புன்னகை புரிந்திதய மன்றிற் பொலிந்திடும்*
*பொருளே விளங்கு மருளே !*

*சங்கையறு சாத்திரச் சக்கைசுக மீயுமோ?*
*சடவாழ்வில் இன்ப முறுமோ?*
*சடசடெனச் சபைமெச்சச் சந்தம் பொழிந்தும்*
*சமாதான மாகி விடுமோ?*
*அங்கண்மா வுலகைத் திருத்துவோம் யாமெனும்*
*அரும்பணியும் அமைதி தருமோ?*
*அருநிதிக ளெல்லாம் அமைந்தோங்கி னும்மன*
*மடங்கிட வுபாய மாமோ?*
*கங்கையுந் தானமும் கருமமுங் காவியும்*
*கவலையை ஒழித்து விடுமோ?*
*காயக் கிலேசமும் கற்பமும் மூச்சுங்*
*கடைத்தேற வழியு மாமோ?*
*தங்குதடை யில்லாச் சதானந்த மோனந்*
*தனக்கிணை சகத்தி லுண்டோ?*
*சர்வசம யோகியே சாந்தநிலை யொளிவளரு*
*சச்சிதா னந்த மயமே !*

*தத்வமஸி யென்பர்சிலர்; தானடங் கிடவே*
*சமாதானம் என்பர் சிலபேர்;*
*தானன்றி வேறில்லை யென்பர்சிலர்; சாட்சியாந்*
*தனிநிலைய தென்பர் சிலபேர்;*
*சுத்தநிர்க் குணமென்பர், துரியநிலை என்னுவார்,*
*சூனியம தென்பர் சிலபேர்;*
*சொன்மன மடங்காத பொருளென்பர், உலகெலாந்*
*தோன்றுவது மாயை யென்பார் !*
*சத்தென்பர், சித்தென்பர், தற்போத மற்றவழி*
*சார்ந்து தித்திக்கு மென்பார்;*
*தந்தைதாய் காதலன் றனையனென் றுருகுவார்;*
*சங்கீர்த் தனஞ் செய்குவார்;*
*அத்துவித வத்துதா னதுவாய் உணர்வார்கள்*
*அதுவன்றி யாது முணரார்,*
*அதுவென்று மிதுவென்றும் அவளென்று மவனென்றும்*
*அவையென்று மான பரமே !*

*மதமெமது மதமென்பர் மற்றொரு மதத்தை*
*மதங்கொண்டு தாக்கு வார்கள்;*
*மண்ணுலகில் வானரசை மாண்புறக் கொணருமெம்*
*மகிமையைப் பாரு மென்பார்;*
*சதமான பொன்னுடலம் ஈவோம் சரண்புகுமின்.*
*சாகாத சித்தரென்பார்*
*தவயோக மில்லையணு சக்திக் கதிர்களே...*
*தாரணியை வெல்லு மென்பார்;*
*அதஞ்செயப் பாய்ந்திடும் ஆகாசக் குண்டரே,*
*அதிகாரவீர ரென்பார்;*
*ஆருயிர்க ளஞ்சித் தமக்கடிமை செய்யவே,*
*ஆரவாரஞ் செய்வர் காண் !*
*இதயத் தடங்காமல் என்னென்னவோ செய்வர்,*
*எமனுண்டு துப்பு முலகோர்....*
*இயல்பான தன்னில் இருந்துலக சாட்சியாய்,*
*என்றைக்கும் உள்ள பொருளே !*

ஊருண்டு, நிலமுண்டு, உணவுண்டு, பணமுண்டு
உறவுண்டு, சுற்ற முண்டு ;
உருவான திருவுண்டு: திருவான மனையுண்டு
உலவிடச் சிவிகை யுண்டு...
பேருண்டு, புகழுண்டு, பேரிடத் தன்புண்டு,
பேசிட மதிப்பு முண்டு
பின்னிந்த ஊரிலெம் பேச்சிற் கிரண்டில்லை ;
பெரியம் யாம் என்ற பேரில்,
யாருண்டு நிலையாய்?... அகந்தையினில் உண்டுண்
டுருண்டவர்க் களவு முண்டோ?
அலைபோல் எழுந்துவிழும் அரசியல் ஆட்சியும்
அரசமாய்ப் போவ தன்றோ?...
தூருண்ட நீரெனச் சுகமுண்டு நின்னருள்
சுவைத்தென்னை உண்டு விடுக !
சுத்தபரி பூரண சுகானந்த வாரியே,
சுடர்பரவு சோதி மலையே !

பெற்றாலுன் அமரநிலை பெறவேண்டும் ; இல்லையேற்
பிறவிதனை மாய்க்க வேண்டும்.
பேசினால் உன்மகிமை பேசவேண்டும் அலாற்
பேசாத தனிமை வேண்டும்,
உற்றால் அருட்பணிக் குறவேண்டும்; இல்லையேல்
ஒடுங்கியுள் ளடங்க வேண்டும்.
உன்னினால் உன்பெருமை யுன்னவேண்டும் அலால்
உன்னலறும் அமைதி வேண்டும்.
பற்றினால் உன்னையே பற்றவேண்டும்; அலால்
பற்றற் றிருக்க வேண்டும்.
பார்த்தாற் சுயஞ்சோதி பார்க்கவேண்டும்; அலாற்
பார்வையுள் ளாக்க வேண்டும்.
அற்றாலென் பந்தவினை யறல்வேண்டும்; இன்றேலுன்
அருள் ஆடல் புரியவேண்டும் !
ஆன்மபரி பூரண அகண்டசுக வாரியே,
அறிவான பர தெய்வமே !. . .

தெரிந்தியான் செய்தபிழை பலகோடி, பலகோடி;
தெரியாத தெண்ண வசமோ?
சிந்தையி லகந்தைவெஞ் சிறுபேய் புகுந்தெனைச்
சீரழித் தது கொஞ்சமோ?
கரந்தியான் செய்தவினை கைமேற் பலித்திடக்
கர்மங்களைக் கரைத்தாய்,
கண்பார்த்து நீயெனைக் கைதூக்கி விட்டாய், உன்
கருணையால் ஆளாயினேன் !
மரந்தலைச் சிதல்போலென் மனதைத் துளைத்திடு
மயக்கங் களைக் களைந்தாய்....
மறலிவாய் வீழ்ந்தவனை மகனென்று மீட்டமர
வாழ்வின்பம் ஈந்து காத்தாய்....
சுரந்தமு திடைவிடா தூட்டியிச் சேயினைத்
துரியமாந் தொட்டி லிட்டாய்;
சுத்தபரி பூரண சுகானந்த வாரியே,
சுடர்பரவு சோதி மலையே !. . .

எனையுனக் கின்பமாய் ஈந்தனன் இறைவனே,
ஏற்றுன்னை என்னுள் வைப்பாய்,
என்மாய இருளெலா மில்லாம லோடியான்
என்றென்று முன்ற னுடனே

*இணைவுற் றருட்சுடர் குளித்தங் குலாவுவேன் ;*
*ஏகாந்த மோனத்திலே...*
*இயற்கைவிளை யாட்டையுன் இச்சைவிளை யாடலென்*
*றெண்ணியான் பார்த்திருப்பேன்...*
*தனையீந்த உயிரினுக் குனைமுற்று மீந்தருளும்*
*சக்திச் சுடர்ப் பிழம்பே,*
*தர்க்கவா தங்களைத் தாண்டியொளிர் உண்மையே,*
*தாயிற் றயா மூர்த்தியே.... !*
*அனைவர்க்கு மெளியனே, யாதினும் அரியபிர*
*மாகார சக்தி மயனே ! . . .*
*அன்பருடன் அணுவளவும் அகலாத நேயனே*
*ஆருயிர்க் குயிர் நாதனே !*

*அரைநொடி யிதற்கிட மளித்திடிற் போச்சுதென்*
*னாவியை யலைக்கு தந்தோ !*
*ஆகாத பேயலைகள் ஆயிரம் எழுப்பியென்*
*னமைதியிற் புயல் வீசுதே !*
*உரிமையினை உரிமைகொண் டெனைவாட்டி யுலகெலாம்*
*ஓட்டிக் குதித் தாடுமே*
*உதவாத கனவிலும் ஊர்வம்பு தன்னிலும்*
*உலகா யதச் சேற்றிலும்*
*கரையற்ற கன்மபந் தங்களிலும், ஆசையாங்*
*கானல்வெஞ் சுர மதனிலும்*
*காமாந்த காரமாங் காட்டினிலு மென்றனைக்*
*கண்கட்டி விளையாட்டு தே*
*துறுதுறுக் குந்துட்ட மனதினை யடக்கவொரு*
*சூட்சுமஞ் சொல்லை யனே !*
*சுத்தபரி பூரண சுகானந்த வாரியே*
*சுடர்பரவு சோதி மலையே !*

*ஒருமையில் இருப்பதைப் பன்மையில் இழுத்தே*
*யுலட்டுங் கருங் குரங்கே !*
*உள்ளே யிருக்காது துள்ளிப் புலன்வழியில்*
*ஓடி யலையுங் குரங்கே !....*
*அருமைபெறு நல்லோரை அகராதி யாய்ப்பேசும்*
*ஆணவச் சிறு குரங்கே !.....*
*ஆகாத கசடரிடம் அறியாது சிக்கியே*
*அசடு வழியுங் குரங்கே !. . .*
*இருமைவினை மேடைமேல் ஏமாற்ற நாடகம்*
*இயற்றும் மடக் குரங்கே !....*
*எல்லோரையும் நம்பி ஏளனப் படுகின்ற*
*ஏழை மோழைக் குரங்கே !....*
*குருமணியின் மாசற்ற கொள்கையறி யாதுளறும்*
*கோமாளி நாய்க் குரங்கே !....*
*குகையினில் அடங்கிக் குணத்துடன் இருக்கக்*
*குறித்திடு மனக் குரங்கே !....*

*மலையுண்டு மாதவத் திற்கரிய குகையுண்டு,*
*மனமொன்றி நின்று விடினோ,*
*மனமாய வினைகளை மாற்றிடும் மதிசேர*
*மவுனமந் திரமும் உண்டு.*
*கலையுண்டு, கவியுண்டு, செவியுண்டு, கண்ணுண்டு,*
*காட்டிடக் குருவு முண்டு ;*
*கனமான கவலையும் கதிர்கண்ட பனிபோற்*
*கரைந்திடக் கருணை யுண்டு.*
*நிலையுண்டு, சிற்சக்தி நினைவுண்டு, குண்டலி*

நெருப்புண்டு, நெஞ்சத்திலே
நீங்காத ஒளியுண்டு, தூங்காத சுடருண்டு,
நீண்ட மின்னடன முண்டு;
தொலையுண்டென் னருகிலே தோன்றிமனை யேகிடத்
துணைவருந் தோழ னுண்டு;
சுத்தபரி பூரண சுகானந்த வாரியே,
சுடர்பரவு சோதி மலையே !

எத்தனை இடர்வரினும் எக்கொடிய நோய்வரினும்
என்னென்ன இன்னல் வரினும்,
ஏழ்மைவரி னும்பிறர் இகழ்ச்சிவரினும் உடல்,
இளைத் தென்பு முருகி விடினும்,
சித்திவரினும் எனைச் செகமெலாம் பித்தெனச்
சீறிச் சினக்க வரினும்,
தெளிந்துட் கலந்தமெய்ச் சிவகாம மதனிலே
சிறுமையொன் றுண்டாகு மோ?...
எத்திசையும் எக்கணமும் எவ்விடமும் என்னுள்
இரண்டறக் கூடி நின்றாய்
இன்பனே, நண்பனே, இறைவனே, பரமனே,
எல்லாம் உனக் காகுக ! . . .
தொத்துறு துயர்க்குலத் தூசியெனை யணுகுமோ?
பரிதியைச் சூறை தொடுமோ?
சுத்தபரி பூரண சுகானந்த வாரியே,
சுடர்பரவு சோதி மலையே ! . .

தாரா தலத்தினிற் சாற்றுமொழி யாவினுந்
தமிழினிது தமிழினிது காண்;
தாராள வாஞ்சையுள தமர்சுற்ற முறவினுந்
தாயுறவு மிகவினிது காண் !
பாராதி தனிலுள்ள கண்டங்களிற் புனித
பரதகண் டம்பெரிது காண் !
பண்புற முயல்வினைகள் பலவினுந் தனைவென்ற
பரமதவ மினிதினிது காண்...
சீராதி பெருமைக ளியாவினுஞ் சீரியது
சித்தவை ராக்கியங் காண் !
தேடரிய சித்திகளி லோங்கியது, தேட்டற்ற
சிவதுரிய சகஜநிலை காண் !
யாரா ரெனக்கினிது செய்திடினும், ஆராயின்,
யானே யெனக்கினிது காண் !
ஆன்மபரி பூரண வகண்டசுக வாரியே,
அறிவான பர தெய்வமே !

சொல்லரிய விண்ணின்று ஜோவெனப் பொழியுதே
சோதியா னந்த மழையே !
துரியவள நாட்டரசு தோன்றுதென் னுள்ளே
சுதந்தரப் பொற்கோயிலாய்
எல்லையறு முலகெலாம் இதயவிரி வானதோர்
ஏகரச மாய்க் காணுதே
எங்கெங்கு பார்த்தாலும், எனையாளும் உன்னையே
எல்லாம் எனக் காண்கிறேன்
அல்லலறும் அமரநிலை என்றுநீ அன்றுநான்
என்னுமறி வான நிலையே,
ஆடாவிளக்கென்ன சகஸ்ரார மணிமாடம்
அமைதியாய் அமரு நிலையே
வெல்லரிய தன்னாட்சி பெற்றநிலை, வெற்றிநிலை
வேதநிலை போதநிலை யே !

*வேதாந்த சித்தாந்த வேறுபா டற்றநிலை,*
*விரவிடுந் துரிய மயமே !*

*உலகெலாம் கோயிலாய் ஒவ்வொருவர் உள்ளமும்*
*உள்ளிறைவன் சன்னிதி யதாய்,*
*உள்ளன்பு மலராக, உண்மை மந்திரமாக*
*உள்ளலே பூசையாக,*
*பலசாதி மதமற்ற பொதுவான பரமனே,*
*பரிவான மூர்த்தி யாக,*
*பலனிலே பற்றற்ற நற்றொண்டு செய்வதே,*
*பழுதற்ற கிரியை யாக*
*நலமான சன்மார்க்க நாதமே சங்கமாய்,*
*நாம ஜபமே பேரியாய்*
*நானென்ற நடுவிலே நீயென்ற போதத்தை*
*நாட்டலே யோக மாக*
*இலகான்ம நேயத்தில் எல்லாரும் ஒன்றாய்*
*இருத்தலே ஞானமாகும்,*
*எண்ணரிய சாதனம் பண்ணலே யின்பமாம்,*
*இதயத்தில் உள்ள பொருளே !*

*ஆயிர விதழ்மலரில் அரியணை யமைத்தனன் ;*
*அறிவொளி விளக் கேற்றினேன்;*
*ஆர்வத்தில் ஊறிவரும் அன்புப் பெருக்கால்*
*அகங் குளிர நீராட்டினேன்,*
*தூய மனமே நல்ல துகிலாய் உடுத்தினேன்,*
*சுகுணத்தை அணியாக்கினேன்,*
*துரியபர நாதகண் டாமணி முழக்கினேன்,*
*சுகந்த சாந்தம் பூசினேன்;*
*வாயார வரகவியின் மலர்மாலை சூட்டினேன்,*
*வாழ்வெலாம் அர்ச் சித்தனன் ;*
*மன்னுயிர்த் தொண்டுதரு மாசற்ற பலனையே*
*மாண்புற நிவே தித்தனன் ;*
*ஆயா, உனக்கிந்த ஞானவழி பாட்டையே*
*அனுதினமும் ஆற்றி மகிழ்வேன் ;*
*அதுவென்றும் அவனென்றும் அவளென்றும் அன்பர் தொழும்*
*அகநாடகப் பரமனே !*

*அருளோங்கு மொளியோங்கு மறிவோங்கு மானந்தம்*
*அருவியென வாழ்வி லோங்கும்*
*அத்யாத்ம சித்திக ளனைத்துமோங் கும்ஆற்றல்*
*அளவற் றிலங்கி யோங்கும்...*
*பொருளோங்கும், புவிதரும் போகபோக் கியமோங்கும்*
*புண்ணியப் புகழு மோங்கும்,*
*புலமையெழி லழகுகலை பொருள்வளமை யோங்கிடும்*
*பொங்குமனை யின்ப மோங்கும்*
*இருளோங்கு மடமைத் துயர்வறுமை யின்னல்க*
*ளில்லாம லோடி மறையும்*
*எண்ணிய செயல்வெற்றி யிளநகைச் சுடரோங்கு*
*மினியபொது நலமோங் கிடும்.*
*திருவோங்கு மங்கலச் சிவமோங்கும் பேரின்பச்*
*செல்வமெல் லாம் ஓங்கிடும் ;*
*தியானமலர் தூவியுள் ளன்புசெயும் அன்பர்க்கு,*
*ஜெயசுத்த ஓம்சக்தி ஓம் !*

*காரிருள் வானம் பளீரெனக் காந்திடும்*
*கடுமின்னல் வெறிநகை யுடன்*

கடகடென ஊழியிடி யஞ்சக் கடும்புயற்
கடியதே ரூர்ந்து வருவாய் ;
தேர்மதி விவேகமொடு சித்தமும் மனமும்
திறல்கொண்ட பிராணன் முதலாம்,
சேவக ரெலாருமே திமிர்கொண் டலைகுவார்,
செருக்குடன் வணங்க மாட்டார்;
போர்செயுங் காமாதி ராக்ஷஸப் புல்லரென்
புந்தியைச் சிறை கொண்டனர்
பொருதிவர் பொடிபடப் பொல்லாவினைகளைப்
பூண்டுடன் அழிக்க வேண்டும்.
சீர்பெருகும் அருளாட்சி, சித்திபெறு யோகம்,
செழித்துநீ டோங்க வேண்டும் ;
ஜயவாணி, ஜயகாளி, ஜயலக்ஷ்மி, கல்யாணி,
ஜயசுத்த ஓம் சக்தி ஓம் !......

ஆகாய மீன்களைப் பகலிலே அந்தகனும்
அளவிட் டுரைக்க வைப்பாய் ;
ஆகாத முடவனையும் அடர்கான் மலைதாண்டி
அப்புறஞ் செலவிடுப்பாய்
பாகாய செந்தமிழ்ப் பண்பேச ஊமைக்கும்
பக்குவந் தந் துதவுவாய்
பாராளுஞ் செல்வரும் பார்த்ததிச யிக்கவே
பஞ்சையைப் பதவி சேர்ப்பாய்.
வாகாய திறலீந்து மெலியவரை வாகைபெறு
வலியவர்க ளாக்க வல்லாய்
வறள்வனாந் தரமண்ணில் வளமையுண் டாக்குவாய்
வரமுனக் கரிய துண்டோ?
தேகாதி யிடர் தாண்டித் தேகியென யானமரச்
சிற்சுகோ தயமருளு வாய்
ஜயவாணி, ஜயகாளி, ஜயலக்ஷ்மி, கல்யாணி,
ஜயசுத்த ஓம்சக்தி ஓம் !

ஐம்பெருந் தேவர்க்கும் ஐம்பெரும் சக்தியாய்,
ஐந்தொழில் புரிந்து வளர்வாய் ;
அறிவாகிக் கலையாகி யழகான திருவாகி
யனல் வீசிடுங் காளியாய்,
ஐம்பெருங் கோசத்தும் ஆதார மலரேறி
ஆடிக் களித்து வருவாய்...
ஐந்திணை யுலகெலாம் உனது நாடகசாலை,
அதனிலொரு நடிகன் யானே
ஐம்பூதம் ஐந்துதன் மாத்திரைப் பொறிபுலன்
ஐந்துடன் நான்கு கரணம்,
ஆத்மவித் யாசிவத் தத்துவமெலாம் பூண்டென்
அகம்புற மிலங்கும் அருளே !
ஐம்புலத் தந்தைதாய் சுற்றமுடன் குருதெய்வ
மாம் உலகமான பொருளே
ஆயுளும் செல்வமும் அறிவுமுன் னருளீகை
யாம்சுத்த ஓம்சக்தி ஓம் !...

கண்கண்ட தெய்வமே கலிகண்ட அற்புதக்
கடவுளே ! கந்தவேளே !
கவலைக் கடலைக் கடந்திடத் துணையான
கப்பலே ! கரை விளக்கே !
விண்கண்ட வேகமே வேதவோங் காரமே
விரிவான பர நாதமே !
வியனுலக மாகிய பெயர்வடிவ பேதமே

விஞ்ஞான சமயோகமே
தண்கொண்டலே யருட் சக்தியின் கருணையே !
தாவிவரு மலை வெள்ளமே
தகரநிலையத்திலே தாண்டவம் செய்திடும்
சச்சிதானந்த சிவமே !
பண்கொண் டுனைப்பாடி யாடிநா னின்புறப்
பக்திப்பர வசமீகுவாய்
பரிவான குருவாகிப் பரிபாக மருளுவாய்
பாலசுப்ரம் மண்யமே !

வலைவிரித்திடும் வஞ்ச மாயப் பகைவர்செய்
வாதனையெலாந் தவிர்த்தே
மானிடப் பிறவியை மாறிப் பிறந்திடும்
மாதவக் கனலாக்குவாய்
கலையிலே யுன்னருட் கவியிலே யுன்னின்பக்
கனவிலே நினைவூன்றவே
கள்ளமனதை மெள்ளமெள்ளக் கவர்ந்துனது
கருணைக் கிலக் காக்குவாய்
நிலையானகோயில் கொண் டென்னுள்ள மிலகிடும்
நிற்குணச் சகுண நிறைவே
நீயின்றி நானில்லை நிலவுலக வாழ்வில்லை
நெறியில்லை குறியில்லையே !
அலைமோது கடல்பாடிக் கைகொட்டி யாடிநின்
அடிவணங்கக் கண்டனன்
அகரவடி வேலனே ; மகரமயில் வாகனா
உகர உரகச் சோதி ஓம்

பட்சமுடனிருகை குவித்திடுந்தொண்டரைப்
பன்னிரு கையால் வாழ்த்துவாய்
பணிவுடன் இருபாத பங்கயந் தொழுவோரைப்
பழவினை தீர்த்தருளுவாய்
அட்சரம தாறையும் உச்சரிக்கும் அன்பர்
அச்சந் தவிர்க்க வருவாய்
அனல்வீசும் அயில்வேலி னாலவுணர் ஆணவம்
அழிந்திடப் போர்செய்குவாய்
நட்சத்ரவானெனத் தோகை விரித்தின்ப
நடமாடு மயில்வாகனா
நாதஓங்கார மருள் போதகுரு நாதனே
ஞாலத்தை யாளும் அரசே
இச்சையுங் கிரியையும் வள்ளிதெய்வானையாய்
இருபுறங் கொண்ட முருகா
இதயக் குகைநடுவில் உதயக்கதிர்போல்
இலங்கு சுப்ரம்மண்யனே

ஆதி வேதஞ்சொலும் அத்யாத்ம தீரமும்,
ஆனந்த வாழ்வும் வேண்டும்.
அரியசங் கரர்சொலுந் தன்னறிவு மிகவேண்டும் ;
அப்பர்சொலும் அன்பு வேண்டும்.
கீதைசொலு நிஷ்காம்ய கர்மயோ கம்வேண்டும்.
கிறிஸ்துவின் பொறுமை வேண்டும்.
கிருஷ்ணசை தன்யரின் பக்திபர வசம்வேண்டும்.
கரீம் நபியின் உறுதி வேண்டும்.
பேதமறு வள்ளலின் பெரியசம ரஸம்வேண்டும்.
பேய்மனம் அடங்க வேண்டும்.
பிரியாத சிவசக்தி போலாண்மை பெண்மையுடன்
பேரின்ப முண்ண வேண்டும்.

*சாதனம தாஞ்சரியை கிரியை யோக ஞான*
*சன்மார்க்க சித்தி வேண்டும்.*
*தன்மயச் சின்மயப் பன்மயத் தெய்வமே,*
*சச்சிதா னந்த பரமே !*

*எளியவர்கள் வயிறார உண்ண வேண்டும் ; செல்வர்*
*இறுமாப்பு நீங்க வேண்டும்.*
*இடரான சாதிமத பேதவினை யறல் வேண்டும் ;*
*எல்லாரும் ஒருகு லம்போல்*
*வலியவர்கள் கொடுமையற வாழவேண் டும் ; பொய்*
*வழக்கினை ஒழிக்க வேண்டும்.*
*வறுமையிருள் அடிமையெனும் வார்த்தையே யில்லாது*
*வையஞ் செழிக்க வேண்டும்.*
*மெலியவரு பிணிதுயர் பொறாமைவஞ் சத்தீமை*
*வேரோடு மாய வேண்டும்.*
*வீரமிகு கனல் வேண்டும், விடுதலைத் திறன் வேண்டும்.*
*வினைவேள்வி வெல்ல வேண்டும்.*
*நலியவரும் அசுரபலம் அழிய வேண்டும்; இந்த*
*நாட்டில்விண் ணரசு வேண்டும் ;*
*நானிலமெ லாம்பரவி நானென் றுளத்திலே*
*ஞானநட மாடும் அரசே....*

*நல்லவர் திருக்கூட்டம் ஓங்கவேண்டும்; உலகில்*
*ஞானவொளி வீச வேண்டும் ;*
*நாடெலாங் கல்விகலை செல்வத் தொழில் வளமை*
*நாடோறும் ஓங்க வேண்டும்;*
*பொல்லாத கோள்பொய் பொறாமைநோ யுடன்மதப்*
*போராட்டம் ஒழிய வேண்டும் ;*
*பூமியை இரத்தகளம் ஆக்கிடும் அரக்கர்குலம்*
*பூண்டோடு மாற வேண்டும் ;*
*எல்லாரும் சரிநிகர் சமானசன் மார்க்கராய்*
*இன்புற்று வாழ வேண்டும்;*
*இன்சொல்லும் ஈகையும் இரக்கமுந் தூய்மையுடன்*
*இகவாழ்வில் ஓங்க வேண்டும் ;*
*வெல்லவேண்டும் வாய்மை ; வீரவிடு தலைவேண்டும்;*
*விஞ்ஞானம் ஓங்க வேண்டும் ;*
*வேதாந்த முத்தியும் சித்தாந்த சத்தியும்*
*விரவவரு பரம சிவமே.....*

*போக்குவர வற்றபரி பூரணப் பொருளையே*
*பொருளென்னு மன்பர் வாழ்க !*

*பொய்யடிமை யில்லாத மெய்யடியர் வாழ்கவே*
*புண்ணியத் தொண்டர் வாழ்க !*
*வாக்கமுதி னாலிறைவன் வான்புகழ் இசைக்கின்ற*
*வரகவி மகான்கள் வாழ்க !*
*வன்புலனை வென்றுமன மொன்றியித யத்திலே*
*வளர்தியான யோகர் வாழ்க—*
*நீக்கமறு சகஜநிலை நின்றஞா னிகள் வாழ்க !*
*நித்தியச் சித்தர் வாழ்க !*
*நிஜதுரிய மலையிலே நிலவுநின் மலர் வாழ்க !*
*நிருவி கற்பர் வாழ்கவே !*
*தாக்கறப் பலகோடி யுலகெலாந் தாங்குந்*
*தயாபரன் கருணை வாழ்க !*
*தன்னையென் னுள்வைத்த சிவஞான குருவாழ்க !*
*சச்சிதா னந்தம் வாழ்க !*

## 24. சாந்தன் வந்த படலம்

### ஞான குரு

*இவ்வகை உளங்கு வித்து, தியானத்தி லிருந்த நாளில்,*
*திவ்விய குருக டாட்சம் சிவனரு ளுடனே கூடி,*
*துவ்விய ஞான ஜோதி யாகவே துலங்கி, மேலே*
*செவ்விதின் செய்யுஞ் செய்கை செயமுற விளங்கிற் றம்மா !*

*பஞ்சுளே தீயைப் போலப் பரவிய சிவக்கொ ழுந்து,*
*சஞ்சித கன்மந் தீரச் சதசத்தா னந்த மீந்து,*
*நெஞ்சுளே கோயில் கொண்ட நிமலனை விளக்கிற் றாங்கே ;*
*அஞ்சுளே யடக்கி வென்ற தீரனுக் கரிதொன் றுண்டோ?*

*கற்பக நிழலைப் போன்ற கருணையார் குரும கானின்*
*பொற்புறு திருவ டிக்கீழ் பொருந்தினின் றொருமை காத்துச்*
*சிற்பரக் கனலைப் பெற்ற சீடனை நோக்கி யாசான்,*
*அற்புத மான சித்தி யடைந்தனை அருளால் என்றான்.*

*அடிக்கனல் ஏறி ஏறி அரவிந்த முடியிற் கூடி*
*கொடிப்பெரு மின்னைப் போலக் குலவிநீண் டொளி தெறித்து*
*நடுப்பெறு சுழுமு னைக்குள் ஆடியே, நாதம் பாடி,*
*வடித்திடும் அமுத பானம் வளமுற நுகர்ந்தாய், கண்டேன்....*

*பத்தியிற் பெரிய னானாய், பலபல சமயங் கண்ட*
*சித்தியிற் பெரிய னானாய், சிவக்கன லளிக்கும் சுத்த*
*சக்தியிற் பெரிய னானாய், சாந்தமாய் உள்ள டங்கி*
*முத்தியிற் பெரிய னானாய், முயற்சியிற் பெரிய நீயே !*

*பூரண சித்தி பெற்றாய், புண்ணிய யோகி யானாய்,*
*ஆரணப் பொருளைக் கண்டாய், ஐயநீ இனிநீ வந்த*
*காரணங் கண்டாய், தெய்வக் கருத்துனை நடத்துங் கண்டாய்;*
*தாரணிக் கினிது செய்யத் தருணமிஃ தென்றான் ஞானி !*

### சாந்தமுனி வருதல்

*பத்தியால் உருகி ஞானப் பரவசத் தாலே பேசும்*
*சுத்தனைத் தழுவிக்கொண்டு தொண்டர்க்குத் தொண்டனான*
*சித்தனும் "சிவோஹ" மென்று செல்விடை தந்தபோது,*
*சத்திய தூத னான சாந்தனுந் தோன்றி னானே !*
*வருகநீ நண்ப வென்று சிவகுரு வணங்கி யேற்க,*
*வருகவென் வாழ்வி னுக்கு வழிதரும் பெரியோய் என்றே*
*இருகையுங் கூப்பிச் சுத்தன், இன்புற வணங்கி யேற்கத்*
*திருமுனி வரனு நன்றி செப்பி "முன் செல்க" வென்றான்....*

### சுத்தன்

*அருட்பெருங் குருவைப் போற்றி, அன்பினை மிகவும் போற்றி,*
*பொருட்பெரு மோக மற்ற புண்ணிய மகானே உன்னால்*
*மருட்பெரு மயக்க மின்றி வாய்மையை உணர்ந்தேன் இன்றே*
*தெருட்பெறு முன்முன் சுத்த சிவனையே சிந்திப்பேனே.*

*தேனருவிச் சோலைவளர் தென்றல் கொஞ்சச்*
*செந்தமிழின் இசைகொஞ்சத் திருக்கள் கொஞ்ச,*
*வானமுதச் சுவை வந்து வாழ்விற் கொஞ்ச,*
*மனமெல்லாம் பேரின்ப வளமை கொஞ்ச,*
*ஞானவொளி சித்தத்தை நயந்து கொஞ்ச*
*ஞாலமெல்லாம் சுத்தான்ம நலமே கொஞ்ச,*
*ஆனந்தப் புதுவுலகில் அன்பு கொஞ்ச*
*அருளான கவிக்குயிலே அகவு வாயே !*

வெள்ளரிய சுகானந்த வெள்ளந் தன்னில்
விளைந்தபரங் கனியேயென் விருப்பை நாளுங்
கொள்ளைகொளும் அருட்சோதிக் குன்றே, தன்னைக்
கொடுத்தடியார் குறைதீர்க்கும் கோவே, அன்பர்,
உள்ளத்தில் ஓங்காரச் சிலம்பொலிக்க
ஓங்குநடம் புரிகின்ற சிவமே, உன்னைத்
தெள்ளினிய தீங்கவியால் வழிபட் டுய்யச்
சிறியேனுக் கருள்புரிவாய் பெரிய தேவே !

மண்ணீர்காற் றனல்வானச் சுடர்க ளாவாய்;
மன்னுயிருக் குயிரான மன்ன னாவாய்,
கண்ணாவாய் கண்காணாக் காட்சி யாவாய் !
கதியாவாய் கதிக்கேற்ற மதியு மாவாய் !
பெண்ணாவாய், ஆணாவாய், பெண்ணாண் ஆவாய்;
பெயர்வடிவ பேதமிலாப் பெரிய னாவாய்;
விண்ணாவாய் வியன்ஞான விரிவு மாவாய்;
வியக்கின்றேன் உனைவிளம்பத் திகைக்கின் றேனே !

எச்சாதி யானாலும், எவரா னாலும்,
எச்சமய மானாலும், எங்கா னாலும்,
உச்சிமிசைக் கைகூப்பி யுனை வணங்கும்
உண்மையடியார் ஒன்றே குலமென் பார்கள்,
அச்சாதி அச்சமயம் அவருக் காங்கே
ஆர்வமறிந் தன்னைபோல் அருளும் அப்பா !
அச்சமிலேன், ஐயமிலேன், அயலொன் றெண்ணேன் ;
அனைத்தும்நீ யென்றறிவேன் அன்புத் தேவே !

பாரெல்லாம் உனது திருவிளை யாடல்;
பலவுயிர்க் குலமுன துடலாம்;
காரெலாம் உனது கடலுண்ட கருணை ;
கதிரெலாம் உன்விழிக் கனலாம் ;
தாரிலே நார்போல் அனைத்தையும் தாங்கும்
சமரஸ சுதந்தரப் பொருளே,
சீரெலாம் பொழியும் சித்தனே சரணம்,
சிவசிதம் பரம்வளர் குருவே.

எச்சம யத்தார் எப்பெயர் வடிவில்
எவ்வகை அன்புசெய் தாலும்,
அச்சமயத்தார்க் கவ்வகை அருளும்
அம்பலக் கூத்தனே சரணம் ;
உச்சமாந் துரிய முடிமிசை யிருந்தே
உலகெலாம் ஒளிவளர் விளக்கே ;
அச்சமே போக்கி அடியனை யாளும்
அழகிய சிதம்பர குருவே !

ஆண்டவா வுன தடிமலர்த் தேனை
அள்ளி யள்ளி யான் பருகிட வேண்டும்;
வேண்டும் உன்னடி யார்திருக் கூட்டம்;
வினையி னேன்பிறப் புய்ந்திட வேண்டும்;
வேண்டும் உன்னருள் வேட்கையென் உள்ளம்;
வேறு வேட்கைகள் ஆறிட வேண்டும்;
வேண்டும் உன்புகழ் பாடிடும் இன்பம்
விமல னேயென தாருயிர் வேந்தே .....

அம்மை யப்பனு நண்பனு மாவாய்
அருட்பெ ருங்குரு தேவனு மாவாய்;

எம்ம தத்திற்கும் சம்மத மாவாய் ;
எவ்வு யிர்க்கும் உயிர்க்கன லாவாய் ;
பன்மையாம் ஒரு பான்மையும் ஆவாய் ;
பரம னீசக சீவனும் ஆவாய் ;
இம்மை யம்மைப் பயன்களும் ஆவாய் ;
இதய நாடகனே சுடர் வேந்தே ....

மறந்தி டாதுனைப் போற்றிசெய் வாக்கும்
மாசி லாத தவம்புரி வாழ்வும்,
சிறந்த சிந்தையும் செய்கையுங் கொண்டே
சீவபூசை செயுந்திருத் தொண்டும்,
பிறந்த நற்பயன் பெற்றிடும் பேறும்,
பிரிவி லாதுனைக் கூடிடும் பெட்பும்,
அறந்தனை நிலை நாட்டிடும் வீறும்,
அப்ப னேயெனக் கருள்புரி வாயே.

மலையினு மாண்பே வானினும் விரிவே,
மழையினுங் கருணையார் அமுதே,
அலைகடல் ஆற்றை யுண்டது போலே
அகப்புறச் சமயங்கள் உண்டு,
நிலைபெறு நிறைவே, நேயர்தந் தூய
நெஞ்சிலே வந்துவந் தினிக்கும்
தலைபெறுஞ் சுகமே, மறைகளின் அகமே,
சதாசிவ மாம்பரம் பொருளே !

கொங்கலர் மலர்வாய்க் குறுநகை புரிவாய் ;
குயில்களில் இசையமு தளிப்பாய் ;
செங்கதி ராகத் திருவிழி பார்ப்பாய் ;
தென்றலாய் வந்தெனை யணைவாய் ;
பொங்கவென் உள்ளம், பூரண மதியாய்ப்
பொலிகுவாய். இயற்கையைப் போர்த்தே,
சங்கையில் லாத சீவராய்த் திகழும்
சதாசிவ மாம்பரம் பொருளே.

வான்கண்ட பயிர்போல், மழைகண்ட மயில்போல்,
வனமலர் கண்டவண் டினம்போல்,
ஊன்கண்ட உயிரில் உன்னையே கண்டுள்
உவந்திடும் உவப்பெனக் கருளாய் !
தேன்கண்ட தமிழிற் செப்பியுன் புகழைச்
செகமெலாந் திருவருள் ஆட்சி
நான்கண்டு குளிர நாடினேன் ; என்னை
நடத்துவாய் ஞானமா விளக்கே !

சாந்தனை யறிந்த ஞானி, ஞானியை யறிந்த சாந்தன்,
போந்தநற் கடன றிந்து புண்ணிய வேளை யிஃதே
வேந்தநீ புறப்ப டென்று விளம்பிடச் சித்தர் அன்புக்
காந்தத்தின் பின்னே சென்றான் கடவுளைக் கண்ட தூயன்.

"அமைத்துளோம் யோக சங்கம் அரியநல் லன்பர் கூடி
இமயத்தின் மீது தன்னந் தனிமையாம் இடத்தைத் தேர்ந்தே ;
சமயத்தைப் பார்த்தி ருந்தோம் ; சத்தியப் புதல்வா செல்முன்
உமைபதி காப்பான்" என்றே சாந்தனும் உரைத்துச் சென்றான்.

உலகையும் கால வேகந் தன்னையும் உள்ள றிந்த
நலமிகு ஞானி, ஏற்ற நயம்பல புரிந்த னுப்பி

*நிலமுயர் அருளின் ஆட்சி நிலவிட யானுந் தொண்டு*
*சிலசெய வருள்க சுத்த சிவனென உரைத்தான் மாதோ !*

*உன்னத மான கொள்கை உருவுறச் செல்லுந் தூயன்,*
*முன்செலும் போதே சாந்த முனிவரன் ஆங்காங் குள்ள*
*சன்மய மான சாது சங்கத்தைக் காட்டி யின்னார்*
*பின்வரும் பணிக்கே யின்று பெரும்பணி புரிந்தார் என்றான் 178*

## 25. அருண ஜோதிப் படலம்

**சுத்தன்**

*எந்தையே சாந்த வள்ளால், இமயமா நிலையஞ் சேரு*
*முந்தெனக் கரிய நல்ல முனிவரின் காட்சி யெல்லாந்*
*தந்தனை மேலு மேலுந் தவரக சியங்கள் கற்றேன் ;*
*வந்தனம் ; இனிநாம் காணும் வரமுனி தேவர் யாரே ?*

**சாந்தன்**

*யாரெனக் கேட்கு முன்பே யானென்றே அருணக்குன்று*
*கார்முடி சூழ நிற்குங் கருணையார் காட்சி காணாய் !....*
*யாரெனக் கேட்டு நானே இதயமென் றடங்கி நிற்கும்*
*பார்தொழும் அருண ஹம்ஸ பகவனைப் பார்ப்போம் வாராய்!*

*பதஞ்ஜலி வகுத்த ராஜ யோகத்தைப் பயின்ற சித்தர்,*
*கதந்தனை வென்ற நல்லார், கனிவுகொள் அடியார், ஞான*
*சுதந்தர தீரர், முத்தர், துரியவர் தம்மைக் கண்டோம் ;*
*இதந்தரும் இதய ஞானி இவரையுங் காணு வோமால். . .*
*அழகிய பாண்டி நாட்டில் அழகுடன் அழகு பெற்றான்,*
*மழவிடை யேறு மண்ணல் வாழுறு மதுரை தன்னில்,*
*பழம்பெரும் பக்குவத்தாற் பாரினைத் துறந்து, சித்தி*
*வழங்கிடும் அருண ஜோதி மலைக்குகை புகுந்து நோற்றான்!*

*மோனமாய் நானா ரென்னு மூர்த்தியாய், மூன்று மில்லாத்*
*தானமே தானாம் என்னுஞ் சகசநிர் வாண னாகி,*
*வானமே போலச் சாட்சி, வகித்துல கெல்லாம் போற்ற*
*ஞானமாம் அமுத தாரை நல்கிடும் பகவன் இன்னோன் !*

*வருபவர் யாவ ரேனு மலர்முகங் காட்டி ஏற்பான்,*
*குருவெனுஞ் செருக்கு மில்லான் ; குணமலை யான தூயன்*
*திருடர்க்குந் தீய ருக்குந் தீமையி லாத நல்லோன்,*
*அருள்விழிக் காந்த மொன்றே அறிவினைத் தூண்டு மம்மா!*

*அன்னிய மறியா ஞானி ஆ, குரங் கணில்மான் புள்ளுந்*
*தன்னிக ரென்றே கொள்வோன்; சகசநிர் வாண சித்தன்,*
*பொன்னிற வண்ணன் உள்ளப் பொருள்பொரு ளாக உள்ளான்*
*அன்னவன் காட்சி சச்சி தானந்தக் காட்சி யாமே !*

*காண்பமென் றுடனே சுத்தன் கனிமல ரெடுத்துள் ளேகி*
*மாண்புள சாந்த னோடு வணங்கலும், "வருக" வென்றே*
*நாண்மலர் வாய்தி றந்து நல்வர வினிது கூறி,*
*ஊண்வகை யளித்தான் அந்த ஒப்பறு ஞான வள்ளல் !*

*வணங்குமுன் உபச ரித்த வஞ்சமில் அன்புச் சித்தன்,*
*குணங்களைக் கண்டு, கண்ணிற் கொட்டிடுங் கனலைக் கண்டு,*
*மணங்கமழ் சுற்றங் கண்டு, மலர்திரு மொழிகள் கண்டு,*
*பணிந்தருள் வாக்கினாலே பாசுரம் பாடி னானே !*

## குரு பரமன்

ஊனாகியென் னுளமாகியுள் ளுணர்வாகிய ஒருவன்,
நானார் என ஆராயுழி, நானாகிய முதல்வன்...
மோனானந்தப் பெருவெள்ளத்தில் மூழ்கித்திளை முனிவன்,
தேனார்பொழில் அண்ணாமலை திகழும் குரு பரமன் !

அயரா தெனுள் அமுதாய் வளர் அனலாகிய நிமலன் ;
பெயராதுதன் னன்பால் எனைப் பித்தாக்கிய பெருமான் ;
மயலார்புவித் தளைநீங்கிட மருந்தாகிய வரதன்,
இயல்பாய் முளை சிவலிங்கமென் றெழுந்தான் எனக் கெதிரே !
தனதென்றொரு பொரு ளற்றவன்; தானேபொரு ளானோன்,
மனதென்றொரு மதிலற்றவன், வானின்விரி வானோன் !
எனதாருயிர்க் குழலின்மிசை யாய்வளர் இனியன் —
அனலார்விழி யொருபார்வையின் அடியார்துயர் அறுமே !

நினைவார் நினை நினைவானவன், நினையா நிறை வானோன்.
வினையார் திரை கிளராதமர் விச்சைக்கட லானோன்
தனையன்றிவே றுலகற்றதோர் தணலாகிய பகவான்;
அணைவாருளத் ததுநான் எனும், அருணாடகம் புரிவோன்!

கண்டார்மனக் கவலைச்சுமை கனலிற்படும் இலவாம்;
தொண்டார்தவச் சித்தர்குழு தொழுதேத்திடுஞ் சுடரோன்
வண்டார் வன மலர்கொஞ்சிடுந் தென்றல்வளர் மலையான்;
வெண்டாமரை பொருபுன்னகை விலகாதென துளமே !

உருகுந்திரு வடியார்தமிழ் உரையாழொலி பரவப்
பெருகாதலொ டருநான்மறை பேசித்தவழ்ந் திறைஞ்சும்
அருவித்திரள் அருகோடிடக் குருவித்திரள் பாடும்,
திருவார்நகர் அண்ணாமலை தீர்த்தன் அடி சரணே !

சகசத்தனி யிதயத்தமர் சத்தாகிய ஒருவன்,
சகசித்திர விளையாடலைச் சலனப்பட மெனவே
சுகநித்திரை தனிற்காண்பவன் சொல்லாமறை வடிவோன்—
முகபத்தும மதுவுண்டபின் முளையற்றதென் வினையே !

இருப்பிட மறிந்து தானங் கிருந்தாவா றிருக்கு ஞானி,
அருட்பெரும் பார்வை யாலே, ஆனந்த முறுவ லாலே,
பொருப்பென நிலைத்த சாந்தப் போதச மாதி தந்த
நெருப்பெழு சக்தி யாலே நிமலனுட் புகுந்து நின்றான்—

கலைதரும் பேச்சு மில்லை ; கற்பனைக் கெட்டா மோன
நிலைதரும் பரமானந்த நிட்டையிற் புகுந்து சுத்தன்,
மலையெதிர் குன்றைப்போலே, மணிச்சுடர் விளக்கைப் போலே,
அலைவிலா தடங்கி நின்றான் அமைதியின் செல்வன் முன்னே!

சாந்தனும் அந்த வாறே சகசநிட் டையினில் ஊன்றி
வாய்ந்தநல் லானந் தத்தை வழுத்திட உரையி லாமல்,
பாய்ந்தொளிர் சிற்சு கத்தைப் பருகினான் மனது முற்றுந்
தேய்ந்துதேய்ந் துள்ளத் தொன்றாந் திவ்விய நிலையி லம்மா !

மூச்சுமோர் சுமையென் றெண்ணு முப்புடி யற்ற டங்கிப்
பேச்சிலாப் பேச்சிற் பேசிப் பெரியமோ னத்தால் விண்டு,
தீச்சுடர் போன்றெ ழுந்த சிற்சுக நிலையிற் காணும்
ஆச்சரி யங்கள் யாரால் அளவிட லாகும் அம்மா ?

முன்னமர் அன்பர் உள்ளே மூழ்கிய நிலையைப் பற்றித்
தன்னறி வியல்பைப் பற்றிச் சாற்றெனக் கேள்வி கேட்க,
உன்னத ஞானா னந்த உச்சியில் ஒளிரு ஞானி
சொன்னதை ஞானமாலை யாகவே சொல்லுவாமே.

உண்மையை யுள்ளங்காணும் ஒள்ளிய உபதே சத்தை
அண்மையி லன்ப ரோடு சுத்தனும் அமர்ந்து கேட்டுப்
புண்ணியப் பயனா லின்று பூரண குருவைக் கண்டோம்,
எண்ணிலாப் பரமானந்தம் எய்தினோம் என்று சொன்னான்.

முத்தனாம் பரம சாந்தன் முன்னிலைச் சுட்டி லாத
தத்துவ ஞானி முன்னே தான் சமயோக சங்கம்
சுத்தனுக்காகக் கண்ட சூட்சுமம் சொல்லு முன்பே,
மெத்தநல் லரிய வேலை ; வெல்லுமென் றுவகை கூர்ந்தான்..

தண்மையே நீரின் றன்மை, தகிப்பதே தீயின் றன்மை,
வெண்மையே பாலின் றன்மை, வெளிச்சமே விளக்கின் றன்மை,
வண்மையே காரின் றன்மை, வாய்மையே வாயின் றன்மை,
உண்மையின் பறிவே யோக சித்தருக் குரிய தன்மை !

இடமகல் உலகுக் கெல்லாம் இன்பமே விளைய நாளுந்
திடமனத் தூய நேயர் திருவுடன் வாழுஞ் சங்கம்,
கடமையைக் காத்து, ஞானக் கதிர்களைப் பரவி யெங்குந்
தடம்பெறு வெற்றி யோங்கித் தழைத்திட வாழி யென்றான்.

அன்பதே உள்ள மாகி, அருட்பணி யுடல மாகி,
இன்பமே யுலக மெய்தும் இயற்கையே முயற்சி யாகி,
துன்பமே யணுகாத் தெய்வ வாழ்வினைத் துலக்கி யென்றும்,
பண்புறு சமயோகத்தின் பயன்பொலிந்திடுக வென்றான்

நின்மல வாக்கி னாலே நீதரு வாழ்த்தி னாலே,
நன்மையே யாகு; மெங்கள் சமாஜத்தின் ஞான சக்தி,
இன்னலைப் போக்கி யெங்கும் இன்பமே யாக்கு மெல்லாம்
உன்னருளாலேயென்றான் உண்மையை மதிக்குஞ் சாந்தன்...

கண்ணின் கனலாற் கருத்துருக்கி யென்மனத்தை
உண்ணும் ஒருவன் உளமுள்ளான் — எண்ணமெலாம்
எண்ணாம லேவெற்றி யெய்தும் அவனருளாற்,
பண்ணும் பணியே பணி.

பூக்கும்பூ வெல்லாம் புவித்தாய்க் கருச்சித்தே
ஏக்கமிலா தோங்குமர மென்னவே — காக்குமிறை
தந்த பணியுந் தருபயனுந் தந்தவற்கே
சிந்தையற்று வாழ்வோந் தினம்.

சீவசமு தாயஞ் சிவமயமென் றேயெண்ணி
ஏவும் பணியை யியல்பாக — மேவியருட்
சத்தி யியற்றத்தான் சாட்சியெனக் காண்பதுவே
முத்திநிலை யென்று முயல்.

முரணாக வந்து முளைத்த மனதைச்
சரணாகச் செய்துசிவ சக்தி — அரணாகச்
செய்புண் ணியமே சிவபூசை யாகிவிடின்
உய்யும் பணியதுவென் றோது.

கள்ளப் புலன்மனதைக் கட்டிக் கலங்காத
உள்ளத்தி லுண்மை யொளியாகி — விள்ளரிய

பேரின்பம் வானாகப் பெய்துலகைப் போற்றுகின்ற
காரின்பம் போற்கடமை கா...

அருளாலே யெங்கும் அதுவேதா னாகும்
பொருளாலே வாழ்க்கை பொலிக — இருளாலே
துன்புற்ற மாந்தர் துகளறு ஞானத்தால்
இன்புற்று வாழ்க வினி.

## 26. ஞான மாலைப் படலம்

பூத்தகாலை போலவே புன்னகை பொலிகவே
கோத்தமாலை போலவே குலவி மாந்தர் வாழவே
தீத் தணலைப் போலவே திகழ்க யோக சக்தியே
ஆத்மஞானச் சங்கொலி அனைவருள்ளும் ஆர்க்கவே !

மோன மான பரம் பொருளே மோக சோக தாகமில்லாத்
தான மான வுள்ளத்தே தானென் றெழுந்த சுகப்பெருக்கே
வான மான பரவெளியே வாக்கு மனமு மெட்டாத
ஞான மான பொருளே யிஞ் ஞான மாலை அணிந்தருளே !

எல்லா உயிர்க்கு முயிராகி எல்லாப் பொருளுந் தானாகி
எல்லாங் கடந்த தனிமுதலாய் இலகு முன்னைக் கலந்ததுமே
எல்லா வுயிரு மென்னுயிரே எல்லா வுடலு மென்னுடலே
எல்லா மனமு மென்மனமே ஏக மான பரம்பொருளே.

கத்தை கத்தை புத்தகங்கள் கற்றா லென்ன? கேட்டுமென்ன?
சித்த மடங்கி யுள்ளத்தே சீவ லிங்கஞ் சிவமாக
பக்தி ஞானம் பயின்றுலகப் பற்றற்றுள்ளே அருள்பழுத்த
முக்தி யின்பம் வேண்டுமையே மோன மான முதற்பொருளே

அங்கு மிங்கும் அலையாதே அருகே யமர்த்தி யானந்தம்
இங்கே யுள்ள தறியென்றென் இதயந் தொட்ட சுகக்கனலே
எங்கே எங்கே என்பவரை இருந்த படியே இன்பமுறச்
செங்கை நீட்டி அழைக்கின்ற சிவமே யுன்னைச் சரண்புகுந்தேன்.

நானே யென்று கிளம்பாதே நலமுந் தீதும் நாடாதே
ஊனே பேணித் திரியாதே உலகைத் திருத்தப் பாயாதே
வானே யாகி வளியொளியாய் வாரி யாகி வளர்புவியாய்த்
தானே யாகி நீயாகித் தழைத்த ஒன்றை அறிவாயே.

முப்பொழுதும் மூவிடமும் முக்குணமும் முப்பிரிவும்
முப்பொருளும் மும்மலமும் மூடமனக் கட்டுகளும்
தற்போதத்தே உண்டாகும் தன்னைக் கண்டு விழித்திருக்குஞ்
சிற்போதத்தே இருப்பார்க்குச் சீவனெல்லாஞ் சிவமயமே.

தாங்க வொண்ணாத் தலைச்சுமையைத் தள்ளி யுனது திருவடியில்
ஓங்கும் அமைதி கொண்டுவிட்டேன் ஒன்றுங் கவலை யில்லையினி
நீங்க முடியா துன்னையினி நீ வேறில்லை; யுனைமறந்து
தூங்க முடியா துலகினிலே துரியா னந்தப் பரம்பொருளே.

அகந்தை யற்றுப் போனதுவும் அழுக்காறு மறைந்ததுவும்
சகந்த னிலே யாரிடமுஞ் சண்டை யில்லை; பகையில்லை
மிகுந்த காமம் ஒழிந்ததுவும் வேக மான மோகமில்லை ;
சுகந்தான் மிச்சம் என்னுள்ளே சுத்தா னந்தச் சுடரொளியே

அகந்தை யென்னும் பேய்ச்சரக்கை யானா ரென்னும் தடியாலே
இகந்து பூர்வ வாசனைகள் ஏறாதிந்த மனமடக்கி,

முகந்து கடலை மழைபொழிந்தே மூய்ந்து போகு முகிலேபோல்
மகிழ்ந்துன் னருளில் மறைந்திடுவேன் மன்றுளாடு மாமணியே.

போகந் தந்த சுகத்தினிலும் புவியோர் தந்த புகழினிலும்
தேகந் தந்த வனப்பினிலும் செல்வந் தந்த செருக்கினிலும்
மோகந் தந்த துயரமொன்றே முழுவதுவும் கண்டலுத்தேன்;
தாகந் தீர வுபசாந்தந் தந்தா ளென்னைத் தற்பரமே !

கனவில் யானை சிங்கத்தைக் கண்டு மிரளுங் கதிபோலே,
மனதின் மாயா சாலத்தில், வலியச் சிக்கி வசமிழந்தே
எனது யானென் றிருமாக்கும் இழிந்த நிலையை ஒழித்திடவே
உனது போதந் தனைநினைத்தேன் உண்மை யறிவுக் கேசரியே!

சித்தத் திரையைப் போக்கிமிகச் சீறும் செருக்கின் முளைபோக்கி
மத்தக் கரியைப் போலெதிர்க்கும் மமதை தன்னை யுள்ளடக்கி
செத்துச் சங்கற் பங்களெல்லாம் சீவ சாட்சி யாயிருந்தாற்
சுத்த முத்தி சித்தியெல்லாந் துலங்கும்; சாந்த நிலையதுவே !

வாய்மை யான வாக்கமுதம், வளமையான பொருளினிமை
தூய்மை யான சிந்தனைகள், சுத்த மான வாழ்வின்பம்,
நோய்க ளற்ற உடலுறுதி, நுட்ப மான நல்லறிவு
தாய் மனம்போல் அன்புறுதி, தந்தா ளென்னைச் சிவகுருவே !

தித்தித் துள்ளே யள்ளூறும் தேனே ஞான வானமுதே
எத்திக் கினிலும் உயிர்க்குயிராய் இருந்து கருணை மிகச்சுரந்து
முத்திக் கேநல் வழிதிறப்பாய் முதல்வா உனது திருவடிக்கே
பித்தாய் நின்று பிதற்றுகிறேன் பேதமிலாப் பெரும் பொருளே.

உருகி யுருகி உள்ளத்தில், ஊற்றாய் ஆர்வத் தடங்கண்ணீர்
பெருகிப் பெருகிப் பேச்சற்ற பெரிய மோன வாரிதியை
மருவி மருவிப் பிறநினைவை மறந்துன் அன்பு பெருகிவளர்
அருவி யாக வாழேனோ? அருளானந்தப் பரம்பொருளே.

பட்டும் அரக்கும் உரசிடவே பற்றிக் கொண்ட மின்னொளிபோல்
கட்டை தன்னைக் கடைந்தவுடன்களுக்கென் றெழுங் கனல்போல
நட்டு வார்த்து வளர்த்தவிதை நாளுங் காட்டும் பசுமைபோல்
நிட்டை கூடி நின்ஞான நெருப்பா யிருக்க நீயருளே.

ஆளில்லாத மங்கையைப்போல் அரசில்லாத குடிகளைப் போல்
வாளில்லாத வீரனைப் போல் வரமில்லாத கவியினைப் போல்,
தோளில்லாத மாலையைப் போல் சுடரில்லாத விளக்கினைப்போல்
தூளில்லாத பூவினைப் போல் சுத்தா னந்த மில்லாரே.

கள்ளார் பூவின் விருந்தாலே காடு முழுதும் பூமணமாம்
உள்ளார் ஞான மலர்விரிந்தால் உலகமெல்லாம் அருள்மணமாம்
புள்ளார் காலை முகத்தினிலே பூத்துப் பொங்குங் கதிரவன்போல்
தெள்ளார் சித்தஞ் சிவமானால் சீவ வுலகுஞ் சிவமயமே.

செல்வச் சாலைச் சேவகர்போல் சேயை வளர்க்குஞ் செவிலிபோல்
நல்லி சைசெய் வீணையைப் போல் நாதகான முரளியைப் போல்
எல்லை யற்ற வானகம் போல் இந்த உலகில் இருப்பவரே
தொல்லை யற்ற சுகம் பெறுவார் சுத்தா னந்தச் சுடரொளியே.

பெரிய கடலின் ஆவியிலே பிறந்த மழையைப் பருகியதும்
சிறிய விதையி னின்றெழுந்தே செழிக்கும் பயிரும் உயிருமெனத்

துரிய பரம சக்தியிலே தோன்றி யிந்த உயிருலகம்
விரிய விரிய வினையோங்கி வெட்ட வெட்ட வளருவதே.

பிறந்தே னென்று பேசுவதும் பிறந்த தொல்லை நீங்கிடவே
துறந்தே னென்று பேசுவதும் துன்பப் பிணிகள் பலவருந்தி
இறந்தேன் என்று பேசுவதும் இயல்பா யிருக்கும் என்னைநான்
மறந்தேன் என்று பேசுவதே மாயாதீதப் பரம் பொருளே.

சுருதி மூட்டை பலசுமந்தே சோர்ந்து ஞான மலையேறக்
கருதிக் கருதிக் கால்சறுக்கிக் கவலை யேறிக் கிடப்பேனை
வருதி வருதி என்றருளின் பரிதியாக வழி காட்டி
இருதி என்றென் இதயத்தே இன்பங் காட்டி யிருப்பவனே.

படங்கள் படலம் படலமாய்ப் பாடி யாடிப் பாய்ந்திடினும்
திடங்கொள் வெள்ளித் திரையிலகும் தீப சாட்சி என்றிருந்தால்
கடங்கள் கோடி நிறைந்தாலும் கட்டில்லாத காற்றினைப்போல்
இடங்கொள் உலக நாடகத்தை இருமை யின்றிப் பார்ப்பவனே!

கண்கள் இரண்டு மலராகக் கருத்திற் கனிந்து பணிந்தேத்தி
எண்கள் நிறைந்த நினைவுகளை எடுத்து மாலை தொடுத்தளித்தேன்
உண்க வென்றன் மனக்கவளம் உருட்டியுருட்டி உவந்தளித்தேன்
பண்கள் ஈந்து பாடுவித்த பரம னான கணபதியே !

நம்ம திடத்தே நாமூன்றி நானா பாவம் அற்றிருந்தால்
இம்மி யேனும் அச்சமில்லை எள்ளி னளவும் கவலையில்லை
தம்மா லிந்தத் தாரணியிற் சகல வினையு நடக்குமப்பா
சும்மா விருக்குஞ் சூட்சுமத்தைத் துருவித் துருவி யறிவாயே.

எதுவே யன்றி யுலக மில்லை எந்த உயிர்க்கும் உயிர்ப்பில்லை
எதுவே யன்றி எண்ணரிதாம் இந்த வுலகிற் செயலில்லை
பொதுமன் றாடும் பொருளதுவே போதா னந்தக் கடலதுவே
அதுவே நானென் றறிவதுவே அறிவிற் கறிவாம் அறிவாமே !

இல்லை யென்றும் உண்டென்றும் இனியதென்றும் கசப்பென்றும்
நல்ல தென்றும் தீதென்றும் நண்ப னென்றும் பகையென்றும்
அல்ல தென்றும் ஆமென்றும் அலைக்கு மனத்தை வேரறுத்தால்
எல்லை யில்லா ஒன்றினிலே இயல்பாய் இருக்க வழியாமே !

அல்ல உடலம், அல்ல மனம் அல்ல சித்தம் புத்தியல்ல
அல்ல உலகம் என்றொதுக்கி ஆர்யான் பின்னே எனவினவி
நல்ல சுத்த சொரூபத்தை நானென் றிருக்கு ஞானநிலை
வல்ல சகச நிட்டர்களே வாய்மை யாக வாழ்ந்தவராம்.

சாவை நன்றாய் ஆராய்ந்தால் சாகாப் பொருளின் அறிவுதிக்கும்
யாவு மதுவென் றமர்ந்துவிடின் அன்னி யத்திற் கிடமிலையே
பூவும் பூவின் உயிர்க்குலமும் பூவைக் கடந்த பொருளுடனே
யாவுந் தேவும் உன்னுள்ளே அறிவா யிலகும் அதுவாமே !

நனவில் யாரே நடப்பவனோ நனவே யற்ற நீண்டதொரு
கனவில் யாரே உயிர்ப்பவனோ கனவொழிந்த சுழுத்தியிலே
தனை யறிந்தார் சுகிப்பவனோ சத்தாந் துரிய நிலையினிலே
அனைய தாரென் றறிபவன் யார் அவனே நீயென் றறிவாயே

கிளரு நினைப்பை யாரென்றே கேட்டு வெளியே ஓட்டி விட்டால்
வளருஞ் சங்கற் பாதிகளின் வலிய பாசத் தொல்லை யில்லை

குளிரு நீரில் ஆடுமதி குடைசெய் வானமதிநிழலே
மிளிரு முலகம் என்சாயல் வேறொன் றில்லை யென்பாயே.

நாமே யிருக்கு நன்னிலையே நன்றாய் ஊன்றிக் கொண்டிருந்தால்
பூமேல் வண்டு போல்வந்தே புந்தியாதி வாசனைகள்
தாமே விலகும் என்றறிந்தே சகசா னந்த நிட்டரெல்லாம்
மாமேருவே போலத்தாம் மலையா துள்ளே நிலையானார்.

எதிலே எல்லாம் உதித்ததுவோ எதிலே எல்லாம் உறைவதுவோ
எதிலே எல்லாம் அடங்கிடுமோ எதுவே உயிருக் குயிராமோ
அதிலே மனதைக் கரைத்ததுவே அகில வுலகம் என்றறிந்தால்
புதிதே இல்லை முதிதில்லை புறமும் உள்ளும் பூரணமே.
மாண்டு மாண்டு செல்லுவதும் மாய உலகில் உடல்கொண்டு
மீண்டு மீண்டும் வருவதுவும் மெய்ம்மை உணராதின்னுமின்னும்
ஈண்டு வினைகள் சேர்ப்பதுவும் இடர்க் குலத்தை எளிதாகத்
தாண்ட முடியா திருப்பதுவும் தன்னை யறியாத் தலைச்சுமையே.

தன்னை யகலா திருப்பதுவே தலையாங் கரும முலகினிலே
தன்னை யறியும் அருளறிவே தலையாம் அறிவாம் உலகினிலே
தன்னை யன்றி வேறெண்ணாத் தனிமை இனிமை உலகினிலே
பின்னை யென்ன பெற்றாலும் பெற்ற தொன்றும் இலையாமே.

இருக்கு மிடத்திலிருந்து விடின் இரண்டு மில்லை மூன்றுமிலை
தருக்க வாதத் தொல்லையில்லை சாத்தி ரத்தின் சண்டையிலை
பெருக்கப் பேசும் சாதனத்தின் பெயரு மில்லை அகங்கார
வருக்க மில்லை தனையறிந்த வாய்மை யொன்றே வாழ்வாமே.

ஆசைப் பேயை அடக்கியதும் அகந்தைப்பாம்பை அடித்ததுவும்
பாச வலையை பறித்ததுவும் பாரின் பற்றுவிட்டதுவும்
வேசை மனத்தை வென்றதுமே விருப்பு வெறுப்பை நீத்ததுமே
ஈச சீவ சகபேதம் இல்லை இன்பம் உண்டாமே !

காட்டு வானுங் காண்பானுங் காட்சி யாய்நல் லறிவனைத்தும்
ஊட்டுவானு மாகி யென்றும் உள்ளே யுள்ள ஒருபொருளை
நாட்ட மூன்றி யறியாத நானாபாவ முற்றுலகோர்
வீட்டி லொளிந்த பண்டத்தை வீதி யெங்குந் தேடுவரே !

தன்னை வெல்ல முடியாதே தடித்த மூடச் செருக்காலே
முன்னே யுள்ள உலகாள முரசு கொட்டிச் சமர்புரிவார்
என்னே கண்டா ரிறுதியிலே இரத்த வெள்ள மேகண்டார்.
பின்னே புரியைக் கட்டியெமன் பேசா திழுத்துச்செலக்கண்டார்.

நாக்கைத் துருத்தி இருப்பதுவும் நாடிப் பாம்பை யாட்டுவதும்
மூக்கைப் பிடித்து வருத்துவதும் முகத்தைச் சிவக்க வைப்பதுவும்
யாக்கை நீட்டி மடக்குவதும் யாரென் றறிந்து மனக்குரங்கின்
போக்கை யடக்க மாட்டாதார் புரியும் பொம்மைக் கூத்துகளே.

சுற்றிச் சுற்றிப் புலன்வழியே சுழன்று சுழன்று மனமயங்கி
வெற்றி தோல்வியென்பார்கள் விருப்பு வெறுப்பென்றோதுவார்
எற்றும் புயலில் அகப்பட்டே இருவி காரச் சுழலினிலே
பற்றிப் பற்றி யலைவார்கள் பாசம் பிடித்த பாரினரே !
பொன்னாங் கனியைக் காட்டியபின் பூவுக் கங்கே நிலையுண்டோ?
இன்னா ளிரவி எழுந்ததுவும் இரவுக் கதன்முன் இடமுண்டோ?
பன்னா ளலைந்து பதங்காணப் பரம ஞான குருமணியுன்
முன்னால் வந்த பிறகிந்த மூட மனத்துக் கிருளுண்டோ?

எந்த வேலை செய்தாலும் எங்கே யிருந்து பிழைத்தாலும்
அந்த வேலை ஜகதீசன் ஆணை யென்றே செய்திடுவாய்.
சொந்த வேலை யில்லாத சூட்சு மத்தைக் கண்டருளால்
வந்த வேலை செய்வாயேல் வாய்மையான விடுதலையே.

காம ரூபப் பேயடங்காக் காவி வேடங் கட்டியொரு
நாம ரூப பேதமில்லா நடுவாம் பொருளை நாடுவதும்
ஆமை ரோமங் கயிறாக்கி ஆகா சத்திற் கேணிகட்டி
ஊமை சொல்ல முடமேறி உயரச் செல்லுங் கதையாமே.

வந்த தோடு போனதையும் வாத னைப்பட் டெண்ணாதே
சிந்தை யாதி கரணங்கள் சேட்டை யடங்கி நின்றிடவே
பந்த பாச வினையொழியும் பரம துரியச் சுடர் விளங்கும்
அந்தச் சுடரே உன்னுண்மை அறிவாய் உள்ளே அறிவோனே.

கற்போற் குகையி லசையாமல் கற்ப கால மிருந்திடினும்
விற்போ லுடலை வளைத்திடினும் வீர வேலை செய்திடினும்
அற்பு தங்கள் காட்டிடினும் அவதாரப்பேர் பெற்றிடினும்
தற்போ தத்தை ஒழிக்காதார் சாந்த மெய்த மாட்டாரே.

ஆச னங்கள் போடுவதும் அடசா தனங்கள் பயிலுவதும்
வாசி தன்னைக் கட்டுவதும் வாயின் மோனங் காப்பதுவும்
பூசை செய்து துதிப்பதுவும் புண்ணி யங்கள் செய்வதுவும்
ஆசை மனத்தை அலையாமல் அடக்கி வைக்க வழியாமே.

உடம்பென் றுன்னை நினைக்குமட்டும் ஓதி யுணர்ந்தும் பயனில்லை
அடங்கள் புரிந்தும் பயனில்லை அகங்கா ரங்கள் கிளம்புமட்டும்
விடங்கொள் அரவு போலவரும் விடய நாற்றம் உள்ளவரை
இடங்கொள் சுத்த சுதந்திரத்தில் இன்பமெய்தல் முயற்கொம்பே.

பொறிக ளடக்கி மனமடங்கிப் புத்தி யடங்கிப் புறஞ்செல்லும்
வெறிகள் அடங்கிப் புகழ் வேட்டைவிருப்படங்கி மாசான
நெறிக ளடங்கி நானென்னும் நினைவு மடங்கி யுள்ளத்தே
அறிவை அறிந்தங் கறிவானால் அறிவா னந்தம் பெறலாமே.
சடமா முடலில் யானில்லை சமயச் சரக்கில் யானில்லை
இடமா முலகில் யானில்லை எங்கே யலைந்தும் யானில்லை
அடமா மாசை யாணவத்தை அடக்கிப்பார்வை யுள்ளொடுக்கித்
திடமா யிருக்குந் தீபநிலை திரியா நிலையே யானதுவே.

கண்ணு றங்கிக் கருத்துறங்கிக் கனவு றங்கிக் கருத்தலையும்
மண்ணு றங்கிப் போனாலும் மனதைக் கடந்த நானுறங்கேன்
எண்ணு மைந்து பூதங்கள் இணைந்த வுடலங் கழன்றாலும்
உண்மை யான நானிருப்பேன் உண்மை யான உண்மையிதே.

முக்கு ணங்கள் போராடி மோது கின்ற கருங்கடலில்
திக்கெதுவும் அறியாதே திண்டாடும் உயிர்ப் படகைப்
பக்க முள்ள துறைகாட்டிப் பரிவொளிரும் விளக்கனையார்
எக்குணமும் இல்லாமல் இருந்த படி இருப்பவரே.

பொன்றும் பொருளை நாடாமல் போக்கு வரவைத் தேடாமல்
கொன்றுண் பவரைக் கூடாமல் கோபத் தீயிற் குதியாமல்
என்றும் உள்ள பொருளினையே யென்னுள் யானென் றேயறிந்தே
மன்றுள் வாழும் பேரின்ப வாழ்வே உண்மை வாழ்வாமே.

*பெருக்க உருக்கப் பேசியென்னேபெரியநூல்கள் எழுதியென்னே*
*உருக்க உருக்கப் பாடியென்னே? உலகப் புகழைச் சூடியென்னே?*
*தருக்க மின்றி வாயடங்கி தன்னுள் மூழ்கிச் சலனமின்றி*
*இருக்கும் பேறு பெற்றவரே இறவாக் கலையைக் கற்றவராம்.*

*நின்று மிருந்தும் கிடந்துமிந்த நிலையில் லுலகி லெங்கெங்கோ*
*சென்றுங் காலம் வேண்டுவினை செய்தும் பட்டுக் கொள்ளாதே*
*நன்று தம்முள் ளேநிலைத்த நல்லோ ரில்ல றத்திருந்தும்*
*வென்றி வீரன் வாளினைப்போல் விகார மில்லா திருப்பாரே.*

*பொன்னைக் கண்டு பொன்னீயும் போகங் கண்டு போகசுகப்*
*பெண்ணைக் கண்டு கலைஞானப் பெருமை கொண்டு மயங்காதே*
*உன்னைக் கண்டால் இவையெல்லாம் ஊமையாகித் தலைகுனியும்*
*தன்னைக் கண்ட பரமுக்தர் தாங்கார் உலகத் தலைமைச்சுமையே*

*முற்றுங் கொடுத்தே சரணடைந்து முதல்வன்பாதப் போதினையே*
*பற்றிப் பற்றிக் கதறுவதும் பாடிப் பாடி யாடுவதும்*
*அற்றுப் பந்த பாசங்கள் அகந்தை யற்றுச் சுத்தமன*
*முற்றுத் தன்னுள் அடங்குவதும் முத்திக் கேற்ற முடிபாமே.*

*தினைத்து ணையும் பேதைமனந் தீண்டா துள்ளே தியானித்தே*
*அனைத்து மான்மக் கடவுளென்றே யானு மதுவே யாவனென்றே*
*நினைத்து நினைத்துப் பழகிவிட்டால் நின்ற நிலையே நிலையாகித்*
*தனைத் தவிர்த்து வேறில்லாச் சகஜ சித்தி அதுவாமே !*

*கனவி லுடலை மறப்பதுபோல் கண்ணை விழித்து வாழ்கின்ற*
*நனவில் உடலை நானென்னும் நரவு ணர்வை மறந்துமனத்*
*தினவில் லாது சித்தத்தே திரையில் லாது திடமான*
*தனது நிலையி லிருப்பதுவே சகத்திற் கமைதி யதுவாமே.*

*நானா வுலகின் மருளற்றார் நாதங் கடந்த துரியவெளி*
*மோனாகார மாய்விளங்கும் முக்திச் சிகர மலையேறி*
*நானா ரென்னும் தகழியிலே நான் நான் என்னும் திரிமயக்கி*
*ஞான ஒளியை யேற்றுவதே நல்ல தொரு கார்த்திகையாம்.*

*மோன மென்னும் ஆழியிலே மூழ்கி யுலக முயிர்இறையாம்*
*ஆன மூன்று நிலையின்றி ஆண்பெண் பாலின் உணர்வின்றி*
*ஞான வெள்ள நிறைவாகி நானு தியா உபசாந்தந்*
*தானே யாகித் தழைப்பதுவே சகச யோக சித்தியதாம் !*

*சுற்றித் திரியு மனக்குரங்கைச் சும்மா விருக்கச் செயும்வித்தை*
*கற்றுத் தெரிந்து சித்தத்தைக் கட்டத் தெரிந்துள் ளமைதியினை*
*பெற்றுத் தெளிந்து பேசாத பெருமை யடைந்து முக்குணங்கள்*
*அற்றுப் பற்று மற்றின்றி அறிவா யிருக்கும் அதுசுகமே.*

*கள்ளச் சிந்தை களைவிடுத்து காமம் வெகுளி யச்சமின்றி*
*மெள்ள மெள்ளப் புலன்மனத்தை வேகங் குறைத்துமோகமின்றி*
*உள்ளே யுழைக்கக் கற்பதுவே உண்மை யோகப் பயிற்சியதாம்*
*அள்ளி அள்ளிப் பேரின்பம் அளிக்கு மதனை யாரறிவார்?*

*ஆத்மா யானென் றறிவதுவே அறிவிற் கறிவா மறிவாகும்*
*ஆத்மா உண்மை என்பதுவே யானும் உண்மை யாவதுவாம்*
*ஆத்மக் காதல் வளர்ப்பதுவே அன்புக் கடவு ளன்பாகும்*
*ஆத்மா யானென் றிருப்பதுவே ஆனந் தத்தின் வீடாமே!*

வஞ்ச வுடலின் புரைதாண்டி வளரு மாசைத் திரைதாண்டி
நெஞ்ச மலையைத் தாண்டியெழும் நினைவுப்படலந் தாண்டியபின்
பஞ்ச கோசச் சுவர்தாண்டிப் பார்க்கும் உலகப் படர்தாண்டி
எஞ்சி நிற்கும் உளம்தாண்டி எனது வீடு சேர்ந்தேனே !
பொரிந் தெழுந்த பொய்யகந்தை புறத்தே ஒழிந்து மனமாயங்
கரிந்து போகக் கண்டுவிட்டாற் கவலை யில்லை, யச்சமில்லை
எரிந்த தாம்புக் கயிற்றாலே யெதையுங் கட்ட முடிந்திடுமோ?
அறிந்த மனத்தின் அகவுணர்வும் அவ்வா றுன்னைத் தளைக்காதே!

அமர நிலைமை யாவதும் அமுத பானம் செய்வதுவும்
நமனை வெல்லுந் தந்திரமும் நாட்டந் தன்னை யுட்குவித்தே
தமதா மிதயப் பரம்பொருளே தாமே யென்றங் கறிந்தடங்கும்
அமைதி யின்ப மொன்றேகாண் ஆர்வ முள்ள நன்னெஞ்சே !

காலமிடங் காரணங்கள் கற்பனைகள் இவை கடந்தே
கோலம்பல கொண்டாடுங் குணதொந்த வினைகடந்தே
ஞாலமெனுந் திரைகாட்டும் நாடகமெல் லாங்கடந்தே
சீலமுள்ள ஞானிதன்னுட் சிற்சுகமாய் இருப்பவனாம்

புவியினிலே தாமிருந்தும் புனலினிலே படகினைப்போல்
எவரிடையும் சிக்காமல் இருவினையிற் பற்றாமல்
சவவுடலை நம்பாதே தற்போத மிழந்திருக்கும்
அவரேயுள் ளுண்மையினை அறிந் தடங்கும் பெருந்தகையார்.280

பற்றா துள்ளப் பரம்பொருளைப் பாரா துள்ளே பார்ப்பவனை
முற்றா தறிவின் மோனநலம் முயலா தான்ம முக்தியினை
இற்றே யுலகைத் திருத்திடுவோம் என்றே பாயு முயற்சியெலாம்
கற்றாழைக்கு முட்பிடுங்கிக் காயங் கட்டும் கதையாமே.

ஏறி இறங்கும் அலைபோலே இருட்டி விடியு நாட்போலே
மாறி மாறிக் காலவினை மண்ணில் விளை யாடுதப்பா
கூறும் பிரமன் பானைகளைக் கூற்றார் உடைக்குங் கொள்கையினை
மீறி யுலக மில்லை யப்பா விருப்பு வெறுப்பற் றிருசும்மா !

முன்னே செழித்த தமிழகத்தை மூரி யுண்டு தேக்கெறியும்
முன்னே வாழ்ந்த நாகரிகம் முகிஞ்ச தரையின் புதைபொருளாம்
இன்னே முளைத்தபுதுமைகளும் இனிமண் ணாகிப் பழையனவாம்
பின்னே காலம் வந்துலகைப் பிட்டுப் பிட்டு விழுங்குதப்பா !

திங்க ளுக்குங் கறையுண்டு தேவ ருக்குங் குறையுண்டு
செங்க திர்க்கும் வீழ்வுண்டு செகத்தி னுக்கும் அழிவுண்டு
தங்கத் திற்கும் பழுதுண்டு தானே தானாம் மோனமுனி
புங்க வனின் உபசாந்தப் பொலிவிற் கென்றும் பழுதிலையே.
மங்க லமும் மாரடிப்பும் மணப் பறையும் பிணப்பறையும்
பொங்கு கின்ற புகழிசையும் புல்லர் சொல்லும் இழிவசையும்
கங்கு லுடன் பகலும்போற் கால வுலகைக் கலக்குமப்பா
திங்க ளைப்போற் செங்கதிர்போற் சிரித்துச் சும்மா செல்வாயே!

உண்ணச் செய்யுந் தீவினைகள் உண்ட பிறகு மதமேறிப்
பெண்ணே யென்னும் பெருங்காமப் பித்தர் செய்யுந் தீவினைகள்
கண்ணே செய்யுந் தீவினைகள் கருத்தைப் பற்றுந் தீவினைகள்
கண்ணே கண்ணே காணாயிக் காலம் உண்ணும் வினையுலகை.
300
மண்ணா லாகி மட்குடம்போல் மண்ணாய் முடியும் உலகினிலே
கண்ணிற் புத்தி விட்டுமதி கலக்கி ஆளைச் சீரழிக்கும்

*பெண்ணிற் புத்தி விட்டு வீண் பேச்சுப் பேசி யிறப்பவரை*
*எண்ணி எண்ணி எனக்குநிதம் எரிப்புஞ் சிரிப்பும் வருகுதையே*

*தன்னைப் போலே பிறரென்றே தத்துவங்கள் பேசியுடன்*
*என்னைப் போலே யாருமில்லை எனதே உண்மை என்னாதே*
*முன்னே நின்று முழுப்பொருளை மோன மாகக் காட்டுகின்ற*
*உன்னைப் போல யானிருக்க உன்னை என்னுள் வைத்திடுவாய்*

*பட்டுக் கொண்ட பேர்களைநீ படுத்தி வைக்கும் பாட்டினை நான்*
*பட்டுப் பட்டுப் பார்த்துவிட்டேன் பரதே வதையே உலகம்மா*
*கிட்ட வந்தென் முக்தியினைக் கெடுக்காதே போர் தொடுக்காதே*
*எட்டி நின்றே விளையாடாய் இயற்கையான முக்குணமே.*

*கனமாய் வெல்லங் கரைத்தாலும் கடலிற் பான கம்வருமோ?*
*தனமாய்க் கட்டிக் குவித்தாலும் தன்னுள் இன்பந் தானாமோ?*
*இனமா யுலகம் சேர்ந்தாலும் ஏகாந் தத்தின் சுகம்வருமோ?*
*மனனஞ் செய்து கற்றாலும் மாறா ஞான மதி வருமோ?*

*அலையா திருக்கப் பேதைமனம் அழியா திருக்க உள்ளன்பு*
*குலையா திருக்க மதிப்பொலிவு குன்றா திருக்கத் தவச்செல்வம்*
*மலையா திருக்க வுலகினிலே மயங்கா திருக்கப் பொய்மயக்கில்*
*கலையா திருக்க மகதுரியம் காவாய் இன்பத் தடங்கடலே.*

*மோகங் கொண்ட வுலகினிலே மூர்க்க வஞ்சக் காட்டினிலே*
*தாகங் கொண்டுன் வானருளைச் சரண் புகுந்து கூவுகின்றேன்*
*வேகங் கொண்ட வெம்மாய வெறிக ளென்னைத் தாக்காமல்*
*ஏகங் கொண்ட உன்னுணர்வில் இயல்பாயிருக்க நீயருளே !*

*ஊரார் என்னைப் புறம்பேசி ஒதுக்கி வம்பு செய்திடினும்*
*பாரா லயத்தின் பெருமானே பற்றை யெல்லாம் உன்னிடமே*
*பேரா திருக்கச் செய்துநிதம் பேசி யென்னுள் அருட்கவிதை*
*ஓரா யிரமாய் ஊறிடுவாய் உயிருக் குற்ற ஓர் துணைவா !*

*பேச்சில் நாளைச் சூதாடிப் பேரும் புகழும் மிகத்தேடி*
*மூச்சைப் போக்கும் இழிவின்றி மோனக் குகையில் இனிதிருந்தே*
*ஏச்சுக் காட்டும் உலகினிலே ஏமா றாமல் உன்னருளால்*
*ஓச்சி யான்ம வீணையொலி ஓமென் றிசைக்க வருவாயே!*

*ஆசைப் பேயும் அடங்காத ஆண வாதிப் பேய்க்கணமும்*
*தேசைப் பறிக்கும் பெருங்காமத் தீய பேயும் பொறுமையற்ற*
*நாசப் பேய் பொறாமையெனும் நரகப் பேயும் பிடிக்காமல்*
*நேசப் பட்டுள் அன்புநிலை நிற்குந் தூய்மை அருள்வாயே !*

*நாயைப் போலே வள்ளென்னும் நச்சுக் கோபப் புயலொழிய*
*பாயும் கொச்சைச் சூதொழியப் பங்கப்படுத்தும் பொய்யொழிய*
*நீயும் நானும் ஒன்றாகி நீயே உலக வாழ்வாகி*
*வாயை திறந்தால் உனைவாழ்த்தும்வரமேயருளென்னுடையானே*

*ஓடி ஓடி உலகெல்லாம் ஒவ்வொ ருவர் நாட்டினையும்*
*நாடி நாடி நன்றாக நலமுந் தீதும் கண்டறிந்தேன்*
*தேடித் தேடித் திரிந்ததெல்லாஞ் சிறுமை யுற்றுத் தேய்ந்ததினிப்*
*பாடிப் பாடி யுனைக்கூடிப் பரமா னந்தம் பெறுவேனே*

*நெருங்க நெருங்க மாந்தர்களை நெஞ்சந் தொட்டுக் கண்காணப்*
*பெருங்கோ ளச்ச மழுக்காறு பிரிந்த சாதி மதச்சள்ளை*

நொருங்குஞ்செல்வச்செருக்குகளே நூறாண்டுகண்டலுத்தேனே
அரும்பும் அன்பைக் கண்டிடவே ஆசை கொண்டேன் அம்மானே

நேசங் கனிய நின்பாலே நினைவு கனிய நின்னன்புப்
பாசங் கனிய அநுபவத்தைப் பார்த்துக் கனிய நன்மனது
ஓசை கனிய ஒளி கனிய உள்ளங் கனிய உள்ளைந்து
கோசங் கனியக் குணங்கனியக் குணங் கடந்த கனிவருளே !

ஒன்றே கடவுள் என்றறிவீர் உள்ளங் கூடி உணர்ந்திடுவீர்
ஒன்றே எல்லா வுயிர்க்குலமும் உண்மை யான்ம நேயமுறீர்
நன்றே நாடி நலம்புரிவீர் நானே நானே யென்னாதீர்
வென்றே புலனை ஆண்டிடுவீர் விரிவான் சூழும் உலகீரே.

தாயின் கருணை காட்டிடுவீர் தருண மழைபோல் உருகிடுவீர்
சேயின் உள்ளத் தெளிவுடனே சேர்ந்து வாழப் பழகிடுவீர்
கோயி லான வுலகினிலே குயிலார்சோலை எனச் செழிப்பீர்
தூய இன்பச் சுடரான சுத்த சக்தி அருளாலே !

ஆர்வப் புனலால் நீராட்டி அன்பு மலரால் அணிசெய்தே
சீராம் சிந்தைப் பட்டுடுத்தி செயலனைத்தும் அர்ப்பணித்தேன்
ஏரார் உலக வாழ்வினிலே ஏதேதுறினும் பொறுத்திருந்தே
மார்பக் கோயிற் பெருமானை ஆர்வத்தாலே வழிபட்டேன்

வானாய்வளியாய் ஒளியாகி மழையாய்ப் பயிராய் உயிராகி
தேனார் மலராய்க் கனியாகி தித்தித்தூறும் அமுதாகி
ஊனாய் உயிராய் உலகாகி உள்ளாய் உள்ளத்துணர்வாகி
நானாய் நீயாய் அவனவளாய் நானாவாகும் ஒரு மயமே.

தானே தானாய்த் தன்மயமாய் தத்துவத்திற்கப்பாலாய்
ஞானானந்தச் சுடராகி நானானென்று நடம்புரிவாய்
வானே வானின் அணுத்திரளே வளரும் உயிருக்குயிர்ப்பொலிவே
யானேதுன்னையல்லாதே யாவுமான தனியொன்றே !

கண்ணிற்கலந்த கதிரொளியே காதிற்கலந்த நல்லிசையே
மண்ணிற்கலந்த பயிர்வளமே மனதிற்கலந்த சிந்தனையே
விண்ணிற்கலந்த வியனணுவே வெளியிற்கலந்தவளிநிறைவே
பண்ணிற்கலந்த கவியமுதே பாரிற் கலந்த பரசிவமே

கருணை கருணை என்கேனோ கடவுள் கடவுள் என்கேனோ
இருளை நீக்கி வழிதுலக்கும் இரவிச்சுடர்நீ என்கேனோ
அருளே யமுதே என்கேனோ அன்பே சிவமே என்கேனோ
பொருளே புகலே என்கேனோ புனிதமான பூரணமே. 380

வாழ்க குருபரமன் வாழ்க பரமோனம்,
வாழ்கநா னாரென்னு மந்திரமே — வாழ்கவே
அன்புண்மை யாக வமர்ந்த சுயஞ்சோதி
இன்பமே யஃதா மியல்பு....

சித்தமாந் திரை யடங்கிச் சீறகச் செயல டங்கி,
முத்தனா யுள்ளி ருந்தே முமுக்ஷுக்கள் எய்த ஞான
சத்தியை நல்கு மோனி சதாசிவ ஞானி, இந்த
உத்தமர் பக்குவத்தை உணர்ந்துணர்ந் துவகை கொண்டான்...

பொய்த்திடும் அபிமா னத்தைப் பொய்யென ஒதுக்கித் தள்ளி,
மெய்த்திடும் பொருள றிந்த மேதகு முனிவன் முன்னே,
வைத்தவா றிருந்து மோன சக்தியை வளர்த்து நாளுந்
துய்த்தரு ளின்ப மன்புத் தூயனும் விடைபெற் றானே !

*சவவுட லுணர்வை நீத்துச் சகசநிட் டையிலே யூன்றும்*
*புவிபுகழ் ஞானி யாகி பூரண வெற்றி யென்றே,*
*நவையறு சாந்தன் முன்னே நடத்திடு வழியே சுத்தன்*
*சிவமுறு ஞானமாலை தெளிவுறப் பாடினானே*

*இவ்வகை யிசைத்த சுத்தன் இயல் வகை வாழ்வை யோகஞ்*
*செய்வகை வினவச் சாந்தன் ஸ்ரீ அரவிந்தர் அன்னை*
*உய்வகை உலகுக்கீந்த ஒளிபெறும் ஆரோவில்லில்*
*மெய்வகைப் பண்பாடெல்லாம் விளங்கிடக் காணென்றானே.*

## 27. புதுயோகிப் படலம்

*அலைகடல் ஓம்என் றார்க்கும், அமுதவாய்ப் புட்கள் ஆர்க்கும்,*
*பலகலைத் தொழில்கள் ஆர்க்கும், பயனுள கல்வி ஆர்க்கும்,*
*அலதொரு சத்த மில்லா அமைதியில் ஓங்கு கின்ற*
*நிலையமே புதுவை யோகி அரவிந்த நிலைய மாமே.*

*மலர்கனி குலுங்கு கின்ற மலையென மாளி கைகள்,*
*புலமைகள் குலுங்கு கின்ற பொன்முக நல்லோர் கூட்டம்,*
*தலைவரே தெய்வ மென்னும் சாதகர் சங்கம் ஓங்கி,*
*நிலவிடும் கோயில் எங்கும் நிம்மதி காண லாமே.*

*வெண்பனி யாடை யன்றி வேறொரு பூணும் இன்றிப்*
*பெண்மையும் ஆண்மை யன்பும் பேரின்பக் கொடிபோல் ஓங்கி*
*உண்மையும் உழைப்புங் கொண்ட உயர்நல வாழ்வு வாழும்*
*தண்பொழில் இதுவே; பூமி தாங்கிடும் சுவர்க்க மம்மா !*

*துன்பமே யில்லை; யிந்தத் தொல்புவி வாழ்க்கை யெல்லாம்*
*இன்பமே யாகு மென்றே இலக்கிட வந்து தோன்றி,*
*அன்பருக் கரச னாகி, அரவிந்த வள்ளல் வாழும்*
*தென்பெருந் திருவை குண்டம் இதுவெனச் செப்ப லாமே.*

*கலைசிறந் தோங்கு கின்ற கல்கத்தா நகரில் வந்தே*
*அலைமுர சடிக்கும் இங்கி லாந்தினில் அமரக் கற்றே*
*தலைபெறும் புலவ னாகித் தனிப்பெருங் கவிஞ னாகி,*
*விலையிலா நூல்க ளீந்த வியன்பெறும் அறிஞன் இன்னோன்.*

*வெள்ளையர் கலையைத் தேர்ந்து, வேதமெய்க் கலையுந் தேர்ந்து*
*பள்ளியா சிரிய ராகிப் பரோடாவில் இருந்த காலை,*
*தெள்ளிய ஞானந் தேறத் திருவுறு யோகஞ் செய்ய*
*உள்ளுற உவகை கொண்டே ஒளிபெற முயன்றா னம்மா !*

*செஞ்சொலும் பொருளும் வேதச் சித்திரப் பொலிவுங் கொண்டு*
*நெஞ்சினை யள்ளு கின்ற நிகரிலாக் கவிதை செய்தோன்,*
*அஞ்சறு சிங்கம் போலே ஆரிய நாடு பட்ட*
*வெஞ்சிறைப் பூட்டு டைக்க வீறுகொண் டெழுந்தான் மன்னோ!*

*செல்வமார் தொழிலை விட்டுத் தேசமுன் னேற்றத் திற்கே,*
*கல்வியை நல்கிப் பின்பு கனல்பெறும் எழுது கோலால்,*
*வல்பெறுந் தியாகி, வந்தே மாதரம், கர்ம யோகி*
*தொல்பெருந் தருமம் என்னும் சுதந்தரப் பேரி யார்த்தான்.*

*கண்ணனின் கீதை காட்டும் கருமயோ கத்தைக் காத்தே,*
*புண்ணியப் புலவன் அல்லி புரச்சிறை காத்த போதே,*
*எண்ணிய யோக சித்தி யெய்தினான் ! இறையைக் கண்டான்,*
*விண்ணுறத் தரும பேரி முழக்கிட வெளியே வந்தான்...*

உத்தம நாட்டின் சேவை யோகமாய்ப் புரிக வென்றே
நித்திய வழியைக் காட்டி நிகரிலா வள்ள லாரின்
புத்தலர் அருட்பா ஓங்கும் தமிழகப் புதுவை வந்தான் ;
சித்தனெம் பெருமான் இங்கே புதுயுகந் திகழ வைத்தான்.

புண்ணியப் புதுவை மேவும் பூரண யோகி கண்ட
விண்ணியல் அரசி னுக்கு வெற்றிசேர் திருவாய் வந்தாள்,
கண்ணிலே கருணை பொங்கும் கனியிதழ் அமுது பொங்கும்,
வெண்ணிறச் சக்தி யன்னை அவள் செயல் விளம்பப்போமோ?

கீழ்மையை மாற்றிப் பாசங் கெழுமிய இருளை மாற்றித்
தாழ்மையை மாற்றித் தெய்வத் தருமத்தை நாட்டி, மாந்தர்
ஆழ்ந்தவிஞ் ஞானத் தாலே அமரரின் ஆனந் தத்தில்,
வாழ்ந்திட யோக சக்தி வழங்கிடும் அன்னை வாழ்க !

துயர்மிகும் கலியை மாற்றிக் கிருதயுகந் தோற்ற வேண்டி,
அயர்வுறுஞ் சடத்தி னுக்கும் அமுதத்தை ஊற்று கின்ற
உயர்பெறும் விஞ்ஞா னத்தின் உச்சியில் இருவராக
இயல்புற வாழுகின்ற வாழ்வினை இறைஞ்சு வாமே.

திறந்தநல் லுள்ளத் தாலே, தினந்தினம் ஆர்வங் கூறி,
அறந்தழைத் துலகம் உய்யும் அருள்வரம் வேண்டு கின்ற
சிறந்தபக் குவத்தைக் கண்டு திவ்விய வாழ்வின் சக்தி
சுரந்தவிஞ் ஞான யோகி, சுரர்தமை யாக்கும் தீரன்.

தூய்மையும் அழகும், அன்புத் தொண்டுடன் சுறுசுறுப்பும்,
வாய்மையும் கரும யோக வளமையும், உளத்தில் ஆன்ம
நேயமும் கொண்டு, நல்ல நிமலரின் சங்கம் இந்தக்
கோயிலில் வாழ்க நீடு குருமணி யருளி னாலே.

புதுயுகச் சுடராம் எம்மான் புதுநகர் ஆக்கி யாங்கே,
புதுஅதி மனிதர் சங்கம் புதியநா கரிகம் போற்ற,
முதுபெறும் உலக மெல்லாம் ஆனந்த முரசு கொட்டித்
துதிசெயப் புகழ் சுமந்து துலங்குக நலங்க ளோங்கி !

ஒன்று மற்றிரு ளோங்கிடும் வாழ்வினை
ஊறும் ஆனந்த ஊற்றென மாற்றினை ;
கன்றி னுக்குரு கும்பசு என்ன நீ,
கனிந்தெம் உள்ளக் கவலையைத் தீர்த்தனை
தொன்று தொட்ட களிம்புறு மேனியைத்
தூய தங்கச் சுடரென ஆக்கினை.
வென்றி யோங்கி அரவிந்த வேந்த நீ
விண்ணரசைப் புவிமிசை யாளுவாய்.

கானல் ஓடும் கடுஞ்சுர வெய்யமண்
கண்குளிர் பசுங் காவெனச் செய்குவாய்.
வானும் பூவும் மணாளனும் பெண்ணும்போல்,
வாழ வைத்துப் புதுமர பாக்குவாய்.
மானி டரை அமரராய் மாற்றுவாய்;
மழையைப் போலவிஞ் ஞானம் வழங்குவாய்
தேனும் பாலுந் தெவிட்டக் கவிதரும்,
தெய்வ ஜீவன சித்த நீ வாழ்கவே.

சிவிகை யேறி நிதித்திரள் கொண்டிங்கே
செகத்தலைவருந் சேவடித் தொண்டிற்கே
குவிகை யோடு குழுமி வருகின்றார்.
கொண்டல் வண்ணநின் கொள்கை சிறக்கவே

கவிதை கொண்டுன் கருணையில் வாழுவேன்,
கலையின் பத்திற் கடவுளைக் காணுவேன்,
நவயுகக் கதிரே இந்த ஞாலத்தில்
நானு முன்கதி ராகிட நீயருள்.
இன்ன லுற்றினி யெவ்வித முய்குவேன்
'இறைவ னேயபயம்' எனக் கூவினேன்
மின்ன ணிக்கர மீந்துயர் சாந்தவிண்
மீது யர்த்தினை ஆதிப் பரமனே !
அன்னை போலிவ் வனாதைக் குழந்தையை
ஆத ரித்தனை, யன்பு துளிர்த்திடும்
புன்ன கைமுகங் காட்டியென் புண்ணெலாம்
போக்கி னையினி தாக்கினை வாழ்க்கையை !

காண நாளுங் கவலைகொண் டேங்கினேன்.
கண்ணை மூடிப் பின்கட்டை யவிழ்த்தனை
மாணுலக மனையிலுன் னாடலே
வளரக் கண்டு மகிழ்ந்து வியந்தனன்
ஆணவப் பெரு மாயை யடங்கலும்
அனைத்தும் நீயென் றறியத் தொடங்கினேன்
வீணை யாகவென் வாழ்வினை மீட்டினை,
வேனிற் சோலைக் குயில்களின் பாட்டெனா.

கண்கொட் டாதெனைக் காணும ணாளனே
காணுலகுன் குணாலயக் காட்சியே,
எண்ணி லாவுயி ரான ஒருவனே,
எல்லை யற்றொளி வீசு மிரவியே
அண்ண லப்பனென் அன்னை யருந்துணை
அரசன் சோதி யருட்குரு யாவுநீ !
விண்ண ருவி யெனவிளை மாகவி
வேந்த, உன்ஜய பேரிகை யாகுக !

சிந்தை செய்திடச் சித்தங் குளிருதே ;
திருவ டிமல ரிற்சிரம் வைத்துனை
வந்தனை செய்ய வானருள் கொட்டுதே
வரத ராஜ மணிக்கரம் பட்டதும்
பந்த பாசப் படர்வினை பட்டதே
பழைய தொல்லை பளிச்சென விட்டதே,
எந்தையே பர சக்தி யிறைவனே,
என்னை யாளருட் சோதி யரசனே !

உன்பர மெனும் உண்மை விளைந்ததும்
உன்னின் வேறில்லை யென்னத் தெளிந்ததும்
என்பர மென் றெதுவுமிங் கில்லையே
என்னை யாட்டும் விசையுன திச்சையே !
பம்பரஞ் சுழல் பாருக்குச் சாட்டைநீ,
பரிதி போன்றொரு பற்றறு சாட்சிநீ !
உம்பர் காணும் உடுக்கணம் யாவையும்
உன்ம ணிச்சுட ரின்னுதிர் பூக்களே !

புல்லனேன் உனக் கீந்ததிப் பொய்யுடல்
புழுத்த நாயும் புகாப்பழம் பாழ்மடம்
தொல்லை யாசைப் பசிதொளை தோற்குடம்
தூயனே, யதைத் தொட்டுப் பொன்னாக்கினை
எல்லை யற்றவுன் னின்ப வளத்தினால்
எளிமை தீர்த்தனை ! என்னிகர் செல்வர் யார்?
கல்லைக் கற்கண்டுக் கட்டியென் றாக்கினை
கசந்த வாழ்விற் கனிரசங் காட்டினை.

*பாச மெல்லாம் பகவநின் பால்வைத்தேன்*
*பரம சாந்தச் சுகநிலை பாலித்தாய்*
*ஊச லாடிடுஞ் சித்தத்தை யுன்னடி*
*ஊன்றி னேனதி லுன்செய லாற்றுவாய்*
*நேசனே யுன்னைக் கூடி யிருக்கையில்*
*நீண்ட நேரம் நிமிஷமென் றானதே*
*தேசனே யென் கலைதரு சிந்தனை*
*தியான மாமலராக தினமுமே*

*கரைகடந்து களித்ததென் உள்ளமே*
*கட்டு டைந்ததென் காவிய வெள்ளமே*
*உரை கடந்ததென் அன்பின் உருக்கமே;*
*உலகை ஆண்டிடு மோனப் பெருக்கமே.*
*வரை கடந்த மகிமையைக் கண்டனன் ;*
*வாழ்வை யோகம தாக்கி மகிழ்ந்தனன்.*
*திரை கடந்தெழு தேவர் அமுதெனத்*
*தித்தித் தாவி சிலிர்த்தது நாதனே !*

*அன்னையாய்ப் புகலளித்தென் அருங்கலைக் கனவை யெல்லாம்*
*பன்னரு யோக மூட்டிப் பாரத சக்தி யாக்கி,*
*இன்னரிவ் வுலகிற் கீயும் இன்பத்தை யீந்த வள்ளல்*
*புன்னகை யாசி பெற்றுப் போயினர் புனித ராங்கே !* *136*

## 28. அருட்சோதிப் படலம்

*அரவிந்த நகரின் அழகை யுவந்தே*
*புதுமைக் கருத்துடன் பொலியுந் தூயர்*
*வடலூர் சபையுள் வளமுறத் திகழும்*
*ஜோதியைக் கண்டு சுத்தசன்மார்க்கத்*
*தாதை வள்ளலார் சமரச மாண்பை*
*ஓதியனைவரும் உவந்திடச் செய்தார்*
***அருட்பிர காச மாலையை*** *நாமும்*
*அன்புறப் போற்றி இன்புறுவோமே !*

*திருப்பொதுவில் ஞான நடம் புரிகின்ற*
*தெய்வசிகா மணியின் சேயை*
*இருட்குலத்தைப் போக்குகின்ற*
*மடமையிருள் மாற்றவந்த இரவிதன்னைக்*
*கருக்கணக்கில் லாதவனைக் காலனணு*
*காதகனல் மேனியானை*
*அருட்சமயத் தந்தையினை அன்பருக்குத்*
*தாயானை அடைந்து வாழ்வாம்.*

*தேடுகின்ற தொண்டருக்குத் தேனாகக்*
*கனியாகத் தீம்பாலாக*
*ஓடிவந்து தண்ணருளைப் பொழிகின்ற*
*ஓங்கார வேத வூற்றை*
*வாடுகின்ற பயிரினுக்கு மழையனைய*
*கருணைமிகு வடலூர் வேந்தை*
*நீடுகின்ற சன்மார்க்கச் சோதியினை*
*நிலவுலகு நினைக மாதோ*

*சாதிமதச் செருக்காலே சண்டையிட்டுச்*
*சாம்உலகை ஆன்மநேய*
*வேதமெனும் அருட்பாவால் விடந்தீர்த்த*
*வித்தகனை, வேறுபாட்டால்*

*மோதியலை மாந்தருக்கு முறையான
கருணைவழி மொழிந்ததெய்வச்
சோதியருட் புலவோனை நலமோங்குஞ்
சொல்லரசைத் தொழுது நிற்பாம்.*

*மாயவிருட் காட்டினிலே மதிமயங்கி
வழிதடவி வாடுகின்ற
சேயனைய சீவனுக்குச் சிவஞான
ஒளிகாட்டித் திருவார் அன்புத்
தாயனைய தயவுடனே யருட்பாவாம்
அருட்பாலைத் தந்து சிந்தை
மேயவனை மெய்யின்பத் தூயவனை
நேயமுற விளம்புவோமால்.*

*ஒளியேநல் லுயிராகி, யுலகாகி, யுடலாகிக்
கருணைசெழி யுள்ளமாகித்
தெளிவான மனமாகித் தேசாகி
மாசற்ற தியான மாகி
அளியார்செந் நாவாகி யமுதாகித்
தமிழாகி யருட்பா வாகி
வெளியாகப் பரவெளியை விளக்கியநல்
விளக்கான விமலன் வாழ்க.*

*காயனைய மனதினையும் புளிப்பகற்றிக்
கனியாக்கிக் கருணை யாக்கித்
தூயஸம ரஸம்பொழியும் பேரின்பச்
சுதையாக்கித் துரியா தீத
நேயமருள் பரமசுக நிலையாக்கிக்
கலைகடந்த நிமலமாக்கித்
தேயமெலாந் திருவோங்கச் சிவமோங்க
தவமோங்க செய்தாய் போற்றி.*

*பூதவுடற் கரணமதிற் பற்றுகின்ற
பொய் மயக்காம் புகலிலாத
சாதிமத வாதனையை மாற்றுதற்குச்
சமயசஞ் சீவியான
நீதிமிகு சன்மார்க்க நெறிவகுத்த
குருபரனை நினைவிற் கொண்டு
சோதிவழி சென்றுலகிற் சுத்தான்ம
நேயர்களாய் ஒத்து வாழ்வோம்.*

*வன்பாறை யினும் வலிதாம்
ஆணவத்தை ஊணாக்கி வளமைநல்கும்
அன்பான வுயிர் நிலத்தில் அருளான
பயிராக்கி ஆன்ம வாழ்வை
இன்பான கற்பகநல் வனமாக்கி
எழிலோங்கும் துரியஜோதிப்
பொன்பாய மாற்றுவித்த யோகபரி
பூரணனைப் போற்றி வாழ்வோம்.*

*கருநீலப் பசுஞ்செம்பொன் வெண்கலப்புத்
திரைகளெலாங் கடந்து தூய
அருளான பரஞ்சுடரை அறிவாக
விளக்குகின்ற அறிஞரேறைத்
திருவோங்கச் சிவஞானத் தெளிவோங்கத்
தினவாழ்வை வகுத்துதெய்வ
வுருவாக மாற்றுவித்த ஒளியான
ஒண்மையனை உள்ளம் வைப்பாம்.*

தேவார மூவரெனத் திருவாத
வூரரெனத் திருமூலர்போல்
நாவாரத் தாயுமா னவர்போலத்
தமிழ்பாடி ஞாலமெல்லாம்
ஓவாத மதச்செருக்கை யொழித்த
சமரஸச்சுடரை உள்ளுணர்ந்தே
சாவாத தெய்வநிலை சார்ந்துலகில்
அமரரெனத் தழைப்போம் வாரீர்.

தேகசுதந் தரமுடனே போகசுதந்
தரமுதவித் தியானமோன
யோகசுதந் தரத்தினையும் ஒப்பற்ற
ஒருவனுக்கே யுதவி யென்றும்
ஏகசுதந் தரமாகச் சிவனருளே
யினிதுநமை யியக்க வேண்டி
வேகசுதந் தரமுடனே வியனுலகை
யழைத்தபொது வேதன் வாழ்க.

ஏமசித்தி வாமசித்தி இந்திரியம்
அமுதாகும் எழிலார் தூய
காமசித்தி சோமசித்தி யாதார
கமலமெல்லாம் கடந்து நிற்கும்
ஓமசித்தி ஸஹஸ்ரார யோகசித்தி
தேகசித்தி யெல்லாம் திவ்ய
நாமசித்தி பெறநல்கும் அருட்சோதி
நாயகனை நாடுவோ மால்.

ஆங்கார வினையற்றுப் பேராசைத்
தினவற்றிங் கமைதியாகி
நீங்காத நேசமுடன் உள்ளத்தே
நெக்குருகி நினைந்துணர்ந்தே
தூங்காத தியானமுடன் மோனமுடன்
சுத்தசிவ சித்தி பெற்றே
ஓங்காரஒளியுடலை யுதவுகின்ற
தேசிகனை ஓதுவோமால்.

ஊனுருவி உயிருருவி யுள்ளுருவிப்
பாய்ந்தின்ப வூற்றெடுக்கும்
தேனருவி யாகிவளர் தெய்வீகத்
திருவருட்பா செழித்த வூற்றை
மானவர்க்குப் புதுவழியும் புதுயுகமும்
புதுவாழ்வும் வழங்கியிங்கே
வானரசைக் கொணர்ந்தானைத்
துரியவள நாட்டரசை வழுத்தி நிற்பாம். 120

பலமதங்கள் ஒன்றெனவே வடக்கினிலும்
மேற்கினிலும் பகருமுன்பே
தலமுயருந் தமிழ் நாட்டில் அருளான்ம
ஸமரஸத்தை நாட்டினானை
நலமுயரும் குருமணியை நவயுகத்து
நபிமணியை இன்பமோங்கி
உலகுயருந் தவமணியை உண்மையறி
வொளிமணியைப் போற்று வோமால்.

முருகென்னும் பொருள்விளங்க முத்திளமை
யெழில்குலுங்கு முகத்தி னானைத்

தருணமழை போல்அடியார் தாகத்தைத்
 தணிக்கின்ற தயைமிக்கானை,
கருணைவிரி மனத்தானை எவ்வுயிருந்
 தன்னுயிர்போற் கருதுவானை
குருமணியென் றுலகமெலாம் கும்பிடத்தக்
 கோனைமனங் குறித்து வாழ்வோம்.

எத்தனையோ தத்துவங்கள் அத்தனைக்கும்
 இசைவாகி யவற்றின் மேலாய்
ஒத்துலகில் எல்லாரும் ஒருகுலமாய்
 அருட்பொதுவிற் செழிப்புற் றோங்கச்
சுத்தசிவ சன்மார்க்க சங்கத்தை
 முறைவகுத்த சோதிதன்னைச்
சித்தெல்லாம் வல்லவனைத் திருஞான
 தேசிகனைச் சிந்தை செய்வோம்.

பித்துலகர் பிதற்றுகின்ற மதவாதச்
 சூதுகளைப் பிறகிட்டோட்டிச்
சுத்தான்ம ஒருபாட்டின் உரிமைநெறி
 முதன்முதலிற் றுலக்கி னானைச்
செத்தாரை எழுப்புகின்ற
 ஞானசஞ் சீவியினை அமரவாழ்வின்
வித்தகனைத் தமிழ்வேத மகரிஷியை
 விளம்பியுளம் பொங்குவோமால். 160

தினைத்துணையும் பேதமின்றிச் சீவகா
 ருண்யவழி சேர்ந்து வாழ
மனத்திருளை மாற்றியறி வானந்தத்
 துரியமலை வளநாடேற்றி
நினைத்திடவு முடியாத நிலைக்குநம்மை
 யழைத்தானை நேரிலிந் நாள்
அனைத்துலகும் அறிவானைத் தமிழரின்றே
 அறிவானை அணிந்துவாழ்வாம்.

மருட்சமய வாதுகளும் மாமாலச்
 சூதுகளும் மண்ணைக்கவ்வ
இருட்சாதி வேற்றுமைகள் இடர்செய்யும்
 பிரிவினைகள் இரிந்து தேயப்
பொருட்செறிந்த மணிவாக்கும் பொதுநலஞ்செய்
 புண்ணியமும் பூண்டெழுந்த
அருட்சோதி ராமலிங்கப் பெருமானின்
 அடிமலர்கள் முடிமேல் வைப்பாம். 176

## 29. இமாலயப் படலம்

வள்ளலார் அறிவுமன்றம் வசித்தருட் சோதி கண்டே
உள்ளெலாம் அருட்பாவூற வுலகெலாம் புகழ்பெற் றோங்கும்
தெள்ளிய சுத்த யோக நிலையத்தி லிருந்து சின்னாள்
வெள்ளிமா மலையை நோக்கி விரைந்தனர் சிறந்த தூயர்.

### இமய மலை

விண்ண ளந்து விரிதொட ராலிந்த
மண்ண ளந்து நிவந்து வளர்ந்துநம்
கண்ண ளந்து கணக்கிட வாற்றிலா
வெண்ணு யர்பனி மேவும் இமாலயம்.

*கலை யரசர் கவியணி செய்திட*
*மலை யரசென மாண்புற் றொளிர்வது ;*
*தலை சிறந்த தவத்திரு மன்னர்கள்*
*அலை மனத்தை அடக்கிப் புரப்பதாம்.*

*தேசு லாவுந் திருத்தலம் ஓங்கிய*
*மாசி லாச்சிவ மந்திர மானது,*
*ஆசி யாவின் அருள்மணிக் கோபுரம்,*
*பேச நல்ல பெரும்பனி மாமலை.*

*பல மதங்கள் பரவிடச் சுற்றிலும்,*
*பலநன் னாட்டினர் பண்புடன் போற்றவே,*
*இலகு மாமலை இந்திய வேதத்தை*
*உலகிற் கோங்கி யுரைத்திடு மோனமோ?*

*துரிய மாமுடி தூங்கிய யோகிபோல்,*
*அரிய நிட்டை யமர்ந்திடு மாமலை,*
*பெரிய ஞானம் பிறக்குஞ் சமாதியைத்*
*தெரியக் காட்டுஞ் சிவகுரு நாதனோ?*

*விளங்கு பாரதி வீற்றிருந் தாண்டிடப்*
*பளிங் கரியணை யாகிய பான்மையோ?*
*உளங்குளிர உருகும் பனித்திரள்,*
*களங்க மற்ற கவிகளின் உள்ளமோ?*

*தேன முதினுஞ் தீஞ்சுவை யாற்றினால்*
*மானி லம்வளர் அன்னையின் மார்பிதோ?*
*மேனின் றூறி விரைந்துறுங் கங்கையின்*
*கான வேதங் கடவுளின் பாடலோ?*

*சுத்த வேதசித் தாந்தச் சுடர்களும்,*
*புத்த ஜைன கண் பூசி மதத்தரும்,*
*பக்த ஏசுரசூல் பஹாய் பாரஸி*
*ஒத்த பல்மத மோங்கு நடுவிதோ !*

*சமரஸத் திருச் சந்நிதி யானதோ,*
*நிமலர் மெய்த்தவஞ் செய்யு நிலையமோ?*
*அமைதி நல்கும் அருள்மணி மாடமோ?*
*இமைய வர்கள் இறங்கும் படியிதோ !*

*ஆவி யூறிடும் ஆவேச வெள்ளம்போல்,*
*நாவி லூறிடு நற்கவி யாறுபோல்,*
*தாவி யானந்தத் தாண்டவஞ் செய்துறும்*
*பாவ னஞ்செய் பகீரத கங்கையே !*

*அகில ஆசியம் ஆதர சக்தியோ?*
*திக ழிமயம் சிவலிங்க ஜோதியோ.*
*புகழுஞ் சிந்துகங் கைப்ரம்ம புத்திரா*
*மகிழு மஞ்சன மாட்டி வருவதோ?*

*இல கொளியும் இருட்டு மெனச் செலும்*
*பல வரசினைப் பார்த்துப் பரந்திடும்,*
*உலகின் காதையை உள்ளத் தடக்கியே*
*நிலவு கின்றதிந் நீடுயர் மாமலை.*

*சக்தி கௌரியுஞ் சங்கர னுந்தவ*
*சித்தி பெற்றுச் சிறந்த பனிவரை,*
*முத்தி விண்ணென முந்து முளைத்தது*
*சுத்தன் கண்டு துதித்தன னிவ்வகை !*

**சுத்தன்**

வெண்ப னித்திரள் மேவிய ஒளிமிகு வெயிலாற்
கண்ப றித்திடுங் கண்கொளாக் காட்சிசேர் மலைமேல்,
தண்ப னித்திரட் காட்டிலே தவஞ்செயுந் தலைவர்
திண்பு றக்குளிர் தாங்கிடுந் திறத்தினைச் செப்பாய்.

அரிய மெய்த்துற வணிந்தநம் அன்புமா முனிவர்,
பெரிய நற்றவ மியற்றிடும் பெருமைசால் பீடம்
தெரியச் சொல்லுதி அவ்விடம் சேர்ந்திடும் செயலைப்
பரிவி னாலினும் பண்புறு காரியம் பலவும்.

காசி மாநகர் அளித்தநங் கம்பளிக் கவசம்
வீசு தண்பனி வாடையை விலக்கிட விலையே.
மாசி லாத்தவ சாதன முளதெனில் அன்பர்
நேச சொல்லென நின்மலன், சாந்தனு முரைத்தான்.

**சாந்தன்**

கேளாய் அன்பு கெழுமிய சுத்த !
இமாலயந் தவத்தினுக் கேற்றவா லயமே.
புண்ணிய நாட்டின் விண்ணுயர் புகழ்போல்,
ஆத்தும சக்தியின் அணிவளர் முடிபோல்,
நீறு பூசிய நின்மலச் சிவம்போல்,
எழுந்து விளங்கும் இந்தமா மலையே
யோகிக ளுக்குப் போக நிலமாம்....
தூயவெண் பனிமுடி துலக்குமிக் கூடம்,
கதிரவன் புன்னகைக் கண்டதும் பொங்கி,
வைரஞ் செய்த மகுடத் திரள்போல்,
பளிச்சிட் டொளிரும் ; பகல்விடை பெற்றதும்,
இரவிலும் வெள்ளைத் திருவுடன் இலகும்....
பளிச்சென மின்னல் பாயும் போது,
நகமெலாம் ஒருங்கே நகுவதைக் காண்போம் . . .
மடமடத் தோடும் மந்தா கினியும்,
அலைசிலிர்த் தோடும் அலகநந் தாவும்,
உருத்திரப் பிரயாகையில் ஒன்றாம் காட்சியைக்
கண்டவர் உள்ளம் கலையுள மாமே !
படபட வென்றுப் பாறைகள் உருளவே,
சடசட வென்று சரிந்திடப் பனிகள்,
திடுதிடு வென்று தேர்பரிப் படைபோல்,
மலையிலுங் கணத்திலும், அலைவிரிந் தோடித்
திவலைத் தெறிக்கத் தீம்புகை படர,
வானவிற் போன்ற வண்ணந் தோன்ற,
ஆற்றுட னாறு வேற்றுமை யின்றி
மோதிக் கலந்து முத்திரைத் தாடும்
காட்சியைச் சொல்லக் கம்பன் வேண்டுமே !
அத்தகை உருத்திரத் தருகே காணும்
அகத்திய மென்னும் மகத்துவ நிலமே.
தமிழ்முனி யகத்தியர் தவஞ்செய் தாங்கே
சிவனரு ளாலே சித்திகள் பெற்றார்.
இங்கிருந் தேயவர் இலக்கியஞ் செய்தார்.
திருமூல ரென்னும் திவ்விய சித்தரும்,
மாதவம் புரிந்து மந்திரம் பெற்றார்,
சத்திய தரிசியித் தலத்தினி லிருந்தே
சிவஞான போத சித்தியும் பெற்றார்.
அதைமெய் கண்டார் அறியப் புகட்டிப்
பரஞ்ஜோதி முனிவர் வரங்கிடந் ததுவும்,
அகத்திய நிலையமென் றறிய லாகுமே.

உருத்திரப்ரயாகை ஊரி லிருந்து,
பதினொரு மைல்கள் பதமாய் நடந்தால்,
அகத்தியஞ் சேர்வார்.... அதுவே நிலையம்.
சுற்றிலும் உள்ளன தூய தலங்கள்....
மந்தா கினியின் வழிகே தாரம்.
அலகநந் தாவழி யடைவர் பதரியே.
குப்த காசி குலவிடும் அருகே.
கௌரி குண்டமும் காணலாம் ஆங்கே...
பதிரி நாரணப் பாதையில் ஹரியும்,
கர்ண ப்ரயாகையும், கருட கங்கையும்,
வேதாந் தமதம் விளங்கச் சங்கரர்
தோற்றி வளர்த்த ஜோதிர் மடமும்,
பாண்டுகே சுரமும் பார்க்கலாம் வாராய் !
பதிரியின் மேற்பனி படர்சத பத்து
உள்ள ததிலே உள்ள துறவிகள்,
முத்திக் கேதவ முயன்றுவாழ் கின்றார்.
சங்கர பகவான் இங்கே அடங்கினார்.
ஜோதி மடத்திற் பாதை பிரிந்து,
திருக்கயி லாயம் செல்வதைக் காண்போம்,
திபேத்தினின் றாங்கே, செட்டுடன் மக்கள்
வணிகஞ் செய்து வருவதைக் காண்போம்.
நரநா ரணரின் பெருமை விளங்கும்,
பதரியும் கேதார் பகவன் கோயிலும்,
கயிலையும் கண்டவர் காமந் துறப்பார்.
இத்திருத் தலங்களில் இருப்பதே தவமாம்....
தவம்புரிந் திருப்போர் சக்தியென் சொல்வேன் !
அன்பனே ஈசன் அருட்பெருஞ் சேயே,
மனதை யடக்குமிம் மலையின் சார்பில்,
அகத்தியத் தருகே அழகிய கானில்,
மந்தா கினியின் மருங்கே அடர்ந்த
தேவதா ருக்களின் திவ்விய நிழலில்,
ஒளிர்வது சுத்த யோக சமாஜமே
மலைக்குகை களிலே மாதவர் வாழ்வார்.
பரம சுத்தனாம் பரிபூ ரணனாம்,
இறைவன் அருளாற் குறையொன் றில்லை.
அங்கே தங்கி ஆறிய பின்னர்,
யோகசங் கத்தை உருவாக் கியபின்,
கைலை பதரி கேதார் காண்போம்.
இதோஹரித் வாரம்.... இங்கே தொடங்கி
மலைமே லேறுமுன் மாமறைக் கலைகள்
வளருங் காங்கிரி வருவோம் ; ஆங்கே,
சிரத்தா னந்தர் வைத்த குருகுலம் ;
உண்டதிற் சின்னாள் உறைந்துனக் கினிய
ஹடராஜ யோகம் அளித்த பிறகு,
குளிரை வெல்லும் குணவுட லுண்டாம்.
கிளர்ச்சியா யுடன்ரிஷி கேசஞ் செல்வமே.

** ** ** **

சித்தப் படியே செய்கெனச் சுத்தன்
தவத்தண லான சாந்தனைத் தொடர்ந்தான்.
பிரம சாரிகள் அருங்கலை பயிலும்,
குருகுலந் தனிலோர் குடிலில் வசித்து,
பத்தா ஸனத்துடன் ப்ராணா யாமம்,
பந்தம், முத்திரை பஸ்தி நௌலி,
குண்டலிக் கனலாற் குளிரைப் போக்கும்,

உபாய மெல்லாம் ஓதிசுத் தான்மத்
தியான சித்தியும் திகழுறப் பழக்கி,
நன்றி சொல்லி நண்பரைப் பிரிந்து,
சுத்தனைக் கொண்டு சுடர்முனி சென்றான்.....

## சிவானந்த — ஆசிரமம்

பதினைந்து மைல்கள் பதமுறத் தாண்டி
இருடீ கேசம் இருவரும் வந்தார்.
"வருக முனிவீர்" வணக்கமென் றாங்கே,
செந்தமிழ் நாட்டுச் சிவானந்த முனிவர்,
வரவேற் றவர்பணி நிறைவேற் றிடவே....
வேண்டிய உதவி விருப்புடன் செய்தார்...
"பொருநைக் கரையிற் பூத்த மலரே,
மருத்துவ னாக மாண்புகழ் பெற்றாய்,
உலகியல் பறிந்தே உண்மைத் துறவியாய்ச்
சாதனஞ் செய்து தனிக்குகை வசித்துச்
சங்கர ஞானச் சிங்கமா யெழுந்து,
தேவ சங்கம் திருவுட னமைத்து
மேற்கும் கிழக்கும் வியந்து புகழ,
வேதாந்த வாழ்வை விளக்கிக் கணக்கறு
நூல்களைத் தந்தாய் நுவலரு மன்பர்,
பயன்பெற யோகம் பயிற்றினாய் வாழி !....
அன்பும் அறிவும் அருட்பணி நேயமும்,
பண்புட னிணைந்த நண்பனே போற்றி...."
என்றவன் சீர்த்தி இயம்பி இருவரும்,
குண்டலிக் கனலாற் குளிரைப் பொறுத்துக்
கம்பளி வாலா கட்டிய சத்திரம்,
தங்கித் தங்கித் தளர்வறச் சென்றே,
சமயோ கம்வளர் சமாஜம் கண்டனர்.
அதன்வர் ணனையை அப்புறஞ் சொல்வாம்.

** ** ** **

சாந்த முனிவர் வேந்த னுடனே
வந்ததை யறிந்த மாணவ ரெல்லாம்,
பெருமகிழ் வெய்திப் பிரியமாய் ஏற்றுப்
பணிவிடை செய்து பண்புரை பெற்றார்....
இளைப்பா றியதும் ஏகுவோம் கயிலை
என்றான் சாந்தன் ; நன்றெனத் தூயனும்
துறவிகள் சிலருடன் புறப்பட் டேறி,
பதரி கேதார் பார்த்து மகிழ்ந்தபின்,
செங்குத் தான சிகரந் தாண்டிக்
குறுகிய வழிகளிற் பொறுமையாய் நடந்து,
கயிலைச் சிவனைக் கண்டு பணிந்தான்...
சுத்தநீ யிங்கே சக்தி சதாசிவன்,
அருளை நோக்கி யருந்தவம் செய்வாய்..
என்னச் சாந்தன் இன்னிசை பரவி
அடியாருடனே அருளிற் கூடி
தியானந்தந்த மோனத் தடங்கித்
தூயனும் ஆத்தும நேயம் வளர்த்தான்.

## இலிங்க மாலை

மலைநதி வளங்கள் சூழ மாதவச் சித்தர் சூழக்
கலைதரும் புலவர் சூழக் காவியப் பண்கள் சூழ
நிலைபெறுங் கோயில்கொண்டு நிலவிடும் கயிலைலிங்கம்
அலைமனம் அமைதி சேரும் ஆத்தும லிங்கமாமே.

நெஞ்சகக் கோயில்கொண்டு நிலவிடுஞ் சீவலிங்கம்
செஞ்சுடர் வீசுகின்ற சிகரமாச் சோதிலிங்கம்
பஞ்சகோ சங்கடந்த பசுபதி யானலிங்கம்
அஞ்சலென்ற பயமீயும் ஆத்தும லிங்கமாமே.

வானமுதாகவந்து வளம்பல சுரந்துநீடு
நானில வுயிர்கள்வாழ நலம்புரி கங்கைசூடித்
தேனமு தென்னத்தொண்டர் சித்தத்திற் கோயில்கொண்ட
ஞானவா னந்தலிங்கம் ஞாலமாய்ப் பரந்த லிங்கம்

அகப்புறத் தத்துவங்கள் அனைத்தையும் கடந்த சித்தாய்
இகபரச் சுகமாய் என்றும் இருந்தவா றியல்பதாகி
உகப்புற வுலகிலாடல் ஓங்கிடும் சக்திலிங்கம்
குகப்பொருளான லிங்கம் குருமணி தொழுதலிங்கம்.

பாபத்தைப் போக்கிநல்ல பரிசுத்த வாழ்வுநல்கித்
தாபத்தை நீக்கி ஆத்ம சாந்தியை ஈந்தலிங்கம்
ஆபத்தில் உதவிசெய்யும் அன்புருவான லிங்கம்
சாபத்தை நீக்குந்தூய சதாசிவ லிங்கமாமே.

அச்சத்தைப் போக்கு லிங்கம் ஆற்றலை ஊக்கு லிங்கம்
இச்சையை யளிக்கு லிங்கம் இன்பமே யான லிங்கம்
பட்சமாம் அன்னை போலப் பால்சுரந் தளிக்கு லிங்கம்
அட்சய லிங்கம் கைலை அமர்சிவ லிங்கமாமே.

### கைலைப் பதிகம்

நீராய் நெக்குருகி நெஞ்சம் கரைந்தோட
காரார் மழைபோலே கருணைக் கண்பொழிய
ஏரார் வெண்கயிலை இன்பப் பெருமானைப்
பாரோ ரெல்லாரும் பணிமின் பணிமினோ !

பணிமின் மலர்தூவிப் பரமன் அவன்பாதம்
அணிமின் ஆர்வத்தால் அஞ்சாத் திறலெய்தும்
பிணிபாவம் போகும் பெம்மான் கைலாச
மணியை அகக்கண்ணின் மணியைக் காண்மினோ !

அகமாய்ப் புறமாகி அருளாய்ப் பொருளாகிச்
சகமாய்ச் சீவனாய்த் தானாய் வானாகி
இகமாய்ப் பரமானான் இதயப் பெருமானே
புகலானான் ஒருவன் புகல்மின் பாரீரே !

பாரோர் உயிர்க்கெல்லாம் பத்திக் கனலோங்க
வேரோடே தீய வினைகள் அறநீங்க !
சீரோடரு ளோங்க திருக்கைலாயத்தான்
பேரோ டுயிர்ப்போமே பிறப்பை வெல்வோமே !

பிறவாப் பெரியானைப் பேசாக் குறியானை
இறவாப் பகவானை இமயப் பெருமானை
மறவா நினைவாளர் வாழ்வே வாழ்வாமே
இறைவா சரண் என்றால் இல்லை தொல்லையே !

இல்லை யென்பார்க்கும் இதயத் துடிப்பானான்
சொல்லும் பொருளானான் சொல்லா மறையானான்
கல்லில் உருவானான் கல் ஆல் குருவானான்
நல்லான் சிவகைலை நம்பன் எம்மானே !

நம்பும் அன்பர்க்கு நடனச் சிலம்பொலித்தான் !
வம்பர் இடர்தீர்க்க வாய்ப்பூட் டவனானான்
இம்பர் திருக்கைலை இறைவன் இணையில்லான்
உம்பர்க் குயர்வானான் ஊனுள் ளுணர்வானான் !

ஊனாய் உயிராகி உயிருக் குயிராகி
நானாய் நீயாகி நடுவே சாட்சியாய்
தேனாய்த் தித்திக்கும் சித்தாய்த் திருக்கைலைக்
கோனாய் நின்றானே கூற்றை யுதைத்தோனே !

கூற்றங் குதிப்போமே கொடுமை கெடுப்போமே
தூற்றித் திரிவாரின் துடுக்கைத் துணிப்போமே
போற்றிப் புகழ்வோமே புனிதச் சிவநாதன்
ஏற்றுப் புகலீவான் இருளும் இனியுண்டோ !

இருளார் மடநெஞ்சர் இடரென் இனிச்செய்யும்
உருளார் உலகெல்லாம் ஒன்றிப் புகல்மினோ
தெருளார் கயிலாச சிவனே பரனே ஓம்
அருளார் திருத்தொண்டர் அன்பா என்பீரே !

அப்பன் அறிவாளன் அம்மை அருட்சக்தி
எப்பா ருலகுக்கும் இறைவன் குருதேவன்
இப்பால் இமயத்தான் எம்மான் புகழ்பாடி
ஒப்பார் மிக்காரில் ஒருவன் என்போமே !

ஒருவன் பலவானான் ஒளியின் ஒளியானான்
குருவும் குருகாட்டும் குறியும் அவனானான்
உருவன் உள்ளத்தான் உயர் கைலாசத்தான்
அருவன் ஆனந்தன் அம்மான் என்போமே !

அம்மான் அறிவாளர் அறியும் அறிவானான்
இம்மா னிடர்க்கெல்லாம் இதயச் சிவமானான்
எம்மான் ஜகதீசன் எழிலார் பரஞ்சோதி
பெம்மான் என்பீரே பெருகும் பேரின்பே !

பெருகும் திருவெல்லாம் பிணிகள் பறந்தோடும்
உருகும் அடியாரின் உள்ளே உணர்வானான்
குருவே குகைவாழ்வே கோவே எனச்சொல்லிச்
சொருபச் சுடர்கண்டே சுகம்பெற் றுய்வீரே !

உய்யும் உலகெல்லாம் ஓங்கும் வளமெல்லாம்
பெய்யும் விண்மாரி பெருகும் பெருஞ்செல்வம்
ஐயா கயிலாயத் அப்பா என்பீரே
துய்யீர் பேரின்பம் துய்ப்பீர் இப்போதே.

வெண்ணெயுந் தும்பையும் சுண்ணமும் போலே,
பனிமலர் தூவிப் பரமனை வழிபடும்,
விண்ணி லிருந்து விஞ்ஞான மழைபோல்,
சச்சிதா னந்த சதாசிவ சக்தி
சுத்தனுக் குள்ளே சுழன்று பொழிந்ததே.
சுத்தசக் தியெனச் சொல்லுமத் திறனே,
யோக சித்தியின் உன்னத விளக்கமாம்.
சாந்தனும் சுத்தனும் சாதனத் தாலே
சுத்த சக்தியாஞ் சுடர்தவக் கனலின்
ஊற்றே யாகிக் காற்றைப் போலே
சுதந்தர ராகிச் சொல்லற் கரிய
தெய்வ வாழ்வின் சிகரத் தேறி,
சுத்த முத்த சமத்துவ ஜோதியாய்,
திருக்கை லாயச் சிவனையுள் ளத்தில்
இரண்டறக் கலந்து வரம்பெறு சித்தராய்,

*சுத்தான்ம யோகத் தொண்டிற் கேகினர்....*
*சாதனம் இத்துடன் சக்தியும் முத்தியும்*
*பெற்றதால், இனியப் பேற்றினை நல்கி,*
*சுத்த சங்கத் துறவிகள் உய்ய,*
*புண்ணிய நாடு பொலியநல் லுலகம்*
*கலிதா னவரின் கிலியகன் றுய்யவே*
*அமர சக்தியால் அருட்பணி புரியும்*
*சுடர்பெறு நிலையத் தூய ருடனே*
*சுத்தன் செய்த தொண்டுகள் கண்டு,*
*மலையமா ருதத்தில் அலைபுரண் டோடும்*
*பரவசக் கீதம், பருகுவோம் வாரீர் !* *314*

## 30. சமயோக சமாஜப் படலம்

*தளதள வெனவி யற்கை தண்முகப் பொலிவு காட்டப்*
*பளபள வென்ன ஆங்கே பனிமலை ஒளியை வீச,*
*இளவெயில் கொஞ்சக் காற்றும் ஆற்றுடன் வேதம் பாட,*
*உளமகிழ் வளித்த யோக நிலையத்தில் உலகைக் காண்போம்!*

*நவமணித் திரள்கள் போல நாண்மலர் அழகு கொஞ்சச்*
*சிவமணி யோக வாழ்வுந் திருத்தொண்டும் பயிலு கின்ற,*
*தவமணி அன்ப ரெல்லாந் தலைவனை ஏற்க வேண்டிப்*
*புவியணி பிரம லோகம் போலிதை அணிசெய் தாரே !*

*மாங்கனிக் குயில்கள் பாட, மரகதக் கிளிகள் பேசத்*
*தேங்கனிப் பொழிலிற் காம தேனுக்கள் பால்சு ரக்க,*
*ஓங்கிய தேவ தாரு ஓமெனக் காற்றில் ஆடப்*
*பாங்குறு மியற்கை யெல்லாம் பசுமுகங் காட்டிற் றன்றே !*

*பயன்பெறு ஞானந் தந்த பழம்பெறு முனிவன் வாழ்ந்த*
*வியன்பெறும் அகத்தி யத்தில் விளம்பறு மமைதி மேவ,*
*சயம்பெறு நாளி தென்று சாதகர் கீதம் பாடச்*
*சுயம்பெறு யோகி யான சுத்தனுந் தோன்றி னானே !*

*ஒன்றிய உவகை யாலே "ஓம் குரு வணக்கம்" என்றார்,*
*வென்றிகள் கூறி நல்லோர் விரைமலர் தூவி யார்த்தார் ;*
*நன்றிகள் கூறிச் "சாந்த நாதனே ஓம் வணக்கம்*
*இன்றெனக் கினிய நா" ளென் றெழுந்தனன் எழிலார் யோகி! 20*

*முதிர்ந்தநற் றவத்தின் சோதி முகத்தினிற் பொலிய, உள்ளே*
*கதிர்பரந் தொளிரும் அன்புக் கனிநகை யழகுவீசப்*
*புதர்நரி புலியும் பாம்பும் தீவினை போக்கப் புட்கள்*
*சுதந்தர கீதம் பாடத் தூயனும் எழுந்தான் மாதோ !*

*ஆனிரை மடிசு ரக்க, அழகிய இயற்கை யாங்கும்*
*தேனிறை மலரைத் தூவ செயசெய வென்னத்தென்றல்*
*யானைகள் அகர மார்க்க, இவுளிகள் உகர மார்க்கத்*
*தேனினம் மகர மார்க்கத் தேவனும் எழுந்தான் மாதோ !*

*அயற்கையை நோக்கி டாமல், ஆடையும் உணவுந் தாமே*
*முயற்கையால் விளைக்குஞ் சீலர் முத்தியும் பணியுங் கொண்டார்,*
*இயற்கையின் இன்பங் கண்டார், இறைவனைத் துதிகள் பாடிச்*
*செயற்கருஞ் சித்தி பெற்ற செல்வனை வாழ்த்தி னாரே !*

**காலை வணக்கம்**

*பொன்பரவுங் காலையிலே, பூத்தசுடர் மணி போலே,*

அன்பருளத் தொளிவளரும் அற்புதனைச் சிற்பரனை,
இன்புருவம் ஆனவனை, எல்லார்க்கும் பொதுப்பொருளை
பண்பரவி அடிதொழுது, பணிகளினால் வழிபடுவோம் !

பேரெல்லாம், வடிவெல்லாம், பெம்மானின் பேர்வடிவாம்;
பாரெல்லாம் திருக்கோயில், பத்தருளம் சந்நிதியாம் ;
ஊரெல்லாம் உயிர்க்குயிராய், உலவுகின்ற பரமாத்மா,
சீரெல்லாந் தருமிறைவன் சேவடிக்கே யாளாவோம்.

நிறைவான கல்விவளம், நீங்காத செல்வவளம்,
முறையான நல்லொழுக்கம், முயற்சிதரும் முன்னேற்றம்,
பொறை, வாய்மை, மனவுறுதி பூண்டதவ யோகமெல்லாம்
இறைவனருள் அடியார்கள் எய்தியிசை யோங்குகவே !

பத்திவளர் உளத்தாலே பணிபுரியுங் கரத்தாலே,
புத்திவளர் அறிவாலே, பூரணமாந் தவத்தாலே,
ஒத்தமன உறவாலே, ஒருகுலமாய்த் திருவருளும்
சுத்தசக்தி ஆண்டவனைத் தொண்டரெலாந் தொழுதிடுவோம்...

அருளூறும் ஆன்ம நேயர் அனைவரும் அமைதியாகத்
தெருளூறு மோனம் பேணித் தியானத்தி லிருந்த பின்னர்,
இருளற நோற்ற சாந்தன், இனியமா ணவரை நோக்கிக்
"குருமணி காணீர்" என்று கொள்கையைப் பேசி னானே !

**சாந்தன்**

அருமை யாகிய ஆத்தும நேயர்காள், இன்றென்
பெருகு மாதவம் பெற்றது பெறற்கரும் பேறே ;
உருகி யன்புசெய் உள்ளமுங் களித்தது; சுத்தன்
வருகை நந்தவ வாழ்க்கையின் வெற்றியென் றுணர்வீர் !...

சித்தி மாநகர் நீத்தநந் திருத்தொண்ட ரெல்லாம்,
பத்தி மல்கிடும் பலதல மிருந்திடப் பணித்தே,
சுத்த மாதவம் புரிந்தபின் சுதந்தர மாக
ஒத்திங் கோர்பணி முயன்றிடத் தொகுத்ததை யுணர்வீர்...

இத்த லத்தில் இறைவன் பெயரினால்
உத்த மர்கள் உறைந்து பயின்றிடும்
சுத்த யோகந் துலங்கிய செய்கையும்
அத்த னாணை; அதனை யறிகுவீர்.

இந்த யோகம் எழில்பெற ஓங்கியே,
முந்து லகின்முன் னேற்றத்தை யூக்கவே,
எந்தை சக்தி சிவனை யிறைஞ்சினேன்,
அந்த ரங்கத்தில் ஆண்டவன் பாலித்தான்.

பொய்க் கலியைப் புறங்கண்ட வீரனை
மெய்க் குறுதி விளைத்திடுந் தீரனை,
ஐக்கி யந்தரும் அன்புள நேயனை,
உய்க்க நெஞ்சில் உலகமும் உய்யுமே.

ஆர ணத்தின் அரும்பொருள் கண்டவன்,
தார ணமுந் தியானமுந் தாங்கியோன்,
பார ணிந்த பலமதம் பார்த்தபின்
பூர ணத்தின் பொருளை யுணர்ந்தனன்.

சிந்தை ஓங்கிய செஞ்செயல் வல்லவன்,
பந்த மற்றவன் பக்குவ ஞானியாம்,

எந்த மாந்தர்க்கும் ஏற்ற மளிப்பவன்,
அந்தத் தீரன் அவனித் தலைவனாம் !

இலகு பன்மதங் கண்டவன் இன்னவன்,
உலகிற் கொத்த ஒருவழி காணுவான்,
நிலவு யோக நிலையத்தி லூன்றினால்,
அலகி லாநல மாகுமென் றெண்ணினேன் !

உரிய நாளினில் உள்ளத் துறவுடன்
அரிய ணைவிட் டகன்ற குணாளனைப்
பெரிய காரியம் பேசிமுன் ஊக்கினேன் ;
அரிய சித்தன் அனுபவங் கண்டனன் !

அகத்து ஞானம் அலர்ந்த மகானிந்தச்
சகத்தி லுள்ள சமயங்கள் கண்டபின்,
மகத்து வம்பெறும் வெள்ளி மலையிலே,
இகத்தைக் காக்குந் தவமு மியற்றினான்.

வெள்ளி யங்கிரி வெற்றி யளித்ததும்,
உள்ள நாட்டமும் உந்திடத் தொண்டராந்
தெள்ளி யாரைத் திருப்பணிக் கேவிட
வள்ளல் யோகியும் வந்தனன் வாழ்கவே.

வருக தூயன் வரம்பெறு வள்ளலே
தருக யோக வரன் அருள் வீரனே.
உருவு கொண்ட உலகொளி நாயகன்
வருக வென்றனர் வன்றவச் சீடரே !

ஐந்த டக்கி யருந்தவஞ் செய்தனை
நைந்த பூமி நலம்பெற வேண்டினை
மைந்த நீயினி மாநிலத் தொண்டிற்கே
இந்தச் சங்கம் இலக நடத்துவாய் !

சிந்தை தூய சிவானந்த வள்ளலே,
எந்த நாடும் இனிதுனைப் போற்றிட,
வந்த காரியம் வாய்ந்திடத் தெய்வமே
தந்த திவ்விய சங்கத்தைப் பேணுவாய் !
என்று சாந்தன் இயம்பி யமர்ந்ததும்,
அன்று பூத்த அணிமலர்ப் புன்னகை,
ஒன்று வீசி யுளங்குவிந் தன்புடை
நன்றி கூறினன் யோகியர் நாயகன் !

**சுத்தன்**

மாசிலா மணிகள் போன்ற மாணவர் தம்மைக் கூட்டித்
தேசுலாந் தவத்தி னாலே திவ்விய யோக சங்கம்
பேசிலா தியற்றி, என்னைப் பிரியமாய் அழைத்து வந்த
நேசனே வணக்கம், சாந்த நிமலனே வணக்கம் ஐயா !

இதந்தரும் வழியில் என்னை இழுத்திழுத் தேகி நல்ல
பதம்பெறக் கொணர்ந்த சாந்தன் பதமலர் வாழ்க என்றும்,
சதம்பெறும் பொரு ளறிந்த சத்திய நேயர் வாழ்க
சுதந்தரத் தாகங் கொண்ட சுத்த சங்கத்தார் வாழ்க !

யான்அவ தார மல்லேன் ; இறைவனுங் குருவும் அல்லேன்;
வான்புவி யளித்த ஞான வள்ளலின் வரத்தால் இந்த
ஊனுயிர்க் குலத்தி னுக்கே உழைத்திடுந் தொண்டர் கொண்ட
சேனையில் ஒருவன் யானே; திவ்விய சங்கத் தீரே !

என்னையாள் சுத்த சக்தி யிறைவனின் அருளே யிந்த
மன்னுயி ருலகைக் காக்கு மாண்புடைத் திறமை யாகும்

என்னவே நம்பு மன்பன்; இனிநனி யியற்றுஞ் செய்கை,
அன்னவன் செயலே அந்தச் செயற்பயன் அவனுக் கன்றோ?

எனதி யானெனும் ஆசையை அடக்கி
இருவிகற் பற்றவர் யாவர்,
தனகன வாழ்வின் சாம்பலைக் கண்டே
சகவியல் பறிந்தவர் யாவர்,
மனதினை வென்ற மாசிலார் யாவர்,
மமதையை மாற்றினார் யாவர்,
எனதிரு கரத்தால், அவரடி பிடித்தே
இறைஞ்சலின் இன்பமொன் றுளதோ?

பிறந்தவர் யாரும் பிணிதுயர் மூப்பின்
பிடியினில் வாழ்ந்துமண் ணாகும்,
திறந்தனை யறிந்து, நித்திய மான
சிவந்தனை நாடியே யனைத்துந்
துறந்தவர் யாவர், திருவரு ளுக்கே
தொண்டுசெய் அன்பர்கள் யாவர்,
சிறந்தவர் அவரே ; அவர்திரு வருளின்
சேவையென் ஆனந்தம் ஆமே !

துங்கமா முத்தி முடிமிசை வாழுந்
துரியவா னந்தர்கள் வாழ்க !
தங்கமே யான சத்திய சுத்த
சமரஸ யோகிகள் வாழ்க !
எங்குமே தெய்வத் திருவருட் செயலை
இலக்கிய தொண்டர்கள் வாழ்க !
பொங்குயர் தெய்வ வாழ்வினைப் புகன்ற
பூரணச் சித்தர்கள் வாழ்க.

எங்கெனத் தேடும் இனியநல் லன்பர்
இதயத்திற் கடவுளின் இருக்கை
இங்கெனக் காட்டி, எளியநன் முறையில்
அறிவினை யிலக்குவோர் யாவர்,
தங்களைக் கடவுள் எனத்தருக் காமல்,
சாந்தமாய்ச் சர்வவல் லவனை
எங்குமே உள்ள பரமனை வணங்கீர்
என்பவர் குருக்களென் றறிவோம்....

சொத்துடன் சுகமுந் தோத்திரப் புகழும்
சுயநலப் பெருமையுந் தேடார் ;
பத்தியும் பணியும் பரம்பொரு ளறிவும்
பலமதச் சமரஸப் பண்பும்,
சுத்தசன் மார்க்கச் சாதன வாழ்வுந்
துலக்கிய துங்கவர் யாவர்,
அத்தகைத் தீரர் அருள்செழித் தோங்கும்
ஆனந்த நிலையமி தாமே !

சாதிக ளென்றும் சமயங்க ளென்றும்
தம்மதே முத்திவீ டென்றும்,
பேதபுத் தியினாற் சடங்களை வணங்கிப்
பெரும்பரம் பொருளினை மறந்தே,
பூதல மாந்தர் போரிடு கின்றார்....
பொய்யற மெய்ப்பொது வழியைச்
சாதனஞ் செய்து, சகத்தினுக் களிக்கச்
சத்திய வுறுதிகொண் டெழுவோம்.

எம்மதந் தனக்கும் மதக்குருமார்க்கும்
இன்னியம் ; அடிமையாம் இல்லோம்.
அம்மத வுள்ளம் யாதெனக் காண்போம்;
அதனையே பொதுவுறப் பயில்வோம்.
பொம்மையும் உடலும் கண்டுநாம் மயங்கோம்
பூரண சைதன்ய மொன்றே
நம்மையாண் டருளும் சத்திய மென்று
நலமுறத் தியானத்தாற் கலப்போம் !

வேதத்தின் ஆத்ம தீரத்தைப் பயில்வோம் ;
வீரரின் மெய்த்தவம் புரிவோம்,
போதிசத் துவரின் அகத்துற வணிவோம்.
கிறித்துவின் பொறுமையைக் காப்போம்.
ஆதிசங்கரரின் ஞானத்தை மதிப்போம் ;
அருட்சுடர் மணிகளுள் ளுணர்ந்தே
ஓதிடும் ஆன்ம நேயத்தைப் பயில்வோம்
ஓம் சுத்த சக்தி ஓம் என்போம்

மன்னுமிவ் வுலகில் இலகிய உண்மை
மகான்களின் மனநிலை யறிந்தே
அன்னவர் உண்மை பொதுவுறப் பயில்வோம்
ஆனந்த சுதந்தரம் அடைவோம்,
தன்னவ னான மனதுறுஜீவ
சாட்சியே தழைவுற நடப்போம் !
உன்னத சுத்த யோகவாழ் விதுவே;
உலகினுக் கனுபவமுரைப்போம்.

உடலமே கோயிலாக, உள்ளத்தான் கடவு ளாகத்
திடமனம் இருக்கையாகத் தியானமே விளக்க மாகச்
சுடர்மலர் அன்பே யாக நிவேதனந் தூய வாழ்வாய்த்
தடம்புவி மகிழ வேண்டிச் சதாகால பூசை செய்வோம்.

எல்லையிலா உலகையருட் கோயி லென்போம்.
எவ்வுயிரும் எம்முயிரென் றினிதே செய்வோம்.
தொல்லைசெயுஞ் சாதிமதச் சார்பை நீப்போம்,
சுத்தான்மப் பொதுவினிலே ஒத்து வாழ்வோம்.
அல்லலிலை, கலக்கமிலை அச்ச மில்லை ;
அடிமை யிலோம் நாமார்க்கும் குடியு மல்லோம்.
நல்லதிருத் தொண்டரெலாம் வாரீர் இங்கே
நம்பெருமான் பணிசெய்ய நாடுவோமே !

உடலிளமை பெறநாளும் உறுதி செய்வோம்.
ஊணுறக்க முறைகாப்போம். உண்மை காப்போம்,
அடலரிய புலன்களைநாம் அடக்கி வெல்வோம்.
அறவழியைப் போற்றிடுவோம், ஆவி போலே.
திடவுறுதி கொண்டுலகஞ் சேர்ந்து வாழத்
தெள்ளினிய சமயோகம் செழிக்கச் செய்வோம்.
கடலருந்தி வான்பொழியுங் கருணை போலே
காசினியில் உண்டுதிருத் தொண்டு செய்வோம்.

பசித்தீக்குச் சுசிருசியாய் உண்ண வேண்டும்,
பருகுநீர் சுத்தமா யிருக்க வேண்டும்.
புசித்ததனைச் சீரணித்தே புசிக்க வேண்டும்.
பொதுமையுறப் புவிப்பொருளைத் துய்க்க வேண்டும்.
வசிக்குமிடம் இயற்கைவளம் பொலிய வேண்டும்.
வாழ்வெல்லாந் தவயோக மாக வேண்டும்.
விசித்திரமாம் ஐம்பூதப் பஞ்சரத்தில்

விளையாடும் பைங்கிளியைக் கொஞ்ச வேண்டும்.

கடலைகனி காயரிசி பருப்பை யுண்டு,
கட்கொலையூன் காமவெறித் தீமை யின்றி,
நடலையிலா நடையுடனே நாலு பேர்க்கு
நலமாக ஞாலத்தில் வாழ வேண்டும்.
உடலையொரு கோயிலென உன்ன வேண்டும்.
உடையானை உள்ளமுற வுணர வேண்டும்.
அடலரிய புலன்களைநன் றடக்க வேண்டும்.
ஆனந்த ஊற்றினிலே அருந்து வோமே !

பிழைப்பிற்குப் பஞ்சமிலை; பெரிய வானம்
பெயுமட்டும் வளமுண்டு நிலமும் உண்டு.
உழைப்புதவும் பலன்களைநாம் ஒருமித் துண்போம்.
உழைக்காமல் யாருக்கும் உணவிங் கில்லை.
செழிப்புறவே பொதுநலமாந் தொழிலே நன்றாம் ;
தினந்தோறுந் தியானமுடன் வேலை செய்வோம்.
தழைப்பதற்கே தாளாண்மை செய்வோம் என்றுந்
தளராது வேளாண்மை செய்வோம் நாமே !

ஆர்வாழ்வும் சதமில்லை அவனி தன்னில்,
ஆருயிரோ டுள்ளவரை அன்பே யாகி
ஊர்வாழ, உயிர்வாழ, உலகு வாழ,
உற்றார்பெற் றார்வாழ உதவ வேண்டும்.
பேர்புகழின் வேடுவனாய்ப் பேது றாமல்,
பிறந்தவினை யறிந்தாற்றிச் சிறந்த வாறு
தேர்ந்துசரி யைகிரியை யோக ஞானத்
திருநெறியால் அருட்சித்தி சேர்வோம் வாரீர்.

வீணான சடங்குகளைப் பெருக்க வேண்டோம்,
வெவ்வேறு சாமிகளால் விளைபோர் வேண்டோம்
மாணாத சாதிமத மயக்கம் வேண்டோம்.
மனமலைந்து புறந்திரியும் வழக்கு வேண்டோம்.
ஆணாகிப் பெண்ணாகி யாவு மாகி,
அகிலமெலாம் ஒன்றாம்சுத் தான்ம நேயம்,
பூணாது பொய்வேடம் புனைய வேண்டோம்,
பொதுவழியிற் பொதுப்பொருளைப் பொருந்துவோமே!

நன்மறைகள் சொல்லுநடுப் பொருளாம் ; வேத
நாதவிந்து கலைகடந்த சத்தாம்; என்றும்
தன்மயமாந் தன்னிலைநின் றருளால், ஐந்து
சகத்தொழில்செய் தாக்கற்ற தனியாம்; தன்பால்,
அன்புறுதி கொள்ளறிஞர்க் கமுதாம் ; சச்சி
தானந்தக் கனிரசமாம் அருந்து வோர்க்கே ;
இன்பவொளி காட்டியருள் இரவி யாகும்,
இதயத்தில் அகமகமென் றியங்கும் ஒன்றே !

எழுத்தாலும் வாயாலும் இயம்பொ ணாதாம்,
எள்ளளைமலை யாக்கியினம் பிரிந்து போர்செய்
கொழுத்தமன மாயத்தை யொழித்த பேர்க்குக்
குளிரருவிப் பாட்டொலிக்கும் சக்திக் குன்றாம்.
அழுத்தமாய்ச் சொல்லுகிறேன் யானும் நீரும்,
அகிலமெலாம் அப்பொருளி னிறைவே யாவோம்
வழுத்தவொரு சொல்லுண்டோ? வரைகடந்த
மனமிறந்த தியானத்தால் வாய்க்கும் அஃதே !

பாரால யத்தினிலே பரந்த தோற்றம்

*பரமனரு ளாடலெனப் பார்ப்பான் ஞானி ;*
*தாராள மாயன்பு செய்வான் ; பெண்ஆண்*
*சத்திசிவ மெனக் காண்பான் ; அனைத்தி னுக்கும்*
*வேரான ஒன்றினிலே நின்று, வாழ்வின்*
*விரிவெல்லாம் அதன்கிளையாய் விளங்கக் காண்பான்.*
*சோராது பணிசெய்துந் தொந்த மில்லான்*
*தூயசம ரஸமுத்தி துலங்கும் யோகி !*

*தெளிவுடையார் சித்தத்திற் சிவம் விளங்கும்,*
*திருத்தொண்டர் கூட்டத்திற் சிவம் விளங்கும் ;*
*அளியுடையார் அன்பினிலே சிவம் விளங்கும் ;*
*அத்யாத்ம நேயரிடைச் சிவம் விளங்கும் .*
*ஒளியுடையார் உரைகளிலே சிவம் விளங்கும்;*
*உயிர்க்கருணை யுடையாருட் சிவம் விளங்கும் ;*
*களிவளரும் கனகசபை யுலகிற் காணும்*
*கருத்தினிலே சிவங்கண்ட கண்ணு ளார்க்கே !*

*நீயலால் யானொன் றில்லை, நினையலாற் செய்கை யில்லை,*
*தூயனே சுத்த சக்தி சொரூபனே, என்றன் ஆத்ம*
*நேயனே யோகத் தாலே நிதமுனைக் கலந்து நின்றாற்*
*காயவாழ் வனைத்து மாறிக் கடவுள்வாழ் வாகி டாதோ ?*

*அன்பென உன்னைக் கண்டே யன்புசெய் தொண்ட ருக்குப்*
*பின்பொரு மதமு முண்டோ? பேதபுத் தியுமிங் குண்டோ?*
*துன்பமுந் துயரு முண்டோ? சோகமுந் தளர்வு முண்டோ?*
*இன்பமே யாகி யுள்ளத் தினித்திடும் அமுதே போற்றி !*

*இவ்வுட லாலயத்தில், இருமனத் திரைக ளின்றி,*
*வெவ்வகங் காரமின்றி, விசுத்தமுற் றிருக்கும் போது,*
*நவ்விள ஞாயிறாக நாதநீ யெழுந்த போதே,*
*திவ்விய ஜீவ னத்தைத் திருவுறச் சேர லாமே !*

*ஊனுடல் பெற்ற தெல்லாம் உனைக்கலந் தன்பு செய்தே*
*ஆன்மகோ டிகளுக் கெல்லாம் அருட்பணி புரித லாமே.*
*நான் பெற்ற தூய உண்மை ஞாலமும் பெறவே வேண்டும்;*
*வான்பெருங் கருணை யேயிவ் வரந்தரத் தருண மிஃதே !*

*இதுவரைச் சொன்ன தெல்லாம் இதயத்தில் இருத்தி, நாளும்*
*பொதுவழி யோகஞ் செய்து பூரண சித்தி பெற்றே*
*புதுநலங் கண்டு தொண்டு புரிகுவோம் என்று தூயன்*
*மதுவுணுந் தேனீ போல மனதுளே யடங்கி னானே !*

**சாந்தன்**

*புள்ளுலவும் சோலையிலே பூமணக்குங் காற்றில்,*
*பொற்கனிகள் உண்டியற்கை அற்புதத்திற் கூடி*
*எள்ளுமொரு கவலையின்றி, எண்ணமெலாந் துறந்தே,*
*எல்லாமாய் நிற்குமுனை எண்ணுதலே யின்பம்.*
*உள்ளுருகி, உயிருருகி, ஊனுருகிச் சித்தம்*
*உள்ளடங்கி உயிரடங்கி உன்னுணர்வில் ஊன்றும்*
*தெள்ளறிவால் எய்தும் அந்தத் திருவருட்பே ரின்பம்,*
*தெவிட்டாமல் எமக்கருள்வாய் சின்மயமே சரணம்.*
*பொய்யடிமை போயொழியப் போர்வெறிகள் ஒழியப்*
*புன்செயல்கள் ஒழிந்திடவே புண்ணியங்கள் பொலிய,*
*மெய்யறிவுத் திறம்விளங்கத் திவ்வியவாழ் வோங்க*
*வெருவுமதச் சண்டையெலாம் வேருடனே வீழத்*
*தெய்வகுலம் பூமியிலே திருவோங்கிச் செழிக்கத்*
*தேடரிய சித்தியெலா நாடியெமைச் சேரத்*

துய்யசம ரஸவெளியிற் சோதியடி யார்கள்,
சுத்தான்ம நேயர்களாய் நித்தியமும் வாழ்வோம்... 328

## 31. சாதனப் படலம்

மலையும் ஆறும் வனமும் வயங்கிடும்,
அலைவி லாமல் அமைதியைக் காத்திடும்
தலைசி றந்த சமயோக சித்தரின்
நிலைய வாழ்வை நெடிதுறக் காணுவோம்.

இனிய காட்சி யினிய நினைவுகள்,
இனிய பேச்சுடன் இன்னிய நற்செயல்
தனிய கந்தை தவிர்ந்த சமரஸம்,
புனித வாழ்க்கை பொருந்து நிலையமே !

வேந்த னில்லை, விதியின் விலங்கிலை,
தாந்தம தெனுந் தன்னல மொன்றில்லை;
சாந்தச் சாதகர் சங்கஞ் சுதந்தர
மேந்து மின்பத் தொழில்வள ரில்லமே !

அச்ச மில்லை; அடிமைத் தனமில்லை ;
துச்ச மான சுடுசொலு மில்லையே ;
நச்சு போன்ற பொறாமை நமனில்லை ;
இச்சை யொன்றி யியங்கு நிலையமே !

பேச்சி லாது பெருஞ்செய லாக்குவார் ;
ஏச்சி லாமல் இயல்புற வாழுவார்,
மூச்சை நல்ல முயற்சியி லூக்குவார்—
ஓய்ச்ச லின்றி யுழைத்திட வல்லவர்....

மண்ட லத்தில் வறுமை மடமையால்
உண்டு வெந்துய ரென்ன வுணர்ந்தவர்,
உண்டி யாடைக்கும் ஓங்கும் அறிவிற்கும்,
திண்டி றலுக்குத் தேடுவர் வேலையே.
திறமை கொண்டுறுந் தீயவ ரக்கரை
அறமும் ஆற்றலும் ஆண்மையும் கூடிய
பொறுமை கொண்டு பொருதிட வேண்டிய
அறிவும் சக்தியும் அன்பும் வளர்த்தனர் ;

திடங்கொள் தீய வரக்கர் கொடுமைகள்
அடங்கி ஞாலம் அமைதி பெருகவே
இடங்கொள் யோகத்தி லெய்திடும் வீறுடன்
மடங்க லேறென மல்லும் பயின்றனர்.

மாசி லாத தவமும் வளர்த்தனர் ;
தேசம் வாழ்ந்திடுந் தீரமும் போற்றினார் ;
நேச ரானவர் நித்திய சுத்தனின்
தாசரானவர் சாத்விக வீரரே.

வீறு பெற்றவிஞ் ஞானிகள் யோகிகள்
ஏறு பற்றி யிமாலயச் சார்பிலே
ஆறு பாயும் அகன்ற நிலத்திலே
சோறு நல்குந் தொழில்பல செய்தனர்.

வேண்டும் ஆயுதம் வேலைசெய் தேற்றபின்,
வேண்டும் பூமி விரிவை யடைந்தபின்,

வேண்டு மாற்றல் விளைந்தபின், சாதகர்
பூண்ட நோக்கம் பொலிந்திடச் செய்தனர்.

காடு நீக்கிக் கரைகள் எழுப்பினார்,
மாடுங் கன்றும் பரியும் வளர்த்தனர்,
வீடு கட்டினர் வீதி யமைத்தனர்,
பாடு பட்டொரு பட்டண மாக்கினார்.

மண்சு மப்பர், மரத்தொழி லாற்றுவார்....
தண்மை யோங்கித் தழைக்கத் தரையினைப்
பண்ப டுத்திப் பயிர்விளை வித்தவர்
உண்பர் போகம் உழைத்துப் பிழைப்பவர்

பாடிக் கொண்டே பணிகளைச் செய்குவார்,
ஆடிக் கொண்டே அருஞ்செய லாற்றுவார்,
ஓடிக் கொண்டே உளத்தை யடக்குவார்,
தேடிக் கண்டதைத் தேசத்திற் கீவரே.

நட்ட நாற்றை நலிவறத் தாங்குவார்,
சுட்ட மண்ணைச் சுடர்மனை யாக்குவார்,
சட்டி பானை சகலமுஞ் செய்குவார்,
தொட்ட தெல்லாம் அழகு துலங்கவே !

கற்கு டைந்தவர் கந்தரஞ் செய்குவார்,
விற்கள் பூட்டி வியன்பொறி காணுவார்,
புற்க ளாலும் பொருள்பல செய்குவார்,
விற்க விற்க விளைப்பர் புதுமையே !

அறிவி லந்தணர், ஆற்றலில் வீரரே,
செறி தொழில்வளர் செல்வ வணிகரே,
விறு விறுப்புடன் வேலைசெய் தொண்டராம் ;
துறவு கொண்டு துலங்குமித் தூயரே.

ஏடு தன்னிற் கலைகள் எழுதுவார்;
வாடு நாற்றிற்கும் வான்புனல் பெய்குவார் ;
மாடு கன்றையு மானையு மேய்ப்பவர்
பாடு கின்ற பணியணி வீரரே !

அருவி மின்னை அருந்தொழி லாக்குவார்,
தெருவின் மண்ணிலுந் தேடிப் பயன்பெறும்
இரும்பு காந்தம் இரசப் பொருள்களைத்
துருவி நல்ல தொழில்களைச் செய்குவார்.

ஓமெ னச்சுழல் சக்கரம் ஓட்டிநூல்
காம தேனுவின் பாலெனக் கண்டுகள்
சேமித் தேதறி செய்துநெய் தாடைகள்,
நேம மாக நிதமுங் குவிப்பரே !

இங்கு சிற்சிலர் கண்டுக ளீகுவார்;
அங்கு சிற்சிலர் ஆவலஞ் சுற்றுவார் ;
உங்கு பாவை யுலர்த்துவர் சிற்சிலர் ;
தங்கு நெய்தறி தள்ளுவர் சிற்சிலர்.

நீர ருவியை நேரநல் லாடைகள்,
சேரச் சேரத் திசைதிசை விற்றினும்,

சீர்பெ றுந்தொழிற் செல்வம் வளர்ப்பரே
காரி யத்திற் கருத்துறு வீரரே !
கோதுமை கனி பாலுடன் கொட்டையும்,
போது மட்டும் புசிப்பர் பசித்தபின்,
வாத பித்த சிலேட்டுமம் வாதியாப்
பூத நன்னிறை போற்றுவர் நாளுமே.

வெள்ளி தோறும் விரதம் இருந்தவர்,
உள்ளி மூத்து மனத்தை யொடுக்கியே
தெள்ள றிவுந் தியான சமாதியும்,
கொள்ளு மோனக் குறிப்பொ டிருப்பரே !

உடலு றுதிக் குழைத்த லுடனவர்
ஹட முறைப்படி ஆசனம் போடுவார் ;
குட லழுக்கற உட்குளிப் பாட்டுவார்,
நடு நரம்பில் உயிர்ப்பை நடத்துவார்.

மூச்சளவு, முயற்சி யளவுடன்,
பேச்ச ளவும், பெருந்தொழி லிற்கரம்
ஓச்ச ளவும், உறவின் அளவுடன்
பூச்ச ளவும் பொருளெனக் காப்பரே !

பரிதி மீன்மதி பட்சிகள் போலவே,
உரிய காலத் துரியதைச் செய்தவர்,
வரு நலத்தை வழங்கிப் பொதுவுறப்
பெரிய ராகப் பெருகினர் நாளுமே !

சுத்த யோக சுதந்தர வாழ்வினாற்
சக்தி யோங்கிய சாதுக்கள் யாவரும்,
நித்தி யக்கட னாக நிமலன்முன்
பத்தி கானங்கள் பாடி மகிழ்ந்தனர்.

சுக்கிரன் பாட்டைக் கேட்பான் ; சூரியன் தியானங் காண்பான்;
உக்கிரப் பகலோன் அன்னார் உழைபல னுண்ணக் காண்பான்;
சக்கிர ஓங்கா ரத்தைத் தணிந்திடுங் கதிரோன் கேட்பான்.
மிக்கவர் ஞானச் செஞ்சொல் விளம்பிட மதியுங் கேட்பான்.

செந்நிற வான மன்னார் செபதப தியானங் காணும் ;
புன்னகை மலர்கள் அன்னார் பூசையை அணிந்து காணும்.
மின்னகை நாண்கள் அன்னார் மேவிய சமாதி காணும்,
மன்னுளச் சாட்சி யொன்றே மனதுள மாண்பைக் காணும்.

பதரியின் வெந்நீர் ஊற்றிற் படிந்திடும் போதுங், கேதார்
பதங்குவி பனியில் நிட்டை பயின்றிடும் போதும், கங்கை
நதியினில் ஆடும்போதும், ஞாயிறு பரவு கின்ற
கதிரினிற் குளிக்கும் போதும் களிப்பன்றி வேறுண்டாமோ?

பரிதியு மீனுங் காலங் காட்டிட பணிக ளெல்லாம்
சரிவரக் குறித்த நேரம் சகலரும் ஆற்றுவார்கள்.
எரிவளர்த் தோமம் செய்வார்; இயலுழைப் பேற்றும் சூட்டால்
வருகுளிர் வாடை தாங்க வல்லவர் மனதை வென்றார்....

வானத்தின் மீன்க ளெல்லாம் வரிசையாய் அடங்கி யாதோ
மோனத்தின் கட்ட ளைக்கு முன்பணிந் தேகுஞ் சீர்போல்,
ஞானத்தின் வரம்பு கண்ட நம்பனின் குறிப்ப றிந்தே,

*கானத்தி லுறையும் யோகக் கணங்களும் வாழ்ந்த வாறே !*

*பார்ப்பதும் இயற்கைக் காட்சி, படிப்பதும் இயற்கை யுள்ளம்,*
*போர்ப்பதும் கைந்நூ லாடை, புசிப்பதும் விளைத்த சோறே,*
*ஆர்ப்பதும் வேத கீதம் அயர்வதும் யோகத் தூக்கம்,*
*சேர்ப்பதும் தெய்வ சக்தி சித்தரின் செயலி தம்மா !*

*குகையினில் இருப்பார் ; ஓலைக் குடில்களில் இருப்பார்; அன்றித்*
*தொகைதொகை யாகத்தோப்பு வயலினில் வேலை செய்வார்;*
*பகைவரை யுளவு காணப் பட்டணந் தனிலி ருப்பார்,*
*வகை தரு நண்பர் வீட்டில் வந்தொரு பணியுஞ் சொல்வார். 140*

*உள்ளத்தில் ஊன்றி, யோக ஒழுக்கத்திற் கிளைத்தே, பக்தி*
*வெள்ளத்தால் வளர்ந்து, ஞான விரிமலர் குலுங்கி, இன்பக்*
*கள்ளுகு தெய்வ சக்திக் கனியெனப் பழுத்துப் பாரில்*
*ஒள்ளிய உயிர்கட் கெல்லாம் உதவுமிப் பெரியார் வாழ்வே !*

*ஆயிரந் தலை, யிரட்டை ஆயிரங் கண்கை கால்கள்,*
*ஆயிரம் ஆற்றல் பெற்ற ஆத்தும புருஷன் அன்னார் ;*
*ஆயிரஞ் செயல்கள் செய்தும் அன்புளம் ஒன்றே கொண்டார்;*
*ஆயிர நாவி னாலே ஆண்டவன் புகழே சொல்வார்.*

*அறிவினிற் சிறந்த மேலோர், அன்பினிற் பெரிய தொண்டர்,*
*திறமைசால் வீரர் யோக சித்தர்கள் உலகி யல்பை*
*அறவழி மாற்ற வல்லார், அனைவரும் சுத்தன் சொன்ன*
*நெறிவழி பயின்ற தூயர் நேயத்திற் சிறந்த நல்லார் !*
*புத்து ணர்வினிற் பொலிந்திடும் புதுயுக மணிகள்,*
*சித்து ணர்வினிற் சிறந்திடுந் தெய்விக வாழ்வார்,*
*ஒத்தி யற்றிடும் யோகசா தனங்களை வேண்டச்*
*சுத்த னும்அனு பவங்களைத் துலக்குவன் மகிழ்ந்தே.*

*விரத வெள்ளியில் வித்தகர் ஓமத்தீ சுற்றி*
*வரிசை யாயமர்ந் தைம்புலன் மனதுளே யடக்கி,*
*நரச கோதரர் உய்திடுஞ் சாதன நலத்தை*
*உரைகெனத் தலைவன்உவந் திவ்வகை யுரைத்தான் :*

### சம யோக சாதனம்

*ஆருயிர்ப் பிரியா ஓர்பொரு ளுண்டாம்.*
*உயிரத னாலே உயிர்ப்பது வாமே.*
*உள்ள பொருளதை ஒன்றிக் கலத்தலே*
*யோகம தாமே ; யோகத் தாலே*
*தானும் உலகும் வானும் காற்றும்,*
*ஒளியும் வெளியும் உள்ளவை யெல்லாம்*
*ஒருபொருள் மயமெனக் கருதிட லாமே.*
*அந்தக் கருத்தால் ஆனந்த மாகும்,*
*தன்னிலை யுடனே முன்னிலை யுலகை*
*அறியும் அறிவை அதுவே தூண்டும்.*
*பற்றறு சுத்தனே பரமனா வானே*
*அவனருட் சக்தியே ஆடலாய் விரியும்.*
*குணமெலாம் அதுவே ; குவலயம் அதுவே.*
*நீருந் தண்மையும், நிலமும் பயிரும்,*
*தீயும் சூடும், தீபமும் சுடரும்*
*போலொன் றாகும் பொருளைச் சுத்த*
*சக்தி யென்றே சந்ததந் தொழுவாம்.*
*அந்தச் சக்தி ஆதா ரங்களில்*
*விழித்தெழுந் துச்சியின் மீதே றிடவே,*

வெதுவெதுப் பான சுதைபோல் உணர்ச்சி
நரம்பெலாம் பரவி வரம்பிலாச் சுகமாம்.
அதை மகா குண்டலி யன்னை யென்போமே.
பிரமா காரமாய்ப் பேசுவர் அறிஞர்,
ஆண்பெண் போலே அன்னை தந்தைபோல்,
சக்தியும் சுத்தமும் சந்ததம் ஒன்றாய்
வித்து — நிலமென விளைத்திடும் உலகை.
சக்தியை யறிந்தாற் சுத்த மறியலாம்,
இன்ப யாக்கையும் இன்ப வாழ்க்கையும்,
இன்ப உள்ளமும், இன்ப ஞானமும்
அருளும் அம்மையே அனந்த சக்தியாம்,
அறிவினுக் கறிவாம் அகண்ட சக்தியாம்
அவனி யாய்விளை யாடும் சக்தியாம்.
தோன்றும் யாவையும் தோற்றும் சக்தியின்
ஊற்றைக் காண்பதே யோகசா தனமாம்.
அடமும் மூச்சினை அடக்கி யாளலும்,
உடலொ டுக்கலும், உள்ளொ டுக்கலும்,
திடச மாதியிற் செயலற் றாழலும்,
சக்தியின் இன்பந் தழைக்க வெண்ணியே,
சித்த மொடுக்கிச் சிந்தையற் றிருக்கப்
பதஞ்ஜலி சொல்எண் படிகளும் அதற்கே.
நிச்சிந்தை யாதலே நிலைபெறு யோகம்.
உடலுயிர் மனமும் உயர்விஞ் ஞானமும்,
ஆனந்த கோசமும் அனைத்துந் தாண்டிய
சித்தும் சத்தும் தெரிந்து தெளியவே
சக்தி வேண்டும் ; சக்தியே யோக
சாதன சித்தி தந்திடுங் கனலாம்.
சுகமய மான சுதந்தரம் அதுவே,
எல்லாச் சமயமும் எல்லா யோகமும்
பார்த்தபின் பொதுப்படப் பயின்ற சாதனம்
உரைத்த படியே ஊக்கமாய்ப் புரிந்தீர்.

** ** ** **

உலகிற் கதனை ஓதவே யுரைப்பேன்...
வானக் குடைகீழ் வாழும் உலகின்
ஆடலை நடத்தும் அருளாண் டவனையே
சுத்த சக்திச் சுடரெனத் தொழுவோம்.
ஆருயிர்க் குலமெலாம் அதனுட லாமே !
உண்ணும் உணவும் உடுக்கும் உடையும்
பண்ணும் பணியும் எண்ணும் நினைவும்,
அதற்கே யர்ப்பண மாகச் செய்தலே
அதன்வழி வாழும் ஆரம்பப் படியாம்.
உள்ளும் புறமும் உரைமனஞ் செயலும்
படிகம் போலப் பரிசுத்த மாதலே
சுத்தயோ கத்தின் நித்தியச் சாதனம்,
தேகத் தூய்மை செப்புவேன் கேளீர்:
அடயோ கத்தால் உடலும் குடலும்,
நாடியும் திடமுற நாளும் செய்வோம்.
பொதுநல மான புதுப்புதுத் தொழில்களால்
வேர்க்க உழைத்து வீறு பெறுவோம்,
உழைப்பின் வேர்வை உலகின் செழிப்பாம்.
தூயநல் லுணவும், தூயநன் னீரும்
தூயநன் னினைவும், தூயநல் லுடையும்,
தூயநற் செயலும் நோயிலா வாழ்வாம்...
செங்கதிர்க் குளிப்போம், தீச்சுடர் வளர்ப்போம்.
ஒன்றுநான் கிரண்டுஓம் ஒழுங்கின் படியே

இழுத்தடக் கிவிடும் இருபத் தைந்து
பிராணா யாமம் பிழையறச் செய்வோம்.
பத்துநா டிகளும் பலமாம் இதனால்,
ஓம் ஓம் என்றே உள்வெளி மூச்சைக்
கவனித் திருந்தே கட்டுக மனதை...
உடலுயிர் மனமுந் திடமாம் இதனால்..
மனத்தூய் மையினை மறுவறக் கேளீர்:
மனதை வெல்லலே மாசிலா யோகம்.
மனமே மனிதன் ; மனமே உலகம்
மனமே துன்பம், மனமே இன்பம்,
மனத்தின் வெற்றியே வாழ்வின் வெற்றி,
தியானமே மனதைச் செயிக்கும் சாதனம்,
தியானமே யோக சித்தியின் உயிராம்,
புறத்தே திரியும் புலன்களை அடக்கி,
அலையும் சித்தம் அலையா திருத்தி,
நிம்மதி யான செம்மதி யுடனே,
உற்றெழும் நினைப்பை உதிக்கு மிடமே
ஒடுங்கச் செய்தும், உடனே யாரெனக்
கேட்டு விழிப்புடன் ஓட்டியும், உள்ளே
நானார், நானே நானா வற்ற
சுத்தான் மாவெனத் துணிந்துணர்ந் திருந்தும்,
சுத்த ஓம் சக்தி சிவ குஹ என்றும்,
அவரவர்க் கிசைந்த அரியமந் திரத்தையோ
ஓங்கா ரத்தையோ உள்ளூற ஓதி
தீவிர மான செபஞ்செய் திடுகவே,
தியானமுஞ் செபமும் மோனமும் ஒழுக்கமும்
சுத்தயோ கத்தின் சித்தி நல்குமே.
தனித்தும் கூடியும் சங்க நேயர்கள்
தியானஞ் செயச்செயத் தெய்வந் துலங்கும்.
பஞ்ச கோசமும் பத்திந் திரியமும்,
சித்தமும் அதனால் சுத்தமுற் றொளிரும்,
நமதுயோகத்தின் நாட்ட மறிவீர்:
அகத்திற் கிளம்பும் அரக்க ராகிய
ஆசை யாணவ மாசைத் துடைத்தே,
சொரூப மாகிய சுத்தனைக் கூடி
சுத்த சமரஸ சுதந்தர சக்தியை,
கிளர்ந் தெழுந்து வளம்பெற ஊக்கி,
அதனால் அருளின் ஆற்றலைப் பெற்றே,
அருளால் உலகில் அரக்கர் பயத்தையும்
இருளிடர் பொறாமை இன்னல்கள் அனைத்தையும்,
நாட்டை நாடு நலிக்குந் தீதையும்
அடிமைத் துயரையும் அடியோ டொழித்து,
ஞால மெல்லாம் ஞானம் பரப்பி,
வானவர் வாழ்வை மாநில மாந்தர்
எய்தியிவ் வுலகம் இன்புறச் செய்தலே,
சுத்தயோ கத்தின் சூட்சுமப் பயனாம்.
யோகமே உலகில் ஒற்றுமை யாக்கும்.
கரடிபோற் குகையில் கண்ணயர்ந் துறங்கும்
கொள்கையை ஒப்போம், குண்டலி சக்தியால்,
ஆதார சக்கிரம் ஆறும் மலர்ந்து,
ஸஹஸ்ரா ரத்திற் சாந்தமாய்க் கூடி,
மஹாகுண் டலியாம் வானமு தத்தை
யோக தாரையாய் உட்புறம் பரப்பி,
திவ்விய ஜீவன சித்திபெற் றனைவரும்,
பூரண ராகப் பொலிந்திட வேண்டும்.

*பூரண சுத்தர் பாரினி லெங்கும்,
திசை திசை சென்று, தியானமந் திரங்கள்
எழுப்பி மாந்தரின் இதயம் மலரவே
சுத்தசா தனத்தைத் தொடங்கிட வேண்டும்,
பஜனை, மந்திரம், பக்தி, ஞானம்,
அருள்வாக் குகளைப் பொருளுடன் ஓதல்
பொதுநல மான புண்ணியம் புரிதல்
முதலிய வழியால் இதயந் தொட்டால்,
அன்பு பிறக்கும் : அன்பை வளர்த்தால்
அதுவே வெற்றி யளிப்ப தாகுமே,
தெள்ளியர் கூடித் தியானம் செய்கவே :—
"ஓம்பர மாத்மா, உள்ளத் தானே,
உள்ளும் புறமும் தெள்ளிய சாந்தம்,
நிறைக ! மானிடக் குறைகள் ஒழிக !
மனந் திருந்தி, இனந் திருந்தி,
அசுர மற்றுநாம் அமரா னந்தராய்
ஆத்தும சித்தியும், அகண்ட சித்தியும்,
தன்னாட் சியுடன் முன்னுலக காட்சியும்,
உலக வாழ்வெலாம் உன்னுடன் ஒன்றாம்
யோகமாய்ச் சதாசிவ போகமாய் வளரும்
திவ்விய வரத்தைச் செவ்விதி னளிப்பாய்.
உடலம் சக்தி ஊற்றெனப் பொலிக.
உள்ளம் சுத்தன் உறைவீ டாகுக.
ஆருயிர் வாழ்க்கை அருட்பணி யாகுக.
உலகம் விண்ணாய் நிலவியோங் குகவே !
வேற்றுமை யொழிக ஒற்றுமை ஓங்குக.
ஆருயிர்க் குலங்கள் ஆன்ம நேயராய்,
ஓர்குலத் தேவராய் உதவிகொண் டோங்குக !
பலமதஞ் சாதிப் பகுப்புக ளின்றி,
சகமெலாம் சுத்த சக்திப் புதல்வராய்,
உள்ள மொன்றி ஓங்குக நாளுமே !
எல்லாம் வல்ல இறைவா, உனையே
சரண்புகுந் துள்ளோம் ; சத்திய ஜோதியே
ஓம்பர மாத்மனே உயிர்களை நடத்தாய் !
சுத்தஓம் சரணம், சக்திஓம் சரணம்"
என்றே அனைவரும் ஒன்றாய் நினைத்துத்
தியானம் நடந்தால் மோன மாகவே
இறைவ னருளால் எடுத்தது கூடும்,
மாந்தர் வாழ்க்கை மாறித் திருந்தும்,
தியானமந் திரத்தைச் செவ்வையாய் நாட்டிக்
கல்வியும் தொழிலும் கலையுந் தந்து,
மடமை வறுமை மயக்க மொழிந்துக்
கவலையற் றுயிர்கள் கருணையில் வாழும்
அத்ததி அகிலசே தனத்தைத் தூண்டி
அரக்கரை நீக்கி, அமர சுதந்தரம்
அடைத லாகும். அன்பீர், அறிவீர்.
பதினைந்தாண்டினும் பண்ணும் தவத்தால்
பூரணராகிப் பார்நலம் பெறவே
அகண்ட சாதனம் அன்புறப் புரிவோம்
சாந்தம் பொங்குக சத்தியம் வெல்கெனச்
சமயோகத்தின் சங்கநாதத்தைக்
கேட்ட சாதகர் கிளர்ச்சி கொண்டே
சமயோகம் வளர் சமாஜ குருவாம்
சுத்த சக்திச் சுடர்பரம் பொருளை
உருக்கமாய்த் தொழுதார் உள்ளுணர் பாட்டால்*

குருநாதப்பண் குயிலுவோம் ஓம் ஓம்:

## 32. பரமாத்ம குரு படலம்

என்னுளே யறிவா யிருந்திடுங் கடவுளே
என்மனச் சாட்சி யாகி
இவ்வழிச் செல்லென்னும் இயல்பான வேதமே
இதயப் பரஞ்ஜோதியே !
தன்னுளே தானாய்த் தழைத்தநல் லின்பமே
தாயினுங் கருணை மிக்காய்
சக்தியாய்ச் சிவமாய்ச் சதாசச்சிதானந்த
சகசநிலை தனில் விளங்கும்
பொன்னுளே பொலிவெனப் பொலிகின்ற போதமே
புகலரிய பரநாதமே
போதாந்த வேதாந்த சித்தாந்த மாகிபரி
சுத்தாந்த மான பொருளே
உன்னுளே என்னெலாம் ஒன்றித் தழைக்கவருள்
உள்ளத்தி னுள்ள மைதியே
ஓம் சுத்த சக்திசம யோகச் சமாஜத்தில்
ஓங்கிடும் பரம குருவே !

கல்வியும் கேள்வியும் கற்றவழி நிற்றலும்
கலைவாணர் நேச வுறவும்
காலத்தை யமரக் கவிச்சோலை யாக்கிடும்
கங்கா ப்ரவாக வாக்கும்
பல்வகைக் குணதொந்த வுலகிலே ஒருமயப்
பான்மையும் ஆன்ம வுறவும்
பசிக்குநற் பொதுநலப் பண்புள்ள தொழிலும் இப்
பாரா லயப் பணிகளும்,
செல்வச் செழிப்புடன் செழித்தநல் ஈகையும்
செகம் புகழும் அன்பும் அருளும்,
தியானமும் பக்தியும் செபயோக சித்தியும்
தினந்தினம் பெருக வருளாய்
சொல்லரிய சூட்சுமக் கதிர்பரவி என்னுட்
சுழல்கின்ற ஓம் பரமனே !
சுத்தசம யோகச் சமாஜத்திலேவளரும்
ஜோதியானந்த குருவே !

ஆருயிர் வடிவாம் உனைப்பாடி யனுதினமும்
அன்புசெயல் பக்தி யோகம்
அருளாடு முலகா லயப்பணி பராவலென்
ஆர்வமுறு கர்ம யோகம்
நேருயிர்க் கடமைகளை நிறைவாய் இயற்றலே
நிசமான ஹடயோகமாம்
நெஞ்சத் துடிப்பெலாம் ஓம்சுத்த சக்தியென
நிகழலே ஜப யோகமாம்
தேருயிர்க் குயிரான வேரிலே ஊன்றுந்
தியானமே ராஜ யோகம்
திரிபறத் தன்னுளே தானா யிருப்பதே
திறமான ஞான யோகம்
ஒருயிர் மகிழ்ந்திடினும் என்னுயிர் மகிழ்ந்திடும்
ஒருமையே ஆத்ம யோகம்,
ஓம்சுத்த சக்திசம யோகச் சமாஜத்தில்
ஒளிரான்ம நேய குருவே

கல்லிலும் கல்லா லெடுத்தகோ விலினிலும்
        கலகமிடு சமயத் திலும்
காசுக் கிசைந்தபடி பூசைமணி யாட்டிக்
        கருத்திலா வழி பாட்டிலும்
கொல்லைமுனி யாண்டிமக மாரியின் கூத்திலும்
        கொட்டிலும் பலி வெட்டிலும்
கூட்டுறவி லாதமத நூலின் குழாத்திலும்
        குருபீடச் சச்சரவிலும்
தொல்லைசெயும் ஆயிரஞ் சூழ்ச்சியிற் சிக்கிச்
        சுதந்தர மிழந்திடாமல்
சுத்தசிவ யோகவே தாந்தசித் தாந்தமருள்
        ஜோதிவழி காட்டி யாண்டாய்
எல்லையறு வானுலகில் இதயசந் நிதியில்வளர்
        இயல்பான தியான வடிவே
எழிலோங்கு யோகச்சமாஜத்தி லேவளரும்
        இன்பமே அன்பு மயமே !....

பாசமிகு முலகிலே பணவலை வீச்சும்
        பகட்டும் பசப்பு மொழியும்
பகைவர் தரு தொல்லையும் பந்தமிகு தொல்லையும்
        பசித்தீ தருந் தொல்லையும்
நாசமிகு காமாதி நரகமிகு தொல்லையும்
        நாவினால் வருந் தொல்லையும்
நஞ்சினை வெல்லமெனும் வஞ்சகர் தொல்லையும்
        நண்பர் பகையாந் தொல்லையும்
மோசமிகு மூர்க்கப் பொறாமைதரு தொல்லையும்
        மூடப்பழந் தொல்லையும்
முளையாமல் என்மனம் அலையாமல் ஆனந்த
        முத்திவழி காட்டியருளாய்
மாசிலா உள்ளத்தில் உள்ளபடி உள்ளவா
        மயக்கமறு மணிவிளக்கே
மனித வாழ்வைப் புனித மாக்கிடும் பரிசுத்த
        மங்கலச் சிவ ஜோதியே

எங்கே லெமூரியா? குமரிகண்டம் எங்கு?
        எங்குபன் மலை யடுக்கம்?
எங்குபஃ றுளியாறதெங்கே கபாடபுரம்?
        எங்குகரி கால னூரே !
எங்கே எகிப்தியக் கோபுரப் பிணவுயிர்,
        எங்கு பாபிலனப் பொழில்?
எங்குசிந் துக்கரை யெழுந்தே முகிஞ்சகலை?
        எங்கேவன சோனக ரிசை?
பொங்குமட் லாண்டிசும் பொட்டலாய்ப் போனதே,
        பூமியும் உரு மாறுதே !
புரட்சி செய் காலத் தலங்கோல மெத்தனை
        புரண்டு விழும் அரசெத்தனை
இன்றிங் கிருப்பதனை நாளையு மிருக்குமென்
        றேமாறு மாய மின்றி,
என்றும் இருப்பதனில் என்றும் இருக்கவருள்
        எப்பொருளும் ஆன பொருளே !

சக்திபெறு மிடகலை சிவம்பெறு பிங்கலை
        சண்முகாக்கினி சுழுமுனை
சந்திக்கு முச்சுடர் தகதகென கணகணென
        சகச குண்டலி யாடவே
வித்தகக் குககுகென மயிலாடக் குயில்பாட

வீறுபெறும் வாசியேறி
விரைவாக ஆறேறி ஏழேறி எட்டேறி
விளையாட வருஞானமே
சத்தமறுசித்தத்துள் சங்கீதநாதமே
சதாமோன மானபேச்சே
சாதியறு சமரஸச் சோதியுட் சோதியே
சன்மார்க்க வுலகிரவியே
சுத்தமுறு நெஞ்சிற் சுகானந்தமாகச்
சுழல்கின்ற சாந்த மணமே
சொல்லரு மகாதுரிய சொரூபமே வேங்கடச்
சுப்ரமண்யக் கடவுளே.
கூடுகட்டி வாழுங் குருவியின் இன்பமிக்
குடும்ப மாந்தர்க் குள்ளதோ?
கொண்டா கொண்டாவெனக் கொழுநனை மடக்
கொடிசுற்றி மக்கள் சுற்றி
ஆடுபோல் அசைபோட்டு மாடுபோற் பாடுபட்
டாசைப் பிசாசு களுடன்
ஆட்டமும் அழுகையும் அழிலீலை பலவுமாய்
ஆயுளைச் சூதாடியே
ஓடுபோல் நெஞ்சம் உடைந் தவலமாய் முடிவில்
ஒருபாயும் பல நோயுமாய்
உருண்டு மண்ணாவதே உயிர்வாழ்வெனில் அந்த
உதவாக்கரை வாழ்க்கையேன்?
பாடுவதும் உள்ளே பராவுவது மாகநான்
பகலிரவு வாழ வருளாய்
பரமாத்ம சமயோக சக்திமயமே போற்றி
பரிசுத்த ஜோதி குருவே !

ஒன்றே பரம்பொருள் ! அதேசுத்த சக்திமயம்
ஒன்றுவா னுலகாலயம்
ஒன்றே யுளந்தோறு நடமாடும் ஆத்துமா
ஒன்றே யுயிர்க் குயிரதாம்
நன்றே தியானத்தி னாலிதை யுணர்ந்துலகு
நன்மையுற ஒன்றி வாழ்க !
நச்சுமன மாயத்தை ஞானத்தி னால்வென்று
நானா விகார மின்றி
நின்றே கருத்தொன்றி நீளன்பு நேயராய்
நேரான கடமை செய்தே
நிலவுலகில் அமைதியின் பருளாட்சி நிலவவே
நீடூழி மாந்தர் வாழ்க !
என்றே இடைவிடா தெண்ணிவழி பட்டென்றும்
எழிலோங்கி வாழ வருளாய்
இயல்பான யோகச் சமாஜத்திலே வளரும்
இதயான்ம ஜோதி குருவே !

வித்தகச் சங்கரரை, விஞ்ஞான புத்தரை,
வினைய மிகு சொக்கராத்தனை,
வேதமுர சாகிய தயானந்த மகரிஷியை,
விடமிட் டொழித்த வுலகம்,
உத்தம கிறிஸ்துவைச் சிலுவையேற்றிய உலகம்
ஓடோட முகமது நபி
உடல்குருதி யொழுகவே கல்லால் அடித்தபுவி
உயிர்க் கருணை வடிவமான
சத்திய கரம்சந்தர காந்தியைச் சுட்டபுவி,
சன்மார்க்க சீலர்நோகத்

*தாக்கிய புவிநல்ல சகசநிஷ்டர்களைச்*
*சள்ளைசெய் கள்ளப் புவி,*
*சுத்த சாதுவின்மீது பழிசுமத்தும் புவிச்*
*சூழ்ச்சிகள் வீழ்ச்சி பெறவே,*
*சுடர்பரவு சமயோக சித்திதந் தாளுவாய்*
*ஜோதிமய மான குருவே.*

*சரிகையும் பட்டும் தளுக்கா யணிந்துமிகு*
*தங்கமணி முத்து மின்னச்*
*சதங்கை குலுங்கும் தளிர்மேனி இன்பமே*
*சதமென மயங்கி வீழ்வார்.*
*அரிசிமூட்டைச் செலவில் ஆகிய புலாலுடல்,*
*அகங்கார மூட்டையாகி,*
*அழகுச் செருக்கில் அழிந்தழிந் தொருகாலம்*
*அத்தி வற்றல் மூட்டையாம்,*
*முரசதிரு மரசுடன் செல்வமும் மூய்ந்துபோம்*
*முக்குணக் கூத்துலகமே*
*முவ்வழியும் இவ்வுலகை மூலை முடுக்கெலாம்*
*முற்றிலும் பார்த் தலுத்தேன்,*
*அரிசிவா என்றினி யடங்கியுள் ளமர்வதே*
*அமைதியென் றுள் ளுணர்ந்தேன்*
*அறிவான சமயோக நெறிகாட்டி யாண்டிடும்*
*ஆனந்த மோன குருவே !*

*சப்பான் ஒழுக்கமும், சீனரின் உழைப்புடன்*
*சருமனியர் தொழில் நுட்பமும்,*
*சாந்தமிகு சுசர்லாந்தர் சமுதாய வாழ்க்கையும்*
*சமதர்ம உருசியா வின்*
*ஒப்பரிய கல்வியும் ஓங்கிவளர் பண்ணையும்*
*உலாந்தினர் உணவு வளமும்*
*உவகைமிகு பாரிசின் ஓதுகலை வளமையும்*
*ஊக்கமிகும் ஆங்கிலேயர்*
*கப்பல் வாணிகமும், அமெரிக்கரின் செல்வமும்*
*கன்னடியர் கட்டுறுதியும்*
*கனலேறும் ஆப்பிரிகர் கனிவளமையும், பெருங்*
*காட்டு வளமுங் கண்டனன்*
*இப்பாலிவ் விந்தியரின் ஆத்ம ஞானத்தினால்*
*எண்ணத்தை விரிவாக்கினை*
*இதயகுகை தன்னில் இருந்தபடி நிலவிடும்,*
*ஏகாந்த மான குருவே!...*

*சந்தைக் கடைக் கூச்ச லில்லாது விலகியே*
*சாந்தமாய் வாழ வைத்தாய்*
*சபைகனக சபையென சஹஸ்ரார மணிமன்று*
*சார்ந்தே தியானத்திலே*
*சிந்தையுற வைத்தாய், செகத்தியலகத்திலே*
*தெரியவுள் ளறிவு வைத்தாய்*
*சிதையாத தனிமையிற் புலமையை வளர்த்தாய்*
*தியானத்தைக் கவிதை செய்தாய்*
*விந்தைவிந்தை மாந்தர் விளைதுய ரனைத்தையும்*
*வெல்ல ஓர் வீறு தந்தாய்*
*விரிகடல் மீனும் விடாயால் வருந்துமோ?*
*விசனமினி எனை யணுகுமோ?*
*தந்தாய், தயாபரத் தாயே வணக்கம் !*
*சரண் புகுந்தேன் என்னையாள்*

சர்வாத்ம சமயோக சக்திப் பெருக்கே
சதானந்த மோன குருவே !

அறிவே பரம்பொருள், அருளே அதன்வடிவம்
அன்பே அதன் விளக்கம்
அதனுடல் உலகம், உயிர்க்குல மதன்மயம்
அதனுறவு நல்லமைதி யாம்,
பொறிபுலனடக்கிப் புறஞ்செல் மனத்தினைப்
புத்தியால் உள்ளடக்கிப்
பொதுமன்றமாம் இதய வெளிகூடி நிற்றலே
பொருந்திய தியானமாகும்.
செறிவான சங்கற்ப முடன்விகற் பங்களைச்
சித்தம் நிலைத்து வென்றே
தேடரிய சுத்தான்ம சேதனத் தாழ்வதே
சீரிய சமாதி யாகும்.
நிறைவான ஒன்றாகி, நிறைவாக வாழலே
நிறைவான சுத்த யோகம்.
நிறைவான சமயோக நிஷ்டையே வாழ்வாய்
நிறைந்தமக துரிய குருவே !
பூத்தமலர் போலவே புன்னகை மணம்பரவிப்
பொங்குதேன் வண்டு நுகரப்
பூமியில் உதிர்ந்துரம தாவதன்றி வேறு
புகலேதும் அறிகிலேன் யான் ;
தீத்தணலில் வெந்துபிடி சாம்பலாம் உடலொரு
செடிக்குரம தாவதே மேல்.
தேகமே சதமென்னு மோகத்தை விட்டுளே
தேகியான் என வுயிர்ப்பேன்...
நீத்தவினை யையினி நினைப்பதறி வாகுமோ?
நித்தியம் உடலாகுமோ?
நித்திய வுடல்பெற்ற யாரையும் நேரிலே
நேற்றுவரைக் கண்ட தில்லை...
பாத்திரம தாகிநின் னருளினால் உள்ளான்ம
பக்குவம் பெற வேண்டினேன்
பத்தர்மிகு சமயோகச் சக்திநிலையத்திலே
பரமாத்ம ஞான குருவே !

எவ்வுயிரும் என்னுயி ரெனும்அன்பு வேண்டினேன்
எல்லாரு மின்ப முறவே.
எல்லாரும் எல்லார்க்கும் இனியதே செய்திடும்
இயல்பான வாழ்வு வேண்டும்.
ஒவ்வாத சாதிமத நாடுநிற வேதனைகள்
உடனே ஒழிந் துலகெலாம்
ஒருமையுறும் ஆன்மநே யத்திலே ஒன்றாய்,
உளங்கனிய வாழவேண்டும்....
வெவ்வாத வித்தைக ளணுகாத பரஞான
வீறுபெற் றொளிர வேண்டும்
விஞ்ஞான சக்தியும் வேதாந்த யோகமும்
விரவுபுது வாழ்வு வேண்டும்.
எவ்வாத தர்க்கமும் இல்லா தெனக்குள்வளர்
ஏகாந்த மோன ஒளியே,
ஏற்றமிகு யோகச்சமாஜத்தி லன்புருவம்
ஏந்தியொளிர் ஞான குருவே.

எத்தகைய உத்தமர்கள் எனினுமிவ் வுலகம்
இழுக் குறைத்துத் தூற்றிடும்,
இறந்தபின் சேகண்டி கொட்டிப் புகழ்ந்திடும்

இயல்பினை யறிந்து கொண்டோம்.
பித்துலகர் இசைவசைப் பேதங்களை மிகப்
பெரிதென்று கருதி டாமல்
பேரின்ப வானிரவி நேரமைதி யுற்றிடுவர்
பெரிய மோனப் பெரியரே !
கத்துலகின் வஞ்சப் பொறாமைக் கடைகளைக்
கண்டுளங் கலங்க மாட்டார் ;
காணரிய தன்னுறுதி தன்னறிவு தன்னுரிமை
கருதுதன் மான முடனே,
ஒத்தமைதி கொண்டொரு சிறந்தவினை செய்துள்
ளொடுங்கிநிட் டையி லிருப்பார் ;
ஓம் சுத்தசக்திசம யோக நிஷ்டையில் வளரும்
ஓம் வடிவமான குருவே.

யோகக் கலைவாழ்வு தந்தாய் வாழ்வெலாம்
உள்ளான்ம நேய வுறவாய்.
உள்ளூறவி னின்பெலாம் ஊற்றெடுத் தோடிடும்
ஒண்மணிக் கவி யருளுவாய்,
வேகக் கவியுள்ளம் விண்டநல் லுண்மைகள்
விதவித மலர்க ளாகி
வேதாந்த சித்தாந்த வித்தகர் விருந்தாய்
விளங்கிடச் செய்த சிவமே !
ஏகக் குடும்பமாய் இப்புவிக் கோயிலில்
என்னவர் மகிழ்ந்து வாழும்
இதயான்ம வித்தையை யிலக்கினை, அதன்வழி
இருந்துபயி லன்பர் வரவே,
தாகத்துடன் கூவினேன் உனது பணிபரவத்
தக்காரை ஈந் தருளுவாய்.
சக்திமிகு சுத்தசம யோகத்தி லேவளர்
சதானந்த ஞான குருவே !

மாந்தரெல் லாங்கூடி, மாண்புடன் உலகிலே
வாழ்வாங்கு வாழவேண்டும்.
மனமயக் காம்சாதி மதபேத மில்லா
மனச்சாட்சி நிலவ வேண்டும்.
தாந்தம தெனுஞ்செருக் கின்றியித் தரையெலாம்
தண்ணீ ரெனப் பொதுமையாய்த்
தாளாண்மையுடனன்பு வேளாண்மை செய்திடத்
தாராள மாக வேண்டும்.
வேந்துகுடி யென்பதற வித்தகச் சித்தர்வழி
வீரர் அரசாள வேண்டும் ;
விஞ்ஞான சக்தியும் யோகவே தாந்தமும்
விரவுகலை வாழ்வு வேண்டும்.
சாந்தமுறு ஞானமும் பக்தியும் கர்மமும்
சமதர்ம வாழ்வில் வேண்டும்.
சகம்புகழும் சிவசக்தி யோகத்தின் உயிரான
சகசநிலை கண்ட குருவே !

வந்தவினை நிறைவேறி வாரா திருக்கவொரு
வழிதேடி யுதவ வேண்டும்.
வறுமையிரு ளடிமைநோ யச்சம் பொறாமைதுயர்
வாரா திருக்க வேண்டும்.
பந்தவினை எதனிலும் பட்டுக் கொளாதபரி
பக்குவத் திண்மை வேண்டும்.
பாசவலை வீசிடும் பாதகப் பகைவரென்
பக்கம் வராமை வேண்டும்.

*சொந்தமென் பதுநின் சுகந்தருந் திருவருட்*
*சோதியே யாக வேண்டும்.*
*சுத்தசக் திக்கனல் சுழன்றிட மகாதுரிய*
*சூட்சுமத் தவம் வேண்டினேன்.*
*சந்ததமும் உன்புகழ் இசைத்திடத் தீஞ்சுவைச்*
*சந்தக் கவிதை வேண்டினேன்.*
*சாந்தமிகு யோகச் சமாஜத்தில் வாழ்கின்ற*
*சச்சிதா னந்த குருவே !....*

*யோனிவாய் உடலில்லை, ஊத்தைவாய்ப் பேச்சில்லை,*
*ஓங்கார நாத வடிவம்.*
*உள்ளமைதி வெளியிலே உண்டாகும் அருள்வார்த்தை*
*ஒருகோடி சூரியன் போல்*
*ஞானவொளி வீசிடும் விஞ்ஞான சக்தியது,*
*நானாவி லொருமை யதுவே.*
*நானா ரெனுங்கேள்வி நாணுறத் தானென*
*நடம்புரியு மிதயத் திலே.*
*தேனமுத வெள்ளந் தெவிட்டத் திதித்துத்*
*தியானத் திலே வருவதாம் ;*
*தெய்வவாழ் வைத்தரு சிதானந்த போதமது*
*ஜீவனுட் சிவ மானது.*
*மோனமாம் வானென முளைத்ததொரு பொருளையே*
*"ஓம்சுத்த சக்தி" யென்போம் ;*
*முறையாக யோகச் சமாஜத்தில் அன்பர்தொழும்*
*மூலகுரு தெய்வ மதுவே !...*

*மங்கல மணம்பரவு மலர்தலைக் காலைபோல்*
*மனமாய இருள் போக்குவாய்*
*மாசிலாத் தென்றலென வந்தெனது சோர்வினை*
*மாற்றிநல் வீறு தருவாய்.*
*செங்கதிர் போலெனது சித்தத் தெழுந்தறிவு*
*திகழச் சுடர் வீசுவாய்*
*திருமூல மந்திரந் தருபொரு ளுணர்ந்திடத்*
*தியானம் நிலைக்க வருளாய்...*
*பொங்குதிரை யாழிபோற் பூரிக்க வுள்ளம்*
*பொருந்துமுழு மதி யாகுவாய்...*
*புண்பட்ட நெஞ்சிலே வெண்பட்டு நிலவெனப்*
*புன்னகை பொழிந் திலகுவாய்...*
*தங்கமென மேனியும் சக்திவளர் ஞானமும்*
*சச்சிதா னந்த நிலையுந்*
*தந்தருள், மனோன்மணி வளர்சுத்த யோகச்*
*சமாஜத்தி லோங்கு குருவே !...*

*உருவா யிருந்தனை, உலகாய்ச் சுழன்றனை*
*உயிராய்த் துடித்த ஒன்றே !*
*உள்ளன்பு பொங்குமருள் வெள்ளம் பொழிந்தனை*
*உயர்ஞான விண்ணி னின்றே*
*குருவா யிறங்கினை, குவலயஞ் செய்யுங்*
*கொடுந்துயர் பொறுத்து வென்றாய்*
*குணமுள்ள சமயசஞ் சீவியாய்க் கோரினோர்*
*குறைதீர்த் திரட்சித் தனை*
*அருவா யிருந்தனை, அருளாய் நிறைந்தனை,*
*அபய ப்ரதான மீந்தாய்....*
*'அஞ்சற்க யானுளேன்' என்றெனைத் தேற்றிடும்*
*அம்மையப் பன் வடிவமே !....*
*திருவோங்கு யோகச் சமாஜத்தின் ஜோதியே*

*தியானச் சுடர் விளக்கே !*
*சிவயோக சித்திதரு நவயோக குருவே,*
*சிரஞ்சீவி யே வணக்கம் !....*

சுத்தான்ம சக்திவளர் சுகமுறு தியானமும்
ஜோதிவழி பாடும் வேண்டும்.
தூயசிந் தனையுடன் சோர்விலாப் பொதுநலத்
தொண்டுசெய் கருணை வேண்டும்.
முத்தூய்மை யுற்றெனது மூச்சுடன் பேச்செலாம்
மும்முயற் சியில் இணைந்தே
முதல்வனைப் பாடவும் கூடவும் அவனிச்சை
முறைசெய்த படியாடவும்,
சத்தமில் லாதமக துரியச் சமாதியின்
சாந்தத்தில் ஊன்றி யுலகில்
சன்மார்க்க யோகந் தழைத்திடத் தொண்டர்படை
தகவுறக் கூட வேண்டும்
சத்திய யுகத்தொளி தழைத்த விண்ணரசையித்
தரணியில் இலக்க வேண்டும்
சாந்தமுறு சுத்தசம யோகத்திலே வளர்
சதானந்த மோன குருவே !.....

ஆண்மைபெறு வேதாந்த கேசரிகள் வாழ்கவே
அச்சத்தை வென்ற முனிவர்
அதுநான் எனக்கண்ட மகரிஷிகள் வாழ்கவே
ஆனந்த யோகி வாழ்க !
கேண்மை மிகு கண்ணனுடன் அரவிந்தர் வாழ்கவே
கிறிஸ்து வின்சிலுவை வாழ்க !
கிளர்தெய்வம் ஒன்றெனும் நபிநாயகம் வாழ்க
கீர்த்திமிகு புத்தர் வாழ்க !
மாண்மையுறு ராமக்ருஷ்ணா திகள் வாழ்கவே
மகாவீர சித்தர் வாழ்க !
மகிமைபெறு வியாசர் வால்மீகி ஷேக்ஸ்பியர் கம்பர்
வாக்கினிமை வாழ்க வாழ்க !
சேய்மையை அண்மையிற் காட்டுவிஞ் ஞானிகளின்
செய்ய புலமை வாழ்கவே
தேடரிய சமயோக சித்தியின் உயிரான
தெய்வகுரு நாதன் வாழ்க !

பக்தனாம் சுத்தானந்தன் பாரத சக்திப் பாட்டில்
இத்துடன் சமயோகத்தின் சாதனமினிது கேட்டீர்
ஒத்துலகுள்ளமொன்றி உய்வழி காட்டும் சுத்த
சக்தியாண்டவனே யோக சாதனக் குருபிரானே !

**சாதன காண்டம் முற்றிற்று**
**ஓம் சுத்த சக்தி ஓம்**